
தம்பியர் அறுவர்



தம்பியர் அறுவர்

தொகுப்பாசிரியர்:

என்.எஸ். முத்துகிருஷ்ணராஜா

வெளியீடு
கம்பன் கழகம்
இராஜபாளையம்.

தம்பியர் அறுவர்

பதிப்புரிமை : கம்பன் கழகம்
இராஜபாளையம்

முதல் பதிப்பு : 1998 மார்ச்

விலை : ரூ. 35

கிடைக்குமிடம் : என்.எஸ். முத்துகிருஷ்ணராஜா,
பொதுச்செயலர், கம்பன் கழகம்
'சோலை',
6, தாண்டல் கந்தசாமிராஜா தெரு,
இராஜபாளையம்–626 117.

தொலைபேசி : 31592

அச்சு : காரனேசன் லித்தோ ஒர்க்ஸ் லிமிடெட்
த.பெ.எண். 12,
சிவகாசி–626 123.

18-3

முன்னுரை

கோவைத் தொழிலதிபர், கம்பன் அறநெறிச் செம்மல் திரு. ஜி. கே. சுந்தரம் அவர்கள் தலைமையில் தியாகச் செம்மல் அமரர் கம்பனடிப்பொடி சா.கணேசன் அவர்களால் 1980 அக்டோபர் இருபத்தைந்தாம் நாள் இராஜபாளையம் நகரில் கம்பன் கழகம் தொடங்கப் பெற்றது.

பத்தொன்பது ஆண்டுகளாக இலக்கிய சேவையும், கலைத்தொண்டும் ஆற்றிவருகிற பான்மையைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். செவிநுகர்கனிகளாக கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவியின்பத்தையும், கருத்து இன்பத்தையும் வழங்கி வருவதோடு நுண்மாண் நுழைபுலம் கொண்ட சான்றோர்களைக் கொண்டு நூல்கள் படைத்தளிப்பதை கழகம் தனது தலையாய பணியாகக் கருதிச் செயலாற்றி வருகிறது.

கவிச்சக்கரவர்த்தி கம்பன், இராமனைத் தரிசிப்போம், சீதையை வணங்குவோம், அனுமனைப் போற்றுவோம் ஆகிய நான்கு நூல்களை வெளியிட்டுள்ளோம். இப்போது தம்பியர் அறுவர் எனும் இத்திருநூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

தம்பியர் அறுவர் என்னும் இந்நூல் கம்பராமாயணத்தை, மூலமாகக் கொண்டு இராமபிரானுடன் பிறந்த தம்பிகளான பரதன், இலக்குவன், சத்துருக்கன், ஆகியோரின் பாத்திரப் படைப்புகளையும் இராமபிரானுடன் சேர்ந்த தம்பிகளான குகன் (வேடர் தலைவன்) சுக்ரீவன் (வாலி தம்பி) வீடணன் (இராவணன் தம்பி) ஆகியோரின் பாத்திரப்படைப்புகளையும் தெளிவாக முழுமையாக அறியும் வகையில் அமைக்கப் பெற்றுள்ளன.

கம்பர் காட்டும் தம்பியர் அறுவரின் உடன்பிறப்புப் பாச உணர்வுகள் அற உணர்வுகள் இக்கட்டுரைகளில் ஒளிவீசுகின்றன. கம்பனைத்தவிர மற்ற இராமயணங்களோடு ஒப்பிடப்பட்டுள்ளன.

இத்திருநூல் உருவாக்கத்திற்காக கம்பன் கழகம் வேண்டிக்கொண்டதற்கிணங்க பேரறிஞர்களாகிய இரா. செல்வக்கணபதி, புலவர் டாக்டர் ஆ. இராமபத்திரன்,

பேராசிரியர் ம. பழனிச்சாமி, புலவர் நா. அரங்கநாதசுவாமி, டாக்டர் பேராசிரியர் நா. பாலுசாமி, நாவுக்கரசி பேராசிரியை இளம்பிறை மணிமாறன் ஆகியோர் கட்டுரைகள் அனுப்பி உதவிய செயற்கரிய செய்கைக்கு நன்றி படைக்கின்றோம். அணிந்துரை வழங்கிய முனைவர் தெ. ஞானசுந்தரம் (தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.) அவர்களுக்கும் நூல் ஆக்கத்திற்கு பல வகையானும் துணை நின்ற பெரும்புலவர் வித்வான் ந. கி. நாராயணராஜா எம்.ஏ. அவர்களுக்கும் அழகிய முறையில் அட்டைப்படம் உருவாக்கித்தந்த சிவகாசி கலைச்செல்வர் எஸ். குற்றாலம் அவர்களுக்கும் சிறந்த முறையில் நூலை அச்சிட்டு உதவிய சிவகாசி காரநேசன் லித்தோ ஒர்க்ஸ் நிறுவனத்திற்கும் இராஜபாளையம் கம்பன் கழகம் நன்றி படைக்கின்றது.

இராஜபாளையம் நகரத்தந்தை திருமிகு ஏ. ஏ. சுப்பராஜா அவர்கள் தலைமையில் குன்றக்குடி ஆதினம் திருவருள் திரு. தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் இந்நூலை வெளியிட்டு பொலிவூட்டியுள்ளார்கள். அவர்கள் காட்டிய பேரன்பிற்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்

இனி – இந்நூலை படித்து சுவைத்துப் பயன்பெறவுள்ள பெருமக்களை நினைந்து போற்றி, நெஞ்சார துதித்து வழிபடுவோம்.

இங்ஙனம்,
என். எஸ். முத்துகிருஷ்ணராஜா
கே. மாரிமுத்து
பொதுச்செயலாளர்கள்
கம்பன் கழகம், இராஜபாளையம்.

அணிந்துரை

முனைவர் தெ. ஞானசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600 030.

தமிழ்க் காப்பியங்களில் கம்பராமாயணத்திற்குத் தனிஇடம் உண்டு. அது, மொழி பெயர்ப்புக் காப்பியம் என்றாலும் முதல் நூலில் இல்லாத பற்பல சிறப்புகளைத் தன்பால் கொண்டிலங்குகிறது. அச்சிறப்புகளில் ஒன்றே அது வற்புறுத்தும் சகோதரபாசம். ஒரு குடியில் பிறந்த பிள்ளைகள் அன்புடன் பழகும் அருமையினை வான்மீகம் தொடக்கமான எல்லா இராமாயணங்களிலும் காணலாம். இராமன் புனர்பூசத்திலும், பரதன் பூசத்திலும், இலக்குவன் ஆயில்யத்திலும், சத்துருகனன் மகத்திலும் அடுத்தடுத்துப் பிறந்தவர்கள். இவர்களுக்கிடையே வயது வேறுபாடு நாள்கணக்கில். கூட அன்றி விண்மீன் அளவிலேயே உள்ளது. ஆனால் இராமாயணத்தைக் கற்போர் இராமன் தன் தம்பியரைவிடப் பல்லாண்டு மூத்தவன் போல ஓர் எண்ணங்கொள்வர். இது கற்பாரது மயக்கம் அன்று இராமாயணம் செய்யும் மாயம். இதுவே இராமகாதைக்குக் கிடைக்கும் வெற்றி. பரதன், இலக்குவன், சத்துருக்கனன் ஆகியோர் இராமனிடம் காட்டும் மரியாதையும் மதிப்பும் அத்தகைய உணர்வைத் தோற்றுவிக்கின்றன.

கம்பநாடர் மேலும் ஒரு மாயத்தைச் செய்துள்ளார். இராமன் கானக வாழ்க்கையில் அவனுக்குக் குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோரது தொடர்பு கிடைத்தது. அவர்களில் குகனும் வீடணனும் இராமனைக் காட்டிலும் வயதில் மூத்தவர்கள் என்பதற்கான குறிப்பு கம்பராமாயணத்தில் காணப்படுகிறது. சீதையைக் குகனுக்கு அறிமுகப்படுத்தும் இராமன் அவளைக் குகனுக்குக் "கொழுந்தி" என்று குறிப்பிடுகிறான். 'ஆழநீர்க் கங்கை'என்னும் சுந்தரகாண்டக் காட்சிப்படலப் பாடல் இதனைத் தெரிவிக்கிறது. இது போலவே, வேலேற்று மாய்ந்த இலக்குவன் அனுமனால் மருத்துமலை கொண்டு வரப்பட்டு உயிர்த்தெழுந்தது கண்டு வீடணன் மகிழ்ந்தான். அதுபோழ்து, 'கொழுந்தியும் மீண்டாள்; பட்டான் அரக்கன் என்று உவகை கொண்டான்' என்றான்.

இக்கூற்று, வேலேற்ற படலத்தில் 'எழுந்து நின்று' என்னும் பாடலில் வருவது. கொழுந்தன், கொழுந்தி என்னும் கிளைப் பெயர்கள் 'கொழுந்து' என்னும் பெயர்ப் பகுதியின் அடியாகப் பிறந்த பெயர்ச் சொற்கள். இதற்கு மாறானது கொழுநன் என்னும் சொல். அது 'கொழு' என்னும் பெயரினைப் பகுதியாக கொண்டது. கொழு+ந்+அன் (கொழு–பகுதி; ந்–பெயரிடை நிலை; அன்–விகுதி). இளையவர் என்பதனைக் 'கொழுந்து'என்னும் பகுதி காட்டுகிறது. தம்பி மனைவியையே கொழுந்தி என்பது உலக வழக்கும் இலக்கிய வழக்கும் ஆகும். வில்லிபாரதத்திலும் 'கொழுந்தியர்' என்னும் சொல் வீடுமனின் தம்பி மனைவியரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் குகனும் வீடணனும் இராமனுக்கு மூத்தவர்கள் என்பது தெளிவு. ஆனால் இதுபோன்ற தெளிவான குறிப்பு சுக்கிரீவனைப் பொறுத்தவரை கிடைக்கவில்லை. இராமனாகத் திருமால் பிறப்பதற்கு முன்னே இந்திரன், இரவியின் கூறுகளாக வாலியும் சுக்கிரீவனும் தோன்றினர் என்னும் அவதாரக் குறிப்பை ஏற்றுக் கொண்டால் சுக்கிரீவனும் மூத்தவன் என்று கொள்ளலாம். காப்பியத்தில் இராமனோடு சேர்ந்த மூவரும் பழகும் முறையும் அவன்பால் காட்டும் பணிவும் இராமனை மூத்தவன் போலவும் அவர்களை இளையவர்கள் போலவும் எண்ணச் செய்கின்றன.

"குகனொடும் ஐவர் ஆனேம்
முன்புபின்பு குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்
எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்"

என்னும் பாடல் வந்து சேர்ந்த முறையினைத் தெரிவிக்கிறதே தவிர வந்து சேர்ந்தவர்களின் பிறப்பு முறையைத் தெரிவிக்கவில்லை.

வான்மீகத்தில் இல்லாத இவ்வுடன்பிறப்புக் கோட்பாட்டைக் கம்பநாடர் எவ்வாறு அமைத்தார் என்னும் வினா எழும். அவருக்கு இதற்கான குறிப்பினைத் தந்தவர் திருமங்கையாழ்வார். வான்மீகத்தின் சுக்கிரீவனை மட்டும் இராமன் இறுதியில் விடைகொடுத்து அனுப்பும்போது, 'நீ எங்களுக்கு ஐந்தாவது சகோதரனாக ஆவாய்' என்று தெரிவித்துள்ளான். திருமங்கையாழ்வாரோ குகனுக்கு சீதையை தோழியாகவும், இலக்குவனைத் தம்பியாகவும் இராமன்

குறிப்பதாகப் புகன்றுள்ளார். குகன் இலக்குவனுக்கு அண்ணன் என்றால, அவனுக்கு ஒரு நட்சத்திரம் முன்பிறந்த இராமனுக்கும் அண்ணனே ஆவான்.

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இறங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து,
மாழை மான்மட நோக்கிஉன் தோழி ;
உம்பி எம்பி என்று ஒழிந்திலை, உகந்து
தோழன் நீஎனக்கு இங்குஒழி என்ற
சொற்கள் வந்துஅடி யேன்மனத்து இருந்திட,
ஆழி வண்ண ! நின் அடிஇனை அடைந்தேன்
அணிபொ ழில்திரு அரங்கத்துஅம் மானே!

என்பது பெரிய திருமொழி (5 : 8 7).

இக்குறிப்பினைக் கற்ற கம்பநாடர் உடன்பிறப்புக் கோட்பாட்டு வளாகத்தை விரிவுபடுத்திக் குகனை மட்டுமன்றிச் சுக்கிரீவன், வீடணன் ஆகியோரையும் இராமனுக்குச் சகோதரர்களாகக் காட்டியுள்ளார். இராமன் தன் உடன்பிறந்த தம்பியரைத் 'தம்பி' என்னும் சொல்லால் அங்கங்கே குறிப்பதனைக் காணலாம். காப்பிய ஆசிரியரும் பரதன், இலக்குவன், சத்துருக்கனன் ஆகியோரைக் குறிக்கும்போது இராமனுக்கு அவர்கள் தம்பி என்பதனை வெளிப்படையாகக் குறித்துள்ளார். இந்நூலில் உள்ள கட்டுரைகளால் இதனை நன்கு அறிந்துகொள்ளலாம். ஆனால் அதுபோல எங்கும் இராமனோ, காப்பிய ஆசிரியரோ வந்து சேர்ந்த குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோரில் யாரையும் தம்பி என்னும் சொல்லால் சுட்டவில்லை. அதுமட்டுமன்றி இராமனை அவர்களும் அண்ணன் என்றோ தம்முன் என்றோ சுட்டாமல் வேறு வகையிலேயே சுட்டியுள்ளனர். இதனால் அவர்கள் இராமனுக்குச் சகோதரர்கள் என்பது மட்டும் புலப்படுகிறதே தவிரத் தம்பியர் என்பது விளங்கவில்லை. ஆனால் கம்பநாடரின் கைவண்ணம் அறிஞர் பலரையும் மயக்கிச் சேர்ந்தவர்களைத் தம்பியராகக் கருதச் செய்துள்ளது.

இந்நூலில் இராமனோடு பிறந்தும் சேர்ந்தும் சகோதரர்களான அறுவர் பற்றி அறிஞர் அறுவர் எழுதியுள்ள ஆறு அரிய கட்டுரைகள் உள்ளன. இக்கட்டுரைகள் அனைத்தும் ஆழமானவை; அரிய உழைப்பின் விளைச்சலாகத் திகழ்பவை; கம்பநாடரின் பாத்திரப்படைப்புத் திறனை வெளிப்படுத்தும் வகையில் அமைத்தவை.

பரதனைப் பற்றிய கட்டுரை அவன் 'உன்னதங்களைப் பதிவு செய்துள்ளது. அவன் வாழ்க்கை பழியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் நீண்ட போராட்டமாக அமைந்த தன்மை நன்கு காட்டப்பட்டுள்ளது. அயோத்தி மைந்தர்களில் வாலியின் உள்ளம் கவர்ந்தவன் இராமன் அல்லன்; பரதனே என்பது நேரிய ஆய்வு. தயரதன் 'மன்னே ஆவான் வரும் அப்பரதன் தனையும் மகன் என்று உன்னேன்' என்று ஒதுக்கியது சினத்தின் விளைவு. 'கொள்ளான் நின் செய் இவ் அரசு'என்று கூறியது அவனது சரியான கணிப்பு என்பது ஏற்கத்தக்க முடிவு. பரதன், இலக்குவன் மீது கொண்ட அன்பு பின்னவன் இராமனுக்குச் செய்த தொண்டுகளைக் குகன் வாயிலாகக் கேட்டவுடன் மேலும் பெருகியது. அவனைத் தம்பியருள் அன்பினால் உயர்ந்தவனாகக் கண்டான். இலக்குவன் பரதனிடம் கொண்ட அன்பு அவனை ஐ யுற்றுத் தெளிந்த பின் வளர்ந்து உறுதிப்பட்டது. அதனாலேயே இந்திரசித்தன் அயோத்திக்குச் செல்வது போலப் போக்குக் காட்டியபோது இராமன் கலங்கியபோதிலும் இலக்குவன் கலங்காமல் அவனால் பரதனை வெல்ல முடியாது என்று பேசினான் என்பது பாத்திரங்களின் மனவளர்ச்சியைக் காட்டுவதாக உள்ளது. இலக்குவனைப் பற்றிய கட்டுரை கம்பநாடரின் காப்பியத்தோடு நில்லாமல் வான்மீகம், ஆழ்வார் பாசுரங்கள், பெரியவாச்சான்பிள்ளை விளக்கவுரை ஆகியவற்றையும் துணையாகக் கொண்டு அப்பாத்திரத்தின் வெற்றியினை எடுத்துக்காட்டுகிறது. இலக்குவனால் இராமனைப் பிரிந்து வாழமுடியாது. அவனது வாழ்முதல் இராமன்.

அவன் தன் செல்லாமை (பிரிந்து வாழமாட்டாமை) நோக்கி இராமனுக்குத் தொண்டு செய்தான் என்பர் வைணவப் பெரியோர். இச்செல்லாமைப் பண்பு குறித்த வான்மீகியின் கூற்றோடு கம்பநாடரின் பாடலை ஒப்பிட்டுக் கம்பரின் கைவண்ணத்தை விளக்குமிடம் அழகாக அமைந்துள்ளது. வான்மீகத்தில் இராமனிடம் இலக்குவன் அவனைப் பிரிந்து சீதையாலும் தன்னாலும் வாழ முடியாது என்கிறான். கம்பராமாயணத்திலோ தன்னாலும் சீதையாலும் வாழமுடியாது என்று தன்னை முற்பட வைத்துப் பேசுகிறான். இம்மாற்றம் · இராமனைப் பிரிந்து பத்துத்திங்கள் சீதையால் உயிருடன் இருக்க இயலும், தன்னால் அவ்வாறு இமைப்பொழுதும் இருத்தற்கு இயலாது என்பதனைக்

குறிப்பாகக் காட்டுவதாக உள்ளது என்று விளக்கியுள்ள திறம் நல்ல இலக்கிய விருந்து. இலக்குவன் ஆதிசேடனின் கலையாகப் (அம்சம்) பிறந்தவன். அதனால்தான் மற்றவர்களால் இராமனுக்குத் தீங்கு நேருமோ என்று ஐ யுறுகிறான் என்றும், இலக்குவன் சீற்றம் பரதன் தவக் கோலத்தாலும், தாரையின் கைம்மைக் கோலத்தாலும் தணிகின்றன என்றும் கூறுவது செம்மையான ஆய்வாகும். பரதன், தயரதன், சுக்கிரீவன் ஆகியோர் பற்றிய இலக்குவனின் மதிப்பீடு தவறாக அமைந்ததற்குக் காரணம், அவன் இராமன் மீது கொண்ட அன்பின் சிறப்பே என்பது எல்லோராலும் ஏற்கத்தக்க ஒன்றாகும். சீதையைக் கவர்ந்து சென்றவன் இராவணனே என்று தெளியுமிடத்தில் இலக்குவன் அறிவுத்திறம் விளங்குவதனைச் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளார் கட்டுரையாசிரியர். இலக்குவன் ஒரு தந்தையை யொப்ப இராமனைக் காத்தான் என்பதும், அவனது தொண்டு காமத்தையும் உறக்கத்தையும் கடந்தது என்பதும் அழகுறக் காட்டப்பட்டுள்ளன.

இலக்குவன் தொண்டுச் சிறப்பில் அவனது வீரம் பலரால் காணப்படாமல் விடுபட்டுப் போய்விடுகிறது. அந்நிலைக்கு மாறாகக் கட்டுரையாசிரியர் தம் கட்டுரையின் பிற்பகுதியில் அவன் வீரம் குறித்து விரிவாக எழுதியிருப்பது பாராட்டுக்குரியது. இஃது ஒரு முழுமையான கட்டுரை.

சத்துருக்கனன் பேசாத தம்பி. இராமகாதையில் வரும் சிறுபாத்திரம். ஆனால் பண்பில் மிகப்பெரிய பாத்திரம் இராமனுக்குத் தொண்டு செய்த தம்பியருள் இவனே உயர்ந்தவன் என்பது வைணவ உலகத்தின் ஒரு மிடரான கூற்று. இவன் இராமனுக்குத் தொண்டனான பரதனைத் தனக்குத் தலைவனாகக் கொண்டு அவன் விழைந்தவாறு தொண்டு செய்து அவன் வழி நின்றவன் என்னும் சிறப்புக்கு உரியவன். அடியார் இட்ட வழக்காய் இருந்தவன் இவன். அத்தகைய சத்துருக்கனின் பாத்திரப்படைப்பை அவன் செயல்களின் வழியே நிரல்பட விளக்கியுள்ளார் கட்டுரையாசிரியர். அவர் அரசபதவியினும் அண்ணனே உயர்ந்தவன் என்னும் செய்தியை அகிலத்திற்கு அளித்த பாத்திரம் சத்துருக்கனன் என்று அறுதியிட்டுள்ளார்.

இராமனோடு சேர்ந்த மூவரும் கானக வாழ்க்கையில் அவனுக்குக் கிடைத்தவர்கள். கங்கைக்கரையில் குகனும்,

பம்பைக் கரையில் சுக்கிரீவனும், கடற்கரையில் வீடணனும் அவனை வந்து அடைந்தவர்கள். குகன் வேடுவன்; சுக்கிரீவன் வானரம்; வீடணன் அரக்கன். இவர் தம் பண்புகளை அறிஞர் மூவர் ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர்.

குகணைப் பற்றிய கட்டுரை, வான்மீகம், துளசி ஆகியோரின் இராமாயணத்தில் வரும் அவனைப் பற்றிய குறிப்புகளையும் கம்பராமாயணக் கருத்துக்களோடு ஒப்பிட்டு ஆராய்கிறது. காளத்திவேடனாகிய கண்ணப்பனோடு இக்கங்கை வேடனையும் ஒப்பிட்டுக் காட்டுகிறது. 'ஆழநீர்க்கங்கை' என்னும் பாடலை விளக்குமிடத்தில் குகனை இராமனுக்கு மூத்தவன் என்று கொள்ளலாம் என்று கருதும் ஆசிரியர் இறுதியில் அவனை இராமனுக்குத் தம்பியாகவே காட்டுவது வழக்கத்தின் வரம்பினை மீற முடியாமல் அதற்குக் கட்டுப்படும் நிலையினையே காட்டுகிறது. 'என் பின்பு வந்த தூயனே!' என்பதற்கு 'எனது அன்புத்தம்பியே' என்று பொருள் கொள்வதை விடுத்து 'என்னைத் தொடர்ந்து வந்த நல்லவனே' என்று பொருள் கண்டிருக்கலாம். இராமன் தங்கியிருந்த இடத்தையும் பட்ட துன்பங்களையும் குகனிடம் கேட்டு அறிந்த பின்பே பரதன் மரவுரி தரித்துத் துறவுக்கோலம் கொண்டான் என்ற வான்மீகத்திற்கு மாறாகப் பரதனுடைய தவக்கோலமே குகனுக்கு அவன்மீது அன்பு கொள்ளச் செய்தது என்று கம்பர் காட்டுகிறார் என்பதனை எடுத்துக்காட்டுவது மிகச்சிறப்பான ஒப்பீடாக உள்ளது. கம்பநாடரின் குகனைப்பற்றிய புனைவு கல்லாட தேவரின் கண்ணப்பதேவர் திருமறத்தையொட்டியதாக உள்ளது என்று கூறியுள்ளது நுட்பமான ஆய்வு முடிவு.

இராமனைச் சேர்ந்தவர்களில் குகனைப் போன்ற அன்போ வீடனைப் போன்ற அறிவாற்றலோ இல்லாமல் பக்குவப் படாதவனாக இருந்தவன் சுக்கிரீவன் ஆவான். அவனுடைய இத்தன்மையினை ஆய்வு நெறிமுறை தவறாமல் எடுத்துக்காட்டும் வகையில் சுக்கிரீவன் என்னும் கட்டுரை அமைந்துள்ளது. இராமன் வாலியின் மீது அம்பு எய்யக் காலம் தாழ்த்தியதற்குக் காரணம் வாலி உண்மையில் சுக்கிரீவனைக் கொல்லும் நோக்கமுடையவன் தானா? என்பதை அறிந்து கொள்ளவே என்கிறார் கட்டுரையாசிரியர். இப்புதிய கருத்து மேலும் சிந்தித்தற்குரியது. சுக்கிரீவனும் வீடணனும் தம் தமையன்மாரைப் பிரிந்ததற்கான காரணங்கள் ஒப்பிட்டு கண்டறியப்பட்டு அவை ஒப்பிட்டு முறையில் ஆராயப்பட்டுள்ளன. சுக்கிரீவன் செயல்களுக்குக் காரணங்கள்

காணப்பட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளன. கும்பகருணன் மூக்கைக் கடித்த செயல் குரங்குச் செயலேயன்றி வீரச்செயலன்று என்பது செம்மையான முடிவு. வாலி போன்ற பேராற்றலோ, அனுமனைப் போன்ற கூர்த்த அறிவோ இல்லாதவனாகச் சுக்கிரீவன் இருத்தல் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இது சராசரியான பாத்திரம் ஒன்றுபற்றிய தரமான சிறந்த கட்டுரை.

இராவணன் தம்பியாகப் பிறந்து இராமன் சகோதரனாக மாறியவன் வீடணன். அவன் செயல் தக்கதா? அன்றா? என்னும் ஆய்வு தீராத ஒன்று. இராமாயணப் பாத்திரங்களில் சிக்கலான பாத்திரம் வீடணன் என்னும் பாத்திரம். அவன் அறிவுவழிப்பட்டவன்; உணர்ச்சிகளை மறைத்து வாழ்ந்தவன். பாசத்தினும் அறத்தினையே மதித்தவன். அதிகாயன் வீழ்ச்சி, இராவணன் வீழ்ச்சி ஆகிய இடங்களில் வீடணன் கலங்காமல் இருக்க நியாயமில்லை என்றும், தன் உண்மை உணர்வுகளின் சாயல் வெளிப்பட்டால் தான்புகுந்த இடத்தில் உள்ளோர், தன்னைத் தவறாகப் புரிந்து கொள்ள நேரிடுமே என்பதனால் தன் அவலவுணர்ச்சிக்கு அறிவினால் திறையிட்டான் என்றும் காட்டுவது உளவியல் சார்ந்த சிறந்த ஆய்வு முடிவு. இராமன், இந்திரசித்தனுக்கும் இலக்குவனுக்குமிடையே நிகழ்ந்த போரில் இலக்குவன் வீழ்ந்தபோது துயரமிகுதியால், வீடணனை 'இலங்கை வேந்தன் தம்பி' என்றும், 'கெடுத்தனை வீடணா' என்றும் சொன்ன சொற்களுக்கு இறுதியில் இந்திரசித்தன் வீழ்ந்த நிலையில், 'வீடணன் தந்த வெற்றி' என்று அதனைக் குறிப்பிட்டது நல்ல மருந்தாக அமைந்து வீடணனுக்கு ஆறுதல் அளித்தது என விளக்குவது சிறப்பாக உள்ளது. வீடணனுக்கு ஆறுதல் அளித்தது என விளக்குவது சிறப்பாக உள்ளது. வீடணனை ஏத்துவோர் கருத்துகளையும் தூற்றுவோர் வாதங்களையும் எடுத்துவைத்து, முற்றிலும் மாறுபட்ட இருவேறு கருத்துகளுக்கு இடமளித்து நிற்கும் வீடணன் பாத்திரத்தை ஓர் உயிரோவியமாகக் கம்பநாடர் தீட்டியுள்ளார் என்று முடித்துள்ளார் கட்டுரையாசிரியர். ஆற்றொழுக்கான நடையும் கருத்துத்தெளிவும் படிப்போருக்கு அருவியில் ஆடுவது போன்ற இன்பத்தை அள்ளித் தருகின்றன.

இராஜபாளையம் கம்பன் கழகம் கம்பராமாயணத்தின் பெருமையைப் பேசிப் பரப்புவதோடு மட்டுமன்றி எழுத்திலும் தேக்கி வைத்து அரும்பணி செய்கிறது. இராமன், சீதை, அனுமன் பற்றிய நூல்கள் முன்னர் வெளிவந்துள்ளன. அந்த

வரிசையில் சகோதரர்கள் பற்றிய இந்நூல் இப்பொழுது வெளிவருகிறது. இந்நூலை உருவாக்கிய கம்பன் கழகத்தினையும், கட்டுரையாளர்களையும் பெரிதும் பாராட்டுகிறேன். கம்பராமாயண ஆர்வலர்கள் இதனை ஓர் அரிய இலக்கியக் களஞ்சியமாகவும், இலக்கிய ஆர்வலர்கள் இனிய திறனாய்வுப் படைப்பாகவும் கொண்டு போற்றுவர் என்பது என் நம்பிக்கை.

சென்னை–30 *அன்பன்*
19–2–1998

தெ. ஞானசுந்தரம்

கம்பன் கழகம்

இராஜபாளையம்

துணைத்தலைவர்கள்

திரு. எம்.ஏ. சுப்பிரணியராஜா
திரு. என்.ஆர் சுப்பிரமணியராஜா
திரு. கே.எஸ். நாகராஜன் ராஜா
திரு. கே.பி. அய்யப்பராஜா
திரு. குன்றக்குடி பெரியபெருமாள்
திரு. பி.என்.எஸ். நாராயணராஜா
திரு. வித்வான் ந.கி. நாராயணராஜா
திரு. பி.ஏ.பி. ராஜூ

பொதுச்செயலர்கள்

திரு. என்.எஸ். முத்துகிருஷ்ணராஜா
திரு. கே. மாரிமுத்து

பொருளாளர்

திரு. பி.ஆர். விஜயராகவராஜா

உறுப்பினர்கள்

திரு. பன்மொழிப்புலவர் மு.கு. ஜகந்நாதராஜா
திரு. கே.ஏ. சீதாராமராஜா (கண்ணன்)
திரு. என்.எஸ். ராமராஜா
திரு. கவிஞர் கொ.மா. கோதண்டம்
திரு. எஸ். பொன்ராஜ்
திரு. பி.எம். ராமராஜ்
திரு. கே.எஸ். ராமகிருஷ்ணன்

என்றும் வாழ்க

மங்கையொடு கூறுடையான்
வலமார்பில் திருவுடையான்
வாணிகேள்வன்

தங்களருள் நனி சுரக்க
தண்டமிழத்தாய் கடைக்கணிக்க
சான்றோர் வாழ்த்த

பங்கயத்தாய் அருளிராச
பாளையத்தில் பைந்தமிழ்ச்சீர்
பரப்புதற்கு

இங்கின்று மலர்கின்ற
எழிற்கம்பன் கழகமிது
என்றும் வாழ்க

— கம்பன் அடிப்பொடி,
செயலாளன், கம்பன் கழகம், காரைக்குடி
25–10–1980

❄ ❄ ❄ ❄ ❄ ❄

பண்புமிகும் ராஜபாளையம் மேவுபுகழ்
கண்போன்ற கம்பன் கழகமது—விண் பரவு
நன்றுபுரி கோதண்டராமன் திருவருளால்
என்று மிக வாழ்க இனிது.

அன்பன்
கிருபானந்தவாரி
16–12–90

பொருளடக்கம்

பரதன்

செந்தமிழ் வாரிதி
பேராசிரியர் டாக்டர். இரா. செல்வக்கணபதி,
எம்.ஏ,.பி.எட்.,பிஎச்.டி.,
மயிலாடுதுறை.

உலகில் படைக்கப்பட்ட எல்லாக் காப்பியங்களும் உயரியன என்று கூற இயலாது. கால வெள்ளத்தைக் கடந்து உயிர்வாழ்வன சில, கால வெள்ளத்தில் கரைந்து அழிந்தன பல.

என்றும் மாறா மனித குலப் பண்புகளோடு உறவாடி, அவர்தம் விருப்பு வெறுப்புகளுக்கு ஈடு கொடுத்துக் காப்பியங்கள் நின்று நிலவ அவற்றிற்கு இரண்டு கூறுகள் இன்றியமையாதன.

ஒன்று மானுடம் தழுவிய கதைக்கரு!
இரண்டாவது படைப்பாளியின் ஆளுமை!

இவ்விரு கூறுகளும் பெற்று நின்று நிலவும் இந்தியப் பெருங்காப்பியங்களுள் தலையாய ஒன்று கம்பனின் இராமகாதை.

கதைக்கரு வான்மீகம் தந்தது.
மானுடப் பண்புகளுக்கு உயிரூட்டி, மண்ணின் மரபுகளோடு அதனைப் பட்டை தீட்டியவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

கம்பனை அறிந்த பலரும், அவனை ஒரு கற்பனைக் கவிஞனாகவே கண்டு போற்றினார். இப்போற்றுதல், கவிஞனை முழுமையாக மதிப்பிட்டுரைப்பதாக அமைய வில்லை. கற்பனைப் புனைவுகள் மட்டும், ஒரு கவிஞனுக்கு வாழ்வளித்துவிட முடியாது. கம்பனின் வாழ்வுக்கு இதனினும் மேலான ஓர் ஆற்றல் அடிப்படை என்பதனைக் கண்டு தெளிய கூரிய ஆற்றல் வேண்டும்.

கம்பனை வாழவைக்கும் அவ்வரிய ஆற்றல் எது?
அவனது மானுடப்புனைவுகள்!

'கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்' என்ற பாரதியின் மதிப்பீடு ஆழமானது.

கம்பன் என்றொரு கவிஞன் என்றோ, புலவன் என்றோ, அறிஞன் என்றோ கூறாது 'மானுடன்' என்று மதிப்பிட்டுரைத்தது நுட்பம் நிறைந்தது.

அவன் மானுடன் என்பதுஅன்று பாரதியின் உள்ளம்; மானுடத்தை மதிப்பிட்டுப் புனைந்த மானுடன் கம்பன் என்பது பாரதியின் உள்ளம்.

கம்பனின் மானுடப்புனைவைப் 'பரதன்' என்ற பாத்திரப் படைப்பில் முழுமையாக இனம் காண இயலும்.

மனித வாழ்க்கை சிக்கலானது
'புகழ் எனின் உயிரும் கொடுப்பர் – பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்'
என்பான் சங்கநூற் புலவன்.

இல்வாழ்வின் நிறைவு புகழில் தங்குகிறது. இது வள்ளுவனின் மதிப்பீடு.

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே.

என்பான் புறநானூற்றுப் புலவன். புகழ்பட வாழ முயல்வார் பலர். வாழ்ந்து மக்கள் நெஞ்சில் நிறைவார் சிலர்.

வேறுசிலர் வாழ்வு அவலமானது. புகழ் நோக்கிய அன்னார் பயணம் தொடங்கும் முன்பே, பழி அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அத்தகையோர் வாழ்க்கை முழுவதும் பழி யிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் நீண்ட போராட்டக் களமாகவே அமைந்து விடுதல் உண்டு.

அத்தகு பேரவலப் பாத்திரமாகவே கம்பன் பரதனைத் படைத்துக் காட்டுகிறான்.

புகழ்க்குணங்கள் பலவும் நிரம்பியவன் பரதன். ஆனால் அவன் மேல் பழி வந்து படர்ந்து விடுகிறது. அதுவும் பெற்ற தாய் வழி வருவது பேரவலமாகி விடுகிறது. அயோத்தியிலும், கிஷ்கிந்தையிலும், இலங்கையிலும் அவனை முற்றிலும் தூயன் என்று உணர்ந்தோர் மிகச்சிலர். பலரும், அவனை ஐ யக்கண் கொண்டே நோக்கினர். இராமன் ஒருவனே அவனை முற்றாக அறிந்தவன். பெற்ற தாய், மகன் விருப்பம் இது என அறியாது

குற்றமிழைக்கிறாள். வளர்த்த தாய், அவனை ஐயுற்றுப் பின் தெளிகிறாள். தம்பி இலக்குவன், கொலை வேகம் கொண்டு பகைக்கிறான். அவன் கருத்தில் தடுமாறிக் குகனும் ஐயுற்றுப் பேதலிக்கிறான். தந்தையோ, இவன் என் மகனே அல்லன் என்று பழி சுமத்திச் சாகிறான். இந்தப் பேரவலங்களிலிருந்து கம்பன் பரதனை மீட்கும் அருமையில் மானுடவியல் கூறுகள் பட்டை தீட்டப்படுகின்றன.

பரதனைப் பொறுத்தவரை கோசலம் அவனுக்குக் குழப்பம் நிறைந்தே அமைகிறது. அங்கே மக்கள் தெளிவான வர்கள். ஆனால், இராமன் மேல் கொண்ட அளப்பரிய பாசத்தால் மன்னன் தசரதன் குழப்பத்தில் வாழ்கிறான்.

பிள்ளைப் பேறு வாய்க்காதவள், மாற்றான் மகனைத் தன் மகனாக வளர்ப்பது புரிந்து கொள்ளக்கூடிய உலகியல்.

அல்லது, தன் வயிற்றில் பிறந்த மகன் அறிவுக்குறைபாடு உடையவனாக இருந்தால், அவனைப் புறக்கணித்து மாற்றாள் மகனை ஒருத்தி தன் மகனாக வளர்த்தல் தகும்.

அறிவும் ஆற்றலும் நிரம்பி, இராமனுக்கு இணையான குணநலம்மிக்க பரதன் இருக்கும் போது, கைகேயி இராமனைத் தன் மகன் எனப் போற்றி நின்றது, தசரதனின் அரசியல் சதுரங்கத்தில் ஓர் அங்கம் என்பது தெளிவு.

தான் பெற்ற மகன் இராமனைக் கைகேயிடம் வளர விட்டு விட்டுப் பரதனைத் தன் மகனாக வளர்க்கும் கோசலையின் நிலையும் ஒரு புரியாத புதிரே!

அரசகுலத்தில் பிறந்த, தன் மிகுந்த அன்புக்குரிய மனைவியிடம், ஆசைக்குரிய தன் அன்பு மகன், இராமன் வளர வேண்டும் என்று தசரதன் போட்ட கணக்கில்தான் பரதன் வாழ்வின் சிக்கலே கருக்கொள்கிறது.

பாத்திரப் புனைவைக் காப்பியம் முற்றும் அறியாதவர்களுக்கு விளக்குவது ஒருமுறை. காப்பியத்தைக் கரைகண்டவர்களுக்கு, உன்னதங்களை அடையாளம் காட்டுவது மற்றொரு வகை. இவ்வாய்வு இரண்டாம் வகையினது.

கைகேயி கேட்ட வரங்களால் பரதன் மீது பழி வந்து நிறைகிறது.

பெற்ற தாய்க்குத் தன் விருப்பம் தெரிந்திலது. ஆனால், பல்லாண்டு வளர்த்தெடுத்த தாயைக் கண்டால், தன் துயர் தீரும் என்று நம்புகிறான் பரதன். பழியும் படரும் நிறைந்த கனத்த நெஞ்சுடன் கோசலை தாள்களைப் பணிகிறான்.

'இரதம் ஒன்று ஊர்ந்து, பார் இருளை நீக்கும் அவ்
வரதனில் ஒளிபெற மலர்ந்த தொல்குலம்
பரதன் என்று ஒரு பழிபடைத்தது...'

என்று பரதன் புலம்பி நிற்கிறான். கோசலை நெஞ்சம் பரதன் குற்றமற்றவன் என்றே அறிகிறது.

'நிலம்பொறை ஆற்றலன் நெஞ்சம் தூய்து எனா
சலம் பிரிது உற மனம் தளர்ந்து கூறுவாள்'

எனத்தொடங்கிக் கோசலை கூற்றைக் கம்பன் பதிவு செய்கிறான். அந்தக் கூற்றில் இழையோடும் ஒரு 'தொனி' பரதனைச் சுட்டெரிக்கிறது.

அறிவும் உணர்வும் மனித மனத்தின் உள்ளே, இடையறாது போராடி நிற்கும் இரு கூறுகள். அறிவு, உணர்வைப் புறங்கண்டு மேலெழும் போது, மனிதன் உயர்கிறான். உணர்வு வெல்லும் போது தாழ்கிறான். கோசலை சராசரி விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்ட ஒரு மானுடப்பெண். பரதன் தோற்றமும் துயரும் கண்டஅவள் அறிவு,

'மையறு மனத்து ஒரு மாசு உளான் அலன்
செய்யனே'...

எனத் தேற்றம் கொள்கிறது. ஆனால், அறிவைப் புறம் கண்ட உணர்வு, பெற்ற மகன் மேல் கொண்ட பாசமும், மாற்றாள் மேல் கொண்ட வெறுப்பும் காரணமாக மேலெழ,

'கைகயர் கோமகள் இழைத்த கைதவம்
ஐய! நீ அறிந்திலை போலுமால்'...

எனக் கோசலையை வினவச் செய்து விடுகிறது.

பேரறிவும், சிந்தனைத் தெளிவும் மிக்கவர்கள் கூட, துன்ப மிகுதியால் தன்னிலை இழந்து விடுகின்றனர். தன் இழப்பில் நிலை தடுமாறாத சிலரும், தன் அன்புக்குரியரின் துன்பத்தில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அதிலும், பெற்ற மகனுக்கு ஒரு இழப்பு என்றால், தாய் மனம் பெரும் பேதலிப்பில் தங்குகிறது. ஆண்களை விடப் பெண்கள், இக் களங்களில் அதிகமாகவே நிலை தடுமாறி விடுகின்றனர். தன் கோயிலில், தான் ஈன்ற மகனாகவே கருதிப் பரதனை வளர்த்தவள் கோசலை. அவன் இயல்பும், பண்பும், அவள் அறியாதன அன்று. மேலும், கைகேயி தீமை சூழ்ந்த காலை பரதன், பாட்டன் வீட்டில் இருந்திருக்கிறான். இவையாவும் கோசலை அறியாதன அன்று. முன் குறித்தவாறு அறிவு மனம்,

'மையறு மனத்து ஒரு மாசு உளான் அலன்
செய்யனே'....

என்று தெளிந்தாலும், அதனினும் முற்பட்ட உணர்வு ஐயச் சொற்களை அள்ளித் தெளிக்கிறது. பரதன் துடிதுடித்துப் போகிறான்.

கோசலையை அன்றி வேறு எவர் ஐயுற்றிருந்தாலும் பரதன் இந்த அளவு கலங்கி இரான். தன்னை நன்கு அறிந்த தன் வளர்ப்பு அன்னையின் ஐயம், அவனைப் பெரிதும் பாதிக்கிறது. பொதுவாகவே சுடுசொற்களும், கடுமொழிகளும், ஐயக்குறியீடுகளும் மனிதனைப் பாதிப்படைய வைப்பன. அதன் அளவு அது எவரிடமிருந்து வருகிறது என்பதைப் பொறுத்தே அமைகிறது. 'கைகேயியாகிய உன் தாயின் செயல்பற்றி பரதனே நீ ஏதும் அறிந்திருக்கவில்லையோ' என்ற சொற்கள் அவனைப் பெரிதும் பாதித்து விடுகின்றன. தன்னைத் தூயனாக நிலைநாட்ட வேண்டிய இன்றியமை யாமை அவனுக்கு உளவாகிறது.

தான், மனத்தாலும் குற்றமற்றவன் என்பதைக் கோசலைக்கு அறிவிக்க, வேறு வழி காண இயலாத பரதன், பலபடச் சூளுரைக்கிறான். கம்பன் காப்பியத்தில், அறங்களின் பிழிவான பகுதி இது. தமிழ் இலக்கியத் தியத்தடத்தில் சூளுரை என்பது தொன்றுதொட்டு வருவது. என் பகைவர்களை நான் வென்று மேம்படுவேன்; இயலாவிடின், நான் இன்னின்ன கீழ்மைகளைச் செய்தவனாவேன் எனச் சூளுரை செய்தலைப் புற இலக்கியங்கள் பேசிக்காட்டுகின்றன. சூளுரை

மொழிகளின் பின்புலத்தில், தமிழா பெரிதும் உயர்வாகப் போற்றிய, அறநெறிகள் அணிவகுத்து நிற்கும். பரதன் சூளுரையும் அங்ஙனமே அமைகிறது.

வேதங்களையும், வடமொழி நீதி நூல்களை்யும் தமிழ்த் தொன்னூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்த கவிஞன் கம்பன். உயர் அறங்களைக் காப்பியத்தில் பதிவு செய்ய, இடம் தேடி நின்ற கம்பனுக்குப் பரதனின் சூளுரை, தன் எண்ணங்களைப் பதிவு செய்ய நல்ல களமாக அமைகிறது. உயர்நெறிகளைச் சான்றோர் வாய்ச் சொல்லாகப் பதிவு செய்தல், ஒரு உளவியல் உத்தியாகும். அவ்வாறு செய்வதால் அவற்றின் மதிப்பு இரட்டிப்பாகிறது.

'இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்'

என்ற வள்ளுவம் அரண் அமைக்கிறது. கதைப்போக்கில், பரதன் தன்னைத் தூயன் என நிலைநாட்டக் கூறும், இச் சூளுரைப் பகுதி, அறங்களின் அணி வகுப்பாகக் காப்பிய வாழ்வுக்கு அரண் சேர்க்கிறது. கவிஞனின் அறநெஞ்சமும் இனங்காணப்படுகிறது.

பரதன் சூளுன்ரயாகக் கம்பன், பத்தொன்பது விருத்தங்களைப் பதிவு செய்கிறான். அவற்றில், ஒரு மனிதன் செய்யத் தகாத, கொடுஞ்செயல்கள் எவை எவை என, இனங் காட்டப்படுகின்றன. நான், உண்மையில் கைகேயி இழைத்த கொடுமையை அறிந்தவனாயின், அறம் பிழைத்த அன்னோர் எய்தும் அருநரகிடை வீழ்ந்தவனாவேன் என்று நீள்கின்றன பரதனின் சூளுரை மொழிகள். அவற்றை முழுவதுமாக எடுத்து மொழிந்து, ஆய்வுக்கு உட்படுத்தினால், அவை ஒரு தனி நூலாக விரியும் நீட்சி உடையன. இடம் கருதிச் சிலவற்றைக் காணல் தகும். இத்தகு அரிய பதிவுகளில், பாத்திரப் பண்புகள் பளிச் சிடுவதோடு, கவிஞனின் அறநெஞ்சின் அழகும் வெளிப் படுகின்றது.

தீ எரி நரகத்தில், சென்று வீழ்வார் யார்? எவ்வகை அறக்கேடுகள், அன்னாரைத் தீயுழி உய்க்கும், என்பதை அறிவிக்கும் அரியபகுதி இது.

அறநெறி சாராது, அதனைப் புறக்கணித்துப்பொருள் ஈட்டுபவன்.

கருணை சிறிதும் இல்லாத கொடுநெஞ்சம் உடையவன்.

மாற்றான் மனைவி மீது ஆசைகொண்டு, பிறன்

ஒருவனுக்கு உரியாளின் மனையை மிதித்தவன்.

கடும் கோபத்தால், பிறர் மீது சீற்றம் கொள்பவன்.

வலிமை காரணமாக, நிலைபெற்ற பிற உயிர்களைக் கொன்று உண்டு வாழ்பவன்.

துறவு · நெறி நிற்கும் பெருந்தவத்தோர்க்கு, அரிய துயரத்தை விளைத்தவன்,

பெற்றோரையும், பெண்டிரையும் வாளால் கொன்றவன்.

போரில் புறமுதுகிடும் நிலைவந்த போது, உயிர்விடாது நாடு மீண்டவன்.

இரவலன் சேமித்து வைத்திருந்த நிதியைத் துன்புறுத்தித் தனதாக்கிக் கொண்டவன்.

திருமால், உலகின் தலைவன் அல்லன் என்று பேசித் திரிபவன்.

அறநெறி வகுத்த அந்தணர்தம் வழி முறைகளில் பிறழ்ந்தவன்.

குற்றமற்ற வேதத்தைப் போற்றாது, இது, திட்டமிட்ட பொய் என்று கூறும், பேய் நெஞ்சு படைத்தவன்.

தாய் பசித்திருக்கத் தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் பாவிகள்.

தன் தலைவன் வீழுமாறு செய்து வாழ்ந்தவன்.

மேற்குறித்த அறக்கேடு சூழ்ந்தவர்கள் எய்தும் நரகிடை, நான் சென்று சேர்வேன் என்கிறான் பரதன்.

எத்தனை வகை அறக்கேடுகள், உலகில் உள்ளன என்பதை, இனங்காட்டும் கம்பன், பரதன் வாயிலாக நம்மை

மீட்கும் அரு முயற்சியில் ஈடுபடுகிறான். கதை நிகழ்வு கடந்த இத்தகைய அறிவூட்டல்களில், கவிஞன், மனிதநேயம் மிக்க, ஒரு மாமனிதனாக உயர்கிறான்.

பரதனின் சூளுரை மேலும் நீள்கிறது.

அச்சூளுரைகளின் சாரமாகச் சிலவற்றை இனம் காண்பது பாத்திர உயர்வை அறிய உதவுவதோடு, அறக்கூறுபாடுகளை நாம் அறியவும் உதவுகின்றது.

பொய்க்கரி கூறுதல்; அடைக்கலப் பொருளைத் தனதாக்கி வெளவுதல்; மகனைக் கொல்லுதல்; கன்று பசித்துச் சாகப் பால் கறத்தல்; நன்றியை மறத்தல்; நடுவழியில் உயிர் பெரிதென்று மகளிரைக் கைவிட்டு ஓடுதல்; அயலார் பசித்திருக்க உண்ணுதல் ஆகியவற்றைக் குற்றங்களாகப் பதிவு செய்யும் கம்பன், அரசியல் வஞ்சகர்களையும் இனம் காட்டு கின்றான்.

'அழிவு அரும் அரசியல் எய்தி ஆகும் என்று
இழி வரு சிறுதொழில் இயற்றி ஆண்டு ·தன்
வழி வரு தருமத்தை மறந்து, மற்று ஒரு
பழி வரு நெறிபடர் பதகன் ஆக யான்.'

அரசியல் ஆதாயம் கருதி, இழிவரு சிறுதொழில் இயற்றும், கீழோரையும் அடையாளம் காட்டிக் கவிஞன் எச்சரிக்கை விடுக்கிறான்.

கன்னிப்பெண் ஒருத்தியை வஞ்சித்து அடைய விரும்புவன்; ஆசிரியன் மனைவியைக் காமக்கண் கொண்டு பார்த்தவன். கள் உண்டவன்; திருடன்; உண்ணலாகாதவற்றை நாய் போல் உண்டு நின்றவன்; பிறர் பழி கூறுவோன்; வேண்டிய ஒருவனுக்கு, உண்டு இல்லை என்று ஒன்று கூறாது அலைக் அழிப்பவன். பகைவர் தன் நாடழிக்கவும், எதிர்த்துப் பொறாது அஞ்சி உயிர் வாழ்பவன் முதலியோர் கீழ்மையர் என்கிறது பரதன் நெஞ்சம். இந்த நீண்ட வஞ்சின மொழிகள் கோசலையின் ஐயத்தை அகற்றி, அவனைத் தூயன் என நிலைநாட்ட உதவுகின்றன.

நல்லறங்கள் பலவற்றையும் அறிந்து, அவற்றைப் பெரிதெனப் போற்றும், இப்பண்புடைய பரதன், குற்றமற்றவன் என்று உணர்ந்த கோசலை,

'முன்னை நும்குல முதலுளோர் கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்
மன்னர் மன்னவா என்று வாழ்த்தினாள்...'

என்று வாழ்த்தியதாகக் கம்பன் நிறைவிக்கிறான். கோசலையின் இந்த ஐயம், இப்போது நீங்கியது மட்டும் அன்று, பதினான்கு ஆண்டுகளுக்குப்பின், பரதனைப் பற்றிய மதிப்பீடு அவள் நெஞ்சில் எவ்வாறு உயர்கிறது என்பதையும் கம்பன் இனங்காட்டத் தவறவில்லை.

நந்தியம் கிராமத்தில், இராமன் பாதுகைகளே துணையாக, தவவாழ்வு வாழ்ந்து வரும் பரதன், குறித்த நாளில் இராமன் நாடு திரும்பாமையால், தீப்புகுந்து உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிகிறான். செய்தி அறிந்த கோசலை, நெஞ்சம் துடிதுடித்துப் பரதனைச் சென்றடைகிறாள். 'பரதா நீ தீப்புகத்துணிந்தால் இந்த நாடே தீப்பாய்ந்து அழியும். நாற்பெரும்படையும் தீப்புகும்; தாயர்களாகிய நாங்கள் மட்டும் அன்று; சிறப்புமிக்க அறமும் தீயில் மாயும்; ,உலகில் நிலை தடுமாறும்.'

தரும நீதியின் தன் பயன் ஆவது உன்
கருமமே அன்றிக் கண்டிலம் கண்களால்
அருமை ஒன்றும் உணர்ந்திலை ஐ யநின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ?

நீதியின் பயன், பரதனின் செயல்கள் என்று மதிப்பிடும் கோசலை, அவனை ஓர் ஒப்புமை மூலம், பாராட்ட நினைக்கிறாள். தன் வயிற்றில் உதித்த, இராமனை நினைக்கிறாள். பரதனை, அவன் செயல்களை, அன்பு நெஞ்சம் சீர் தூக்கிப் பார்க்கிறது. பண்பில், சகோதர பாசத்தில், பழிதுடைக்கும் பேருணர்வில், பரதன், இராமனை விட உயர்ந்தவன் என்று நல் நெஞ்சம் இனம் காண்கிறது. அவ்வுயர்வின் அளவு எத்தகையது? எவ்வளவினது? நாம் வியக்கக் கோசலை மதிப்பீடு அமைகிறது!

எண்ணில் கோடி இராமர்கள் என்னிலும்
அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ

கோடி இராமர் அருளுக்குப் பரதன் நிகரானவன் என்கிறது, அன்று ஐ யுற்ற கோசலை மனம்.

தசரத குமாரர்கள் பிறந்தகாலை, கம்பன் முனிவன் கூற்றாகக் கதை நடத்துவான். ஒவ்வொருவர் பிறப்பாகக் கூறி வரும் கம்பன் பரதனைக் கைகேயி பெற்றெடுத்ததைக் கூறும் போது, குலமுறை கிளத்துப் படலத்தில்,

'தள்ள அரிய பெருநீதித் தனிஆறு புக மண்டும்
பள்ளம் எனும் தகையானைப் பரதன் எனும்
பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ் இருந்த
வள்ளலையே அனையானை கேயர்கோன் மகள்
பயந்தாள்

என்று முனி மொழியாக அறிமுகம் செய்வான். 'தள்ளரிய பெரு நீதித் தனியாறு புகமண்டும் பள்ளம்' என்ற தொடரின் முழுப்பொருளையும் நிலைநாட்டப் பரதனின் சூளுரைகளைப் பதிவு செய்து, அவன் நீதியின் உறைவிடம் என்பதை நிலை நாட்டுவான். வள்ளலையே அனையான் என்ற அறிமுகத்தை வளர்த்து, அவன் கோடி இராமர்களுக்கு இணை என்று, உயர்த்தி மகிழ்வான். பாரதத்தில் அறப்பாத்திரமாக மூத்தவன் தருமன் அமைந்தான். இராம காதையில் இளையவன் தரும வடிவாகச் சிறப்பதைக் கண்டு மகிழ முடிகிறது.

பழி துடைத்துக் கொள்வது மட்டும் அன்று: உலகத்தார் பாராட்டுக்களையும் பெறுவது, மானுடத்தின் குறிக்கோளாகவும் அமைதல் வேண்டும். அப்பாராட்டும், தொடர்பற்ற அன்னி யரிடமிருந்து வரும்போது, அதன் மதிப்புப் பன்மடங்காகி விடுகிறது. பரதனுக்கு அத்தகு பாராட்டுக் கிடைக்கும் ஓர் இடம் நினைவு கூர்ந்து மகிழத்தக்கது.

இராமகாதையும், மகாபாரதமும் இந்தியத் திருநாட்டின் தொல் இலக்கியங்கள். சகோதரர்கள் தம்முள் பேதமின்றி அன்பு கொண்டு வாழ்ந்து, வெற்றியீட்டி வாழ்ந்த கதை இராமன் கதை. அவர்கள், தம்முள் கலாம் விளைத்துப் பகைமை கொண்டு பழிசுமந்து வீழ்ந்த கதை பாரதம். ஒன்று, உடன் பாட்டால் சகோதர அன்பின் உயர்வைப் பேசியது. பிறிதொன்று, எதிர்மறையால், பங்காளிச் சண்டையால் வீழ்ந்தவரை இனங்காட்டிச் சகோதர அன்பின் இன்றியமை யாமையை வற்புறுத்தி நின்றது.

கட்டுக்கோப்பான, அன்பு நிறைந்த, அயோத்திச் சகோதர்களை இனங்காட்டும் கம்பன், தம்முள் பகைத்துக் கொண்டதால் வீழ்ந்த இரு சகோதரர்களையும் நமக்கு இனம் காட்டுகின்றான். ஒருவன், கிஷ்கிந்தையில் வாழ்ந்த வாலி. இன்னொருவன், இலங்கையில் வாழ்ந்த இராவணன்..

வாலி சுக்ரீவன் சண்டையில் சிக்கிக் கொள்கிறான் இராமன். உணர்ச்சி வயப்பட்டுச் சுக்ரீவனுக்குத் தந்த வாக் குறுதியை, அனுமன் நன்கு பயன் கொள்கிறான். வாலி சுக்கீரிவன் சண்டையில், மறைந்திருந்து அம்பு எய்யும் அவலம் இராமனைச் சூழ்ந்து கொள்கிறது. வாலி, இராமபாணத்தால் அடியுண்டு தரையில் சாய்கிறான். அவன் அருகில் இராமன் சென்றதும், ஆத்திரத்தில், பலபட, இராமனை நிந்தனை செய்கிறான். வாலியின் வாதங்களைப் பலவாகக் கம்பன் பதிவு செய்கிறான். முதன்முதல், வாலி இராமனை நோக்கி இகழ்ந்து கூறுவதில் 'இராமா நீ தசரதன் மைந்தன் தானா?' என்பது ஒன்று! 'மற்றொன்று' நீ பரதனுக்கு முன்னே பிறந்தவன் தானா என்பது!

அயோத்தியிலிருந்து, பல ஆயிரம் கல் தொலைவில் இருக்கும் கிஷ்கிந்தை வேந்தனான வாலிக்குத் தயரதன் நேர்மையும், பரதனின் சகோதர பாசமும் நன்றாகவே தெரிந் திருக்கின்றன.

'வாய்மையும் மரபும் காத்து மன்உயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீ பரதன் முன் தோன்றினாயே?

நீ பரதனுக்கு அண்ணனா என்ற, வினாவின் பின்னணியில், பரதனின் தியாகம் முழுவதும், வாலி அறிந்திருந்தான் என்பதை உணர முடிகிறது. மேலும் வாலி பேசுகிறான்.

'.... பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டு ஒரு கருமம் செய்தாய்: எம்பிக்கு இவ்வரசை நல்கி
காட்டு ஒரு கருமம் செய்தாய்: கருமந்தான் இதன்மேல்
உண்டோ?'

என்ற கூற்றில், அயோத்தி நிகழ்வுகள் யாவும் வாலிக்குத் தெரிந்திருப்பதை உணர்கிறோம்.

அயோத்தி நிகழ்வுகளில், வாலியின் உள்ளம் கவர்ந்தவன் இராமன் அல்லன். நாளை காலை, இராமன் கோமுடி சூடுவான் என்று நாட்டு மக்களுக்கு உரைத்த உரையை நிறைவேற்ற இயலாத நிலையில், தன் உயிர் நீத்து வாய்மையும் மரபும் காத்த தசரதன், வாலி நெஞ்சில் உயர் இடம் பிடித்துள்ளான். அடுத்துத் தந்தை, தாயுரை கொண்டு வழங்கிய அயோத்தி அரசை ஏற்காது, 'முறைமை அன்று' என்ற முனைப்போடு, அதனை, மூத்தவன் இராமனுக்கு வழங்கி அவன் பணித்தவாறு, பாதுகையை அரியணை ஏற்றி, துறவிக் கோலத்தோடு, தவவாழ்வு வாழும் பரதன் அவன் நெஞ்சில் நிறைகிறான். 'ஆயிரம் காரணங்கள் கூறப்பட்டாலும், மூத்தவன் இருக்க இளையவன் அரியணை ஏறுதல் தகாது என்ற தருமம் காத்த பரதனோடு முன்பிறந்த நீ, என்னை வீழ்த்தி, என் இளவலுக்கு நாடு வழங்க முன்வந்துள்ளாய்! இச்செய்கை, உன்னைப் பரதனுக்கு மூத்தோன் என்று கூறிக் கொள்ள நாணம் தருவதாகும் 'என்கிறான் வாலி.' ஒரே குலையில் பழுத்த பழங்கள், தம்முள் சுவை வேறுபடாது, ஒன்று போல் இருக்கவும், ஒரு குடியில் பரதனோடு பிறந்த நீ, குணத்தால் மாறுபட்டிருப்பது ஐயம் தருகிறது, என்று வாலி, இராமனை நகையாடுகின்றான். பரதன் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையிலிருந்து, இராமன், ஒரு பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்பது வாலியின் வாதம். இங்கே பரதனின் நீதியுணர்வு நெஞ்சில் நிறைகிறது!

தம்பியைக் கொல்லத் துணிந்து, தம்பி மனைவியைப் பற்றிவைத்திருக்கும் வாலி போன்றவனின் பாராட்டு மொழிகள், பரதனுக்குப் பெருமையாகுமா என்ற வினா எழுவது இயற்கை.

> 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என்ற குறள் நெறி அறிந்தார் நெஞ்சில், இவ்வினா எழ நியாயம் இல்லை. மற்றொன்று, மரணத்தின் வாயிலில் வரும் சொற்களில், பொய்மை இருத்தல் இல்லை. இவ்வுண்மைகள் உணரப்படும் போது, வாலி கூற்றின் மெய்மையும் உணரப் படும்.

வாலியின் இக்கூற்று, இராமனுக்கும் இசைந்ததே என்பதை நிலைநாட்டக் கம்பன் வேறு ஒரு சான்றையும் பதிவு

செய்துள்ளான். வாலியை மறைந்திருந்து கொல்வது என, இராமன் முடிவெடுத்ததைத், இலக்குவன், முன்னதாக ஏற்றிலன். 'அண்ணா! இந்தச் சுக்கிரீவன், தன் அண்ணனாகிய வாலியைக் கொல்லக் கொடுங் கூற்றுவனாக, உன்னைப் பயன் கொள்ள முனைகின்றான். தன் உடன் பிறந்தவனையே கொல்லத் துணியும், இந்தச் சுக்கிரீவன், நம் போன்ற அயலாரிடத்து, எப்படி நீதியுடன் நடந்து கொள்வான் என்று எதிர்பார்க்க இயலும், என்று இலக்குவன் ஐ யுற்றுப் பேசுகிறான்.

இலக்குவனின் இந்த ஐ ய வினாவிற்கு, இராமன் தரும் விடையில், அவன் பரதன் பால் கொண்டுள்ள உயர்ந்த எண்ணம் வெளிப்படுகிறது. இராமனின் விடை இரண்டு கூறுகளை உடையது. ஒன்று, சுக்கிரீவனும், வாலியும், காட்டில் வாழும் விலங்கினத்தினர். இவர்கள் உறவில், அண்ணன் தம்பி என்ற பாச உணர்வினை, ஆராயத் தேவை இல்லை என்பது. இவ்விடை, இலக்குவனை அமைதிப்படுத்த உரைத்ததே அன்றி, இராமன் நெஞ்சார உரைத்த தன்று. இரண்டாவதாக, இராமன் கூறுவது.

'எத்தாயர் வயிற்றிலும் பின்பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?

உலகில், தாயர் பலர். அவர் தம் வயிற்று, உடன் பிறந்தவர்கள் எல்லாரும், சகோதர ப்ாசத்தில் தலை நின்று விட்டால், பரதன் போன்றோரை, அன்னாருள் பிரித்தெடுத்து, உத்தமன் என்று பாராட்ட இயலுமோ என்பது, இராமன் தரும் விடை. சிறந்த சகோதரனாகத் தன் எதிரில் இருக்கும் இலக்குவனைச் சகோதர பாசத்திற்கு, இராமன் உவமை கூறியிருக்க முடியும். ஆனால், இலக்குவன் தன் மேல் கொண்ட பாசத்திலும், மேம்பட்டது பரதனின் பாசம். நீ, என் மேல் கொண்ட அன்பு மிகுதியால் பரதனை ஐ யுற்றாய்! பரதனோ, உடன் பிறந்தார் அனை வரிடமும், ஐ யமற்ற, தூய அன்பினைச் செலுத்தினான் என்பதனை, இராமன் உளங் கொண்டிருக்க வேண்டும். அதனால்தான், உலகியல் பேசி, பரதனின் உயர்ந்த சகோதர அன்பைப் புகழ்ந்துரைக்கிறான். அதன் உண்மை உணர்ந்த இலக்குவனும் அக்கூற்றை மறாதொழிகிறான்.

வாலி கூற்றும், அதை ஏற்கும், இராமனது பரதன் பற்றிய உயர் மதிப்பீடும், அப்பாத்திரத்தின் நின்று நிலைபெற்ற புகழுக்குக் கட்டியங்களாக அமைகின்றன.

பரதன் என்ற, உயர்ந்த பண்பாளனை, உள்ளவாறு அறியாது செயற்பட்ட பலர், இராம காதையில் வருகின்றனர். 'தாய் அறியாக் கன்றில்லை! அக்கன்றை ஆயும் அறியும்' என்று, விராடன் துதியுள், கம்பன் உலகியல் காட்டி இறையியல் பேசுவான். ஐந்தறிவு படைத்த தாய்ப்பசுவுக்குக் கூடத் தன் கன்றின் இயல்பு தெரியும். அதற்கு எது பிடிக்கும், எது பிடிக்காது, என்ற தெளிவும், அதற்கு உண்டு. இத்தெளிவு கூட அற்ற தாயாக, இராம காதையில் வரும் கைகேயி, தெரிந்தே, திட்டமிட்டுத் தன் மகன் பரதனுக்கு இழைத்த கொடுமை, பெரிது. ஒரு கோணத்தில், இச்செயல், பரதனுக்குத் தாழ்வைத் தந்தது என்றாலும், அதுவே, அவன் புகழ் பூத்து எழவும் இடந்தந்து நின்றது. 'கேட்டினும் உண்டு ஓர் உறுதி' என்ற தொடர், அவனளவில் மெய்ம்மையாகவே அமைந்தது.

'குட்டி குலைத்துத் தாய் தலையில் வைத்தது' என்று ஒரு பழமொழி உண்டு. மனிதர்கள் தெரிந்தும், தெரியாமலும், பல தவறுகளைச் செய்கின்றனர். அவற்றின் பயனை, அவர்கள் மட்டுமே நேராக நுகர்கின்றனர் என்று கூற முடியாது. சில நேரங்களில் அவற்றின் பயனை, ஒரு குற்றமும் அறியாத அன்னாரின் சுற்றத்தார், நுகர நேர்ந்து விடுகிறது. நாம் போடும் கணக்குகள் யாவும், நாம் நினைத்த விடைகளைத் தருவதில்லை. ஏனெனில், நம்மில் பலர், விடைகளை விரும்பித் தீர்மானித்துக் கொண்டே, வினாக்களைத் தொடங்குகின்றனர். தன் தவறுகளுக்குத் தான் அனுபவிப்பது, புரிந்து கொள்ளத் தக்கது. பிறர் தவறுகளுக்கு, நாம் அனுபவிக்கும் போது அதனை விதி என்று கூறுவதைத் தவிர, வேறு வழி அமைவ தில்லை. பரதனுக்கு வந்துற்ற பழியும் அவ்வாறாகவே வந்தது.

கேகய நாட்டிலிருந்து, கைகேயின் சீதனப் பொருளாக வந்தவள், மந்தரை எனப் பெயரிய கூனி. இராமன் இளை யனாய், கைகேயி மாளிகையில் விளையாடி மகிழ்ந்த போது, மண் உருண்டைகளை வில்லின் வழி, கூனியின் கூனல் முதுகின் மேல் செலுத்தினான். அவன் பிள்ளை விளையாட்டு கூனி நெஞ்சில், பகைமைத் தீயை வளர்த்தது. பல ஆண்டுகளுக்குப் பின், இராமனுக்கு முடி சூட்டு விழா என்று

அறிவிக்கப்பட்டபோது, கூனி சிலிர்த்தெழுகிறாள். மண் உருண்டையால் அடித்தவனுக்கு, இந்த மண்ணாட்சியை இல்லா தாக்குகின்றேன் என்று கருவம் கொள்கிறாள். கைகேயியின் உறுதியற்ற மனப் போக்கை, அவள் பயன் கொள்கிறாள். தசரதன் மாள்கிறான். இராமன் காடு ஏகுகின்றான். இந்தப் பழி வாங்கும் முயற்சியில், கூனி வெல்கிறாள். இவர்களோடு எந்த மன உறவும் அற்ற, பரதன் மேல், பழி வந்து சூழ்கிறது.

அரசரில் பிறந்து, அரசரில் புகுந்த கைகேயி பரதன் என்னும், உத்தம மகனைப் பெறும், பேறு பெற்ற தெய்வக் கற்பினாள். தசரதனின், அன்புக்குரிய இரண்டாம் மனைவி. சம்பராசுர யுத்தத்தில், கைவிரலையே அச்சாணியாகக் கொடுத்துக் கணவனுக்கு வெற்றி தேடித் தந்த வீரமும், விவேகமும் மிக்கவள். இராமபிரானை வளர்க்கும், பேறு வாய்க்கப் பெற்றவள். இருந்தும், தன் மகன், இதனை விரும்பு வானா மாட்டானா என்பதனை நுனித்தறியும் அறிவின்றி, கூனி சொற்களால், மனம் மாறிப் பழி சுமக்கிறாள். மகனுக்கு நாட்டாட்சி பெற்றுத்தந்ததாக, அவனுக்கு நன்மை செய்வதாக நினைத்துப் பெரும் பழியை ஈட்டி வைக்கிறாள். இம் முயற்சிகள் பற்றி, யாதொன்றும் அறியாது, பாட்டன் வீட்டில் தங்கியிருக்கும் பரதனைப் பழி தேடிச் சென்று பற்றுகின்றது.

ஒன்றும் அறியாது, கோசலம் திரும்பும் பரதனுக்குப் பேரதிர்ச்சிகள் காத்துக்கிடந்தன. கைகேயிடம்,

> 'ஆண் தகை நெடுமுடி அரசர் கோமகன்
> யாண்டையான் பணித்திர்'

என வேண்டி நிற்கிறான். சிறுதும் கலக்கமில்லாத கைகேயி,

> 'தேன் அமர் தெரியலான் தேவர் கைதொழ
> வானகம் எய்தினான்: வருந்தல் நீ'

என்று விடை தருகிறாள். பலபட அழுது அரற்றிய பரதன், அண்ணன் இராமன் எங்கே என வினவுகிறான். கைகேயி,

> 'தெவ் அடு சிலையினாய் தேவி தம்பி என்று
> இவ் இருவரொடும் கானத்தான்'

என்று விடை தருகிறாள். பரதன் துடி துடித்துக் காரணம் கேட்கிறான். அவளோ,

'வாக்கினால் வரம் தரக்கொண்டு, மைந்தனைப்
போக்கினேன் வனத்திடை: போக்கி, பார் உனக்கு
ஆக்கினேன்: அவன் அது பொறுக்கலாமையால்
நீக்கினான் தன் உயிர் நேமி வேந்து'

என்று சலனம் சிறிதுமின்றி விடை தருகின்றாள்.

கைகேயியின் கொடுமை உணர்ந்த பரதன், கொதித்து மொழியும் சொற்கள் கழிவிரக்கம் மிக்கன.

'நோயீர் அல்லீர் நும் கணவன் தன் உயிர் உண்டீர்
பேயீரே நீர்! இன்னம் இருக்கப் பெறுவீரே!
மாயீர்! மாயா வன் பழி தந்தீர்! முலை தந்தீர்
தாயீரே நீர்! இன்னும் எனக்கு என் தருவீரே!'

அன்னை மீது, அவன் கொண்ட கடுங்கோபம், அவளைக் கொன்று தொலைக்கவும் நீண்டிருக்கும். இதனைச் செய்தால் இராமபிரான் கோபிக்குமே என்று, தன் சினம் மாற்றுகின்றான் பரதன். 'தாயே! உன் இந்தச் செயலை, உலகத்தார் ஏற்கமாட்டார்கள்! இனியும், யான் பழி சுமந்து உயிர் வாழ மாட்டேன்! யாதொன்றாலும், உன் பழி தீரப் போவதில்லை! இத்தகு செயல் நடந்த கோசலத்தில், இனித் திருமகள் தரித்திராள். யார் உனக்கு இந்த யோசனைகளைக் கூறியவர்? யாரொடு கலந்தாய்ந்து, இம்முடிவினை மேற்கொண்டாய்? அறம் யாவும் வேரொடு வீழ்ந்துபட்டதே! என்ன காரியம் செய்தாய்!'

ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற செய்திகளை, அடுக்கிக் கவிபுனைகிறான் கம்பன். கோபத்தில், கருத்துக்கள் தொடர்ந்து நடையிடா, என்ற உளவியல் காட்டுகின்றான் கவிஞன். கோசலையைக் கண்டு, அவள் ஐ யுற, சூளுரைத்துத் தன்னைக் குற்றமற்றவன் என்று காட்டி நிற்கிறான். வசிட்டனோடு சென்று, தந்தையின் உருவைக் கண்டு அழுது அரற்றுகின்றான். தயரதன் உடல் எரியூட்ட, சரயு நதிக்கரைக்கு எடுத்துச் செல்லப் படுகிறது. ஈமப்பள்ளியில், தசரதன் உடல் கிடத்தப்பட்டதும் அருகில் உள்ளோர் 'வீர! நுந்தைபால் பொய் இல் மாக்கடன் கழித்தி போந்து' என்று அவனை ஆற்றுப் படுத்தினர். பரதனும், இறுதிக்கடன் இயற்ற முன் வந்தான். அக்காலை, பல்லாயிரவர் கூடி நிற்கும் இடத்தில் வசிட்டன்.

'அன்னை தீமையால் அரசன் நின்னையும்
துன்னு துன்பத்தால் துறந்து போயினான்'

என்று பரதன் உளம் வெறுப்பக் கூறுகின்றான். பெற்றெடுத்த தந்தையே, மகனை, இனி அவன் என் மகன் அல்லன் என்று கூறினால், அது எத்துணைப் பேரவலம்! தாய் செய்த பிழைக் காகப் பரதன் தந்தையால் தண்டிக்கப்படுகிறான். தாய் எனக்கு வழங்கிய பேறு ஈதோ என்று மாழ்குகின்றான்.

'என்னை! என்னையே ஈன்று காத்த
அன்னையார் எனக்கு அழகு செய்தவா!'

என்று பேசிக் கழிவிரக்கம் கொள்கிறான்.

பரதன் நாடு திரும்பு முன்னர், திரைமறைவில் நடந்த நாடகத்தை அவன் அறியமாட்டான். வசிட்டன் மொழிந்த அறிவுரைகளைக் கேட்ட பின்னரும், கைகேயி தன் கருத்தை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. வசிட்டன், அவளை நிந்தித்து விட்டுத் தயரதனிடம் நிலைமை கூறுகின்றான். பெருஞ்சினம் கொண்ட தயரதன், கைகேயி என் மனைவி அல்லள் என்று அவளைத் துறக்கிறான்.

'இன்னே பலவும் பகர்வான்
இரங்கா தாளை நோக்கி
சொன்னேன் இன்றே இவள் என்
தாரம் அல்லள்: துறந்தேன்:'

என்று கூறி அவளைத் துறக்கிறான். வேள்வித் தீ முன்னர், அம்மி மிதித்து அருந்ததி பார்த்து மணந்தவளை, ஆத்திரத்தில் ஒரே வார்த்தையில், இவள் என் தாரம் அல்லள் என்பதால், மனைவி என்னும் உறவு அற்று விடாது. என்றாலும், சினத்தின் உச்சியில், சிந்தனைக்கு இடமில்லை என்று கம்பன் காட்டுகிறான்.

தசரதன் தொடர்ந்து பேசும் போது, கற்பார் நெஞ்சம் பதைக்கிறது. கைகேயி மேற்கொண்ட சினம், யாதொரு காரண காரியமும் இன்றிப் பரதன் மேல் திரும்புகின்றது.. அவன், இனி என் மகன் அல்லன் என்கிறான்.

'மன்னே ஆவான் வரும் அப்பரதன்
தனையும் மகன் என்று

உன்னேன் முனிவா அவனும்
ஆகான் உரிமைக்கு'

என்று கூறும் தசரதன் உரையில், ஆத்திரம் மட்டுமே எஞ்சுகிறது.

உண்மையிலேயே பரதன் பற்றித் தயரதன் கருத்து யாது? அதை அறிந்து கொள்ளவும், கம்பன் ஒரு இடம் அமைக்கிறான். முன் உறுதி கூறிய, இரண்டு வரங்களில், ஒன்றால் பரதன் நாடாள வேண்டும்: பிறிதொன்றால் இராமன் காடாள வேண்டும் என்று, கைகேயி வரங்கேட்கிறாள். பர்தன் உயர் பண்புணர்ந்த தயரதன், கைகேயியைச் சினந்து பின் பணிந்து அவள் கால்களில் வீழ்ந்து, 'கொள்ளான் நின் சேய் இவ்வரசு' என்று, நீ வேண்டியவாறு, நான் தந்தாலும், பரதன் இவ்வர சாட்சியை ஏற்கமாட்டான் என்று, நம்பிக்கை பூண்கிறான். அவனே, பின் தன்நிலை இழந்து, பரதன் இனி, என் மகன் அல்லன் என்கிறான். ஒவ்வொருவரும், தத்தம் பங்கிற்குப் பரதனைச் சின்னா பின்னப் படுத்தும் அவலம் நம் நெஞ்சைப் பிழிகிறது.

வசிட்டன் உரை கேட்டுப் பரதன், மேலும் அழுது அரற்ற, சத்துருக்கனைக் கொண்டு ஈமக்கடன்கள் இயற்றப் படுகின்றன. அனைவரும் நாடு சேர்கின்றனர். பின் வசிட்டன் பரதனை அணுகி,

'உந்தையோ இறந்தனன்: உம் முன் நீத்தனன்
வந்ததும் அன்னைதன் வரத்தில்: மைந்த நீ
அந்தம் இல் பேரரசு அளித்தி'

நீ நாடாள வேண்டும் என்று வேண்டுகின்றான். அக்காலை, பரதனின் உண்மையான மனநிலை நன்கு வெளிப்படுகிறது.

'நல்நெறி என்னினும் நான் இந்நானில
மன்னுயிர் பொறை சுமந்து இருந்து வாழ்கிலேன்
அன்னவன் தனைக் கொணர்ந்து அலங்கல் மாமுடி
தொல் நெறி முறைமையின் சூட்டக் காண்டிரால்'

என்கிறான். ஒரு வேளை, இராமன் நாடு திரும்ப மறுத்தால், என்ற வினாவை, அவனே எழுப்பி விடை காண்கிறான்.

'அன்று எனின் அவனொடும் அரிய கானிடை

நின்று இனிது இருந்தவை நெறியின் ஆற்றுவென்
ஒன்று இனி உரைக்கின் என் உயிரை நீக்குவென்'

என்றான் பரதன். அவன் உறுதி கண்டு, அவையோர் அவனைப் புகழ்கின்றனர். 'கொள்ளான் நின் சேய் இவ்வரசு' என்ற, தயரதன் நம்பிக்கையைப் பரதன் மெய்ப்பிக்கிறான். ஆனால், இவன் என் மகன் அலன் என்ற பழி தொடர்கிறது. அதனை நீக்கும் நாள் காப்பியத்தின் நிறைவில் வருகிறது.

இராமகாதையில், தொடக்கம் முதல் இறுதிவரை பரதனை, உள்ளவாறு மதிப்பிட்டு அறிந்த, ஒரே பாத்திரம் இராமன் மட்டுமே. தசரதன், சினத்தின் உச்சியில் நின்று 'கைகேயி என் மனைவி அல்லள்: அவள் வயிற்றில் பிறந்த பரதன் என் மகனும் அல்லன்' என்று உரைத்து மாய்ந்த செய்தி இராமபிரானுக்கு எட்டியிருக்க வேண்டும். இந்தச் சிக்கலிலிருந்து, அவர்களை விடுவிப்பது எவ்வாறு என்று, இராமன், நீளச் சிந்தித்திருக்க வேண்டும். அவனோடு இணைந்து, கம்பனும் காலம் பார்த்திருத்திருக்கிறான். வன வாழ்வு: சூர்ப்பணகை வரவு: இராவணன் சீதையைக் கவர்தல்: இராமன் இலங்கை சென்று அவளை மீட்டல் என்று நீண்டு சென்ற பதினான்கு ஆண்டுகளில், இடையிடையே பரதன், பற்றிய நினைவு இராமனுக்கு வருதலும், அப்போதெல்லாம் அவனை உயர்வாகப் பேசுதலும், காப்பியத்தில் இடம் பெறுவன. தந்தை மீது அளப்பரிய பற்றுக் கொண்ட இராமன் திருவுள்ளத்தில், தசரதன் மனைவியையும், மகனையும் துறந்தமை மகிழ்வைத் தந்திராது. இந்தச் சிக்கலை விடுவிக்க, ஒரு அரிய வாய்ப்பு அமைந்தது. இராமன், அதனைப் பயன் கொண்ட நளினத்தில், பரதன் பால் அவன் கொண்டிருந்த அன்பு பளிச்சிடுகிறது.

சீதை குற்றமற்றவள் என்பதை எடுத்துரைத்து, இராமனைத் தெருட்டுமாறு, சிவன், துறக்கத்திலுள்ள தயரதனைப் பணிக்கின்றான். அவனும், இலங்கை போந்து, சீதையைத் தேற்றுகின்றான். இலக்குவனைத் தழுவிப் பாராட்டுகிறான். பின் இராமனை அணுகி, 'யான் உனக்கு ஈவது ஒன்று கூறுதி: உயர் குணத்தோய்' என அவனை வரம் கேட்குமாறு பணிக்கிறான். இதனைப் பயன்கொண்டு, இராமன் தந்தையிடம்,

'தீயள் என்று நீ துறந்த என்
தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்
வரம் தருக'

என்று வேண்டுகின்றான். கம்பன் பாடலை நிறைவிப்பதில் ஓர் அழகு உண்டு. இவ்வாறு இராமன் வரம் கேட்டதும்,

'வாய்திறந்து எழுந்து ஆர்த்தன
உயிர் எலாம் வழுத்தி'

என்று நிறைவித்து, இராமன் பண்பும், பழி துடைக்கும் பாங்கும் கண்டு, மன்னுயிர் எல்லாம் மகிழ்ந்து ஆர்த்தன என்கிறான்.

அப்போதும், தயரதனுக்குக் கைகேயி மேல் கொண்ட சினம் தணிந்திலது. பரதன் என் மகனாகி, நின் காதல் தம்பியாகட்டும். ஆனால், நின் முடியினைப் பறித்து, உன்னை, இவ்விரதக் கோலத்திற்கு ஆளாக்கிய, பாவி கைகேயி மேல், என்றும் என் சினம் நீங்காது என்றான். இராமன் மேலும் வேண்ட, தயரதன் கைகேயியை மனைவியாக ஏற்கிறான்.

காப்பிய நிறைவில், இறந்த தயரதனை, மீண்டும் மண்ணுலகுக்குத் தருவித்து, அவன் வாய்மொழி வழி, பரதனைக் குற்றமற்றவனாகக் காட்டும் கவித்திறம், ஆழம் மிக்கது. காப்பிய நாயகனாகிய இராமனுக்கு இணையாகப் பரதனைப் படைத்துக் காவியத்தின் இணைத் தலைவனாக உருவாக்கி வளர்க்கும் கவிஞன், அவன் பழியொடு நின்றான் என்று முடித்தால், பாத்திரத் தன்மைக்கு இழுக்கு வந்து சேரும். அக்குற்றத்திலிருந்து அவனை விடுவிக்க முயலும், கவிஞனின் அரிய முயற்சியில் பரதன் பாத்திரம், பட்டை தீற்றப் பெற்ற, உன்னத வைரமாக, ஒளி வீசுகிறது.

ஈன்றணிமையுடைய தாய்ப்பசு, தன் கன்றின் அருகில் வருவாரை எல்லாம், பகைத்துச் சீற்றம் கொள்ளும். கன்றுக்குப் புல் தரவும், நீர் வழங்குவதற்கும் வருவாரையும் கூட, அன்பு மிகுதியால், இவர் நம் கன்றுக்குத் தீங்கு இழைத்து விடுவாரோ என்று ஐயுறுவது; தாய்ப்பசுவின் இயல்பேயாகும். அது போல் இராமன் மீது கொண்ட அளவற்ற அன்பால், பரதனை உள்ள வாறு மதிப்பிட்டு அறியாது, பகைத்துப் பின் அவன் பண்பில் உருகும், இரண்டு பாத்திரங்கள் இராமகாதையில் உண்டு. ஒருவன், உடன் பிறந்த தம்பியாகிய இலக்குவன். இன்னொ

ருவன், இராமன், உவந்தேற்ற தம்பியாகிய குகன். அன்னார் சீற்றங்களுக்குப் பின் எழுந்த தெளிவில், பரதன் மாணிக்க மணியாக ஒளிவிட்டுச் சுடர்கிறான்.

சுமித்திரை, இரண்டு சிங்கங்களைப் பெற்றெடுத்தாள். ஒருவன், இலக்குவன். மற்றவன், சத்துருக்கன். முன்னவன் இராமனுக்குத் தொண்டன். பின்னவன், பரதனுக்குத் தொண்டன். இணை பிரியாத இவ்விரட்டையர்களில் பரதன் சத்துருக்கன் உறவு, இராமகாதையில் விரிவாகப் பேசப்பட வில்லை. சத்துருக்கனும், இலக்குவனுக்கு இணையாகப் பரதன் மேல் அன்பு பூண்டவன். அவன் பேசும் ஒரிரு இடங்களி லேயே, அவனைக் கம்பன் நம் நெஞ்சில் நிறுத்துகின்றான். கானகம் சென்ற இராமன், குறித்த நாளில் அயோத்திக்குத் திரும்பவில்லை. பரதன், முன் உரைத்தவாறு தீப் பாய்ந்து உயிர்விடத் தீர்மானித்துத் தம்பி சத்துருக்கனை அழைக்கிறான். அழைத்து,

‘சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யான் இனி வீடுவன்
மன்னன் ஆதி என் சொல்லை மறாது...’

என்று தன் வேண்டுகோளை அவனுக்குத் தெரிவிக்கிறான். கேட்ட சத்துருக்கன் விம்மி, வெய்துயிர்த்து, நான் உனக்கு என்ன பிழை செய்தேன் என்று கோபம் கொண்டு, அவன் சொல் மறுத்துப் பேசுகிறான். கம்பனில், ஓர் அழகான அர்த்தம் நிறைந்த பாடல், சத்துருக்கன் கூற்றாக இடம் பெறுகிறது.

‘கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்து, பின்பு
போனானும் ஒரு தம்பி: போனவன்
தான் வரும் அவதி போயிற்று என்னா
ஆனாத உயிர்விட என்று அமைவானும்
ஒரு தம்பி: அயலே நாணாது
யானாம் இவ்வரசு ஆள்வேன்? என்னே
இவ்வரசாட்சி இனிதே அம்மா’

இலக்குவனையும், பரதனையும் ஒரு சேரப் புகழ்ந்து பேசி, நாட் டாட்சியை ஒரு போதும் நான் ஏற்க மாட்டேன் என்று கூறும் சத்துருக்கன் கூற்றில், பரதனின் பண்புகள் பிரதி பலிக்கக் காண்கிறோம்.

இலக்குவன் நிலை வேறானது. அவன் காப்பியத்தில், இராமனின் நிழலாகக் கதை முழுதும் வருகிறான். அவன், இராமனுக்குத் தான் இன்றியமையாதவன் என்று, ஒரு போதும் கருதாதவன். மாறாக, இராமனைத் தன் வாழ் முதலாகக் கருதி வாழ்பவன். நீர் குளத்தில் இருந்தால்தான், மீன் உயிர் வாழும். நீரை நீங்கினால், மீனுக்கு வாழ்வேது? கானகம் செல்லும் உன்னைப் பிரிந்து, ஒரு நொடியும் தனித்திரேன் எனக் கூறி, இராமனைப் பின் தொடர்ந்தவன். இராமனுக்குத் தவறு இழைத்ததாகத் தோன்றினால், இன்னார், இனியார் என்று பாராது, வெகுளும் பேரன்பில் தலை நிற்பவன். இந்த அளப்பரிய அன்பில், அவன் பரதனைப் பெரிதும் பகைக்கிறான். அவன் கோபக் கனல் கண்டு, இராமனே அஞ்சும் நிலை வருகிறது.

கைகேயி சூழ்வினையால், இராமன் காடு செல்வான் என்பதை அறிந்த இலக்குவன், பெருஞ்சீற்றம் கொள்கிறான். கைகேயி பால் கொண்ட சினம், பரதன் மேல் பாய்கிறது. இந்தத் தீயவள், சிங்கத்துக்கு ஊட்ட வேண்டிய இனிய ஊனை, நாயின் சிறு குட்டிக்கு, ஊட்ட நினைத்தாள் என்று ஏசுகின்றான். அவன் வில்லின் நாண் ஒலி கேட்டு, இராமன் இலக்குவன் இருப்பிடம் சேர்கிறான். நின் சினத்தின் காரணம் யாதென வினவுகின்றான். இலக்குவன்,

— நின்னை அம்மௌலி சூட்டல்
'செய்யக் கருதி தடைசெய்குநர் தேவரேனும்
துய்யைச் சுடு வெங்கனலின் சுடுவான் துணிந்தேன்'

என்று வீரமொழி பேசுகின்றான். அவன் கூற்றில் தயரதன், கைகேயி, பரதன் மூவருமே இராமன் காடேகக் காரணர்கள் என்ற கருத்து நிலவுவதை இராமன் உணர்கிறான்.

'இலக்குவனே! இந்த அரசை ஏற்றுக் கொள் என்று, தந்தை தசரதன் கூறியவுடன், அதனை மறாது ஏற்றுக் கொண்ட என்பால் குற்றம் உண்டே அன்றி, மன்னவன் இழைத்த குற்றம் ஏதும் இல்லை. இதற்கு நீ ஏன் பிறரைக் குற்றம் காண்கிறாய்' என்று சமாதானம் கூறுகின்றான். பின், இம் மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்ற வினாவிற்கு, இராமன் விதியைக் காரணம் காட்டுகின்றான். கம்பனின், அரியபடைப்புகளில் ஒன்று இராமன் கூற்றாக வரும் இப்பாடல்,

'நதியின் பிழை அன்று நறும்புனல் இன்மை: அற்றே
பதியின் பிழை அன்று: பயந்து நம்மைப் புரந்தாள்
மதியின் பிழை அன்று: மகன் பிழை அன்று: மைந்த!
விதியின் பிழை: நீ இதற்கு என்னை வெகுண்டது?
என்றான்.'

காரண காரியங்களுக்கு உட்படாத நிகழ்வுகளை, விதியின் மேல் ஏற்றிக் கூறுவது கவி மரபு. கைகேயி கேட்ட வரத்தால் தான், தான் காடேகும் நிலை வந்துற்றது என்று இராமன் அறிந்திருந்தும், பழியை அவள் மேல் சுமத்தாது, விதியின் மேல் சுமத்துகின்றான். தன்னை, அன்பு காட்டி வளர்த்த தாயைப் பழி யுரைக்க விரும்பாத நன்மனம், அவள் மன மாற்றத்துக்கு காரணமான விதியை முன்னிலைப் படுத்து, சமாதானம் காண்கிறது. 'மகன் பிழை அன்று' என்பதன் மூலம், பரதன் குற்றமற்றவன் என்பதை, இராமன் உறுதி செய்கிறான். இராமனின் இக்கூற்றை இலக்குவன் ஏற்க மறுக்கிறான்.

'விதிக்கு விதியாகும் என் விற்றொழில் காண்டி'

என்று, மேலும் சீற்றம் கொள்கிறான். 'இலக்குவா! என் சொற்களை ஏற்றுப் போற்றினால், உனக்கு என்ன தாழ்வு வரும்? நின் சினம் தணிக!' என இராமன் கூறவும் இலக்குவன் சீற்றம் தணிகிறான்.

இலக்குவனின் சீற்றம் பற்றி ஒன்றும் அறியாத பரதன், இராமனைத் தேடி அவன் இருப்பிடம் செல்கிறான். கங்கைக் கரையில் இராமன் தங்கியிருந்த இடம் எது எனக் கேட்டு அறிந்த பரதன், இலக்குவனின் தொண்டு பற்றி வினவு கின்றான். குகன், விடை தருகிறான். அவன் தூய தொண்டு உணர்ந்த பரதன், இலக்குவனோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து மனம் மாழ்குகின்றான். பரதனின் உயர் நெஞ்சம், நம்மை ஈர்க்கிறது.

...'இராமனுக்கு இளையார் என்று
முன்பு ஒத்த தோற்றத் தேமில்
யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்
அவன் அது துடைக்க நின்றான்
அன்பத்துக்கு எல்லை உண்டோ
அழகிது என் அடிமை.'

பரதனின் சொற்களில், தம்பி இலக்குவனைப் போற்றும் உயர்பண்பு மிளிர்வதைக் காண்கிறோம்.

தற்காலிகமாக, இராமன் உரையில் கோபம் தணிந்தான் இலக்குவன், ஆயினும், பரதன் மேல் அவன் கொண்ட ஐயம் தீர்ந்திலது. கங்கை கடந்து, தன் சேனையுடன் பரதன், இராமனை நாடி வருதலைத் தூரத்தே கண்ட இலக்குவன், மீண்டும் சினக்கிறான். போர்க்கோலம் பூண்டு, வீர உரை பேசுகின்றான். இராமன், அவன் சினம் தணியுமாறு அறிவுரை கூறுகின்றான். 'நம் குலத்து உதித்தவர் எவரும், தருமநெறி நீங்குதல் உண்டோ? உலகில் எத்தனை வேதங்கள் உண்டோ, அவை அனைத்தும் இயம்பும் நல்லறங்கள் யாவும், ஒரு சேரப் பெற்ற தருமச் செய்கைகள் உடையவன் பரதன். என் மேல் கொண்ட அன்பு நெஞ்சத்தால், நீ அவனை ஐயுறல் தகாது. அவன் என் மீது கொண்ட அன்பால், என்னைக் காணவும், நாட்டை என்னிடம் வழங்கவுமே வருகின்றான்.'

'சேண்உயர் தருமத்தின் தேவை, செம்மையின்
ஆணியை அன்னது நினைக்கல் ஆகுமோ?

என்று, பரதன் பெருமை பேசி நிறைகிறான் இராமன். பரதனைத் தருமதேவதை எனவும், செம்மையின் உரையாணி என்றும் மதிப்பிட்டுரைக்கிறான்.

தவக்கோலத்தில் பரதன் நெருங்கி வரக் கண்டு, இராமன், இலக்குவனைக் கேலி பேசுகின்றான். பரதனின் போர்க்கோலம் பார்த்தாயா என்று, அவன் தவக்கோலம் காட்டு கின்றான். அவன் கோலம் கண்ட, அடுத்த வினாடியே இலக்குவன் சினம் அழிந்தொழிகிறது. கண்களில் நீர் பெருக நிற்கிறான். பரதன் குற்றமற்றவன் என்று, இலக்குவன் தேர்கிறான். அவன் உரையாடவும் இல்லை. செயலும் அறிந்திலன். காட்சி மாத்திரையிலேயே, பிறர் ஐயம் அகற்றி அன்னாரை உருகச் செய்யும் வடிவினான் பரதன் என்பது புலனாகிறது.

காப்பியத்தில், இம்மனமாற்றத்திற்குப் பின், இலக்குவன் பரதன் மேல், பெரும் மரியாதை கொள்கிறான். மாயா சீதைப் படலத்தில், இராமனையே ஐயுறவைத்து இந்திரசித்தன், பரதன் மேல் படை கொண்டு செல்வது போல், போக்குக் காட்டி மாயம் செய்கிறான். பரதன் மேல் கொண்ட அளவற்ற அன்பில், அவன் ஆற்றல் மறக்கிறான். அவனுக்கு ஏதும் தீங்கு

வந்தறுமோ என்று மனம் சாம்புகின்றான். அப்போது இலக்குவன், பரதனைப் புகழ்ந்து இராமனிடம் பேசுகின்றான்.

'.... ஐய பரதனை அமரின் ஆர்க்க
எவ்விடற்கு உரியான் போன இந்திர சித்தே அன்று
தெவ்விடத்து அமையின் மும்மை உலகமும் ·தீய்ந்து
ஆறாலே

பரதன் பேராற்றலைப் புகழ்கின்றான். பரதனின் போராற்றலை, இவன், எங்கு, எப்போது கண்டான் என்று தெரிந்திலது. ஒருவரைப் பற்றி மனத்தில் உயர் எண்ணத்தை உருவாக்கிக் கொண்டால், அவர், ஆற்றல் பலவும் நிறைந்தவராகவே தோன்றுவர் போலும்! பகை மறந்து, இலக்குவன் பரதனைப் புகழ்வதில், நம் நெஞ்சம் நிறைவு காண்கிறது.

இதே போல், பிரமாத்திரப் படலத்தில் இந்திரசித்தன் கணையினால், இலக்குவன் கட்டப்படுகிறான். இத்தனை ஆற்றல் பெற்ற தான், அக்கணைக்குக் கட்டுண்டதை நினைகிறான். நினைபவன் நெஞ்சில், பரதன் வருகிறான். இவ்வாறான ஒரு வஞ்சத்தில், பரதன் நிலை என்னவாக இருக்கும் என்று சிந்திக் கிறான். உறுதியாகப் பரதனாயின் இக்கணையில் கட்டுண்டிரான் என்று, இலக்குவன் மனம் மதிப்பிட்டுப் பார்க்கிறது.

'தீக்கொண்ட வஞ்சன் வீசத்
திசைமுகன் பாசந் தீண்ட
வீக் கொண்டு வீழ யானோ
பரதனும்? வெய்ய கூற்றைக்
கூக்கொண்டு குத்துண்டு அன்னான்
குலத்தொடு நிலத்தன் ஆதல்'

இலக்குவன் நெஞ்சப் பாங்கில், அவன் பரதன் மேல் கொண்ட ஐயம் யாவும் நீங்கி, உயர் எண்ணம் பூத்திருத்தலை இனங் கண்டு மகிழ முடிகிறது. எத்தனை ஐயங்களுக்கும் அப்பாற் பட்ட உத்தமன் பரதன் என்பதைக் கவிஞன் நிலைநிறுத்திக் காட்டுகின்றான்.

உடன் பிறந்து பழகிய, அரசர் குலத்து இலக்குவனே பரதனை ஐயுற்றான் என்றால், முன்பின் பரதனை அறியாத குகன் ஐயுற்றதில், வியப்பேதும் இல்லை. பெரும்படையுடன்

இராமனை மீட்டு நாட்டிற்கு அழைத்துப் போகப் பரதன் வருகிறான். அவன் படை வரவு கண்டு குகன் தவறுபட நினைந்து சினம் கொள்கிறான்.

அஞ்சன வண்ணன் என் ஆருயிர்
நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அரசு எய்திய
மன்னரும் வந்தாரே'

என்று நினைந்து, பரதனைப் படை கொண்டு எதிர்க்கத் துணிகிறான். பரதனைக் குகன், அவன் இராமன் அரசினை, வஞ்சனையால் கவர்ந்து கொண்டதாகவே கருதியிருப்பது தெரிகிறது. தவறான் முதல் மதிப்பீடு, மேலும் மேலும் பொருத்தமற்ற வார்த்தைகளுக்கு இடம் கொடுத்து விடுகிறது.

'முன்னவன் என்று நினைந்திலன்
மொய்புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்...'

அண்ணன் என்றும் பாராது, ஆற்றல்மிக்க இலக்குவன் துணை நிற்பதையும் எண்ணாது, இவன் எப்படிப் படை கொண்டு வந்தான் என்று வினவுகின்றான்.

'பாவமும் நின்ற பெரும் பழியும்
பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண் உலகு
ஆள்பவர் எண்ணாரோ?'

நிலனாள்பவர்களுக்குப் பழிபாவங்களில் நாட்டம் இராதோ? என்றெல்லாம் குகன் பலபட எண்ணிச் சினந்து நிற்கின்றான்.

சுமந்திரன் சொல்வழி, குகன் அன்புணர்ந்த பரதன், கங்கையின் கரை சார்ந்தான். மறுகரையில் இருந்து அவன் தோற்றம் கண்ட குகன், துணுக்கம் எய்துகின்றான். பரதன் தோற்றத்தைக் கம்பன், குகன்கண் வழி காட்டுகின்றான்.

'வற்கலையின் உடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலை இல் மதி என்ன
நகை இழந்த முகத்தானை

கல்கனியக் கனிகின்ற
துயரானை.....'

குகன் கண்ணுற்றான். அவன் வில் கை நழுவியது. பரதனும் சத்துருக்கனும், இராம–இலக்குமனர்களாகவே அவன் கண் களுக்குத் தோன்றுகின்றனர். அன்னவன் முகத்துக் காணப்படும் துன்பமும், இராமன் சென்ற திசை நோக்கிக் கைகுவிக்கும் அன்பும், அவன் அன்பைப் பறைசாற்றுகின்றன. குகன் நெஞ்சில் ஒரு துணிபு பிறக்கிறது.

'எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ பிழைப்பு '

இராமனுக்குப் பின்பிறந்தார், தவறு செய்யார் என்ற தெளிவு பிறக்கிறது. குகன், தன் நாவாய் ஏறி, கங்கை கடந்து பரதனைப் பணிகின்றான்.

குகனின் நம்பிக்கைப் பொய்த்திலது. பரதனை வணங்கித் தழுவிய குகன், 'எழுவினும் உயர்ந்த தோளாய் எய்தியது என்னை?' என, அவன் அங்கு வருகை தந்ததற்கான காரணக்கை வினவகின்றான். பரதன் பதில், குகன் மதிப்பீட்டில், அவனைப் பன்மடங்கு உயர்த்தியது. 'என் தந்தை முன்னை யோர் காத்த முறைமை தவறினான். அத்தவற்றினை நீக்கி, இராமனை மீண்டும் மன்னனாக்க வேண்டி வந்தேன்' என்கிறான் பரதன்.

'முழுதுலகு அளித்த தந்தை
முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க
மன்னனைக் கொணர்வான்' என்றான்'

அண்ணனை என்னாது, மன்னனை என்ற பரதன் கூற்றில், தாய் தந்தை எண்ணங்களை, அவன் சிறிதும் ஏற்றிலன் என்பதை உணர முடிகிறது. பரதனின் இந்தச் சொற்கள், குகன் உள்ளத்தில், பரதனை உயர்த்துகின்றன.

'தாய் உரை கொண்டு தாதை
உதவிய தரணி தன்னை
தீவினை என்ன நீத்து
சிந்தனை முகத்தில் தேக்கி
போயினை என்ற போழ்து

புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ்
ஆவரோ தெரியின் அம்மா'

நாம் பலகாலும் கேட்டு மகிழ்ந்த இந்தப் பாடல், பரதனின் பெருமையைக் கட்டியம் கூறி நிற்கிறது, 'தீவினை என்ன நீத்து' என்ற தொடர் பரதன் 'தள்ளரிய பெருநீதித் தனியாறு புக மண்டும் பள்ளம்' என்பதற்கு மேலும் ஓர் சான்றாக அமைகிறது. பரதனை நோக்கிக் குகன்,

'மன் புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்'

என மேலும் பாராட்டு மொழிகளைப் பகர்கின்றான்.

இலக்குவன், பரதனை உணராது வெகுண்ட போதும், பரதன், அவை ஒன்றும் அறியாது, இளவல் இலக்குவன் மேல், அளவற்ற அன்பே பூண்டு நிற்கிறான். குகனை நோக்கிப் பரதன், இராமன் துயின்ற காலை, இலக்குவன் யாது செய்தான் என்று, அவன் தொண்டினை அறிய வினவுகின்றான். குகன்,

'அல்லை ஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும்
வெய்து உயிர்ப் போடும் வீரன்
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்
கண்கள் நீர் சொரிய கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்
இமைப்பிலன் நயனம் என்றான்'

குகன் சொற் கேட்ட பரதன், தன்னையும், இலக்குவனையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தன்னை நொந்து கொள்கிறான். நான் இராமனுக்கு, நீங்காத துன்பம் தந்தேன். இலக்குவன் அத் துன்பத்தைத் துடைத்து நின்றான் என வருந்துகின்றான்.

'இராமனுக்கு இளையார் என்று
முன்பு ஒத்த தோற்றத்தோமில்
யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்
அவன் அது துடைக்க நின்றான்

அன்பத்துக்கு எல்லை உண்டோ
அழகிது என் அடிமை'

பரதனின் உயர் பண்பினை நிலை நாட்டும், அரிய களங்களில் ஒன்றாக இக்கூற்று அமைகிறது.

கங்கையைக் கடக்கும் போது பரதன், குகனுக்குத் தன் தாயர்களை அறிமுகம் செய்யும் இடத்தில், கம்பன், பரதன் என்ற பாத்திரத்தைப் பண்பின் உறைவிடமாக உயர்த்திக் காட்டுகின்றான். அவற்றின் திறம் விரிப்பின் பெருகும். வாழ்க்கை முழுவதையும் போர்க்களத்தில் நின்று, வீரம் காட்டும் ஒரு பாத்திரம் பரதன் அல்லன். நேரம் கிடைக்கும் போதெல் லாம், பழி துடைப்பதிலேயே தன்னை இனங்காட்ட வேண்டிய அவலம் அவனுடையது. அவன், தன்னை ஈன்ற கைகேயியை அறிமுகம் செய்யுமிடத்தில், சற்றே கடும் சொற்களைக் கையாள நேர்கிறது.

'படர் எலாம் படைத்தாளை பழி, வளர்க்கும்
செவிலியை, தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப் பாரம் குறைந்து தேய
உடர்எலாம் உயிர்இலா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல்
இந்நின்றாள் என்னை ஈன்றாள்'

ஆழமாகச் சிந்தித்தால், கைகேயி இழைத்த தீமைக்கு முன், பரதன் சொற்கள் குற்றமுடையனவாகத் தோன்றா. அவள் ஈன்றது என்னை. ஆனால், செவிலியாக வளர்த்தது பழியை என்ற மனக்குமுறலைக் கம்பன் பதிவு செய்கிறான்.

இராமனும்—பரதனும் 'சந்தித்துக் கொண்டமையும், பரதன் வேண்டு கோளும், இராமன் மறுப்புரைகளும் தனி ஒரு பண்பாட்டு இலக்கியமாக இராமகாதையில் திகழ்வன. தயரதன் இறந்த துயரத்தை, இராமனுக்கு முதன் முதல் தெரிவிக்கும் சோகமும் பரதனுக்கே வருகிறது. தந்தை மறைவு கேட்டுப் பலபட அவன் புலம்புகின்றான். வசிட்டன் தேறுதல் உரைகள் கூறுகின்றான். இராமன், தந்தைக்கு நீர்க்கடன்கள் ஆற்றித் தங்குமிடம் சேர்கிறான்.

மறுநாள் காலை, விரத வேடம் பூண்டதற்கான காரணத்தை இராமன் பரதனிடம் வினவுகின்றான். பரதன்,

'உந்தை தீமையும் உலகு உறாத நோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்க- மீண்டு அரசு செய்க'

எனப் பணிந்து, நாடாள நீ மீண்டும் வருக என அழைக்கிறான். பலவாறு உலகியல் கூறி, இராமன் நாடு திரும்ப மறுத்துப் பரதனிடம், தந்தை இட்ட கட்டளைப் படி, நாடு இனி உனக்கே உரியது; சென்று நீயே ஆள்க என்று பணிக்கிறான்.

'வரன் நில் உந்தை சொல் மரபினால் உடைத்
தரணி நின்னது என்று இயைந்த தன்மையால்
உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே ஆள்க...'

என்ற இராமன் வார்த்தைகளைப் பற்றிக் கொண்ட, அறிஞனான பரதன், 'நாடு எனக்குரியது என்பதை, ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும், தற்போது, நான் எனக்குரிய நாட்டாட்சியை நினக்கு வழங்குகின்றேன்! உடன் நாடு திரும்பி, நீ முடி சூடிக் கொண்டு ஆள்க' என்கிறான்.

'முன்னர் வந்து உதித்து உலகம் மூன்றிலும்
நின்னை ஒப்பிலா நீ பிறந்த பார்
என்னது ஆகில் யான் இன்று தந்தனென்
மன்ன போந்து நீ மகுடம் சூடு...'

அரசு கட்டிலுக்காகவும், ஆட்சி அதிகாரங்களுக்காகவும் தந்தை மகனைக் கொல்வதும், மகன் தந்தையைக் கொல்வதும், உடன் பிறந்தவர்கள் பகைவனுக்குக் காட்டிக் கொடுப்பதும் உலக வரலாறுகளில் படித்து வெறுத்த நம் மனத்திற்குப் பரதன்–இராமன் பண்பாட்டு உறவு ஆறுதலாக அமைகிறது. இராமாயணம் காலத்தை வென்று வாழ்வதற்கான, காரணக் கூறுகளில் இதுவும் ஒன்று என்று, மனம் இனங்கண்டு மகிழ்கிறது.

பரதனினும் ஒரு படிமேலே போய், நாடாள மறுக்கும் இராமன் திறம் அவன் காப்பிய நாயகன் தகுதிக்குக் கட்டியம் கூறி நிற்கிறது.

'எந்தை ஏவ, ஆண்டு ஏழொடு ஏழ் எனா
வந்த காலம் நான் வனத்துள் வைக நீ
தந்த பாரகம் தன்னை மெய்ம்மையால்
அந்த நாள் எலாம் ஆள் என் ஆணையால்'

நீ எனக்குத் தந்த நாட்டை ஏற்றுக் கொண்டு, நான் மீண்டும் உன்னிடம் வழங்குகின்றேன். என் ஆணையை ஏற்றுத் தந்தை கூறிய பதினான்கு ஆண்டுகள், நீ நாடாள்க எனப் பணிக்கிறான் இராமன். அன்பின் முடிச்சு மேலும் இறுக்கம் கொள்கிறது. 'வேண்டாமை அன்ன விழுச்செல்வம்' என்ற குறள் நெறியும் வாழ்வு பெறுகிறது.

பரதன் ஒருவாறு மனம் தெளிகிறான். இராமன் பாது கைகளை வேண்டிப் பெறுகிறான். பதினான்கு ஆண்டுகளில் நீ நாடு மீளாவிடில், தீப்புகுந்து மாய்வேன் என ஆணை சாற்று கிறான். இராமன் திருவடிகளைத் தலைமேல் சுமந்து கொண்டு நாடு திரும்புகிறான். இராமன் பாதுகையை அரியணை ஏற்றி, நந்தியம் பதி என்ற இடத்தில் மரவுரி தரித்த கோலத்தினனாய் இராமன் வரவுக்காகப் பரதன் காத்திருப்பதாகக் கம்பன் கதையை நிறைவு செய்கிறான்.

இராமன், மரவுரி தறித்துக் காடு செல்லப் புறப்படும் முன், கோசலையைச் சென்று கண்டு வணங்கி விடைபெறுகிறான். கோசலை பெரிதும் வருந்தி,

'முறைமை அன்று என்பது ஒன்று உண்டு: மும்மையின்
நிறை குணத்தவன்: நின்னினும் நல்லனால்
குறைவு இலன்'

என்று ஒரு மதிப்பீட்டு உரை பகர்ந்தாள். அந்த உரை எத்துணை உண்மையானது என்பதைக் கம்பன் பரதனின் பாத்திரப் படைப்பில் ஆங்காங்கே ஒளியூட்டிக் காட்டுகின்றான்.

பெருங்காப்பியங்கள், காப்பியத் தலைவனுக்கு நிகரான இன்னொரு தலைவனை, ஒளியூட்டிக் காட்டா. இராமனே, இக் கதையின் தனிப்பெரும் நாயகன். பரதன் பாத்திரம், சில காண்டங்களில் மட்டுமே வரும் ஒரு துணைப் பாத்திரமே என்றாலும், கம்பன் பரதனை, இராமனுக்கு நிகரான – சில இடங்களில், அவனின் மேலான பாத்திரமாகவே படைத்துக் காட்டி மகிழ்கிறான்.

கம்பன் தமிழ் மண்ணிலிருந்து ஒரு கதைக் கருவைத் தேர்ந்து கொள்ளாது, இராமன் கதையைத் தேர்வு செய்ததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். தமிழ் மண்ணில் நெறி திறம்பிய–தன்னிச்சையான வாழ்வை மேற்கொண்டு ஒழுகிய, காமம் சார்ந்த ஆடவர் வாழ்க்கையை நெறிப்படுத்தி ஒருவனுக்கு ஒருத்தி என்ற உணர்வைத் தோற்றுவது ஒரு நோக்கம்.

இரண்டவதாக, நமது வீர இலக்கியங்கள் யாவும், ஒரு மொழி பேசிய தமிழர்கள், மொழி வழி ஒன்றுபடாது, இன வழிப் பிரிந்து நின்று போரிட்டு மடிந்த அவலத்தை ஏந்தி நிற்பன. அதிலும் தாயாதிகளும், பங்காளிகளும், தந்தை மகன்களும் நாட்டாட்சிக்காகப் பகைத்துப் போராடிய அவலம் கம்பனை வெகுவாகப் பாதித்திருக்க வேண்டும்.

இந்த அவலத்திலிருந்து தமிழரசர்களை மீட்டு, அரச வாழ்வில் அன்பினை நிலை நாட்ட பரதன் பாத்திரம் கம்பனுக்குப் புதையலாகத் தென்பட்டது. அதனை ஒளியூட்டும் முகத்தான், கம்பன், தமிழர் அரசவரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்திற்கு வழிகாட்டி நிற்கிறான்.

"ஆறா அன்பு இளையவன்"-[இலக்குவன்]

- தேரழுந்தூர், கம்பன் கவிஇசைச் செல்வன்,
செந்தமிழ்ச் சொற்கொண்டல், புலவர்,
டாக்டர். ஆ.இராமபத்திரன், எம்.ஏ, பிஎச்.டி, பி.எட்.,

முன்னுரை:-

இராமாயணம் காலத்தால் அழியாத நிலையில், காலத்தையும் வென்று நிற்கும் கதை உறுப்பினர்களைப் பெற்ற கலைப்படைப்பு என்பதை, அதனை ஒரு முறை உற்று நோக்கியோரும் நன்கு உணர்வர். மனிதனை, வையத்துள் வாழ்வாங்கு வாழச் செய்யும் உயர் பண்புகளை விளக்குவதற்கு, இராமகாதைப் பாத்திரங்கள், பெரிதும் தகுதி உடையனவாய் இருந்த காரணத்தால், அப்பண்புகளை, அத்தகைய பாத்திரங்களின் வாயிலாக உலவவிட்டு, அவைகளை உயிர் பெறுமாறு செய்து, என்றும் நிலைத்து வாழும் ஏற்றத்தைப் பெற்று நிற்கிறது இராமகாதை. இவ்வாறு, இராமாயணத்தால், மரணமிலாப் பெரு வாழ்வு பெற்ற உயர்பண்புகள் எண்ணில் அடங்கா. அவைகளில், தன்னலம் அற்ற தொண்டின் வடிவாய்,'' தன் கடன், இராமன் பணி செய்து கிடப்பதே'' என்பதைத் தன் உயிர்மூச்சாகக் கொண்டு, திகழும் தூயவனே இலக்குவன். பயன் கருதாப் பெருந்தொண்டே, அவன் வாழ்வின் குறிக்கோள்.

அன்பு எனும் உயிர் ஊற்று:-

கம்பரின் கவி அமுதக் கடலில் மூழ்கித் திளைத்த, மிகச் சிறந்த பேரறிஞராகிய, அமரர். வ.வே.சு. ஐயர் அவர்களும், இலக்குவனின் தனிச் சிறப்பைத் தமது நூலில் வலியுறுத்தியுள்ளார்.

''மனத்துணிவும், வீரவுணர்வும் ஆகிய வீரர்களுக்குரிய தகுதிகள் அனைத்தும் வியத்தகு நிலையில் இலக்குவன் பால் அமைந்து விளங்கினாலும், அப்பாத்திரத்தின் உயிர் ஊற்று அவை அல்ல. அவைகளைக் காட்டிலும், இலக்குவன், தன் முன்னவன்-ஏன்? தன் குல முதல்வன்-தன் குலத்திற்கு மட்டுமன்று; மனித இனத்திற்கே முதல்வன் ஆகிய இராமனிடம் கொண்ட எல்லையற்ற அன்பு தான், இலக்குவன் என்ற இணையற்ற பாத்திரத்தின் நலம் சுரக்கும் நிலைத்த ஊற்று என்றார் அவர். அனைத்தையும் தன்பால் ஈர்க்கும் அவ்வன்பு உணர்வை - தன் இருப்பையே மறந்து, எல்லாம் அவனாகவே

கருதிக் கொண்ட பத்திமை உணர்வு,- இலக்குவன் பெற்ற பெருஞ்சிறப்பே அப்பாத்திரத்தின் தனிச்சிறப்பு என்றார் அவர். இதனை,

The main spring of his character is not valour, or Heridoism though he possesses these qualities to a wonderful degree, but love, an all absorbing self forgetting love, for his brother, The chief of his race, and the first of men.''

[A study of Kamba Ramayana]

என்ற அவரது கூற்றிலே நாம் காணலாம்.

தொண்டு என்னும் விழுமிய செல்வம் பெற்ற தூயவன்:-

''ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி,
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்.''

[திருவாய் - 3 - 3 - 1]

என்ற நம்மாழ்வாரின் பேராவலும்,

''எற்றைக்கும் ஏழேழு பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம், உனக்கே நாம் ஆட் செய்வோம்.''

[திருப்பாவை - 29]

என்ற ஆண்டாளின் அளவிட முடியாத அருட்பணிக் காதலையும் கொண்டு,

''தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே''

என்ற கொள்கையின் வடிவாய் விளங்கிய பெருந்தகையே இலக்குவன் எனில், அது மிகையன்று. அத்தொண்டினையே பெருஞ்செல்வமாகக் கருதிய தூயவன் அவன்.

''ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான்வேண்டேன்,
ஆன்ஏறு ஏழ்வென்றான் அடிமைத்திறம் அல்லால்''

[பெருமாள் திருமொழி - 4 - 1]

என்று குலசேகராழ்வார் கூறும் நலமுடை நெறியே இவன் நெறி. இதனால்தான், ஆதிகவி வான்மீகி,

''இராமகைங்கர்யம் என்னும் அருஞ்செல்வத்தை முழுமையாகப் பெற்ற பெருஞ்செல்வனே இவன்'' என்பாராய்,

"லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:"
[வால்மீகி - பால - 18 - 31]

என்கிறார். இத்தொடரை விளக்கும் முறையில், திருவாய் மொழிப் பிள்ளை, தாம் அருளிய உரையில், "இராமன் இராஜ்யத்தை இழந்தார்; இவர் கைங்கர்ய சாம்ராஜ்யத்தைப் பெற்றார்." என்று அருளிச் செய்தார். மேலும் இதனை விளக்குவாராய்,

"இராமன், முடிசூட்டு விழா நிகழாமல் இருக்க வேண்டி, மரவுரி அணிந்தார். ஆனால், இலக்குவன், கைங்கர்ய சாம் ராஜ்யத்துக்கு முடி சூடுகைக்கு மரவுரி அணிந்தார்." என்று கூறியுள்ள உரைப்பகுதி மிக இனிமையானது.

அடியவர் மகிழ்வே, அடித்தொண்டின் விளைவு:-

தொண்டின் முதல் நிலை, அதாவது தொடக்கம், இறைவனுக்குச் செய்யும் பணியில் தொடங்குகிறது என்றும், தொண்டின் நிறைவு, அல்லது முழுமை, அடியார்க்குச் செய்யும் பணியினால் ஏற்படுகின்றது என்றும் வைணவசமயம் விளக்கும். இதற்கு ஏற்ப, இவ்விரண்டு பணிகளுமே இலக்குவன் பால் அமைந்து விளங்குவதாக, திருவாய் மொழிப்பிள்ளை என்னும் உரையாசிரியர் கூறுகின்றார். இறைவனாகிய இராமனின் திருத்தொண்டு இல்லை எனில், இலக்குவனால் வாழவே இயலாது. அந்த வகையில்தான், இலக்குவன், அயோத்தியில், இராமனுடன் இணைந்து தங்கி, எல்லா அடிமைகளையும் செய்து வந்து உள்ளான். ஆனால் இலக்குவன் இராமனைப் பின் தொடர்ந்து, கானகத்தில் புரிந்த தொண்டின் விளைவைப் பற்றி, உரை ஆசிரியர்கள் தரும் விளக்கம் மிகச்சிறந்தது. இலக்குவனின் இச்செயல், இராமனுக்கு மட்டுமன்றி, அப்பெருமானின் அடியார்களுக்கும் மகிழ்ச்சியை ஊட்டியதால், இறைவனின் உகப்பு, இறை அடியாரின் உகப்பு என்ற இரண்டிற்கும், இலக்குவனின் தொண்டே காரணமாக விளங்கியது என்று விளக்கம் தந்தனர். இலக்குவனின் இந்நிலையை,

"இலை கொள் பூண் இளம்கோன் எம்பிரானொடும்
உலைவுஇல் செல்வத்தனோ?"
[இளம்கோன் = இலக்குவன், எம்பிரான் = இராமன்]

என்று தன்பால் வந்த தூதரிடம், பரதன் கேட்டதாகக் கவி மாமன்னர் குறித்து உள்ளமையும் இங்கே கருதத்தக்கது. இங்கு,

"உலைவு இல் செல்வத்தன்" என்று இலக்குவன் குறிக்கப் பெறுகிறான். அழியாத செல்வத்தினைப் பெற்றவன் என்பது கருத்து. உலகத்து மற்றச் செல்வங்கள் அனைத்தும் அழியும் என்றும், ஆனால் தொண்டாகிய செல்வம் என்றும் அழியாது என்றும், இச்செல்வத்தைப் பெற்றவன் இலக்குவனே என்றும் கம்பர் கருதுவது, இத்தொடர் மூலம் நன்கு விளங்கு கிறது.

இலக்குவனைச் சிறப்பிக்கக் கவிஞர் காட்டும் குறிப்புக்கள்:-

இலக்குவனைச் சிறப்பிக்கும் கவிஞரின் முயற்சி, இவனது தோற்றத்திற்கு முன்பே தொடங்கி விடுகின்றது. பிள்ளைப்பேற்றின் பொருட்டு அமைக்கப் பெற்ற வேள்விச் சாலையிலிருந்து பெற்ற அமுதப் பகுதியை, இலக்குவனின் தாய், சுமித்திரை பெற்ற போது, இந்திரன், தன் பகை அழிந்தது என்ற உறுதியில், தன்னைச் சார்ந்தாரோடு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தான் என்பராய்,

"சுரர்க்குவேந்து, இனிச் சமித்தது என்பகை எனத்
தமரோடு ஆர்ப்பவே" என்கிறார் கவிஞர்.

இது, இலக்குவன் பெற இருக்கும் சிறப்பை, முன்பே கணித்துக் கூறும் ஒரு முன்னோட்டம். அடுத்து இவனுக்குப் பெயரிடும் போது,

"விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி நாமம்,
இலக்குவன் என்ன இசைத்தனன் அன்றே" என்கிறார்.

இப்பகுதியில், யாவராலும் தடுத்தற்கு அரிய வலிமை பெற்ற புகழொளி வாய்க்கப் பெற்றவனே இலக்குவன் என்ற பொருளில்,

"விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி" என்ற சீரிய செந்தமிழ்த் தொடரால் கவிஞர் குறித்திருப்பது கருதத்தக்கதது.

பால காண்டப் பகுதி முழுவதும், தொட்டிற்பருவம் தொட்டே, இலக்குவன் இராமனைப் பிரியாது இயங்கும் பாங்கினைப் பெற்று நிற்பதை,

''ஐயனும் இளவலும் அணிநில மகள்தன்
செய்தவம் உடைமைகள் தெரிதர, நதியும்
மைதவழ் பொழில்களும் வாவியும் மருவி
நெய்குழல் உறும் இழை எனநிலை திரிவார்''

என்று கவிஞர் வருணித்துக் கூறுகின்றார். கோசிக முனிவரோடு இராமனை அனுப்பும் காலத்திலும், இந்தச் சேர்க்கையைப் பிரிக்க மனம் இல்லாமல்,

''வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி''

என்று தயரதன் செயலை விளக்கினார். இராமனைப் போன்றே இலக்குவனும் தயரதனின் இன்னுயிர் போல் விளங்கும் சிறப்பை,

''அன்னதம்பியும் தானும் ஐயனாம்
மன்னன் இன்னுயிர் வழிக் கொண்டால் என''

என்று, விடைபெறும் நேரத்தில் விளக்கியதும் இங்கே கருதத் தக்கது. வேள்விகாத்த நிகழ்ச்சியிலும், இலக்குவனின் சிறப்பு இராமனின் சிறப்போடு, பின்னிப் பிணைந்துள்ளதாகக் காட்டு வாராய்,

''மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்''

என்று தொகுத்துக் கூறிய பாடற்பகுதியும் இங்கே கருதத் தக்கது. அந்நிழ்ச்சியில், வேள்விச்சாலைக்கு மேலே, தோன்றிய அரக்கரை, இராமன் இலக்குவனுக்குக் காட்டிய போது,

''கண்ட அக்குமரனும் கடைக்கண் தீ உக
விண்தனை நோக்கித் தன் வில்லை நோக்கினான்''

என்று, இலக்குவனின் வீரத்தின் தொடக்க நிலையை எடுத்துக் காட்டினார். அவ்வீரத்தின் இடையே, இலக்குவன், இராமனை நோக்கி,

''அண்டர் நாயக!'' என்று அழைத்து,

''இனிக்காண்டி, ஈண்டு அவர், துண்டம் வீழ்வன எனத் தொழுது சொல்லினான்'' என்கிறார்.

''தொழுது சொல்லினான்'' என்ற தொடரால், இலக்குவனின் வீரத்தோடு, அவன் அண்ணன் பால் காட்டும் அடக்கமுடைமையும், இங்கே செயலாற்றத் தொடங்கி விட்டமைக்கான அறிகுறியைக் காண்கிறோம்.

மிதிலை நகரில் நடந்த நிகழ்ச்சிகளில் எல்லாம், இலக்குவனும் உடன் இருந்தாலும், நடந்த செயல்களுக்கு எல்லாம், ஒரு மௌன சாட்சியாக உலவினானே அன்றி, வேறு குறிப்பிடத்தக்க பங்கு எதனையும் கம்பனின் காவியத்தில், இப்பகுதியில், இலக்குவன் ஏற்கவில்லை என்பது இங்கே நாம் அறியத்தக்கது. மிதிலையில் இலக்குவனின் இருப்பு, இராமனின் காதற் சிந்தனைகளுக்குக் கூடச் சிறிதும் இடையூறாக இல்லை என்பதை,

''முனியும் தம்பியும் போய், முறையால் தமக்கு
இனிய பள்ளிகள் எய்தினர், பின் இருள்
கனியும் போல்பவன், கங்குலும் திங்களும்
தனியும் தானும் அத்தையலும் ஆயினான்''

என்று இப்பாடலில் விளக்கினார் கவிஞர். வில்லை முறித்த பின்பு எழுந்த மகிழ்ச்சி ஆரவாரத்தின் இடையே, மக்களின் குரலாக, ''தம்பியைக் காண்மின் என்பார்'' என்று கூறும் இடத்தில்தான், நமக்கே இலக்குவனும் அக்கூட்டத்தில் உள்ளான், என்பதை நினைவுபடுத்துகிறார் கவிஞர். இராமனின் திருமண இன்பவெள்ளத்தில், இலக்குவன் ஊர்மிளையை மணந்த நிகழ்ச்சியும் அடங்கிவிடுகின்றது. பரசுராமனின் செருக்கு அழித்த இராமனின் வீரச்செயலுக்கு முன்னால், இலக்குவன் அடங்கி ஒழுகிய சிறப்பையும் நாம் அறிவோம்.

அயோத்தியா காண்டத்தில், இலக்குவன் கொண்ட பங்கு குறிப்பிடத்தக்கது. தயரதனின் ஆணைப்படி, இராமனை அழைக்கவந்த சுமந்திரன், கண்ட காட்சியில், இராமனுடன் இலக்குவனும் இருந்தநிலை,

''பிரியா வண்ண வெஞ்சிலைக்குரிசிலும் மருங்கு இனிது இருப்ப'' என்று கம்பரால், நமக்கு நினைவுறுத்தப் படுகின்றது. ''பிரியா'' என்ற சொல்லால், இராமன் பால் இலக்குவன் கொண்டிருக்கும் அன்பினையும், 'வெஞ்சிலைக் குரிசில்' என்ற தொடரால், இலக்குவனின் வீரத்தையும், எடுத்துக்காட்டுகிறார் கவிஞர். இங்கும் இலக்குவன் பேசியதாகக் குறிப்பு இல்லை. ஆனால், மந்தரையின் சூழ்ச்சியால், கைகேயி மாற்றம் பெற்று, வரம் என்ற ஆயுதத்தால், தயரதனை வீழ்த்திய

போது, அயோத்தியில் ஒலிக்கும் அவலக் கூக்குரலின் இடையே, மக்களிடத்திலிருந்து,

''ஐ யா! இளங்கோவே! ஆற்றுதியோ நீ என்பார்'' என்ற புலம்பல் ஒலியைக் கவிஞர் எடுத்துக்காட்டி, அயோத்தி வாழ் மக்கள், இலக்குவனை எந்த அளவிற்கு மதித்துள்ளனர் என்ற செய்தியை நாம் அறிய வைக்கிறார்.

குலசேகரர் போற்றும் குரிசில்:-

இராமனுக்குச் சிற்றன்னையால் இழைக்கப் பெற்ற அநீதியை இலக்குவனால் பொறுக்க இயலாது என்று, மக்கள் கூட்டம் புலம்பும் அளவுக்கு, இலக்குவன் இராமன் மீது கொண்ட பேரன்பு, நாடறியப் பட்ட ஒன்றாய் இருந்தது. இத்தகைய ஆழ்ந்த அன்பினைத்தான்,

''ஆறா அன்பு இளையவன்''

[பெருமாள் திரு - 8 - 5] என்கிறார் குலசேகராழ்வார். இதற்கு விளக்கம் அருளிய ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அவர்கள்,

''இராமனின் கட்டளையால், இராமனைப் பிரிந்தான் பரதன் என்றும், ஆனால், அவனைப் போல் இராமனைப் பிரிந்து வாழாமல், இராமனின் கட்டளைக்கும் இணங்காமல், அதற்கு எதிராக,

''என்னை அடியவ்னாகச் செய்து கொள்ளுங்கள்'' என்று இராமனை வற்புறுத்தி வேண்டிக் கூறும் நிலையில், அளவில்லாத அன்பு உடையவன் இல்க்குவன் என்றும் கூறும் உரைப்பகுதி, இலக்குவன் இராமன் பால் கொண்டிருக்கும் அன்பின் மிகுதியை எடுத்துக்காட்டும்.

கவிமாமன்னர் போற்றும் கவின்மிகு அன்பு:-

தொண்டுள்ளம் பூண்ட இலக்குவனை அழகு படுத்துவது, இராமன் மேல் அவன் கொண்ட அன்பு எனும் அணிகலனே என்கிறார் அவர். பிற அணிகலன்கள் கொடுக்க இயலாத ஒரு நிறைவை, இராமபக்தியாகிய இவ்வணிகலன் தருகிறது என்பாராய்,

''அன்பு எனும் ஆர் அணி'' [ஆர் = நிறைந்த] என்கிறார். அவ்வன்பும் அளவு கடந்தது என்பாராய்,

''நிமிர்ந்த நேயம்'' [நிமிர்ந்த - அளவு கடந்த] என்றார். இது உலக வாழ்வில், ஓர் அண்ணன் மீது தம்பி கொள்ளும் பாசவுணர்வு மட்டும் அன்று. ஆண்டான் மீது, அடியவன் கொள்ளும் பக்தி உணர்வே அது. இதனை, இராமனின் திருவடித் தாமரையை, அகத்தே மனத்தால் தாங்கி, புறத்தே தலையாலும் தாங்கி, எங்கும் இராமனின் வண்ணமாகவே இருப்பவன் என்பாராய்,

> ''ஆரியன் கமல பாதம் அகத்தினும் புறத்தும் ஆகச்
> சீரிய சென்னி சேர்ப்பவன்''

[ஆரியன் = இராமன், கமலபாதம் = திருவடித்தாமரை, சீரிய = சிறந்த]

என்கிறார் கவிஞர். இத்தகைய இராமனின் இரண்டு திருவடி களையும் பிரிந்து வாழ்தல், இலக்குவனால் இயலாத ஒன்று என்பாராய்,

''அடியிணைப் பிரிகலாதான் ''இராமனின் ஆணையை நிறைவேற்ற வேண்டிச் சிறிது காலம் இராமனைப் பிரிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், அப்போதெல்லாம் உயிரைப் பிரிந்த உடலைப் போன்று, இலக்குவன் வாடிக் கிடப்பான் என்பாராய்,

> ''உயிர் புறத்து ஒழியநின்ற உடல் அன்ன உருவத்தம்பி''
> [புறத்து = வெளியில்; ஒழியநின்ற = பிரிந்துநின்ற]
> [கம்ப.யுத்த – வேலேற்ற படலம் – பா. 46]

என்கிறார். இராமனோடு உடன்பிறந்த மூவரில், மற்றவர் இராமனைப்பிரிந்து வாழக்கூடியவராய் இருக்கவும், இலக்குவன் பிரியமுடியாமல், கானகத்தும் இராமனைப் பின் தொடர்ந்து சென்ற காரணத்தால்,

''இராமன் பின்பு பிறந்தானாய் உள்ளவன் இவனே'' என்று மற்றவர் புகழுமாறு வாழ்ந்த மாண்பினைப் பெற்றான் இவன். இதற்குக் காரணம், இவன் இராமன் மேற்கொண்ட அன்பு உணர்வன்றோ!

அனைத்தையும் செய்யத் துணிந்த அருந்தொண்டன் :-

தன்னுடன் கானகத்திற்குப் புறப்பட்ட இலக்குவனை நோக்கி, இராமன், அயோத்தியில் வாழ்வோரின் நன்மை கருதியும், பரதனுக்குத் துணையாகவும் நாட்டிலே வாழுமாறு

ஆணையிடவும், இலக்குவன் அதனை ஏற்கவில்லை. காட்டில் உடன் சென்றால், இராமனுக்குரிய அனைத்துப் பணிகளையும் தானே செய்யலாம் என்று, பணியின் மீது கொண்ட பெரு விருப்பத்தால், இராமனின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு, சீதையின் முன்னிலையில், தானும் உடன் வந்து பணிபுரிய அனுமதி அளிக்குமாறு வேண்டினான் என்றார் வால்மீகி. எல்லா வகையான அடிமைச் செயல்களையும் தான் செய்வதாகக் கூறினான் என்றார். இச்செய்தியை விளக்கப் புகுந்த ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அவர்கள்,

''தானும் (இலக்குவனும்) அரசகுமாரனாய் இருக்க, இழி தொழில் என்று பாராதே, அனைத்துப் பணிகளையும் செய்வதாக ஒருவன், அண்ணனைப் பின் தொடர்ந்து பணி செய்வது என்னே! என்று உலகம் முழுவதும் வியக்கும் படியான புகழ் உடையவன் '' என்று போற்றினார்.

இலக்குவன் நிலை பற்றி இருபெருங்கவிஞர்கள்:-

இராமன் கானகம் புறப்பட்ட நிலையில், அவனைப் பிரிந்து வாழ இயலாத தன் தன்மையையும், அதே நிலையில் உள்ள சீதையின் தன்மையையும், இலக்குவன், இராமனிடம் எடுத்துக்காட்டும் நிலை, முதல் நூலான வான்மீகத்திலும், கம்பரின் இராமகாதையிலும் மிகுதியும் ஒத்துக் காணப் பெற்றாலும், இவ்வகையில், சீதையைக் காட்டிலும், இலக்குவனுக்குக் கம்பர் கொடுத்துள்ள உயர்வு, நுணுகி அறியத்தக்கது, முதலில் வான்மீகத்தைக் காண்போம்.

''இராமனே! உம்முடன் சேர்ந்து இருக்கப்பெறாத சீதையும் உயிருடன் வாழமாட்டாள். உம்மைப்பிரிந்து யானும் உயிருடன் இருக்கமாட்டேன். ஒரு கால் இருவரும் உயிர் பிழைத்து இருப்போமானால், நீரிலிருந்து நிலத்தில் போடப் பெற்ற மீன்கள் போன்று சில கணங்களே உயிருடன் இருப்போம் என்கின்றான், இலக்குவன். இக்கருத்தினை,

''நச ஸீதா த்வயா ஹீநா ந சாஹம் அபிராகவ!
முஹூர்த்தம் அபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா
விவோத்ருதௌ''
[வால்மீகி–அயோ–53–31]

என்ற வான்மீகியின் கூற்று இனிது விளக்கும். இதில் இராமனைப்பிரிந்த சீதை, இலக்குவன் ஆகிய இருவருக்கும் நீரினைப் பிரிந்த மீன், உவமையாகக் கூறப் பெற்றுள்ளது.''

நீரினைப்பிரிந்த மீன்கள் போன்று, சிறிது நேரமே நாங்கள் உயிர் வாழ்வோம்'' என்ற வான்மீகியின் கருத்தை விளக்கப் புகுந்த ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை அவர்கள்,

''நீரை விட்டுப்பிரிந்த மீன், அதன் உடலில் ஈரப்பசை இருக்கும் வரையில்தான் உயிருடன் இருக்கும் என்றும், ஈரம் நீங்கியவுடன், அதன் உயிரும் பிரிந்து விடும் என்றும், அது போன்று,

''கானகத்திற்கு வாரற்க; இங்கேயேநில்'' என்று, தாங்கள் நாவினால் கூறிய சொற்கள், உமது நெஞ்சோடு பொருந்தியவைகளே என்று நாங்கள் அறியும் வரையில்தான் உயிருடன் இருப்போம் என்றும், உம்முடைய ஈரநெஞ்சமும் இரக்கம் அற்று வரண்டு விட்டது என்று அறிந்த பின்பு, நாங்களும் இறந்துவிடுவோம் என்றும் கூறியதாக நயமாக விளக்குவர். இக்கருத்தை அடியொற்றி,

''நீர் உள எனின் உள மீனும் நீலமும்
பார் உள எனின் உள யாவும் பார்ப்புறின்
நார்உள தனுவுளாய்! நானும் சீதையும்
ஆர் உளர் எனின் உளம்? அருளுவாய் என்றான்''

[கம்ப-அயோ-நகர்நீங்கு-பா.153]

என்று கூறி விளக்குவர். இங்கே தான், கவிச்சக்கரவர்த்தியின் கைவண்ணத்தைக் காண்கிறோம்.

''தாங்கள் பிரிந்தால் சீதையும் வாழாள், யானும் வாழேன்'' என்று இலக்குவன் கூற்றாகக் கூறிய வான்மீகி, இராமனைப் பிரிந்து வாழாத் தன்மையில், சீதையை முதலிலும், இலக்குவனை இரண்டாவதாகவும் கூறிய முறையை மாற்றி,

''நானும் சீதையும் ஆர்உளர் எனின் உளேம்?''

என்று, இலக்குவன், தன்னை முதலிலும், சீதையை இரண்டாம் நிலையிலும் மாற்றிக் கூறிக்கொண்ட நிலை, மிக நயமான ஒன்று. இராமனைப் பிரிந்து பத்து மாதங்கள் உயிருடன் வாழ்வதற்குச் சீதையால் இயலும். ஆனால் அவனைப்பிரிந்து ஒரு கணநேரமும் தன்னால் வாழஇயலாது என்று குறிப்பாகக் கூறும் நயம், கம்பரின் முறைமாற்றம் விளக்கும் இனிய கருத் தாகும்.

இராமனைப்பிரிந்த இலக்குவன் நிலையை விளக்கும் சான்று:-

மழைக்காலம் கடந்தபின், சீதையைத் தேடும் முயற்சியில் தான் ஈடுபடுவதாக உறுதி அளித்துச்சென்ற குரக்கினவேந்தன் சுக்ரீவன், மதுவும் மாதரும் தந்த மையலில் ஆழ்ந்து, தன் நன்றிக் கடனை மறந்து, இராமனுக்கு உதவுவதில் காலம் தாழ்த்தபோது, அதனை அவனுக்கு உணர்த்தும் முயற்சியில், இராமனால் இலக்குவன் கிட்கிந்தைக்கு அனுப்பப்படுகிறான். அண்ணலின் ஆணையைத்தாங்கி, இப்போது இலக்குவன் பிரிகிறான். அந்த நிலையை,

"அரும்சேணின் நீங்கினன், சிந்தையுள் நீங்கலான்" என்கிறார் கவிஞர். உடலால் பிரிந்தானே தவிர, உள்ளத்தாற் பிரிந்திலன் என்பது குறிப்பு. சென்ற இடத்தில், தாரை எதிர்ப்பட்டமையால், சீற்றம் குறையப்பெற்று, அனுமனால் மிகுதியும் அமைதி அடைந்த நிலையில், சுக்ரீவனைச் சந்திக் கிறான். அப்போது சுக்ரீவன் இலக்குவனை வரவேற்று, தன் இல்லத்தில் அமர்ந்து நீராடி,உணவு உண்ணவேண்டும் என்று வேண்டியபோது, அதற்கு மாறாக, இலக்குவன் கூறிய விடை, இலக்குவ்ன் இராமன்பால் கொண்ட அன்பினை எடுத்துக் காட்டும் சிறந்த சான்றாகும். தன் தலைவன் இராமன் புற்படு கையில் தங்கி இருக்கவும், தான் பூக்கள் நிரம்பிய மென்மை நிறைந்த நற்படுக்கையில் . தங்குவதும் பொருந்துமோ? என்று கேட்பானாய்,

"எம்பிரான்,
புல்லணை வைக, யான், பொன்செய் பூத்தொடர்

மெல்லணை வைகலும் வேண்டுமோ?" என்று வினவியதாகக் கவிஞர் உரைத்தார். நீராடி, உணவு உண்ணுமாறு சுக்ரீவன் கூறியபோது,

"இராமன் உண்டு . எஞ்சிய பச்சிலை, கிழங்கு, காய், முதலியவற்றையே தான் உண்ணும் இயல்புடையவன் என்றும், வேறு எதனையும் தான் விரும்பவில்லை என்றும், அவ்வாறு இன்றித் தான் வேறு எதையாவது விரும்பியிருந்தால், அது நாய் உண்ட எச்சிலுக்கே ஒப்பாகும் என்றும் கூறுவானாய்,

"பச்சிலை, கிழங்கு, காய், பரமன் நுங்கிய
மிச்சிலே நுகர்வது, வேறு நான் ஒன்றும்
நச்சிலேன், நச்சினேன் ஆயின், நாய் உண்ட
எச்சிலே அது, இதற்கு ஐயம் இல்லையால்"

[நுங்கிய = உண்ட, மிச்சில் = எஞ்சிய பொருள், நச்சிலேன் = விரும்பிலேன்] என்று கம்பர் அருளிய பாடல், இராமன் பால் இலக்குவன் கொண்டிருக்கும் அன்பு உள்ளத்தை எடுத்துக்காட்டும் மிகச்சிறந்த பாடலாகும்.

இலக்குவனின் இயல்பை விளக்கும் அவனது முந்தைய நிலை:-

இராமகாதைக் கதை உறுப்பினர்களில், இராமனுடன் மற்றவர்க்கு இல்லாப் பிணைப்பும் நெருக்கமும், இலக்குவன் பெற்று விளங்கியதற்கான காரணத்தை நாம் ஆராயப்புகுந்தால், அவனது அவதாரத்தின் முற்பட்ட நிலை, அதற்கு விளக்கம் தருகிறது. இலக்குவனாக அவதாரம் செய்வதற்கு முன்பு, அவன் ஆயிரம் தலைகள் பொருந்திய ஆதிசேடனாக அரும் பணி புரிந்தவன். இதனை, கைகேயியின் சூழ்வினையால், இலக்குவன் பொங்கி எழுந்த நிலையைக் கூறும் கவிமாமன்னர்,

"அண்ணற் பெரியோன் தனது ஆதியின் மூர்த்தி ஒத்தான்"
[கம்ப–அயோ–நகர்நீங்கு–பா.13]

[ஆதியின் மூரத்தி = ஆதிசேடன்]

என்று கூறியதும் இங்கே சிந்திக்கத்தக்கது. திருமாலின் இரு பெரும் ஆயுதங்களும் (சங்கு, சக்கரம்) படுக்கையாம்சேடனும், இராமனின் உடன்பிறந்தவர்களாக உருக் கொண்ட நிலையைக் கூறும் இடத்தும்,

"வளையொடு திகிரியும், வடவை தீதுஅற
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளையவர் என அடிபரவ"
[கம்ப–பால–திருஅவதார–பா. 23]

[வளை = சங்கு, திகிரி = சக்கரம், கடு = நஞ்சு, பாயல் = படுக்கையாம் ஆதிசேடன்] என்று குறித்தார் கம்பர்.

ஆதிசேடன் பணிபுரியும் பாங்கு:-

சேடன் பணிபுரியும் செம்மை சான்ற நிலையைப் பொய்கையாழ்வார் மிகச்சிறப்பாக விளக்குவர். திருமால் உலாவச் செல்ல வேண்டும் என்று நினைக்கும் போது, அவன் கருத்தறிந்து, அதற்கு ஏற்ற வண்ணம் நிழல் அளிக்கும் குடையாக இவன் மாறுவானாம். ஒரிடத்தில் அமரவேண்டும் என்று அப்பெருமான் விரும்பினால், அதே இடத்தில், அதே கணத்தில், இவன் சிங்காசனமாக மாறுவானாம். பெருமான்

நிற்க வேண்டும் என்று நினைத்தால், உடனே அவ்விடத்தில், இவன் திருவடி நிலையாக (மிதியடி) மாறிவிடுவானாம். கடலில் பள்ளி கொள்ள விரும்பினால், பாற்கடலில் அழுந்தா வண்ணம் மென்மையான தெப்பமாக இவன் மாறி விடுவானாம். பொருள்களைத் தெளிவாகக் காண, இறைவன் விரும்பிய போது, இவனே மணிவிளக்காகவும், மாறி விடுவான் என்றார். விரும்பிய போது அணிந்து கொள்ள அழகிய பட்டாடை யாகவும் மாறி விடுவானாம். தழுவிக்கொள்ள விரும்பியபோது தழுவும் மெத்தையாக [தலையணை] ஆவான் என்றும் கூறுவர். இதனை,

"சென்றால் குடையாம், இருந்தால் சிங்காதனமாம்,
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் – என்றும்
புணையாம், மணிவிளக்காம், பூம்பட்டாம், புல்கும்
அணையாம், திருமாற்கு அரவு"

[முதல்திருவந்தாதி – பா.53]

[மரவடி = பாதுகை; புணை = தெப்பம், புல்கும் = தழுவும், பூம்பட்டு = அழகிய பட்டாடை] என்ற அருட் பாசுரம் இனிது விளக்கும்.

இப்படி இவன் ஆதிசேடனாகப் பணிபுரியும் காலத்தில், எம்பெருமானை மறைகளால் போற்றி, வாழ்த்தொலி எழுப்பிக் கொண்டு வரும் அடியவர் கூட்டத்தைக் கண்டும், இவன் தன் தலைவனான இறைவன் மீது, தான் கொண்ட பரிவின் மிகுதி காரணமாக, அப்பெருமானுக்கு யாராவது தீங்கு இழைத்து விடுவார்களோ என்று அஞ்சி, ஆயிரம் நாவினாலும் நெருப்பை உமிழ்ந்து சீறுவான் என்பதை,

"ஆங்கு ஆரவாரம் அதுகேட்டு அழல் உமிழும்
பூங்கார் அரவணையான்"

[நான்முகன் திருவந்தாதி–பா. 10

என்று கூறிய திருமழிசை ஆழ்வாரின் பாசுரமும் இங்கே சிந்திக்கத்தக்கது.

நம்மால் பரிவுகாட்டப்படுவார்க்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுவது, நம் போன்று உலக வாழ்வில் உழல்பவரின் பொது இயல்பாகும். ஆனால், வீட்டுலகில் நிலையாக வாழும் நித்தியர்களாய் இருப்போர்க்கு இவ்வாறு அஞ்சும் நிலை இல்லை. அப்படி இருக்க, அத்தகைய ஆதிசேடனும், அச்சம் கொள்ளத்தகாத இடத்திலும்–

காலத்திலும், அஞ்சி எப்போதும் விழிப்புணர்வுடன் இருப்பான் என்பதை இச்சான்றின் மூலம் நாம் அறிகிறோம்.

ஆகவே, இவ்வாறு அவதாரத்திற்கு முற்பட்டநிலையில், ஆதிசேடனாக எல்லாப்பணிகளையும், எல்லா நிலைகளிலும் நின்று செய்துள்ள காரணத்தால், அவ்வாறே இலக்குவனாக அவதரித்த நிலையில், அனைத்துப்பணிகளையும் இராமன்பால் செய்யும் இயல்பு, இலக்குவனிடம் அமைந்துள்ளது என்பதுதான், இங்கே நாம் அறிய வேண்டிய உண்மையாகும். இவ்வியல்பைப் போன்றே, தகுதி இல்லாத இடத்திலும், காலத்திலும், இறைவன் மீதுகொண்ட மிகுதியான பரிவுணர்வால், முற்பட்ட நிலையில் அச்சம் தோன்றினாற் போலவே, இலக்குவனாக அவதரித்தநிலையில், அதே இயல்பு பிரதிபலித்து இருப்பதைக் காவியத்தின் பல இடங்களிலும் நாம் காண முடிகின்றது என்பதும் நாம் அறிய வேண்டிய மற்றோர் உண்மையாகும்.

ஆறாக்கனலும் அஞ்சன மேகமும்:-

கைகேயியின் செயலால், அயோத்தி மாநகரம், சோக வெள்ளத்தில் மூழ்கித் தத்தளிக்கின்றது. இராமனின் பிரிவினால், தசரதன் அடைந்த அதே அளவு பெருந்துயரை, கோசலநாட்டு அனைத்து உயிர்களும் பெற்று அழுதன என்கிறார் கவிஞர். இச்செய்தி அறிந்த இலக்குவன், சீற்றத்தால் பொங்கி எழுகின்றான். இந்நிலையை,

"யாவராலும்,
மூட்டாத காலக் கடைத்தீ என மூண்டு எழுந்தான்"

["காலக் கடைத்தீ = ஊழிக்காலப் பெருநெருப்பு] என்கிறார் கவிஞர். அவனது கண்களில் எழுந்த சினத்தீயைக்கண்டு, விண்ணில் கதிரவனும் ஒளி கெட்டு நின்றானாம். இந் நிலையில், சீற்றத்துடன் அவன் பெருமூச்சு விட்டு நின்ற நிலையில், அவன் தனது முன்னைய வடிவமான ஆதிசேடன் போன்று விளங்கினான் என்கிறார். வாளையும் வில்லையும் தாங்கி, அம்பறாத்தூணியையும் முதுகில் பொருத்தி, தோளையும் மார்பையும் போர்க்கவசம் போர்க்க, கால்களில் வீரக்கழல் ஒலிப்ப, வில்லின் சிறுநாண் பேரோசையை உண்டாக்க, அவன் அயோத்தி மாநகர வீதிகளில், ஏறுபோன்று பீடுநடை இட்டதைக்கண்டு அனைவரும் அஞ்சினர். நடையிட்ட தோடு அமையாது,

"சிங்கக் குருளைக்கு இடு தீஞ்சுவை ஊனை, நாயின்
வெங்கண் கடுங் குட்டனை ஊட்ட விரும்பினாளால்"

என்று அவன் கைகேயியின் செயலை, இகழ்ந்து சிரித்த சிரிப்பு, அயோத்தி வீதிகளில் எதிரொலித்தது.

தன்னை எதிர்ப்போரை அழிப்பவனும், அழித்து அவர்களின் உயிரற்ற உடல்களைக் குவிப்பவனும், அன்றே தன் முன்னவனாம் இராமனுக்கு முடியைக் கவிப்பவனும் தானே என முழங்கினான். மும்மூர்த்திகள் வந்து எதிர்ப்பினும், ஒரு பெண்ணின் விருப்பம் நாட்டில் நிறைவேறுவதைத் தான் அனுமதிக்க இயலாது என்று ஆரவாரித்தான். இவன் பொங்கி எழுந்த நிலையை,

"கால் தாக்க, நிமிர்ந்து, புகைந்து, கனன்று பொங்கும்
ஆறாக்கனல்" என்கிறார் கவிஞர்.

இவனுடைய வில்லின் நாண் ஒலி கேட்டு, ஆறாக்கனல் ஆற்றும் அஞ்சன மேகமாக வெளிப்பட்டான் இராமன். அவனுடைய நயவுரைக்ள், இவனது உணர்ச்சி வெள்ளத்தைக் குறைக்க இயலாமல் முதற்கண் தோற்றன. ஆனால் இறுதியில்,

"என் அறிவுரைக்கு அடங்காது நீ செயற்பட்டால், உனக்கு என்ன குறைவு ஏற்பட்டு விடும்?" என்று வருந்திக் கூறுவானாய்,

"என் சொற்கடந்தால், உனக்கு யாது உளது ஈனம்?" என்று இராமன் கடிந்து கூறிய வெவ்வுரைக்கு, வாயடங்கிச் செயல் ஒடுங்கி நின்று விட்டான் இலக்குவன். இப்பகுதியில் அமைந்துள்ள இலக்குவனின் பேச்சு முழுவதும், இராமன்பால் கொண்ட அன்பில் தோய்ந்து முங்கி எழுந்த அமுதச் சொற்களாக விளங்குகின்றன எனில் மிகையன்று.

இத்தகைய உணர்ச்சிப் பெருக்கிற்கு இரண்டாம் முறையும் ஆளாகிறான் இலக்குவன்.

இலக்குவன் விடுத்த சீற்ற உரை:-

அயோத்தியினின்று, இரண்டுயோசனை தூரம் கானகம் நோக்கிச் சென்ற போது, இராமன் ஒரு சோலையில் தங்கி, தன்னுடன் வந்த மக்களின் அன்புப் பிணைப்பினின்று, அரிதில் விடுதலை பெற்றுச் செல்வதற்காக, சுமந்திரனை ஊர் திரும்புமாறு சொல்கிறான். அதனைக் கேட்டுப் பெரிதும்

வருந்திய சுமந்திரன், அரசனுக்கும் மற்றவர்க்கும், அவர்கள் கூறும் செய்தியாக யாது கூறுவது? என்று கேட்க, இராமனும் சீதையும், தமது இயல்பிற்கு ஏற்பச் செய்தி விடுக்கவும், உணர்ச்சி மிகுதியால், இலக்குவன் கூறும் சீற்றவுரைகள், அவனது இயல்பை நமக்கு நன்கு விளக்குகின்றன.

முதலில் இராமனுக்கு அரசை அளிப்பதாக உறுதி கூறி, பின்னே அதனைக் கைகேயிக்கு அளித்த தசரதனைக் குறித்து,

''அரைசன் என்று இன்னம் ஒன்று அறையற் பாலதோ!'' என்று இகழ்ந்தான். தான் அரசனுக்குக் கூறும் செய்தியாக,

''நற்புதல்வனாம் இராமன், கானில், புல்லுணவை உண்ண,

நல்லுணவை உண்டு வாழும் பொய்யில்லா வேந்தற்கு, தான் உள்ளம் நிறைந்த துயரோடு, சாகாமல் இருக்கும் வலிமை யைக் கூறுக'' என்பானாய்,

''வானகம் பற்றிலா வலிமை கூறு'' என்றான்.

குற்றமறியாப் பரதனுக்கு விடுக்கும் செய்தியாக, தான் இராமனுக்கு உடன்பிறந்தானாகவும் இல்லை என்றும், மண் ஆள்கின்ற பரதனுடனும் பிறக்கவில்லை என்றும், தம்பியாகிய சத்ருக்கனுக்கு அண்ணனாகவும் தான் இல்லை என்றும் ''என்னுடன் பிறந்த யான்வலியன் என்றியால்'' என்கிறான். இவ்விடத்தும், இராமனின் ஆணையே அவனை மேலும் தொடர ஒட்டாமல் தடுக்கிறது.

இலக்குவனை நிலைகுலைத்த, பரதனின் தவக்கோலம்:-

இத்தகைய உணர்ச்சி வெள்ளத்திற்கு மூன்றாம் முறையும் ஆளாகிறான் இலக்குவன். இராமனை நாடு திரும்பச் செய்யும் நல்ல நோக்கத்துடன், தவக்கோலம் பூண்டு, தன்னைப் போன்றே ஆழ்ந்த அன்பினை இராமன்பால் கொண்ட படை களையும் உடன் அழைத்துக் கொண்டு வந்த பரதனின் செயலை, சேய்மையில் கண்டு, தவறாகக் கருதிய இலக்குவன், உணர்ச்சிக் கொந்தளிப்பில், இராமன் முன்னால், பரதனை அழிப்பதாகக் கூறிய வீரவுரைகளையும், காவியம் நமக்குக் காட்டுகின்றது. சென்ற முறைகளில், இலக்குவனின் எழுச்சி கண்டு, மென்மையான நயவுரைகளால், இராமன் அவனை

அடக்கியது போன்று இல்லாமல், இம்முறை, சற்றுக் கடுமை கலந்த நிலையில்,

"புலக்குரித்து ஒருபொருள் புகலக் கேட்டி"
[புலக்குரித்து = அறிவுக்குப் பொருத்தமான] என்றும்,
"தானையால் பொரும் எனநினைகையும் புலமைப்
பாலதோ" [தானை = சேனை] என்றும்,
"தேர்ப்பெருந்தானை அப்பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு"

என்றும் பரதனின் தவவேடத்தைக் காட்டி, இலக்குவனை இடித்துக் கூறியும், இலக்குவனின் பேச்சும் செயலும், தனக்குச் சிறிதும் உடன்பாடு அன்று என்பதைத் தெரிவித்தான் இராமன். பரதனின் தவக்கோலத்தைக் கண்டவுடன், குற்ற உணர்வால் இலக்குவன் முகத்தில் ஒளி குன்றியது. அவனது சீற்றமும், சீற்றத்தின் வெளிப்பாடான சொற்களும் பொருள் அற்றவை ஆயின. அவன் வில்லும் சோர்ந்தது. விழிகள் பெருக்கிய கண்ணீரும் நிலத்தில் சோர்ந்தது. இலக்குவனின் உணர்ச்சிக் கொந்தளிப்பு, பரதனின் தவக்கோலத்தாலும், இராமனின் இடிப்புரையாலும் அழிந்தது.

தாயரை நினைந்து நைந்த தூயவன்:-

இதுவரை நாம் கண்டவை, இலக்குவன் தன் உணர்வு மிகுதியின் காரணமாகச் செயற்பட்ட நிகழ்ச்சிகள் ஆகும். ஆனால், இப்போது கிட்கிந்தா காண்டத்தில் நாம் காண இருப்பது, இராமனின் ஆணையின் காரணமாகச், செயற்பட்ட இலக்குவனின் உணர்ச்சி வெளிப்பாட்டுச் செயலாகும். இராமனுக்குத் தான் செய்ய வேண்டிய நன்றிக் கடனை மறந்து, இன்பச்சேற்றில் கால் அழுந்திக் கிடக்கும் சுக்கிரீவனுக்கு, இராமனின் ஆணையால் நல்லறிவூட்டப் புறப்பட்ட இலக்குவன், இராமனால் அறிவுறுத்தப் பெற்றிருந்தும், சீற்றத்தின் எல்லையில் நின்றே, கிட்கிந்தை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறான். இதுவரை, இலக்குவன் கொண்ட சீற்றத்தின் தகுதி பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டிருப்பவர்கள் கூட, இப்போது சுக்கிரீவன் மேல் இவன் கொண்ட சீற்றம் நேர்மை யானதே என்று கருதுவர். சீற்றம் தோன்றாச் செம்மலான இராமனே, சுக்கிரீவனுக்குச் செய்தி விடுக்கும் போது,

"வாரலிராம் எனின், வானரப் பேரும் மாளும்
எனும் பொருள் பேசுவாய்"
[வாரலிராம் எனின் = வரவில்லை என்றால்]

என்று சினந்து கூறி இருக்கிறான் எனின், இலக்குவனின் சீற்றத்தை எவ்வாறு நாம் அளவிட முடியும்?

பொது வழியில் செல்லாமல், சீற்றத்தால், வேறு குறு வழியில் சென்றான். குரங்குகள் அமைத்த தடை எல்லாம், இலக்குவனின் வேகத்தைத் தடை செய்ய இயலவில்லை. அங்கதன் அறிவுறுத்தியும், சுக்ரீவன் தன்னை உணராத மயக்க நிலை. இறுதியில் கோதில் சிந்தை அநுமனால், இலக்குவன் வரும் வழியில்,தாரை தன் தோழியர் கூட்டத்துடன் வந்து நிற்கிறாள். மாவீரனாகிய இலக்குவன் முன்! ஆம்! பிறர் மனை நோக்காத பேராண்மை உடைய இலக்குவன், தன் முன்னே மாதர்கள் கூட்டம் நிற்பதைக் கண்டு, அம்மெல்லியலார் பால், தன் சீற்றத்தைக் காட்டுதற்கு நாணி நின்றான், அவனது நிலையை,

> "தாமரை வதனம் சாய்த்துத் தனு நெடுந்தரையில் ஊன்றி,
> மாமியர் குழுவில் வந்தான் ஆம் என மைந்தன் நிற்ப'

என்கிறார் கவிஞர். இவ்விடத்தில், பிறர் மனையை ஏறிட்டு நோக்காத கற்பின் செல்வனாக, இலக்குவன் திகழ்வதைக் காண்கிறோம்.

இலக்குவனின் கற்புத்திறனுக்கு – உள்ளத்தூய்மைக்கு, ஆதிகவி வான்மீகி காட்டும் அரிய சான்றும் இங்கே ஒப்பிட்டு நோக்கத்தக்கது. வான் வழியாக இலங்கையர் கோன், பிராட்டியை எடுத்துச்சென்றபோது, அவள் வீசி எறிந்த அணிகலக் குவியலை, இராமனிடம் சுக்ரீவன் அளிக்கிறான். அதனை அடையாளம் காணும் பொறுப்பை, இலக்குவனிடம் ஒப்படைத்தான் இராமன். அப்போது இலக்குவன் கூறிய விடை, அவனது உள்ளத்தூய்மைக்குச்சான்றாய் விளங்கும் ஒப்பற்ற செய்தியாகும். இராமனை நோக்கி,

"ஐயனே! நான் பிராட்டியின் தோள் அணிகளைப் பார்த்திலேன். காதுகளில் அணியப் பெறும் இரு குண்டலங்களையும் பார்த்திலேன். ஆனால் நாள்தோறும் பிராட்டியின் திருவடிகளில் வீழ்ந்து, அவளைத் தாயாக வணங்கியதன் காரணமாக, திருவடிகளில் அணியப் பெற்ற இரண்டு சிலம்புகளை மட்டும் நான் அறிவேன்" என்று கூறினான்.

எப்போதோ ஒருமுறை, தாரையைக் கண்டபோது, இலக்குவன் பால் திகழ்ந்த கற்பின் திண்மையைக் கம்பரின் இராமகாதை காட்டியது. அதேபண்பின் உயர்வை,நாளும் சீதையை வணங்கும் போது,காட்டிய நிலையை வான்மீகம் விளக்கியது.

இங்கே இலக்குவன், தாரையைப்பார்க்காது, நாணத்தால் தலைகுனிந்து நின்றிருக்கவேண்டும். அவனுடைய பண்பு கொடுத்த துணிவில், தாரை இனிய குரலில் பேசத் தொடங்கவே, இலக்குவன்,

''ஆர்கொலோ உரைசெய்தார்?'' என்று அறியும் பொருட்டு, தன் முகத்தைச் சிறிது உயர்த்திப் பார்க்கிறான்.

''இறைமுகம் எடுத்து நோக்கி'' என்ற கவிஞரின் தொடர், இலக்குவனின் அப்போதய நிலையை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

அவன். பார்த்த தாரையின் முகம்! ஆம்! முழு வெண்திங்கள் போன்ற அழகு முகம்தான். ஆனால், சோகத்தால் வாடிய நிலையில், பகலில் தோன்றிய முழுவெண் திங்களாகப் பொலிவழிந்த முகத்தைக்கண்டவுடனே, இதுவரை அவனை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த சீற்றம், அவனிடம் இருந்து விடைபெற்று விட்டது. அதற்கு மாற்றாக, கண்களில் அருட்பெருவெள்ளம், பெருகி வழியத்தொடங்கியது. எதிரில் நிற்கும் தாரையை மறந்தான். இப்படித்தானே, அயோத்தியில் தயரதன் மறைவால், தன் தாய்மார்கள் கைம்மைக்கோலத்தோடு இருப்பர் என்ற சிந்தனை தோன்றவே,

''தாயரை நினைந்து நைந்தான்'' என்கிறார் கவிஞர்.

''மங்கல அணியை நீக்கி, மணியணி துறந்து, வாசக்
கொங்கு அலர் கோதை மாற்றி, குங்குமச்சாந்தம் கொட்டாப்
பொங்கு வெம் முலைகள், பூகக்கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல், நயனங்கள் பனிப்ப நின்றான்''

என்று முடித்தார் கவிமாமன்னர்.

இலக்குவனின் கனலைக் கக்கிய கண்கள் கண்ணீரை உகுத்தன. துயரம், நாவுக்குத் தடையிட்டது. இங்கே இலக்குவனின் சீற்றத்திற்கு மாற்றாய் அமைந்தது, கற்பின் செல்வி தாரையின் தவக்கோலம் எனில் மிகையன்று.

இவ்வாறு அண்ணல் இராமனின் அணைத்துத் திருத்தும் பண்பும், கண்ணியம் மிக்க பரதனின் தவக்கோலமும், குரக்கினப் பெண்ணரசியாம் தாரையின் கைம்மைத் தவக் கோலமும் இளையவனின் உணர்ச்சிக்கொந்தளிப்பை இராம காதையில் அடக்கிய செயல், படிப்போர்க்கு, நினைந்து நினைந்து மகிழ்தற்கு உரிய இலக்கியக் காட்சிகளாகும். தாரையின் தவக் கோலம் விளைத்த தாக்கத்தின் காரணமாகத் தான், அதற்குப் பின்பு அனுமனோடும். சுக்ரீவனோடும், இலக்குவன் பேசிய பேச்சுக்களில், சீற்றத்தின் செல்வாக்கு, குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்து காணப் படுவதைப்பின்னே அமைந்த பாசுரங்கள் இனிது காட்டும்.

இராமனின் சீற்றம், இலக்குவன்பால் எதிரொலித்தல்:-

யுத்தகாண்டத்தில், கடலில் அணை அமைக்க அநுமதி வேண்டி, கருணைக் கடலான இராமன், கருங்கடலை நோக்கி, வருணமந்திரத்தை நினைத்து, ஏழு நாட்கள், இரவும் பகலும் தவங்கிடந்த காலத்தும், கடல் அரசன் வெளித்தோன்றி, இராமனின் வேண்டுகோளை நிறைவேற்றாத காரணத்தால், தண்ணீரில், வெங்கனல் தோன்றினாற் போன்று, சீற்றத்தின் வயப்பட்டான் இராமன். கடல் அரசனை அழிக்க, வில்லைத் தருமாறு, பல முறை இலக்குவனுக்கு ஆணையிட்டான். அதன்படி இலக்குவன், வில்லை இராமனிடம் அளித்தான் என்று கூறிய கவிஞர் அப்போதே இலக்குவனின் சினம் மிக்க மனநிலையையும், அதன் விளைவாகக் கண்ணில் தோன்றிய சீற்றக்குறிகளையும் குறிப்பாராய்,

> "பலகால்
> தருதிவில் எனும் அளவையில், தம்பியும் வெம்பிக்
> குருதி வெங்கனல் உமிழ்கின்ற கண்ணினன்
> கொடுத்தான்"

என்று கூறுவாராய், இராமனின் சீற்றம், இலக்குவனிடம் எதிரொலிப்பதை எடுத்துக்காட்டினார்.

சிறிதும் சினம் கொள்ளாச் சான்றோன்:-

பொதுவாகச் சினம் என்னும் பண்பைக் கடிந்து நீக்குதல் வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், "சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி"என்று குறிப்பிட்டு, ஓர் அதிகாரம் முழுவதும் சினத்தின் கொடுமையை வள்ளுவர் கூறி இருப்பினும், இலக்குவனின் இத்தகைய சீற்றம், போற்றுதற்குரிய ஒன்று என்று வைணவ உரையாசிரியர்கள் கருதுவதும் இங்கே

குறிப்பிடத்தக்கது. தன்னலத்தின் அடிப்படையில், சீற்றம் தோன்றாமல், தனது தலைவன் மீது தான் கொண்ட அன்பின் மிகுதியாலே உண்டான சீற்றம் ஆகையால், அத்தகைய சீற்றம் போற்றுதற்குரியது என்கிறார் ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை அவர்கள். இத்தகைய சீற்றத்தை "அழகிய சீற்றம்" என்றும் அவர் போற்றுகிறார். கவிமாமன்னர் கம்பரும், இலக்குவனிடத்தில், பொருந்தாத சீற்றம் சிறிதும் இல்லை என்பாராய்,

"இறையேனும் முனிவு இலாதாய்!" [இறையேனும் = சிறிதேனும்; முனிவு = கோபம்] என்று இராமன், இலக்குவனை அழைத்ததாகக் குறித்தார். இது எவ்வாறு பொருந்தும்? என்று நாமும் திகைக்கிறோம். இராம காதையில் பல இடங்களில் சீறி எழும் இலக்குவனைக் கண்ட நமக்கு, இத்தகைய திகைப்பு ஏற்படுவது இயல்பே. ஆனால் சீறி எழுந்த அத்தனை இடங்களிலும், தன்னலன் அடிப்படையில் – தனக்குப் பிறரால் செய்யப்பெற்ற கொடுமைகளின் அடிப்படையில், அவன் சீற்றம் கொண்டதே இல்லை என்பதே உண்மை. இராமன் மீது அவன் கொண்ட மிகுதியான அன்பின் காரணமாக, அவனது சீற்றம் எல்லாம், இராமனின் நலன் கருதித் தோன்றியவைகளே தவிர, தன் பொருட்டுத் தோன்றியன அல்ல. ஆகையால், "தனக்காகச் சிறிதும் சினம் கொள்ளாதவன்" என்ற பொருளில், "இறையேனும் முனிவு இலாதாய்" என்று இராமன் அழைத்தாகக் கொள்ளுதல், பொருந்தக்கூடியதே. அதனால்தான் மாரீசனின் மரண ஓலம் கேட்டு, மதி மயங்கிய பிராட்டி, இலக்குவனை நோக்கிக் கொடுஞ் சொற்களால் சாடிய காலத்தும், அவை நாவினால் சுட்ட வடுவாக, இலக்குவன் உள்ளத்தைத் துன்பப்படுத்திய காலத்தும், சீதையின் நலத்தைக்கருதி, அவளது ஆணையை ஏற்று, ஆறி அடங்கிய சான்றோனாகத் திகழ்ந்தானே தவிர, சீறிக்கிளர்ந்து எழும் சினத்திற்குச் சிறிதும் இடம் கொடுக்கவில்லை என்பதை நாம் சிந்திக்கும் போதுதான், கவிஞர் கொடுத்திருக்கும் மேற்கண்ட அடைமொழி, எத்தகைய பொருளாழம் மிக்கது என்பதை உணர முடியும்.

தற்கால உலகியல் வாழ்வில் கூட, சமுதாயக் கொடுமைகள் குறித்தும், பொது வாழ்வின் தீமைகள் குறித்தும் மக்களிடம் ஏற்படும் சீற்ற உணர்வு, பாராட்டப்படுவதையும், அத்தகைய எழுச்சி, தற்காலச் சூழ்நிலையில் தேவையான ஒன்றாய் இருப்பதையும் நாம் காண்கிறோம்.

"உரிமை மேல் ஆண்மை பாராட்டார் சாந்தம்,
பெருமை இல் பிணத்திடைப் பிறந்ததோர் சீதம்'

என்று, மனோன்மணீய ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், தேவையற்ற அமைதியைக் கடிந்து கூறி இருப்பதும் இங்கே சிந்திக்கத்தக்கது. மேலும் வெகுளாமையை வலியுறுத்தும் வள்ளுவர், அதேநேரத்தில் மக்களிடையே பிறரை யாசித்து வாழும் இழிவைக் கடிந்து கூறுவராய்,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகு இயற்றியான்"

[இரவச்சம். குறள்.2] என்று சினந்து கூறிய கருத்தையும்,

"தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்"

என்று புதுமைக்கவிஞன் பாரதி, பொங்கி வெடித்த உரை யையும், நாம் போற்றுகிறோமேயன்றி, அவர்களின் சினத்தில் நம்மால் குற்றம் காண முடிவதில்லை.

பிறரை மதிப்பீடு செய்வதில் இலக்குவன் தனி நிலை:-

வான்மீகத்தை முழுமையாக ஆய்ந்து உரையாற்றிய அறிஞர் சீனிவாச சாஸ்திரியார் அவர்கள், இலக்குவனின் நிலைபற்றிக் கூறும்போது, அவனிடம், "தன்னை வளர்ப் போன்பால் அன்பு காட்டும் நாயின் நல்ல தகுதிகளும், தன் தலைவன் பால் அன்பு பூண்டு நடக்கும் நல்லடிமையின் இயல்பும் விளங்குகின்றன" என்று கூறிய கூற்று, இங்கே கருதத்தக்கது. இதனை

"He has a dogs qualities and a Slaves virtue"

என்ற அவரது கூற்றில் நாம் அறியலாம். தனக்கு உணவு அளித்தோனின் காவலைப்பற்றி .மட்டுமே, அவனால் வளர்க்கப்பெறும் நாய், கவலை கொண்டு, அது பற்றிச் செயலாற்றுமே தவிர, தன் தலைவனை நோக்கி வருவோரின், தகுதி பற்றியோ, அவர்களின் பிற பண்பு பற்றியோ சிந்திப்பது இல்லை, என்பதுதான், நாயிடம் நாம் காணும் பண்பாகும். அதனாற்றான், இராமன் பால் வெளிப்படையாக அன்பு காட்டி, தேனும் மீனும் கொணர்ந்த குகனிடம், அவனைக் கண்டவுடனேயே அன்பு கொள்ளத்தொடங்கி

விடுகிறான் இலக்குவன். அவனைப்பற்றி இராமன் பால் எடுத்துக்கூறும் போது கூட,

"சுற்றமும் தானும் உள்ளம் தூயவன், தாயின் நல்லான்,
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறைகுகன் ஒருவன் என்றான்"

என்று எடுத்த எடுப்பிலேயே, குகனின் உள்ளத்தூய்மையையும், அவனைச்சார்ந்து வாழும் சுற்றத்தாரின் நல்லியல்பையும் விளக்குவதோடு அமையாது, அவ்வன்பு, தாயன்பைக்காட்டிலும் சிறந்தது என்றும், அடுக்கடுக்காக, குகன் மீது தான் கொண்ட அன்புப் பெருக்கை வெளிப்படுத்தினான். இந்தவகையில், குகனைப்பற்றிய இலக்குவனின் மதிப்பீடு, முழுமையாகப் பொருந்தியிருப்பதும் நமக்கு மகிழ்வைத்தருகின்றது.

ஆனால். இதே நிலையில், இலக்குவனின் மதிப்பீடு, பரதனைப்பற்றி அமையவில்லை. அவன் பரதனைக்கணித்த கணிப்பு முழுவதும் தவறாகப் போய்விடுகின்றது. தயரதனைப் பற்றிய இலக்குவனின் கணிப்பும் முறையான ஒன்று அன்று. அதற்குக் காரணம் குகனின் வருகையால் இராமனுக்கு எத்தகைய தீமையும் விளையவில்லை யாதலானும், மாறாக நன்மையே விளைவதாக அமைந்திருப்பதாலும், குகனின் வருகை குறித்து, இலக்குவனின் உள்ளத்தில் வேறு எந்தக்கிளர்ச்சியும் இல்லை.

ஆனால் பரதனின் நிலை வேறு, தாயின் சூழ்ச்சியைப் பரதன், அறியாமல் இருந்தாலும், தாயின் செயல்கள் அவனுக்கு உடன்பாடாக இல்லாமல் இருந்தாலும், சூழ்நிலையின் கடுமையால் ஏற்பட்ட பாதிப்புக்குப் பரதன் ஆளாகி விடுகின்றான். அதனால்தான்,

"ஆளான் பரதன் அரசு என்பார்" என்று கம்பர் கூறும் முறையில், அயோத்தி வாழ் பொதுமக்கள்கூட, பரதனின் தூய்மையைப்பற்றி ஐயப்படாத நிலையில், உடன் பிறந்தவனான இலக்குவன், இராமன் மீது கொண்ட மிகுதியான அன்பின் காரணமாக, இராமன் பெற்ற தீமைக்குப் பரதனும் காரணம் என்று அவனையும் குற்றம் சாற்றத்தொடங்கி விடுகின்றான்.

இதே நிலையில்தான், வாய்மையும் மரபும் காக்க மன்னுயிர் துறந்த தூயவனான தயரதனையும், மனைவி மாட்டுக் கொண்ட காதலால், வரம் அளித்து; தவறு இழைத்து

விட்டான் என்று ஐயப்படும்படி நேரிட்டு விடுகின்றது. பரதன் மீது கொள்ளவேண்டிய உடன் பிறப்பு உணர்வையும், தயரதன் பால் கொள்ளவேண்டிய தந்தை என்ற உறவு பற்றிய தனி உணர்வையும், இராமன் பால் இலக்குவன் கொண்ட இணையில்லா அன்பு வெள்ளம், உருத்தெரியாமல் அடித்துச் சென்றுவிட்ட விந்தையைத்தான், இங்கே நாம் காண்கிறோம். இதனால் தான், உலகில், எந்தத்தம்பியர், தம் அண்ணனிடம் நீங்கு இழைத்தாலும், அதன் அடிப்படைக் காரணத்தை ஆராயாமல், அந்தத் தம்பியர் செயலையே, துரோகத்தின் பாற் பட்டதாக இலக்குவன் கருதி விடுகின்றான். இந்த உணர்வின் அடிப் படையில் தான், அண்ணனுக்கு எதிராகக் கிளர்ந்து, இராமனின் துணைவேண்டி நின்ற சுக்ரீவன் செயலையும், இலக்குவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை இராமனுக்குக் கூறுவானாய்,

"வள்ளற்கு இளையான் பகர்வான், இவன் தம் முன் வாணாள்
கொள்ளக்கொடுங்கூற்றுவனைக் கொணர்ந்தான், குரங்கின்
எள்ளற்கு உறு போர் செய எண்ணினன், என்னும் இன்னல்
உள்ளத்தின் ஊன்ற, உணர்வுற்றிலன் ஒன்றும் என்றான்''
[கம்ப–கிட்–வாலிவதை–பா.41]

என்று கூறுவதாய் அமைந்த பாடல், இங்கே கருதத்தக்கது. சுக்ரீவன், தன் அண்ணன் வாலியைக்கொல்ல இராமனை அழைத்துவந்த செயலும், தானும் நேரில் சென்று முறையற்ற குரங்கினச் சண்டையைச்செய்ய எண்ணியமையும், தன் உள்ளத்திற்குத் துன்பத்தைக் கொடுத்துள்ளன என்றும், தன் உள்ளம் ஒன்றையும் அறிய முடியாத நிலையில், கலக்கம் அடைந்துள்ளது என்றும் கூறுவானாய்

"இன்னல், உள்ளத்தில் ஊன்ற உணர்வு உற்றிலன் ஒன்றும்''

என்று வருந்திக்கூறுகிறான். அத்துடன் நில்லாமல், இவ்வாறு அற நெறிக்கு மாறுபட்டு நடப்போர்களை நம்புதல் முறையன்று என்றும், தன் அண்ணனையே பகைவனாகக் கருதிக் கொல்லத் தொடங்கியுள்ள சுக்ரீவன், மற்றவர்களுக்கு (இராமன் போன்ற வர்களுக்கு) உற்ற துணையாக எவ்வாறு ஆகமுடியும்? என்றும் கேட்பவனாய்

"ஆற்றாது பின்னும் பகர்வான், அறத்தாறு அழுங்கத்
தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்விதன்றால்,
மாற்றான் எனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்றான்
வேற்றார்கள் திறத்து இவன் தஞ்சம் என்? வீர!என்றான்''
[கிட்கி. வாலிவதை. பா.42]

என்றும் அமைந்த பாடல், இலக்குவனின் மனநிலையையே நன்கு விளக்கும் சான்றாக அமைந்து விடுகின்றது.

இலக்குவனின் இத்தகைய ஐயத்திற்கு விடையாக,

"எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆவது உண்டோ!"

என்று கூறிய பின்பு, காவியத்தின் எந்த இடத்திலும், பிறரைப்பற்றிய தனது மதிப்பீட்டை, இலக்குவன் இராமனிடமோ, பிறரிடமோ கூறாத நிலையைக் காண்கிறோம்.

அதனாற்றான், வீடணன் அடைக்கலப் படலத்தில், வீடணனை ஏற்றுக்கொள்வதா? ஏற்கமறுப்பதா? என்ற வினாவை எழுப்பி, நண்பர்களின் கருத்தை இராமன் கேட்ட போது, குரக்கினக்கோமான் சுக்ரீவனும், ஆன்றவிந்தடங்கிய மூத்த சான்றோனாம் சாம்பவானும், குரங்கின அறிஞன் அனுமனும் தத்தம் கருத்துக்களை எடுத்துக்கூறவும், இலக்குவன் வாய்மூடி மௌனியாக நிற்குமாறு கவிஞர் அமைத்துள்ள திறம், இங்கே சிந்திக்கத்தக்கது.

ஆனால், வாலி இராமனை நோக்கி, மறைந்து நின்றதைக்கூறிக் குற்றம் சாட்ட முற்பட்டபோது, இலக்குவன், இராமனுக்கு ஏற்படும் சிறுமையை நீக்கும் முயற்சியில், வாலியின் கூற்றுக்கு விடையாக,

"உன் இளவல், சுக்ரீவன், முதலில் வந்து இராமனைச் சரண் அடையவே, அவனுக்கு இன்னல் இழைத்த உன்னை அழிப்பதாக வாக்குறுதி அளித்தான் எம் இராமன், இப்போது நீயும் இராமனை நேரில் கண்டால், உயிர் வாழ விரும்பி, இராமன் பால் அடைக்கலம் வேண்டினால் உன் தம்பிக்குக் கொடுத்த உறுதி மொழியைக் காக்க இயலாமல் போகுமே என்ற எண்ணத்தால்தான், இராமன் மறைந்து நின்றானே யன்றி, வேறன்று என்று கூறுவனாய்.

"முன்பு நின் தம்பி வந்து சரண்புக, முறை இலோயைத்
தென்புலத்து உய்ப்பன் என்று செப்பினன்; செருவில் நீயும்
அன்பினை உயிருக்கு ஆகி, "அடைக்கலம் யானும் "என்றி
என்பது கருதி, அண்ணல் மறைந்து நின்று எய்தது என்றான்"

என்று அமைந்த பாடல், இங்கே சிந்திக்கத்தக்கது. பிறரைப் பற்றி மதிப்பீடு செய்வதை, இலக்குவன் கை விட்டானே தவிர, பிறர் இராமனைப் பழித்து உரைக்கின், அதற்கு விடை கூறத்தயங்காத நாவன்மையை, இலக்குவனிடம் இவ்விடத்தில் நாம் காண்கிறோம்.

ஆகவே, பரதனைப்பற்றியோ, தயரதனைப்பற்றியோ, சுக்ரீவனைப்பற்றியோ, இலக்குவனின் மதிப்பீடு தவறியது என்று கருதுவதைக்காட்டிலும், அந்நிலைக்குக் காரணமாக, இராமன் மீது அவன் கொண்ட அன்பின் சிறப்பே, பேர் இமயமாக, நம் சிந்தையில் விளங்கி மகிழ்ச்சி ஊட்டுகின்றது எனில் மிகையன்று

இராமனுக்கு இதம் புரியும் இனிய பண்பாளன்:-

ஆரணிய காண்டத்தில் நாம் காணும் இலக்குவன், அயோத்தியா காண்ட நிலையினைக்காட்டிலும் பெரிதும் மாறுபட்டு, அறிவுத் தெளிவு பெற்ற சான்றோனாக, அமைதியாகச் சிந்தித்துச் செயலாற்றும் அறிவுச்செல்வனாக விளங்குகின்றான். அறிவின் உருவாய் விளங்கும் இராமனுக்கும், அறிவூட்டும் பேரறிவுப்பெட்டகமாக, இக் காண்டத்தில் இலக்குவன் சித்திரிக்கப் படுகின்றான். இக் காண்டத்தில் நாம் காணும் இலக்குவனோடு, புதுயுகக் கவிஞர் பாரதியார், கண்ணனை, எடுத்துக்காட்டான தோழனாகவும், தாயாகவும், தந்தையாகவும், சேவகனாகவும் நமக்குக்காட்டிய நிலை, ஒப்பிட்டு நினைக்கத்தக்கது. கண்ணன் தோழனாக இருக்குங்கால்,

"மழைக்குக்குடை, பசி நேரத்துஉணவு, என்றன்
வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்"

என்பார் பாரதி. அவன் துன்பக் காலத்தில் துணையாகும் நிலையை குறிக்கும் பொழுது,

"பெரும்
ஆபத்தினில் வந்து பக்கத்திலே நின்று
அதனை விலக்கிடுவான் — சுடர்த்
தீபத்திலே விழும் பூச்சிகள் போல் வரும்
தீமைகள் கொன்றிடுவான்"

என்று கூறி விளக்குவார், அவன் சேவகனாகப் பணியாற்றும் சிறப்பைக்கூறும் பொழுது,

''காட்டு வழியானாலும், கள்ளர் பயம் ஆனாலும்,
இரவிற் பகலிலே எந்நேரம் ஆனாலும்

சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர் தம்முடனே சுற்றுவேன், தங்களுக்கு ஓர் துன்பம் உறாமல் காப்பேன்''

என்று சேவகன் கூற்றாகக்கூறி விளக்குவார். எத்தகைய பயனையும் கருதாத அச்சேவகனின் மனநிலையை விளக்கு வாராய்,

''தேவரீர் ஆதரித்தாற் போதும் அடியேனை, நெஞ்சில் உள்ள காதல் பெரிது எனக்கு, காசு பெரிது இல்லை என்றான்'' என்று கூறுவதாக எடுத்துக்காட்டுவார்.

இவ்வாறு, நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய்,

''எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதி நான் என்றான்'' என்று கண்ணன் எம்பெருமானின் பல்வகை இயல்புகளை விளக்கும் பாரதிக்கு, இவ்வாறு பாடுத்ற்கான கருப்பொருளை, ஆம்! அடிப்படைச் சிந்தனையைக் கொடுத்த இராமகாதைப் பாத்திரம் இலக்குவனே எனில் மிகையன்று, இராமகாதை முழுவதிலும், இவ்வாறு பலநிலைகளில் நின்று, இலக்குவன், இராமனுக்குப் பணி புரிந்ததற்கான சான்றுகளை நாம் காண இயலும் எனினும், இராமனின் நலம் காக்கப் பணி புரிந்த இலக்குவனின் தனிச்சிறப்பை, மற்றக் காண்டங்களைக் காட்டிலும், ஆரணிய காண்டத்தில் நாம் மிகுதியாகக் காண் கிறோம்.

உறுதி கூறும் உயர் பண்பாளன்:-

''தம் உயிர்க்கு உறுதி எண்ணார், தலைமகன் வெகுண்ட போதும், வெம்மையைத்தாங்கி, நீதி விடாது நின்று உரைக்கும் வீரர்''

என்று கோசல நாட்டு அமைச்சர்களின் சிறப்பைக் கவிஞர் கூறுவது போன்று, இராமனின் நலம் கருதியும், சீதையின் நலம் காக்கவும், அவ்வப்போது இலக்குவன், தன் நெஞ்சிற்பட்ட உண்மைகளைத் தயங்காது எடுத்து உரைக்கும் சிறப்பினை, இக்காண்டத்தில் பல இடங்களில் நாம் காணமுடிகின்றது.

கானக வாழ்க்கையில், இராம இலக்குவரின் வீரத்திற்கு முதற்கண் இலக்கான விராதன், சீதையை முதலில் பற்றி, பின் இராமனின் வில் நாண் ஒலிகேட்டு, அவளை விடுத்து, இராம இலக்குவரைப்பற்றினான். அத்துடன் நில்லாது, அவர்கள் இரு வரையும் சுமந்து கொண்டு வான் வழியாகச்செல்லவும் தொடங்கினான். அவ்வாறு தங்களைச் சுமந்து செல்வதை, தமது வழிப்பயணத்திற்கு நன்மையாக இராமன் நினைத்தானே தவிர, இதனால் சீதை கானகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுத் துன்புறுவதை எண்ணிப்பார்க்கவில்லை, இதனை எடுத்துக் காட்டிய இலக்குவன்.

"தேவி துயர் கூர விளையாடல் தொழிலோ! பழுது வாழி"

"என்று அவன் சுமந்து செல்வதைத் தடுத்து, விராதன் அழிவதற்கு வழி வகுத்தமையை, இலக்குவன் கானக வாழ்க்கையில் முதற்கண் செய்த, உற்றுழி உதவும் ஒப்பற்ற செயலாக நாம் கருதலாம்.

மாரீசனை .இனம் கண்டு கொண்ட மாண்பு:-

காவிய அமைப்பில் மாரீசன் மாயமானாக வருதல், மாபெரும் திருப்பத்தைக் கொடுக்கவல்லது. காவிய அமைப்பில் மட்டும் அல்லாமல், இலக்குவனுக்கு ஏற்றத்தைத் தருவதும் இந் நிகழ்ச்சியே. அண்ணல் இராமனும், அணங்காம் சீதையும், பொன்மானின் உண்மைநிலை அறியாது மயங்கி நிற்க, சிறிது சிறிதாக அதன் வஞ்சகத்தன்மையை முழுமையாக எடுத்துக் கூறிய சிறப்பு, இலக்குவனுக்கே உரியது. இம்மான் விரும்பத் தக்க ஒன்று அன்று என்று தடுத்தான் முதற்கண். இதன் உடலமைப்பு இதனை மாயமானாகக் காட்டுவதால், இதனை விடுத்து நம் வாழ்விடம் செல்வதே செய்யத்தக்கது என்று மேலும் எடுத்துக்கூறினான். இவ்விடத்தில் இலக்குவனை, "சிந்தையில் தெளிந்த தம்பி "என்று கவிஞர் அடைகொடுத்துக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலும், சீதை உணராது, அதனைப்பற்றித் தருமாறு இராமனை வேண்டவும், இலக்குவன்

"வெய்யவல் அரக்கர், வஞ்சம் விரும்பினார், வினையின் செய்த கைதவமான் என்று அண்ணல்! காணுதி கடையில்"

என்று கொடிய அரக்கர் உருவாக்கிய வஞ்சனைமான் என்பதை, இச்செயலின் இறுதியில் நீ உணர்வாய்! என்று

இராமனை எச்சரித்தும் பார்த்தான். அதனையும் அவர்கள் உணராத நிலையில்,' தெளிவு இல்லாத நிலையில், நம் முன்னோர் வெறுத்த மான் வேட்டையில் செல்வதும் புகழ்தராது என்று, மரபிற்கு முரணாகக்காட்டித் தடுத்தான். அந் நிலையிலும் அவர்கள் உணராது நிற்கவே, இச்செயலின் விளைவைத் தடுக்க விரும்பி, மான் வேட்டைக்குத்தன்னை அனுப்புமாறு வேண்டினான். ஆனால் மானைப்பற்றும் செயலை இராமனே செய்யவேண்டும் என்ற தன் விருப்பத்தை, சீதை, கண்களில் கண்ணீர் பெருக,ஊடற் குறிப்புடன் வெளி யிடவே, இராமனே, மானின் பின் செல்ல ஆயத்தமானான். இந்நிலையிலும் தளராமல், இலக்குவன், கோசிக வேள்வியில் தப்பிச்சென்ற மாரீசனே இந்த மாயமான் என்பதை எடுத்துக் காட்டுவனாய்,

> ''அன்ன மாரீசன் என்றே அயிர்த்தனன் இதனை, ஐயா!
> இன்னமும் காண்டி, வாழி!ஏகு!''

என்று கூறி, இறுதிவரையில் அவ்விருவரையும் காப்பதற்கு வகை செய்த தனி முயற்சியை, இலக்குவன் பால் நாம் காண்கிறோம். இவ்விடத்தில் இலக்குவன் முயற்சி தோற்றாலும், அவனது சிந்தனையின் முடிவே சிறந்தது என்பதைப் பின்வரும் நிகழ்ச்சிகள் காட்டிவிடுகின்றன. மானைப் பின்தொடர்ந்த இராமன், சில கணங்களிலேயே இதனை உணர்ந்து, தன் தம்பியின் தெளிந்த அறிவைப் போற்றுவானாய்,

> ''ஐயன் வல்லன், என் ஆருயிர் வல்லன், நான்
> உய்ய வந்தவன் வல்லன் என்று உன்னினான்''

என்றபடி இலக்குவனை மனத்தால் போற்றினான். இவ்விடத்தில், இலக்குவனை, ''நான் உய்ய வந்தவன்'' என்று இராமன் போற்றுவது குறிப்பிடத்தக்கது.

நாவினால் சுட்ட வடுவும், நல்லுரை வழங்கும் தெளிவும்:-

ஆனால், இலக்குவனைப்பற்றி, இராமன் பெற்ற தெளிவை, சீதை முதற்கண் இக்காண்டத்தில் அடையவில்லை. மாரீசனின் பொய்க்குரலை, இராமனின் மெய்க்குரல் என மாறுபடக்கருதிய சீதை, இராமனுக்கு ஏதோ தீங்கு நேர்ந்து விட்டது என்ற உணர்ச்சிப் பாதிப்பினால், இராமனின் உண்மையான ஆற்றலையும், இலக்குவனின் அறிவுத் தெளிவுடன் கூறிய உறுதியையும் உணர்ந்து கொள்ளாமல், ''பெண்ணறிவு என்பது பெரும் பேதைமைத்தே'' என்பதற்கு

இணங்க, இலக்குவனை நோக்கிக் கொடுஞ்சொல் கூறவும் துணிந்து விடுகின்றாள்.

''கார் எனக் கரிய அக் கமலக்கண்ணனை யார் எனக் கருதி இவ்விடரில் ஆழ்கின்றீர்?'' என்று இராமனின் உண்மை ஆற்றலை, இலக்குவன் எடுத்து விளக்கியபோதும்,

இராமனுக்கே ஒரு தீங்கு ஏற்படும் எனின், அது உலகின் அழிவுக்கே காரணம் ஆதலால், அத்தகைய அழிவு, உலகிற்கு ஏற்படாத இந்நிலையே, இராமனுக்கும் துன்பம் ஏற்பட்டிருக்க இயலாது என்பதைக் காட்டவில்லையா? என்று நேர்முகச் சான்றைக் காட்டி விளக்கிய போதும், சீதையின் மணவாழ்விற்குக் காரணமான, வில் முறித்த வீர வரலாற்றைச் சுட்டிக்காட்டிய போதும், உணர்ச்சிப்பாதிப்பினால், சீதையின் உள்ளத்தில் அமைதி ஏற்படவில்லை என்பதுதான் இவ்விடத்தில் இராமகாதை காட்டும் உண்மையாகும். அயோத்தியா காண்டத்தில் இலக்குவன் பெற்றிருந்த இத்தகைய மன நிலையை, ஆரணிய காண்டத்தில் சீதை பெற்றுள்ளாள் என்பது கருத்து.

''நினைத்திலை என்வயின் நேய நெஞ்சினால்'' என்று இலக்குவனை நோக்கி, இராமன் கூறிய வண்ணம், பொய்யை மெய்யாகக்கருதும் மயக்க உணர்வினால், இலக்குவனையே ஐ யுற்று,

''நின்ற நின்னிலை இது நெறியிற்று அன்று'' என்று அவன் நடத்தையையே குற்றம் சாட்டிக் கூறிய போதும், கலங்காத இலக்குவன், நெருப்பில்தான் வீழ்வதாகக்கூறி அவள் புறப்பட்டபோது, அதற்குமேல் யாதும் செய்ய இயலாமல் இராமனின் ஆணையைப்பற்றியும் கருதாமல்,

''வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ?'' என்று வெதும்பிச் சீதையைப்பிரிந்து, இராமனை நோக்கிச் செல்கின்றான். இவ்வாறு அவன் பிரிந்து சென்றதற்கும், தேவர்கள் செய்த தவமே காரணம் என்று கூறும் கவி மாமன்னர்,

''தேவர் செய் தவத்தினால் செம்மல் ஏகினான்'' என்று கூறியிருப்பது இங்கே கருதத்தக்கது.

பிழை உணர்ந்து இருவரும் போற்றிய பாங்கு:-

இலக்குவன் எதிரில் நின்று பிரிந்ததும், அரக்கனின் தோற்றம் ஏற்படவே, பிழையுணர்ந்து வருந்திய சீதை

"பின்னவன் உரையினை மறுத்துப்பேதையேன்
அன்னவன் தனைக்கடிது அகற்றினேன்"

என்று கூறி, தன் செயலை நினைந்து வருந்தினாள். இராமனும், இலக்குவன் அறிவுரையைத்தான் ஏற்காது எடுத்த முடிவினால் தான் தீங்கு ஏற்பட்டது என்று நினைந்து நினைந்து மனம் அழிந்ததை,

"தெளிவாய், முந்தே தடுக்க ஒழியாது எடுத்த
வினையேன் முடித்த முடிவால்,
அந்தோகெடுத்தது! என உன்னி உன்னி
அழியாத உள்ளம் அழிவான்"

என்கிறார் கவிஞர். ஆனால் இந்நிகழ்ச்சியிலும், சீதை, தான் நெருப்பில் வீழ்ந்து இறப்பதாகக் கூறியதால் அஞ்சி தான் வந்ததாக இலக்குவன், இராமனிடம் கூறினானே யொழிய, தன்னைக் கடிந்து சீதை கூறிய பிற உரைகளில் எதனையும் கூறாதது, இலக்குவனின் பெருந்தன்மையைக் காட்டும் சான்றாகும்.

துயரச் சூழலிலும் அயர்வு அடையாத ஆண்டகை:-

தன் வலிமையால், பிறர்க்கு வந்த துன்பம் துடைக்கும் ஆற்றலை உடைய இராமன் – 'அறிவினுள் அறிவன்' என்றும், 'அறிவின் உம்பரான்' என்றும், 'அறிவின் தனி நாயகன்' என்றும் 'அறிவின் மேலுளான்' என்றும் போற்றப் பெறும் இராமன், 'யானைக்கும் அடி சறுக்கும்' என்ற நிலையில், ஆரணியத்தில், சீர் அணங்காம் சீதையை இழந்து, சிந்தையும் மொழியும் தடுமாறி நின்ற சூழலில், அவனுக்கும் உற்றுழி உதவிக் காக்கும் பெருஞ்சிறப்பை, இராமகாதை இலக்குவன் ஒருவனுக்கே தந்துள்ளது எனில் மிகையன்று.

சீதையைக் காணாத இராமனின் நிலை, தன் உடலைப் பிரிந்து சென்று, மீண்டும் அதனைத் தேடி வந்தபோது, அதனைக்காணாத உயிரின் துன்ப நிலையோடு, ஒப்பாகக் கவிஞனால் கூறப்பெற்றுள்ளது. அந்நிலையில் உலகமும், ஏன்? இயற்கைப் பொருள் அத்தனையும் தடுமாறும் நிலையில், இலக்குவன் ஒருவனே வழிகாட்டும் பெருவள்ளலாக விளங்கு

கின்றான். தேரின் சுவடுகளும், தரையோடு சீதையைப் பெயர்த்து எடுத்துச் சென்றுள்ளதும் விளங்குகின்ற காரணத் தால், அத்தகைய கொடுஞ்செயல் புரிந்தவன், நெடுந்தூரம் செல் வதற்குள் அவனைத் தொடர்ந்து செல்வதே செய்யத்தக்கசெயல் என்பதை இராமனுக்கு இலக்குவன் எடுத்துக்காட்டினான்.

உள்ளம் அழிந்த நிலையில், உரம் தந்த நல்லுரை:-

அவ்வுரையின்படி, இருவரும் பயணத்தைத் தொடர்ந்த போது, தேரின் சுவடு குறிப்பிட்ட எல்லையில் மறைந்தது. அங்கிருந்து வான் வழியாகத்தான் பகைவன் சென்றிருக்க முடியும் என்று அறிந்து, உள்ளம் புழுங்கிய இராமன், இளவலை நோக்கி, "இனி யாது செய்வது?" என்று திகைப்புடன் வினவியபோது இலக்குவன்,

"தேரின் சுவடுகளால், அக்கொடியோன் தென்திசை நோக்கிச் சென்றமை விளங்குவதால், அவன் வான் வழியாகச் சென்றாலும் அவ்வானமும், நின் தோள்வலியாற் செலுத்தும் வில்லாற்றலுக்கு உட்பட்டதே என்று கூறுவானாய்,"

"வானம், விற்கு நோக்கிய பகழியின் நெடிது அன்று"

என்று கூறி, ஊக்கம் ஊட்டுகின்றான். இவ்விடத்தில் இராமனின் தோளாற்றலை அவனுக்குக் குறிப்பாக நினை வூட்டுவானாய்,

"மற்கு நோக்கிய திரள் புயத்து அண்ணலே!" [மற்கு நோக்கிய = மற்போர்க்குத் தகுதியான]

என்று இலக்குவன், இராமனை அழைப்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே இத்தகைய தோள்வலிமையையும், வில்லாற்றலையும் பொருந்திய நீ, வலிமை இல்லாதவர் போல், விம்மி நிற்பதனால் பயனில்லை என்பதையும் எடுத்துக் காட்டுவானாய்,

"விம்மி நிற்கும் நோக்கு இது, என் பயத்தது?" என்னும் வீரார்ந்த உரையினைக்கூறி, இராமனை வீறு கொண்டு எழச்செய்கின்றான்.

ஒருவனே அவன்! என்று கூறிய உயர்வு:-

இருவரின் பயணமும் தொடர்கிறது. வீணைக்கொடி வீழ்ந்து கிடப்பதைக் கண்டும், அப்போரினைச் சடாயுவே

நிகழ்த்தியிருக்க வேண்டும் என்று ஊகித்து அறிந்த இராமன் சடாயுவின் முதுமையை எண்ணி வருந்தியபோது, இலக்குவன் தாம் உடனடியாகச் செய்யவேண்டிய செயலை எடுத்துக் காட்டு வானாய்,

''சடாயு தம் வலிமையால், அக்கொடியவனோடு போரிட்டு, ஈடு கொடுத்துக்கொண்டிருப்பர் ஆதலால், சடாயுவுக்கு வலிமை சேர்க்க, நாம் உடன் மேலும் தொடர்ந்து செல்ல வேண்டும் என்று கூறினான். அவ்வண்ணம் இருவரும் செல்லுங் கால், வழியில் வீழ்ந்துகிடக்கின்ற பல் வகை அணிகலன் களையும், தலைகளையும், தோள்களையும் இராமன் கண்டு சடாயுவை எதிர்த்தவர் பலராகத்தான் இருக்கவேண்டும் என்று, கலங்கிய நிலையில் கூறவே, இலக்குவன் தெளிந்த நிலையில்,

அவன் பலராக இருத்தல் இயலாது; ''இராவணன் என்ற ஒருவனே அவன்'' என்று பெயரைச்சுட்டிக்கூறுவானாய்.

''ஒருவனே அவன் இராவணன் ஆம் என உரைத்தான்'' என அமைந்த கவிஞனின் வாக்கு, துன்பச் சூழலிலும் துவளாத இலக்குவனின் அறிவுத்தெளிவை எடுத்துக் காட்டுகின்றது. மாயமானை மாரீசனாகச் சுட்டிக் கூறியது போன்றே இங்கும் இராவணனைச் சுட்டிக்கூறிய சிறப்பைக் காண்கிறோம்.

இராமனின் செயலற்ற நிலையும், இளவலின் துணிவுற்ற தெளிவும்:-

குற்றுயிராய் நிற்கும் சடாயுவைக்கண்டு, இருவருமே எல்லையில்லாத்துயரை அடைந்தாலும், மூர்ச்சையுற்ற இராமனை,நீர் தெளித்து உயிர்ப்பிக்கும் பணியினைச் செய்கின்றான் இலக்குவன். சடாயுவுக்கு, இராவணன் இழைத்த கொடுமையை எண்ணி, இராமன் கொண்ட சீற்றத்தைக்கண்டு,

''துணிந்த நெஞ்சின், அஞ்சினன் இளைய கோவும்'' என்கிறார் கவிஞர். இலக்குவனே அஞ்சத்தக்க அத்தகைய சீற்றத்தைச் சாகும் நிலையில் தளர்ந்து உள்ள சடாயுவின் ஈரச்சொற்கள் நீக்குகின்றன.

சடாயுவின் உயிரும் பிரியவே, அடுக்கடுக்காக வந்த துன்பச் சுமையினால், 'யாது செய்வது?' என்று அறியாது திகைத்து, இளவலை நோக்குகின்றான்.

"இலக்குவனே! யான் இப்போது செய்யத்தக்கது, உலகைத் துறந்து தவம் செய்வதா? அன்றி, உயிரைத் துறந்து, இவ்வுலகைத் துறப்பதா" என்று கேட்பானாய்,

"துறந்தனன் தவம் செய்கேனோ
துறப்பெனோ உயிரைச் சொல்லாய்!"

என்று கேட்டு, இறுதியில், "என் செய்கேன்! இளவல்!" என்று ஏங்கி நின்ற செயலற்ற நிலையைக் காட்டுகின்றார் கவிஞர். ஆரணங்கின் பிரிவும், அன்பு சால் சடாயுவின் மரணமும் இராமன் பால் தோன்றிய துயரத்தின் விளைவே இந்நிலை. ஆனால் இந் நிலையிலும் கலங்காது செயலாற்றியவனே இலக்குவன் என்பதைத்தான் காவியம் நமக்குக் காட்டுகின்றது.

இராமனை நோக்கி, விதியின் விளைவை எண்ணி வருந்துவதால் பயன் இல்லை என்ற இலக்குவன், துன்ப உணர்விற்கு நாம் ஆட்படுவது, அரக்கரை அழித்தபின்பு அல்லவா என்று கேட்பானாய்,

"அரக்கர் தம்மைக் கொன்ற பின் அன்றோ வெய்ய கொடுந்துயர் குளிப்பது?"

என்கிறான். அத்துடன் நில்லாமல், இராமன் கேட்ட வினாவுக்கு விடை கூறுவானாய், "சீதையைப் பிரிந்ததால், உன்னிடம் தோன்றிய சினம் தணிந்தாலும், உன் தந்தைக்கு ஒப்பான சடாயுவை அழித்த கொடியவனின் உயிரை வாங்கும் உறுதியும் உன் உள்ளத்தில் இல்லாது இருக்குமானால், நீ தவம் செய்வது சிறந்ததே" என்று இடித்துக் கூறுவானாய்,

"சந்த வார் குழலினாளைத் துறந்தனை தணிதியேனும் உந்தையை உயிர் கொண்டானை, உயிர் கொல்லும் ஊற்றம் இல்லாச் சிந்தையை ஆகின் நன்று, செய்தவம் செய்கை"

என்று கூறிய கூற்று, இலக்குவனின் கலங்கா உள்ளத்தை நமக்குக் காட்டும்.

உயிர் இழக்கும் நினைவும், உய்யச் செய்த அறிவுரையும்:-

கானக வாழ்வில், இருவரின் பயணமும் மேலும் தொடர்கிறது. கவந்தன் வாழும் கவந்த வனத்தை அடைகின்றனர். கவந்தனின் நீண்ட கரங்கள், இவர்கள் இருவரையும் சூழ்ந்து நெருங்கவும், அதனை அரக்கர் படைகளின் செயலாக மாறுபடக் கருதி, சீதையைக் கவர்ந்து சென்ற அரக்கரின் வாழ் விடத்தையே தாம் அடைந்து விட்டதாக நினைத்து, தமது

துன்பம் விரைவில் நீங்கும் என்று மகிழ்கிறான். அது இராமனின் எதிர்பார்ப்பே யொழிய உண்மையன்று, அது அரக்கர் படைகளின் செயலன்று என்பதைக் காரணத்துடன் எடுத்துக் காட்டுகிறான் இலக்குவன். இதுவும் அவனது தெளிந்த அறிவை எடுத்துக்காட்டும் சான்றாகும்.

கவந்தனின் பெரியவாயைக் கண்டு, இராமனின் உள்ளத்திலும் உறுதி குலைந்து, தான் இவ்வாயில் புகுந்து மாள்வதே, தற்போதுள்ள சூழ்நிலையில் பழிதுடைக்கும் செயலாகும் என்றும், ஆகவே இலக்குவனாவது பிழைத்து ஊர் செல்க! என்று கூறிய போது அதனைப் பலவாறு மறுத்துக் கூறும் இலக்குவன், வீரத்தின் விளைநிலமாம் இராமனுக்கும் வீறு அளிக்கும் ஊக்கத்தைத் தருவானாய்,

"பிணிக்கும் கையும் பெய்பிலவாயும் பிழையாமல் துணிக்கும் வண்ணம் காணுதி, துன்பம் துற"

என்று, கவந்தனின் கையையும் வாயையும் தம் வாளால் அழிக்கும் செயலை நினைவூட்டி, துன்பத்தை நீக்கிக் கொள்ளுமாறு கூறிய உறுதிச் சொற்கள், இராமனுக்கு மட்டுமன்று; இராமகாதையைக் காலமெல்லாம் சுவைக்கும் நமக்கும், நம் உளத்தே நிலைத்து நின்று நினைக்கும் தோறும் இன்பம் தருவனவாம்.

இராமனின் அகத் துன்பம் நீக்கும் ஆறுதல் உரை:-

"நாரணன் விளையாட்டு" என்று கம்பர் குறிப்பிடும், இராமகாதைத் திரு விளையாடலில், சீதையின் பிரிவும், சடாயு இறப்பும் ஆகிய விதி விளைத்த செயல்களுக்கு எல்லாம், மதியழிந்து வருந்திய இராமனையும், அதனைத் தனது தகுதியால் நீக்கிய இலக்குவன் திறனையும் கண்டோம். ஆனால், கிட்கிந்தா காண்டப் பகுதியில் நாம் காண்பது இராமனின் அகத் துன்பம் சீதையைப் பிரிந்த சூழலில், இயற்கை படுத்தும் பாட்டிற்கு ஆற்றாமல் தவிக்கும் மானிட இராமனை நம்க்குக் காட்டுகின்றார் கவிஞர்.

முதற்கண், பம்பைப் பொய்கைக்காட்சி, துயரச் சுமையால் உறங்கிக்கிடந்த இராமனின் உள் உணர்வுகளைத் தூண்டி, சீதையின் பிரிவுத் துன்பத்தை மிகுதிப் படுத்தவே, அக் காட்சியின் தாக்குதலுக்கு ஆற்றாது, தான் நாளும் செய்யும் மாலை வழிபாட்டையும் மறந்து நிற்கிறான் இராமன். இந்நிலை

யிலும், இலக்குவன், இராமனுக்கு அதனை அறிவுறுத்து வானாய்,

> "பொழுது கழிந்ததால்,
> ஈண்டு இரும்புனல் தோய்ந்து, உன் இசைஎன
> நீண்டவன் கழல் தாழ்!நெடியோய்!"

என்று கூறுவதாய் அமைந்த பகுதி, இலக்குவனின் கடமை உணர்வை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது எனலாம். இனிக் காலத்தின் தாக்குதலுக்கு ஆற்றாமல், கார் காலத்தினாலும், அதனை அடுத்த கூதிர் காலத்தினாலும் புலம்பலுற்ற இராமனைத் தன் இடித்துக் கூறும் திறனால், தன் நிலைக்குக் கொணர்கிறான் இலக்குவன். எவை கலங்கினும், இராமன் நிலை கலங்குதல் ஏலாது என்பதைக் காரணத்துடன் எடுத்துக் காட்டி, பகை அழிக்காது, வேதனையில் வீழ்ந்து கிடத்தல் வீரத்தின் பாற்பட்டதன்று என்றும், அது பேதைமையின் விளைவே என்றும் அறுதியிட்டு உரைப்பானாய், "வேதனைக்கு இடமாதல், வீரத்தையன்று, பேதைமையாம் அரோ" என்று அறிவுறுத்தும் பகுதி மிக இனியது. செய்ய வேண்டிய செயல்களை முறைப்படி செய்து முடித்துவிட்டால், வெற்றி உறுதி என்பது இலக்குவன் காட்டிய வழி. அவ்வாறு இல்லை யெனில், நாம் உற்றவர்க்கு அழிவும், மற்றவர்க்கு ஆக்கமும் செய்தவர் ஆவோம் என்பானாய், "அந்தணர்க்கு ஆகும் நாம், அரக்கர்க்கு ஆகுமோ?" என்கிறான்.

பணிபுரியும் நாளில் இலக்குவன் தனி நிலை:-

ஆரணியத்தும், கிட்கிந்தையிலும், இராமனின் உளங்கவர் தொண்டனாக இலக்குவன் பணிபுரிந்த பாங்கைக் கண்ட நாம், தன் வாழ் நாள் முழுவதும் அவன் ஒர் உண்மை அடிய வனாக விளங்கிய வகையை அறிதல், இன்றியமையாத ஒன்று. இலக்குவனைப் பெற்றெடுக்கும் பேறுபெற்ற சுமித்திரை, கானகம் செல்வதற்கு விடைபெறும் பொருட்டுத் தன் முன்னால் நின்ற இலக்குவனுக்கு அறிவுரை கூறத்தொடங்கிய நிலை, இப் பாத்திரத்திற்கு மேலும் ஒளியூட்டுகிறது.

"இராமனுக்குப் பின்னால், தம்பி என்ற உறவு முறையைப் பாராட்டிக் கொண்டு செல்லாதே. ஒரு அடியவனைப் போன்று, அவன் ஏவிய கட்டளையின் வண்ணம் பணி செய்" என்பாளாய்,

''மகனே! இவன் பின் செல்;தம்பி என்னும்படி அன்று, அடியாரின் ஏவல் செய்தி'' [கம்ப–அயோ–நகர் நீங்கு–பா.148] என்று கூறுவதாக அமைத்தார் கவிச்சக்கரவர்த்தி. இப்பாடற் பகுதியில், ''அடியாரின் ஏவல் செய்தி'' என்ற தாயின் கட்டளை, நம் சிந்தனையைத் தூண்டுகிறது. அதனாற்றான் பின்னால், அனுமனிடம் தன்னை இன்னான் என அறிமுகம் செய்து கொள்ளும்போது,

''இந்நெடுஞ்சிலை வலானுக்கு ஏவல் செய் அடியன் யானே'' என்று கூறுவதும் இங்கே நினைவு கொள்ளத்தக்கது.

ஆண்டவனுக்குப் பணி புரியும் காலத்தில், ஓர் அடியவன் வேறு நினைவுகளுக்கு உட்படுதல் கூடாது என்று சுமித்திரை மறைமுகமாகக் கூறுகிறாள் போலும். அத்தகைய நிலையில், பெரிதும் துன்பம் தரும் காமத்தையும், உடல் தளர்ச்சியால் உண்டாகும் உறக்கத்தையும் வென்ற பெரு வீரனாக இலக்குவன் இராமகாதையில் விளங்குகின்றான்.

''மோகம் இலானாய்த் துயில் துறந்தவன்''என்றும்,
''மனையும் வாழ்வும் உறக்கமும் மாற்றினான்'' என்றும்

''துஞ்சல் இல் நயனத்து ஐயன்'' என்றும், இந்நிலையைக் கவிஞர் அழகுற விளக்கியுள்ளார். சுவர்க்கம் முதலான மேல் உலகங்களில் வாழ்பவராலும் விட முடியாத உறக்கத்தை அடியோடு நீக்கிய ஆற்றலைப் போற்றுவாராய்,

''துறக்கம் எய்தியவரும் துறவாத உறக்கம் என்பதை ஓட முனிந்தவன்'' [துறக்கம் = மேல் உலகம்] என்றார்.

''துயில் எனும் அணங்கு வந்து தோன்றலும், அவளை நாமே
எயிலுடை அயோத்தி மூதூர் எய்தும் நாள் எய்துக''

என்று கூறியதாகவும் நயமாக உரைப்பர். தலைவனாகிய இராமனைச் சீதையின் பிரிவுத் துன்பத்தால் கலங்கச் செய்த காம உணர்வு, அடியவனாகிய இலக்குவனை, அவன் தனது ஊர்மிளையைப் பிரிந்த நிலையிலும் நெருங்கவே இயல வில்லை என்ற அற்புதக் கருத்தை, கவிமாமன்னர் ஓர் இன்றி யமையாத இடத்தில் விளக்குகிறார்.

வாலியை வீழ்த்திய இராமன், மழைக்காலம் கழிந்த பின்பு, குரங்கின வேந்தன் சுக்ரீவனின் உதவியைப் பெறக் காத்திருக்கிறான். அக்கார்காலத்தின் இயற்கைவிளைவால்,

பிரிவுத்துன்பம் மிகப்பெற்று, இயற்கைப் பொருள்களுடன் உரையாடித் தன் மனத்துயரைக் குறைக்கமுயல்கிறான். அந்த வகையில் தன்னை வருத்தும் காம வேளாகிய மன்மதனுடன் உரையாடுவது போன்ற நிலையில், ஒரு பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில்,

''மன்மதனே! கல்விச் செல்வத்தால் தெளிவு பெற்ற இலக்குவன், உன்னைக்காண்பானாயின், அவன் சீற்றத்தை யாரால் தடுக்க இயலும்? ஆகவே மலர் அம்புகளால் என்னைத் துன்பப்படுத்தாது விட்டு விலகிச்செல்''என்று கூறுவானாய்,

''எண்ணுறு கல்வி உள்ளத்து இளையவன், இன்னே உன்னைக் கண்ணுறு மாயின், பின்னை யார் அவன் சீற்றம் காப்பார்''? [கம்ப–கிட்கிந்த–கார்கால–பா.62].

என்கிறான் இராமன். இப்பாடற்பகுதி, காமத்தையும் வென்ற பெருவீரனாக இலக்குவனை நமக்குக் காட்டும் ஒப்பற்ற இடமாகும். இவ்வாறு எவ்வகைக் குற்றமும் தன்னைச் சாராத நிலையில், அடியவர் முடிமணியாய், அதே நேரத்தில் கோதறு தம்பியாய், குணத்து இன்துணைத்தம்பியாய், மறுவில் கோமகனாக இவன் விளங்கிய வகையைக் காவியத்தில் ஆங்காங்கே காணலாம்.

அன்னையின் ஆணையை ஏற்ற, நன்னெறிமைந்தன்:-

கானகத்திற்குப் புறப்படும் நேரத்தில், அன்னை சுமித்திரை இலக்குவனை நோக்கி, பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்பு, நலமாக இராமன், அயோத்திற்குத் திரும்பும் நிலை ஏற்படடால், அவனுடன் நீ வரலாம், ஆனால், தீவினையின் காரணமாக இராமனுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டால், அவன் இந்நகர்க்கு வர இயலாத சூழ்நிலை உண்டானால் , அவன் முடிவதற்கு முன்னால், நீ முடிந்திருக்க வேண்டும் ''என்பாளாய்

''மன்னும் நகர்க்கே அவன் வந்திடின் வா, இன்றேல்
முன்னம் முடி''

என்ற ஆணையை இலக்குவன் என்றும் மறந்ததே இல்லை எனலாம். கவந்தனின் பெருவாயில் சிக்குண்டு, தான் மாண்டு போவதாகவும் இலக்குவன் உய்ந்து ஊர்திரும்புமாறும் கூறிய பொழுதும், இலக்குவன் தன் தாயின் ஆணையை எடுத்துக் காட்டுவனாய்,

"பொன்றா முன்னம் பொன்றுதி என்றாள், உரை பொய்யா
நின்றால் அன்றோ நிற்பது வாய்மை நிலை அம்மா"

என்று கூறி, அன்னையின் ஆணையின் வண்ணம் நடந்தால் தான், வாய்மையைக் காப்பவனாக ஆக முடியும் என்று கூறிய உரையும் இங்கே கருதத்தக்கது. பின்பு, இந்திரசித்தனுக்கும் இலக்குவனுக்கும் இடையே நிகழ்ந்த போரில், இந்திரசித்தன் விடுத்த பிரமாத்திரத்தால் தாக்குண்டு, போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் இலக்குவனைப் புட்பக விமானத்தில் இருந்து கண்டு வருந்திய சீதை,

"மேதா! இளையோய்! விதியார் விளைவால்,
போதா நெறி எம்மொடு போதுறு நாள்,
மூதானாவன் முன்னம் முடிந்திடு எனும்
மாதா உரையின் வழி நின்றனையோ"

என்று புலம்பிய கூற்றும் இங்கே நினைவு கொள்ளத்தக்கது.

தந்தையை நினைவூட்டும் தனிப்பெரும் பணியாளன்:-

இலக்குவன், இராமனுக்குச் செய்யும் பணிவிடைகளில், தன் தந்தை தயரதனின் அன்புள்ளத்தினை இராமன் காண்ப தாக ஆதி கவி வான்மீகி கூறும் கருத்து இங்கே நினைவு கொள்ளத்தக்கது. ஆதிகவியின் இக்கூற்றுக்கு விளக்கம் அளித்த உரைமாமன்னர், ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை அவர்கள்,

"அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த தயரதன், நெடுங்காலம், பிள்ளைப் பேறு அற்றவனாய் இருந்து, பின்பு மக்கட் செல்வம் பெற்றவன் என்றும், அதனால் அச் செல்வத்தின் அருமையை உணர்ந்து,

"இராமன் என்ன நினைத்து இருக்கின்றானோ?' 'என்று அவனது விருப்பத்தை அறிந்தும், "இராமனுக்கு, எதனால் என்ன குறை உண்டாகிறதோ!" என்று அதற்கேற்ற சூழ்நிலை களை ஆராய்ந்து பார்த்தும், இராமனுக்கான வசதிகளைச் செய்வான் என்றும், அதனை அருகில் இருந்து அறிந்திருந்த காரணத்தால், தந்தையின் அவ்வழி முறைகளையே பின்பற்றி, இலக்குவனும் பணிபுரிந்தான் என்று விளக்குவர். இலக்கு வனைத் தயரதனோடு ஒப்பிட்டுக்கூறும் கருத்து, கம்பருக்கும் உடன்பாடான ஒன்றே. ஓர் இன்றியமையாத இடத்தில், கம்பர் இதனை எடுத்து விளக்குகிறார். இராவணனுடன் இலக்குவன் நிகழ்த்திய போரில், உடன் இருந்த வீடணனை நோக்கி,

இராவணன் வேற்படையைச் செலுத்த, அதனை வீடணன் மேற் செல்ல விடாது, தன் மார்பில் ஏற்றுக் களத்தில் வீழ்ந்தான் இலக்குவன். பின் அனுமன், மருத்து மலை கொணரவே விழித்து எழுந்தான், இந்நிகழ்ச்சியை நண்பர்களால் அறிந்த இராமன், உயிர்த்து எழுந்த இலக்குவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்க, இலக்குவன் இராமன் பால் வந்து பணிந்தான். இவ்விடத்தைக் கூறப்புகுந்த கவிமாமன்னர்,

"துயர் தமக்கு உதவி, மீளாத்துறக்கம் பெற்று உயர்ந்த தொல்லைத் தயரதற் கண்டால் ஒத்த தம்முனைத் தொழுது சார்ந்தான்"

[யுத்த–வேல்ஏற்ற–பா.46] என்று கூறியுள்ள கருத்து இங்கே சிந்திக்கத்தக்கது.

இதனைத் தயரதன் வாயிலாகவே கூறிப்போற்றுவார் கம்பர். காவியத்தின் இறுதிப்பகுதியில், வானுலகில் இருந்து மண்ணுலகிற்கு இறங்கி வந்த தயரதன் இலக்குவனைத் தழுவிப் போற்றும் பொழுது,

"என் நெஞ்சின் இறந்த புண்ணும் நீக்கினை; நும் ஐயனைத் தொடர்ந்து உடன் போந்தாய்"

[கம்ப–யுத்த– மீட்சி–பா.126] [இறந்த–மிகுந்துள்ள, புண்–துன்பம், நும்ஐயன்– உன் அண்ணனாகிய இராமன்] என்று கூறிய கருத்தும், மேற் கண்ட கருத்தை வலியுறுத்துவதேயாகும். அதே நிகழ்ச்சியில், தயரதன் இலக்குவனைத் தழுவிக்கொள்கிறான், அவன் இலக்குவனைத் தழுவிக்கொண்ட நிலை, தன்னைத் தானே தழுவிக் கொண்டாற் போன்று இருந்தது என்பாராய்,

"பின்னைச் செம்மல், அவ்விளவலை உள் அன்பு பிணிப்ப, தன்னைத்தானே எனத்தழுவினன் கண்கள் நீர் ததும்ப"

[கம்ப–யுத்த–மீட்சி–பா.125] என்கிறார், இவ்விடத்தில், இராமனுக்கு ஆவன செய்யும் தன்மையில், தயரதனின் மறு வடிவமே இலக்குவன் என்ற கருத்தையும் பெற வைக்கிறார்.

பரதனுடன் தொடர்பு படுத்தும் பாங்கு:-

மேற்கண்டவாறு, தயரதனுக்கு ஒப்பாகக்கூறியது மட்டுமன்றி, "தேயத்தின் தலைவன் மைந்தன்" [தேயம் = தேசம்] என்று தயரதன் புதல்வனாகவும் இவனைக் குறிப்பிட்டுப் பாராட்ட விரும்பியது அக்கவியுள்ளம். இவற்றிற்

கெல்லாம் மேலாக, காவியத்தின் பல இடங்களிலும், இராமன் மேல், தான் கொண்ட பற்றின் காரணமாக, இலக்குவனால் கடிந்து கூறப் பெற்ற பரதனுடன், இலக்குவனையும் இணைத்துப் போற்றிய கவிஞரின் திறம், நினைந்து நினைந்து மகிழ்தற்குரியது. இராமனின் பாதம் சூடிய பரதனின் தம்பியாய் இருப்பதே, இலக்குவன் பெற்ற சிறப்பு என்பாராய்,

''இராமன் பாதம் சூடிய தோன்றல் தம்பி'' என்கிறார். இலக்குவனை 'இராமனின் தம்பி' என்று மட்டும் கூறாது, ''பரதன் முன்னோன் தன் பெருந்தம்பி''என்று கூறிய பாங்கும், இருவரையும் இணைத்துக் காணவிரும்பும் கவிஞனின் பேராவலை வெளிப்படுத்தும். இதைப்போன்ற நிலை, மற்றொரு நிகழ்ச்சியிலும் கூறப்படுகிறது. இந்திரசித்தனுடன் போரிடச் சென்ற இலக்குவனைக் குறித்து, அவனது பிரிவினால் கலங்கி நின்ற இராமன், அறத்தின் துணையால் இலக்குவன் அமரில் வெல்வான் என்ற உறுதியுடன், அவனது வருகையை எதிர் நோக்கி இருந்தான். இந்நிலையை விளக்கும் கம்பர்,

''இராமனின் வருகையை எதிர்நோக்கி, உயிரோடு விரதம் பூண்டு, அந்தியும் பகலும் நீர் வற்றாத கண்களை உடையவனாய், அயோத்தியில் வாழும் பரதனைப்போன்று, இராமனும் இலக்குவன் வருகையை எதிர் நோக்கினான்'' என்பாராய்,

'விரதம் பூண்டு,. உயிரினோடு தன்னுடை மீட்சி நோக்கும்
பரதன் போன்று இருந்தான், தம்பி வருகின்ற
பரிசுபார்த்து''

[யுத்த-இந்திரசித்து வதை-பா.64] என்று கூறிய கருத்தும், மேற்கண்ட கருத்தை வலியுறுத்தும்.

அன்பை எதிரொலிக்கும் அண்ணல்:-

இராமன் பிரிவைக்குறித்த இலக்குவனின் மனநிலையும், அதற்குக் காரணமாக, அவன் இராமன் பால் கொண்ட அளப்பிலா அன்புணர்வும், அதே வகையில் இராமனிடம் எதி ரொலிப்பதை, இராமகாதை மிகச்சிறப்பாக விளக்குகிறது. மற்ற எந்தப் பாத்திரங்களுக்கும் இந்த அளவுக்குக் கிட்டாத பெருஞ் சிறப்பு இது. இராம காதையின் பல இடங்களிலும், இலக்குவன் பால், இராமன் கொண்ட அளப்பரிய பேரன்பிற்கான சான்றுகளை நாம் காணலாம்.

கானகத்தில் பிராட்டியைப் பிரிந்த நிலையில், தம்பி யையே பற்றுக் கோடாகக் கொண்டு, இராமன் வாழ்ந்து வருங்கால், அண்ணன் பருகத் தண்ணீர் கொணரச் செல் கிறான் இலக்குவன். சென்ற இடத்தில் அயோமுகியால் பற்றப் படுகிறான். இராமன்பால் வருவதற்குக் காலதாமதம் ஆகிய போது, இதனை அறியாத இராமன், இலக்குவனுக்கு ஏதோ தீங்கு நிகழ்ந்து விட்டதாகக் கருதி, பாசவுணர்வினால் துடித்துப் பேசும் பேச்சில், இலக்குவன்பால், அவன் கொண்ட அன்பின் ஆழத்தைக் காண்கிறோம்.

அவன் முன்னவனாய்ப் பிறக்க!

"இலக்குவனே! என்தனி ஆருயிராய் உள்ளவனே! நீயுமா என்னைப் பிரிந்து மறைந்தாய்? உன்னைப் பிரியாத உயிர்ப்பின் காரணமாக அன்றோ, என் தந்தையையும், தாயரையும் சீதையையும் பிரிந்தும், நான் உயிருடன் வாழ் கிறேன்" என்கிறான். இவ்விடத்தில் அனைவரின் பிரிவையும் தாங்கும் ஆற்றலை, இலக்குவனின் கூட்டுறவே இராமனுக்கு அளித்துள்ளது என்பதை அறிகிறோம். இக்கருத்தினை,

"தள்ளா வினையேன், தனி ஆருயிராய்
உள்ளாய், ஒரு நீயும் ஒளித்தனையோ!" என்றும்,

என்னைத்தரும் எந்தையை, என்னையரைப்
பொன்னைப் பொருகின்ற பொலங்குழையாள்
தன்னைப் பிரிவேன் உளன் ஆவதுதான்,
உன்னைப் பிரியாத உயிர்ப்பு அலவோ?" என்றும்
[கம்ப-ஆரணிய-அயோமுகி-பா.70]

[என்னையர் = என் அன்னையர்; பொலங்குழையாள் = சீதை, உயிர்ப்பு = வலிமை] அமைந்த பாக்களிலே காண்கிறோம்.

பிறப்பிலியாகிய இராமன், தனக்குப் பிறவி ஏற் பட்டால், அப்பிறவியில் தனக்கு நல்வினைப் பயன் இருக்கு மாயின், இலக்குவனே தனக்கு முன்னவனாய் (தமைய்னாய்) வந்து பிறக்கட்டும் என்ற, தன்பெரும் வேட்கையை வெளியிடு பவனாய்,

"அறப்பால் உளதேல், அவன் முன்னவனாய்ப்
பிறப்பான் உறின், வந்து பிறக்க எனா"
[ஆரணிய-அயோமுகி-பா.77

[அறப்பால் = அறப்பயனாகிய நல்வினை. முன்னவன் = தமையன்] என்று கூறும் இடத்தில், அவ்விலக்குவனின் தொடர்பு, அடுத்த பிறவியிலும் தொடரவேண்டும் என்றும், அப்பிறவியில் அவனுக்குத்தான் தம்பியாகப் பிறந்து, தொண்டு புரிய வேண்டும் என்றும், கொண்ட இராமனின் பேரவா வைக் காண்கிறோம். இத்தகைய இராமனின் அவாவே, அவன் கண்ணனாக அவதாரம் செய்தபோது, அவனுக்கு அண்ணனாகப் பலராமன் பிறந்ததால் நிறைவேறியது போலும்!

இவ்விடத்தில், இராமன், தன்னை யாவர் பிரியினும், எத்தகைய துன்பம் தனக்கு நேர்ந்தாலும், அவையனைத்தையும் நீக்கும் பெருவலிமை இலக்குவன் ஒருவனுக்கே இருப்பதால், அவனைத் தம்பியாகப் பெற்ற தனக்கு, என்றுமே துன்பமில்லை என்பானாய்,

"பிரிபவர் யாவரும் பிரிக; பேரிடர்
வருவன யாவையும் வருக; வார்கழல்
செருவலி வீர! நின் தீரும் அல்லது
பருவரல் என் வயின் பயிலற் பாலதோ"

[ஆரணிய-அயோமுகி-பா.89] [பருவரல் = துன்பம்; பயிலல் = தங்குதல்] என்று கூறிய கூற்று, இராமன் திறத்து, இலக்குவனின் இன்றியமையாமையை நமக்கு எடுத்துக்காட்டும்.

இராமனைப் புலம்பச்செய்த இலக்குவன் இயல்பு:-

இந்திரசித்தன் விடுத்த பிரமாத்திரத்தால், மூர்ச்சையுற்றுக் கிடக்கும் இலக்குவனை நோக்கி வருந்திக்கூறும் இராமன் உரையிலும், இத்தகைய அன்பு உள்ளத்தைக் காண்கிறோம்.

"தாயோ நீயே, தந்தையும் நீயே, தவம் நீயே
சேயோ நீயே, தம்பியும் நீயே, திரு நீயே!
[கம்ப–யுத்த–பிரமாத்திர–பா.207]

என்று தலைவனை நோக்கி அடியவன் கூறவேண்டியவற்றை எல்லாம், அடியவனை நோக்கி இராமன் அடுக்குகிறான். அவனது பிரிவினால், தான் உயிர் வாழ முடியாத நிலையைக் கூறுவானாய்,

"மாண்டாய் நீயோ, யான் ஒரு போதும் உயிர் வாழேன்"
[கம்ப–யுத்த–பிரமாத்திர–பா.212]

என்ற பாடலும் இங்குச் சிந்திக்கத்தக்கது. இத்தகைய இராமனின் நிலையை வான்மீகமும் மிகச்சிறந்த முறையில் விளக்குகிறது.

"இவ்வாறு இலக்குவனே வீழ்ந்துகிடப்பதைப் பார்க்கும் எனக்குச் சீதையால்தான் ஆவது என்ன? அல்லது என் உயிரினால்தான் எனக்கு என்ன பயன்?' என்று வெறுத்துக் கூறுகின்றானாம் வான்மீகி கண்ட இராமன். இதே கருத்தைக் கவிமாமன்னர் கம்பரும் எதிரொலிக்கிறார்.

"இளையவன் இறந்த பின் எவரும் என் எனக்கு?
அளவறு சீர்த்தி என்? அறம் என்? ஆண்மை என்?
கிளையுறு சுற்றம் என்? அரசு என்? கேண்மை என்?
விளைவுதான் என்? மறைவிதி என்? மெய்ம்மை என்?
["யுத்த–மருத்துமலை–பா.77]

[சீர்த்தி = புகழ்; கேண்மை = நட்பு] என்ற பாடலில், இராமனின் உள்ளத்துடிப்பை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர்.

இலக்குவனைப் பிரிந்து வாழ இயலாத ஏந்தல்:-

இவ்வாறு இலக்குவன்பால், இராமன் கொண்டிருந்த அன்பின் ஆழத்தை நன்கு உணர்ந்திருந்த காரணத்தால், குலசேகர ஆழ்வார், இராமன் தன்னடிச்சோதிக்கு (பரமபதம்) எழுந்தருளுவதற்குக் காரணமாக அமைந்த இலக்குவனின் பிரிவைக் குறிப்பாராய்,

"முனிவன் தூண்டத்
திறல்விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான் தன்னை"
[பெருமாள் திருமொழி–10–9]

என்கிறார். பரதனின் பிரிவையோ, சத்ருக்கனனின் பிரிவையோ, ஏன்? வேறு எவர் பிரிவையும் இவ்வாறு தனியாக எடுத்துக்கூறாமல், இலக்குவன் பிரிவை மட்டுமே எடுத்துக் கூறியதன் காரணம், இராமனும் இலக்குவனும் ஒருவரை ஒருவர் பிரிய இயலாப்பண்பு வாய்ந்தவர் என்று அறிவுறுத்துவதற்காகவே. உத்திரகாண்டப்பகுதியில், அவதாரத்தின் இறுதி நிலையில், இலக்குவன் பிரிந்து சென்ற பின்பு, இராமன் அடைந்த துயரம் உள்ளம் உருக்கும் ஒன்றாகும். அப்போது இராமன் அடைந்த நிலையை,

''கன்மத்தின் விளைவை எண்ணிக் கட்டுரை ஒன்றும் கூறான்,
உன் மத்தனாய் இருந்தான், உணர்வுடன் உயிர்ப்பும் இல்லான்''
என்றும்,
[உன்மத்தன் = பித்தன்]

ஊன் பிரிகின்ற காலத்து, உயிரினை ஒத்தான்'' (ஊன் = உடம்பு) என்றும்,

''எந்நாளும், தப்பாத தம்பிதனை நினைந்து, சாய்துயர்க்கு வைப்பாகி, உள்ளே மெலிந்தான் மற வேலான்'' [தப்பாத = தவறாத, சாய்துயர் = அழிவதற்குக் காரணமான துன்பம், வைப்பு = இருப்பிடம்] என்றும், இராமாயண உத்தர காண்டப்பகுதி விளக்கிச் செல்கிறது.

என்றும் பிரியா இருவர்:-

இலக்குவனுக்கும் இராமனுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி, வில்லிபுத்தூரரார், தமது பாரதப் பெருங்காவியத்தில், தரும் அரிய விளக்கமும் இங்கே சிந்திக்கத்தக்கது. நூற்றுவர் படைகளும், ஐவர் படைகளும் பாரதப் போர்க்களத்தில் அணி வகுத்து நின்று, போர் தொடங்க இருக்கும் போது உலக வாழ்வின் உண்மை உணராது, பாச உணர்வுகளுக்கு இடம் கொடுத்து, அர்ச்சுனன், போர் தொடங்கத் தயக்கம் காட்டுகிறான். இந்நிலையில், அவனுக்கு உண்மை உணர்த்தும் முறையில், அறிவுரை கூறத்தொடங்கிய கண்ணபிரான், தான் யார் என்பதையும் விளக்கிக்கூறித் தனக்கும் அர்ச்சுனனுக்கும் இடையே அமைந்த பல அவதாரத் தொடர்புகளையும் கூறுவானாய்,

''உன்னை நான் பிறிவது இல்லை, ஒரு முறை பிறிந்து மேனாள்
நன்னிலா எறிக்கும் பூணாய்! நரனும், நாரணனும் ஆனோம்''

[நன்னிலா எறிக்கும் = நன்கு ஒளிவீசும், பூண் = அணிகலன், நரன் = மனிதன்]

''பின் ஒரு பிறப்பில் யாமே, இராம லக்குவப் பேர் பெற்றோம்,
இந்நெடும் பிறப்பில், நீயும் யானுமாய் ஈண்டு நின்றோம்''
[வில்லி பாரதம்–வீட்டும–முதற்போர்ச்சருக்கம்–பாடல் 6, 7]

என்று அமைந்த பாடல், அவர்களின் பிரியா இயல்பை விளக்குகிறது.

மரபுக்குப் புகழ் சேர்த்த மாண்புடையோன்:-

இலக்குவனின் புகழ், எங்கும் பரவி, வானையும் அளாவிய ஒன்று. அப்புகழிற்குக் காரணம் பலவாக இருப்பினும் அவை அனைத்தையும் விஞ்சிய நிலையில், தம்மை அடைக் கலமாக அடைந்தோர்க்காகத் தம் உயிரையும் கொடுக்கும் உயர் பண்பினன் இவன் என்பாராய்,

"அடைந்தோர்க்காகி மன்னுயிர் கொடுக்கும்
வன்மை உடையவன்"

என்கிறார், இப்பண்பு, இவன் பிறந்த சூரிய குலத்திற்கே உரிய ஒன்று. அதிலும், இதனைச் சிறப்பாகப் பின்பற்றியவன், சிபி என்னும் இவன் குலத்து முன்னோன்.

"எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்"

என்று, இவனைச் சிலப்பதிகாரம் புகழ்ந்து கூறும். ஆனால் இலக்குவனை நோக்கும் போது, சிபியும், அவனுக்கு ஒப்பாக இயலாது என்பாராய்,

"புறவொன்றின் பொருட்டால், யாக்கை புண்ணுற அரிந்த புத்தேள்
அறிவனும் ஐய! நின்னை நிகர்க்கிலன்"

[யுத்த–வேல்ஏற்ற–பா.48]

[புறவு = புறா; யாக்கை = உடல், புண்ணுற = புண் ணாகுமாறு, புத்தேள் அறவன் = தெய்வத்தன்மை வாய்ந்த சிபி]

என்கிறார். புறாவின் வேண்டுகோளை ஏற்று, உதவி புரிந்த சிபியைவிட, தன்னைக்காக்க வேண்டும் என்று வேண்டாத நிலையிலும், தானே வலியச் சென்று, போர்க்களத்தில் வேல் ஏற்று, உயிர் கொடுத்துக் காத்த இலக்குவனின் செயல், சிறப் புடையது என்பது கருத்து. இந்த வகையில், கன்றின் துன்பத்தைத் தானாகக் கனிந்து இரங்கி நீக்கும் தாய்ப்பசுவிடம் காணும் பேரருளை, இலக்குவன் பால் காண்கிறார் க்விஞர். இவ்வாறு மரபின் மாண்பை உயர்த்திய பெருந்திறனை நினைந்தே, இவனை,

"பகலோன் குல மருமான்"
[மருமான் = வழித்தோன்றல்] என்றும்,
'மனு முதல் மரபினோன்" என்றும்,
"அலை ஆழி தொட்டோர் சேய்"

[ஆழி = கடல், தொட்டோர் = தோண்டிய சகரர், சேய் = வழித் தோன்றல்] என்றும் மரபோடு இணைத்துப் போற்றினார் மாகவிஞர்.

உற்றவர் போற்றும் உயர்வாளன்:-

இலக்குவன் பால், இராமன் கொண்டிருக்கும் ஆழ்ந்த அன்பைக் காட்டும், இராமனின் உரையைப் பல நிலைகளில், நிகழ்ச்சிகளில் நாம் கண்டிருக்கிறோம். இதனைப் போன்ற ஒன்றுதான், சீதை இலக்குவனிடம் கொண்டிருந்த அன்பும்.

மாயமானின் பின் சென்ற கணவனுக்குத் தீங்கு ஏற்பட்டுள்ள தாகக் கருதிய குழப்பமான மனநிலையில், இலக்குவனைச் சீதை கடிந்து உரைத்த ஒன்றைத் தவிர, இலக்குவன் மீது சீதை கொண்டிருக்கும் ஆழ்ந்த அன்பினைக் காட்டும் சான்றுகளே மிகுதி. இராவணனின் வஞ்சகத்தை உணர்ந்த அடுத்த கணத்தில்,

"இறைவா! இளையோய்! என ஏங்கினள்" என்கிறார் கவிஞர். "வரதா! இளையோய்!" என்று வாய் விட்டுப் புலம்பிய நிலையிலும், இலக்குவனைச் சீதை மறக்கவில்லை. தான் இலக்குவன் திறத்துச் செய்த பிழையை எண்ணி வருந்துபவனாய்

"என்னை நாயகன் இளவலை எண்ணலா வினையேன்"
சொன்ன வார்த்தை கேட்டு அறிவிலள் எனத்துறந்தானோ"
என்றும்.

"என் மஞ்சனை வைது பின் வழிக்கொள்வாய் எனா
நஞ்சு அனையான் அகம் புகுந்த நங்கையான்
உய்ஞ்சனன் இருத்தலும் உலகம் கொள்ளுமோ"

என்றும், கூறிய உரைகள் இங்கே சிந்திக்கத்தக்கவை. அனுமன் வாயிலாகச் செய்தி கூறி அனுப்பிய போதும், தன்னைச் சிறை யிலிருந்து விடுவிப்பதும் இலக்குவனுக்கே உரிய கடமையாகும் என்று இலக்குவனுக்கு நினைவூட்டிய கருத்தும், இங்கே கருதற் பாலது. இவ்வாறே தன் தூய்மையை, தீயில் வீழ்ந்து வெளிப் படுத்த எண்ணிய காலத்தும், அத்தீயை அமைக்கும் பொறுப்பை,

"இளையவன் தனை அழைத்து, இடுதி தீ என
வளை ஒலி முன்கையாள் வாயின் கூறினாள்"

[மீட்சிப்படலம்–பா.78] என்றபடி, சீதை இலக்குவனுக்கே அளித்த சிறப்பைக்காண்கிறோம்.

காவியத்தில், இராமனுக்கு ஒப்பாகச் சில இடங்களிலும், இராமனை விட விஞ்சிய நிலையிலும், கவிஞரால் சிறப்பிக்கப் பெற்ற பரதன், இலக்குவனைப் போற்றிக் கூறு மிடத்து,

"இராமனுக்கு இளையார் என்று,

முன்பு ஒத்த தோற்றத் தேமில், யான் என்றும் முடிவு இலாத துன்பத்துக்கு ஏது வானேன், அவன் அது துடைக்க நின்றான், அன்பத்துக்கு எல்லையுண்டோ, அழகிது என் அடிமை" என்றும்,

"இராமன் பின் பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான்"

என்றும் கூறிய பகுதிகள் இங்கே சிந்திக்கத் தக்கவை.

இராமகாதையிலேயே, பேசாத தம்பி என்று பெயர் பெற்ற சத்ருக்கனனும்,

"கானாள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக் காத்துப்
பின்பு போனானும் ஒரு தம்பி" என்று கூறி, இலக்குவனைப்

போற்றுகிறான். இங்கு 'ஒரு' என்ற சொல், 'ஒப்பற்ற' என்ற பொருளில் வந்தமை கருதத்தக்கது. கங்கைக்கரையில், இராமனால் 'யாதினும் இனிய நண்பனாகக் கருதப்பெற்ற குகன், தான் இலக்குவனோடு பழகிய பொழுது குறைவாய் இருப்பினும், அவனது தொண்டின் மேன்மையை உணர்ந்த வனாய், அடுத்து வந்த பரதனிடம்,

"அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச,
வில்லை ஊன்றிய கையோடும் வெய்துயிர்ப்போடும், வீரன்.
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்!கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான், இமைப்பில நயனம் என்றான்".

என்று, இரவு நேரத்தில் பணி புரியும் இலக்குவன் பாங்கினைக் கூறியதும் குறிப்பிடத்தக்கது. உலகின் ஐம்பெரும் கற்புடைச் செல்வியரில் ஒருத்தியான தாரையும், இலக்குவனை,

"ஆழிவேந்தன் அடியிணை பிரிகலாதாய்"

[ஆழிவேந்தன் = இராமன்] என்று அழைத்து, இராமனை விட்டுப்பிரியாது பணி புரியும் இலக்குவன் சிறப்பினையே குறித்தாள்.

இராமகாதையில் இலக்குவன் படைத்த வீர வரலாறு:-

இராமன் பாற் கொள்ளும் தூய அன்பிலும், புரியும் தொண்டிலும், இலக்குவன் ஒப்பற்று விளங்கினாற் போன்றே, வீரத்திலும், அவன் பெற்றிருக்கும் உயர் நிலை வியக்கத்தக்கது. வீரத்தின் விளைநிலமாய் விளங்கும் இராமனே, இலக்குவனை வெல்வதற்கு மூன்று உலகங்களிலும் அவ்விலக்குவனைத் தவிர வேறு ஒருவரும் இல்லை என்று கூறுவானாய்,

"உன்னை வெல்ல உலகு ஒரு மூன்றினும்
நின் அலால் பிறர் இன்மை நிகழ்த்துவாய்"

என்று கூறிய கூற்று, இங்கே கருதத்தக்கது. நிலவுலகையே தன் கொம்பினால் பெயர்த்து எடுத்த மா வராகத்தின் பெருவலிமை, இவனது தனியுடைமை என்கிறார். பகைவரைக்கண்டு இவன், சீறிச் சினந்து எழும் வகையில், சிங்கத்தை ஒப்பவன் என்பாராய்,

"கடுந்திறல் மடங்கல் அன்னான்"

என்கிறார். [மடங்கல் = சிங்கம்] அதுவும் மலைக்குகைகளில் வாழும் சிங்கம்போன்றவன் என்ற பொருளில்,

"முழை வாள் அரி அனையான்"

[முழை = மலைக்குகை, அரி = சிங்கம்] என்று கூறும் தொடரில்,

"மாரி மழை முழைஞ்சில் மன்னிக்கிடந்து உறங்கும்
சீறிய சிங்கம்"

என்று ஆண்டாள் கூறும் பெருமித நிலையைக் காண்கிறோம். சீறி எழுவதில் சிங்கமாகிய இவன், பாய்ந்து தாக்குவதில் புலி போன்றும், பொங்கிச் சீறுவதில் பாம்பாகவும், பீடு நடை போடுவதில் காளையாகவும் அமைந்து இவ்வாறு வலிமைக்கு உறைவிடமாகிய பலவேறு உயிரினங்களின் வண்ணம்

அனைத்தையும் காட்டும் திண்மை பெற்றவனாய் உள்ளான் என்கிறார் கவிஞர்.

குஞ்சரம் அனைய கோமகன்:-

சில வேளைகளில் மதயானையின் மாண்பையும் இவனிடத்துக் காண்கிறார் கவிஞர். அதிலும் ஏழு முழ உயரம் அமைந்த அரச யானை போன்றவனாம் இவன். கவசம் இட்டுக்களம் நோக்கி இவன் செல்வதை, முகபடாம் அணிந்த யானை செல்வதாக அழகு படக்கூறியுள்ளார். இவை அனைத் துக்கும் மேலாக, கழுத்தில் இடம் பெறும் கயிற்றுடன் கூடிய களிறாக இலக்குவனைப் போற்றுவாராய்,

"புரசை யானை அன்னான்"

[புரசை = கழுத்தில் அணியப் பெறும் கயிறு] என்கிறார். இத்தொடர், பொருள் நோக்கில் மிக நயமானது. யானையைப் பாகர், கழுத்தில் கயிறு இட்டுப் பிணிப்பர். இவ்விலக்குவனோ, அறம் என்னும் கயிற்றால் கட்டப்பெற்ற ஆண்டகைக்களிறு. பாகனின் ஆணைக்குப் பழகிய யானை அடங்குவது போன்று, அண்ணல் இராமனின் அருள் ஆணைக்கு அடங்கிய பெருங்களிறாய்ப் பொலிகின்றான் என்ற குறிப்பையும் இத் தொடர்மூலம் பெறவைக்கிறார். இராமன் அருளிய ஆணை வழி நிற்கும் இலக்குவனை,

"அருள் நின்ற அண்ணல்"

என்று குறிக்கும் தொடரிலும், மேற்கூறிய கருத்து வலியுறுத்தப் படுகின்றது.

யார்க்கும் எக்காலத்தும் அழியாத எல்லாப் பொருள் களையும், தனது ஆற்றலால் இவன் அளிக்கக்கூடியவன் என்பாராய்,

"முடிவு இல தெறுதொழில் மறவன்"

[முடிவு இல = அழியாத பொருள்கள், தெறுதொழில் = அழிக்கும் தொழிலில் வல்ல] என்கிறார். அளவு கடந்த சுமை எல்லாவற்றையும் தாங்கி நிற்கக்கூடிய நிலமகளும், இலக்குவன் போர்க்களம் புகுந்து கொலைத்தொழில் செய்யத்தொடங்கி விட்டால், அவனால் கொல்லப்படும் பகைவர்களின் உடல்

சுமையைத் தாங்க முடியாமல், உடல் தளர்ந்து, தவித்து விம்முவான் என்கிறார்.

பொன் வாணிகர் தம்மிடம் வரும் பொன்னின் மாற்றினை உரைத்து ஒப்பிட்டு அறிவதற்காக மாற்றுயர்ந்த பொன்னாகிய உரையாணியை வைத்து இருப்பது போன்று, உலகில் உள்ள பெருவீரர்களின் தரத்தையெல்லாம் ஒப்பிட்டு அறிதற்கான ஆணிப்பொன்னாக உள்ளவனே இலக்குவன் என்பாராய், ''பரு வலி படைத்தோர்க்கெல்லாம் ஆணிப்பொன் ஆனவன்'' என்றார் கவி மாமன்னர்.

முதல் நாள் போரில் இராவணன் போற்றிய முதன்மை:-

கானக வாழ்க்கையின் போது முறைதவறி நடந்தவள் இலங்கையர்க்கோனின் தங்கையாய் இருப்பினும், அவள் பொருட்டுச் சிறிதும் தயங்காமல் அவள் உறுப்புகளைச் சிதைத்து, கொடுமையின் வீழ்ச்சிக்கு அடித்தளம் இட்டவன் இவனே. தன் தங்கைக்கு இடர் இழைத்துத் தன் புகழுக்கு மாசு விளைத்தவன் இலக்குவனே என்பதை இராவணன் நன்கு அறிந்திருந்தும், முதல் நாள் போரில் இலக்குவனைப் போற்றாமல் அவனால் இருக்க இயலவில்லை.

''உன் போர் வலிமையும், போர் ஆள் வலிமையும், வீரமும், உன் போர் நோக்கமும், உன் கையின் விரைவும், அதற்கான போர்க்கல்வியும், அதற்கேற்ற உடல் வலிமையும், அதற்குத் துணை சேர்க்கும் மன நலனும் மிக நன்று என்று போற்றி, அமர்க்களத்தில் ''ஒருவன் நீ'' என்று வாயாரப் போற்றியது இங்கே கருதத்தக்கது. மேலும் போற்றுவானாய்,

''கானில் கரனை வீழ்த்திய இராமனும், வானில் இந்திரனை வீழ்த்திய தன் மகன் மேகநாதனும், வில்லாற்றல் சான்ற தானும் அல்லால், இலக்குவனுக்கு எதிராக நிற்கத் தக்கவர் யாரும் இல்லை ஏன்று கூறிய உரை, இங்கே கருதத் தக்கது. அத்தகைய இலக்குவனின் பேராற்றலை மாலிய வானிடம் வியந்து கூறுவானாய்,

''சிவபிரான் முதலாக மூன்று உலகங்களும் தனக்குத் துணையாகப் போரிட வந்தாலும், இலக்குவன் தன் வில்லாற்றல் முழுமையும் காட்டிப் போரிடத் தொடங்கினால், தன் பெருஞ்சேனையாலும் இலக்குவனின் தாக்குதலைத் தாங்க இயலாது'' என்று கூறுவானாய்''

வளை அமை வரிவில் வாளி மெய்யுற வழங்கும் ஆயின்
இளையவன் தனக்கும் ஆற்றாது என் பெருஞ்சேனை நம்ப!
[யுத்த--கும்பகருணன் வதை–பா.16]

என்று உளமாரப் போற்றினான். அத்துடன் நில்லாமல்,

"தன் வாழ்வில் குறுக்கிட்ட கார்த்தவீரியனைத் திருமாலுக்கும் மேலான வீரமுடையோனாய்க் கருதி இருந்ததாகவும், ஆனால் தற்போது இலக்குவனின் மாவீரத்தை கண்ட பின்பு, இலக்குவனின் திருவடித்துகளுக்கும் அக்கார்த்தவீரியன் ஒப்பாக மாட்டான் என்று கருதுவதாகவும் கூறிப் போற்றுவானாய்,

"சீர்த்த வீரியராய் உள்ளார் செங் கண் மால் எனினும் யான் அக்
கார்த்த வீரியனை நேர்வார் உளர் எனக் கருதலாற்றேன்,
பார்த்தபோது அவனும்மற்று அத்தாபதன் தம்பி பாதத்து
ஆர்த்ததோர் துகளுக்கு ஒவ்வான், ஆர் அவர்க்கு ஆற்றகிற்பார்"
[கும்பகர்ண வதை–பா.25]

என்று அமைந்த பாடல், இலக்குவனின் வீரம் பற்றிய இலங்கை வேந்தனின் மதிப்பீட்டை எடுத்துக்காட்டும்.

இலக்குவனுக்குக் கும்பகருணன் அளித்த முதன்மை:-

கும்பகருணன் இலக்குவனுக்குக் கொடுத்த சிறப்புப் பெயர் 'மாற்றரும் தம்பி' என்பது. அவனது ஆற்றலை உணர்ந்த கும்பகருணன், தான் அமர்க்களம் செல்ல விடை பெறும் நிலையில் தன் அண்ணனை நோக்கி, இந்திரசித்தன் இலக்குவன் விடுக்கும் அம்பினால் இறத்தல் உறுதி என்பானாய்,

"இந்திரன் பகைஞனும் இராமன் தம்பிகை
மந்திர அம்பினால் மடிதல் வாய்மையால்" என்கிறான்
[கும்பகருண வதை–பா.96]

களத்தின் கண், இலக்குவனின் வில்லாற்றலைப் போற்றுவானாய்.

"திரிபுரம் செற்ற தேவனும் இவனுமே செருவில்
ஒரு விலாளர் என்று ஆயிரம் கால் எடுத்துரைத்தான்"
[திரிபுரம் செற்ற தேவன் = சிவபெருமான்,
இவன் = இலக்குவன். ஒருவிலாளர் = வில்லாற்றலில்
ஒப்பானவர்]

என்கிறார் கவிஞர். பின் போராட்டத்தின் இறுதி நிலையில், இராமனை நேரில் கும்பகருணன் சந்தித்தபோது, வீடணனைப் பாதுகாக்கும் முறையில் ஒரு வரம் வேண்டுகிறான். இராவணன், தம்பி என்று பாராமல் வீடணனைப் பழிவாங்கும்

கொடியவன் ஆதலால், அவனிடத்தில் இருந்து வீடணனைக் காக்க வேண்டும் எனில், இலக்குவன், இராமன், அனுமன் என்ற மூவரில் எவர் ஒருவரையும் வீடணன் பிரியாது இருக்க வரம் அருளுமாறு கேட்பானாய்

"உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான்
எம்பி பிரியானாக அருளுதி யான்வேண்டினேன்"
[உம்பி = உன் தம்பி இலக்குவன்]

என்று கூறுவது நோக்கத்தக்கது. [கும்பகருணன் வதை–பா.359]

அப்படிக்கேட்கின்ற நிலையில் முதலில் இலக்குவனையும், அதனை அடுத்து இராமனையும் குறித்திருப்பது மிக நயமான ஒன்று. வீடணனைப் பாதுகாக்கும் சிறப்பில் முதலிடத்தைக் கும்பகருணன் இலக்குவனுக்குத்தான் கொடுத்துள்ளான். இந்த வகையில், இராமனையும் விஞ்சிய சிறப்பு இலக்குவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. எதிர் காலப் பேரறிவுடன் கும்பகருணன் இச்சிறப்பை இலக்குவனுக்குக் கொடுத்துள்ளான் என்பதை யுத்த காண்டம் வேல் ஏற்றபடலத்தில் நாம் காண்கிறோம்.

இராவணன் விடுத்த மோகப்படையை வீடணன் கூறிய அறிவுரையின் வண்ணம், நாரணப்படை கொண்டு அழிக்கிறான் இலக்குவன். அதனைக்கண்ட இராவணன் வேல்கொண்டு வீடணனை அழிக்கக்கருதி, அவனை நோக்கி வேலைச் செலுத்துகிறான். அவ்வேலை ஏற்றுத் தம்முயிர் கொடுத்து வீடணனைக் காக்கப் பலரும் ஒருவரை ஒருவர் முந்துகின்றனர். இறுதியில், முன்நின்றாரைப் பின் அடையுமாறு செய்து, அவ் வேலினைத் தான் ஏற்றுக் களத்தில் வீழ்கிறான் இலக்குவன். இவ் வகையில், வீடணனைக் காப்பதற்கு இலக்குவனே உரியவன் என்ற கும்பகர்ணனின் கணிப்பைக் காவியம் உறுதி செய்கின்றது.

வீடணனுக்கு இராமன் உணர்த்திய விழுமிய வீரம்:-

அரக்கர்களைப்பற்றி நன்கு அறிந்தவன் என்ற முறையில், அதிகாயனின் பலவேறு ஆற்றல்களை வீடணன் இராமனிடம் விளக்கினான். பலருடைய துணை வலிமையையும் உடன் கொண்டுதான், இலக்குவன் அதிகாயனை எதிர்க்கச் செல்லவேண்டும் என்ற தனது கருத்தையும் தெரிவித்தான். இந் நிலையில், இலக்குவனின் உண்மை ஆற்றலை வீடணனுக்கு

எடுத்து விளக்கவேண்டிய இன்றியமையாக் கடப்பாடு இராமனுக்கு ஏற்பட்டது.

"எண்ணாயிரம் கோடி இராவணரும், விண்நாட்டவரும், வேறு உலகத்தாரும் மும்மூர்த்திகளுடன் இணைந்து எதிர்த்தாலும், இலக்குவன் அஞ்சாது எதிர்ப்பான் என்றும், என் தம்பி கொதித்து எழுந்தால், வானுலகமோ அன்றி மண்ணுலகமோ, திருமாலோ, அல்லது பிற வீரரோ, யானோ, ஈசனோ, இந்திரனோ, எதிர் நிற்க இயலாது என்றும் இவன் வில்லில் கைவைத்த உடனேயே எதிரிகளின் அனைத்து ஆற்றல்களும் அழியும் என்றும், பகை அழிப்பதில் முப்பெருங் கடவுளோடு ஒருங்கு வைத்து எண்ணத்தக்கவன் இலக்குவன் என்றும் இளவலைப் போற்றி உரைத்த உரைகள் காலமெல்லாம் இலக்குவனின் மாண்பைக் குன்றின் மேலிட்ட விளக்கெனச் செய்யும் என்பதில் ஐ யமில்லை.

இந்திர சித்தன் போற்றிய இலக்குவனின் வீரம்:

அதிகாயன் மரணம் கண்டு மனம் வெதும்பி, களம் வந்து சேர்கிறான் இந்திரசித்தன். வானரப்படையில் பேரழிவு ஏற்படுகின்றது. அந்நிலையில் இலக்குவனின் உண்மை ஆற்றலை அவன் அதிகாயனோடு நிகழ்த்திய போரினால் உணர்ந்த வீடணன் இலக்குவனை நோக்கி,

"நீ இது தீர்ப்பின் அல்லால்,
உய்திறன் உண்டோ, வேறு இவ்வுலகினுக்கு உயிரோடு"

என்று கூறவும், இந்திரசித்தனை எதிர் கொள்ள வருகின்றான் இலக்குவன். இருவருக்கும் இடையே நிகழ்ந்த போரில் இலக்குவனின் வில்லாற்றலை உணர்ந்த மேகநாதன், வில்லாற்றலில் இலக்குவனை ஒப்பவர் எவரும் இலர் என்பானாய்

"வரிசிலை பிடித்த கல்வி
இந்நரன் தன்னோடு ஒப்பார் யாருளர் ஒருவர்?"

[இந்நரன் = இம்மனிதராகிய இலக்குவன்] என்று முதற் கண் போற்றினான். தனது நாற்பது வெள்ளம் படையினையும் இலக்குவன் ஒருவனே தன் வில்லால் அழித்து நின்ற போது,

"ஒரு விலான்
நன்று நம் படை நாற்பது வெள்ளமும்
கொன்று நின்றபடி" என்று வியந்தான்.

பின்பு கருடன் வருகையால் நாக பாசம் பயனற்றுப் போகவே வினவ வந்த தந்தை இராவணனை நோக்கி, இதுவரை தான் நிகழ்த்திய எத்தனையோ போர்களில், தான் இவ்வண்ணம் வருந்தியது இல்லையென்றும், இலக்குவன் வலிமைக்கு எல்லையே இல்லை என்றும் கூறுவானாய்

"மனிதன் நோன்மை......... வரம்பு உடைத்தன்று" [நோன்மை = வலிமை] என்று போற்றினான். வெற்றி இப்போரில் நிச்சயம் அன்று என்ற தன் கருத்தையும் தெரிவித்தான். பின்பு நிகும்பலை வேள்வியும் இடையில் அழியப்பெற்று, அவன் விடுத்த வலிமை மிக்க அத்திரங்களும் அழிந்த நிலையில், தான் இதுவரை கொண்டிருந்த செருக்கு அழியப்பெற்று, தந்தைக்கும் உறுதி கூறும் பொருட்டுத் தனியே வந்து சந்திக்கிறான். இலக்குவனின் ஆற்றல் பற்றிய இந்திர சித்தனின் முழுமையான கணிப்பைத் தெரிவிப்பானாய்

"குலம் செய்த பாவத்தாலே கொடும்பகை தேடிக் கொண்டோம்.
சலம் செய்யும் உலகம் மூன்றும் இலக்குவன் முடிப்பன் தானே"
[சலம் செய்யின் = சீற்றம் கொண்டால்]

என்று கூறிய கருத்து, மிகச்சிறந்த ஒன்று. அத்துடன் நில்லாமல் இந்திரசித்தன் தந்தையை நோக்கி,

"ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை, ஆசைதான், அச்
சீதை பால் விடுதியாயின் அனையவர் சீற்றம் தீர்வர்
போதலும் புரிவர், செய்த தீமையும் பொறுப்பர் உன் மேல்
காதலால் உரைத்தேன் என்றான், உல கெலாம் கலக்கி
வென்றான்"

என்று கூறியதாக அமைந்த பாடல், இலக்குவனின் ஏற்றத்தை மட்டும் அன்றி, அவ்வீரம் இந்திர சித்தனிடம் எத்தகைய மாற்றத்தைச் செய்துள்ளது என்பதையும் நமக்குக் காட்டுகின்றது.

இலக்குவன் பெற்ற பெருஞ்சிறப்பு:-

சீதை தீயில் மூழ்கி எழுந்து, தன் தூய்மையை உலகறியச் செய்தபின்பு, இராமனைக்காணவந்த விண்ணவர் குழாத்துள் ஒருவனாய் வந்த தயரதன் "வானவர் எப்போதும் போற்றுவது இந்திரசித்தனை வென்ற இலக்குவன் வீரத்தையே" என்பானாய்,

"புரந்தரன் பெரும்பகைஞனைப் போர் வென்ற உன்தன்
பரந்து உயர்ந்த தோள்ஆற்றலே தேவரும் பலரும்
நிரந்தரம் புகல்கின்றது"

என்று விண்ணவர் போற்றும் இலக்குவன் வீரத்தைப போற்றினான். மேலும் கூறுவானாய்,

"நீ இந்த உலகின் அரந்தை வெம்பகை துடைத்து
அறம் நிறுத்தினை" [அரந்தை = துன்பம்]

என்று போற்றியது யாரும் பெறாத பெருஞ்சிறப்பாகும். அயோத்தி மீண்ட பின்பு, முத்தாயரையும் இலக்குவன் வணங்கும் போதில் அவர்கள்

"மன்னவற்கு இளவல் நீயே வாழி!" என்று ஆசி கூறியது, இலக்குவனின் தனிச்சிறப்பை எடுத்துக்காட்டும். இராம காதை காட்டும் மூன்று பேரரசுகளில் கிட்கிந்தை அரசுக்கும், இலங்கை அரசுக்கும் புது முடிகவித்த பெருஞ்சிறப்பு, நம் இலக்குவன் ஒருவனுக்கே உண்டு.

நிறைவுரை:

தேவர்களுக்கு இலக்குவனைப்பற்றி விளக்கும் சிவபெருமான், ஒவ்வொரு உயிரிலும் பொருந்தி வாழ்பவனாய் போற்றுதற்கு உரிய தகுதிவாய்ந்து ஐ யப்படுதற்குத் தகாத இறை நிலையில் இருப்பவன் என்பாராய், "உயிர் தோறும் உற்றுளன், தோத்திரத்து ஒருவன்" என உரைக்கும் அயிராநிலை உடையான் இவன் என்று கூறிய கருத்தே நம் உள்ளத்தில் என்றும் இருக்கவேண்டிய ஒன்று. இராமா அவதாரத்தில் இராமனை விட்டுப்பிரியாது இவ் விளவல் கூடி வாழ்வது போன்றே இராமகாதை பயிலும் ஒவ்வொருவர் உள்ளக்கோயிலிலும் இவன் பிரியாது, தியாக ஒளியோடு, தொண்டு மணம் கமழ வீரமே உருப்பெற்று வழிகாட்டும் ஒளி விளக்காய் விளங்குவான் என்பது உறுதி.

சத்ருக்கனன்

ம. பழனிச்சாமி, எம்.ஏ.எம்.பில் பேராசிரியர் (ஓய்வு)
பரமகலியாணி கல்லூரி, ஆழ்வார்குறிச்சி

கவிஞன் பேணிய குழந்தை:

கல்லில் இருந்து வடித்த சிற்பம் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படலாம். ஆனால் சொல்லில் இருந்து எழுந்த கவிதையும், கவிதைக்குள்ளேயே கருவுற்று வெளிவருகின்ற பாத்திரமும் காலத்தை வென்று நிற்கின்றன.

ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் கம்பன் கவிதை இம்மண்ணின் வலம் வந்து கொண்டிருக்கின்றது. அச் செஞ் சொற் கவிதையுடன் பிறந்த பாத்திரங்கள் மக்கள் உள்ளங்களில் கோலோச்சிக் கொண்டிருக்கின்றன.

தசரதன் தேவியர் மூவரும் இராமன் உள்ளிட்ட நால்வரை ஈன்றது உண்மைதான். ஈன்ற தாயாரே மைந்தருடைய வான் புகழுக்குக் காரணம் ஆக மாட்டார். கோசலை ஈன்றெடுத்த இராமனைச் கோதிலாக் கவிஞன் கொஞ்சம் தமிழ்ச்சொல்லால் பேணினான். அதனால் உலகம் இன்று இராகவனைக் கொண்டாடுகின்றது.

பரதனைப் பிரியாது நின்றவன்:

தேவியர் மூவரில் 'விடங்கிளர் விழியினளாகிய' சுமித்திரை ஈன்றெழுத்த சிங்கம் தான் சத்ருக்கனன். இவர் மகம் நட்சத்திரம் சிங்க ராசியில் பிறந்தவன். இலக்குவன் இராமனைப் பிரியாது நின்றதைப் போல பரதனைப் பிரியாது நின்றவன். இவர்கள் இணைபிரியாது நின்ற நிலையை,

''பரதனும் இளவலும் ஒரு நொடி பகிராது
இரதமும் இவுளியும் இவரினும் மறைநூல்
உரைதரு பொழுதினும் ஒழிகிலர் எனையாள்
வரதனும் இளவலும் என மரு வினரே!''

என்று கவிக்கோ கம்பன் காட்டுவான். வேதம் கற்கச் சென் றாலும், தேர் ஏறி குதிரை ஏறி விளையாடச் சென்றாலும், பரத சத்ருக்கனர் இணை பிரிந்திலர். இராம இலக்குவரைப் போல உடன் உறைந்து நின்றனர். இராம இலக்குவரைத் தவிரப் பிறி தொருவரை உவமை காட்ட முடியாத அளவிற்குப் பரத சத்ருக்கனர் இருவரும் பொருந்தி இருந்தனர்.

பரதாழ்வானது கைங்கர்யத்தில் ஈடுபட்டவன்:

இலக்குவன் இராமனிடம் காட்டிய ஈடுபாட்டைப் போன்றே சத்ருக்கனன் பரதனிடம் ஈடுபாடு கொண்டிருந்தான் என்பது அறிஞர் தம் கருத்து. "சத்ருக்கனன் – 'பகைவரைக் கொல்பவன்' என்பது பொருள். உட்பகையாகிய துர்க்குணங் களையும் லவணாசுரனாதியோரையும் இவன் ஒழிக்கும் தன்மையன் என்பது பற்றி இப்பெயரிட்டனன். இராமனது அழகில் ஈடுபடுதல் என்பது பாகவதனாகிய பரதாழ்வானி டத்துப் பக்தி செலுத்துவதற்கு இடையூறு ஆகுமாதலால் அவ் வகையான அகப்பகையை ஒழித்துப் பரதாழ்வானது கைங்கர் யத்திலேயே ஈடுபட்டவன் என்ற காரணம் பற்றி சத்ருக்கனன் என்று பெயரிட்டதாகக் கூறுவர்". இவ்வாறு வை.மு.கோ. அவர்களுடைய உரை, இராம கைங்கர்யத்தில் நின்ற இலக்குவனைப் போன்று சத்ருக்கனன் பரதாழ்வான் கைங்கர்யத்தில் தலைநின்றான் என்பதை உணர்த்துகின்றது.

பரதனுடன் சத்ருக்கனன் அயோத்தி வருதல்:

கைகேயி தயரதனிடம் வரங்கேட்டாள். இரண்டு வரங்கள், ஒன்றினால் இராமன் காடு செல்வது, பிறி தொன்றினால் பரதன் நாடாள்வது, "பரதன் நாடாளட்டும், இராமன காடு செலல வேண்டும் என்ற கருத்தை விலக்கு" என்று தயரதன் மன்றாடினான். கைகேயி அசைந்து கொடுக்க வில்லை. விளைவு, காடு செல்ல நேர்ந்தது, தயரதன் விண்ணகம் சேர்ந்தான். அயோத்திமா நகரம் அரசனை இழந்தது. மக்கள் இராமனைப் பிரிந்தனர். இந்நிலையில் கேகய நாட்டில் உள்ள பரதனை அயோத்திக்கு அழைத்து வர ஏற்பாடு நடந்தது.

பரத சத்ருக்கனர் அயோத்தி வந்து சேர்ந்தனர். அரண்மனைக்குள் நுழைந்த பரதன் தமையன் இராமனைக் கண்டிலன். தந்தையைக் காண்கிலன். ஏதோ ஒரு மர்மமான சூழல் நிலவியது. தாயைக் கண்டான். உண்மையை உணர்ந்தான். பரதன் அடைந்த துன்பத்திற்கு எல்லை இல்லை.

தந்தைக்கு இறுதிக்கடன் செய்த சத்ருக்கனன்:

உயிரிழந்த தயரதனுக்கு இறுதிக்கடன் செய்வதற்குப் பரதன் முன் வந்தான். ஆனால் கைகேயினுடைய கொடுஞ் செயலால் வெறுப்புற்ற தயரதன் 'பரதன் எனக்கு மகன் அல்லன்' என்று கூறி உயிர்துறந்ததால், இறுதிச்சடங்கு மேற் கொள்ளும் உரிமை பரதனுக்கு மறுக்கப்பட்டது. அவ்வாய்ப்பு

சத்ருக்கனனுக்குக் கிடைத்தது. சத்ருக்கனன் இறந்த தந்தைக்கு எள்ளும் நீரும் இறைத்து அந்திமக்கடனைச் செய்து முடித்தான். இராம இலக்குவர் பரதர் மூவரும் ஞாலம் போற்றும் மூத்த புதல்வர்கள் என்றாலும், சத்ருக்கனன் தந்தையின் இறுதிச் சடங்கிற்கு உதவிய புண்ணியத்தைத் தேடிக் கொண்டான்.

சத்ருக்கனன் கூனி மீது பாய்ச்சல்:

இராமன் இல்லாத அயோத்தியைப் பரதன் வெறுத்தான். இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வர, பரதன் காடு நோக்கிப் புறப்பட்டான். பரதனுடைய மக்களும் திரண்டனர். அக்கூட்டத்தில் கூனியும் தென்பட்டாள். தூயதேவி கைகேயி மனம் திரிவதற்குக் காரணமான கூனியைச் சத்ருகனன் பார்த்த அளவில் அவள் மீது பாய்ந்தான். அவளைப் பற்றி எற்ற எத்தணித்தான். சத்ருக்கனன் செயலுக்குப் பரதன் உடன் பட்டிலன்.

சத்ருக்கனன் கூனி மீது கொண்ட கோபம் புரிந்து கொள்ளக்கூடியதுதான். ஆனால் பரதனோ, 'தாய் எனக் கருதாமல் கைகேயினைக் கொன்றிருப்பேன். இராமன் முனியும் என்று அச்செயலைக் கைவிட்டேன். கூனியைத் துன்புறுத் தினாலும் இராமன் அச்செயலை ஏற்றுக்கொள்ள மாட்டான்' என்று கூறிச் சத்ருக்கனனை அமைதியுறச் செய்தான்.

அரசாள்வேனோ:

இராவண வதம் முடிந்தது. இராமனின் ஏழிரண்டு ஆண்டு வன வாழ்வும் கழிந்தது, இராமன் பரதனிடம் அயோத்திக்கு வருவதாகச் சொன்ன காலமும் நெருங்கி விட்டது. ஆனால் இராமன் மட்டும் வந்து சேர்ந்திலன். பரதன், இராமனைக் காணாமையால் அவனிடம் முன்பு உரைத்தவாறு உயிர் விடுவதற்குத் துணிந்தான். பரதன் தன் உயிரை விடுத்து இராமன் மீது தான் கொண்டிருந்த நேசத்தையும் பாசத்தையும் உலகத்தார்க்கு உணர்த்த வேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப் பட்டான்.

இராமன் குறித்த காலத்தில் வரத்தவறியதால், பரதன் சத்ருக்கனனிடம் 'இனி உயர் ஓம்பி வாழேன், நீ அயோத்தியை ஆள்வாயாக' என்று உரைத்து வேண்டினான் சத்ருக்கனனோ,

"கானாள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்துப் பின்பு

போனானும் ஒரு தம்பி, போனவன்
தான் வரும் அவதி போயிற்று என்னா
ஆனாத உயிர்விட என்று அமைவானும்
ஒருதம்பி அயலே நாணாது
யானாம் இவ்வரசு ஆள்வேன்? என்னே
இவ்வரசாட்சி! இனிதே அம்மா!

என்றுரைத்து பரதன் வேண்டுதலை ஏற்க மறுத்தான்.

சத்ருக்கனனின் மறுமொழி மறுவற்ற மொழியாகும். ஆட்சியையும் ஏற்காமல் அயோத்தியை விட்டு நீக்கிக் கானகம் சென்ற இராமனைக் காக்கும்பொருட்டு அவன்பின் சென்றவனான இலக்குவன் ஒருதம்பி. காடு சென்ற இராமன் வருவதாகக் குறித்த காலம் வந்தும் அவன் வராமையால் உயிர் விடத் துணிந்தவனான பரதன் பிறிதொரு தம்பி. இவர்களுடன் உடன்பிறந்த மற்றொரு தம்பியாகிய சத்ருக்கனன் மட்டும் நாணமின்றி அயோத்தி அரியணையை ஏற்க முடியுமா என்பது ஈண்டு எடுத்தாளப்பட்ட கவிதையின் பொருள். சத்ருக்கனன் கூற்றாக அமைந்துள்ளது.

'நாணமின்றி அரசு ஆள்வேனோ' என்னும் சத்ருக்கனன் கூற்றில் தெளிவும் தீர்க்கமும் உள்ளன. ஆட்சிக் கட்டில் மீது இராமனுக்கு விருப்பம் இல்லை. பரதனும் அரச பதவியை விட இராமனுடைய திருவடிப் பாதுகைகளைப் போற்றியவன். அவ்வாறிருக்கச் சத்ருக்கனன் மட்டும் மணி முடிதரித்து மகிழ்ந்து வாழ விரும்புவானோ? பிறர் தன்னைப் போற்ற வேண்டும் என்பதற்காகச். சத்ருக்கனன் இவ்வாறு நடக்கவில்லை. மூத்தோர் வகுத்த வழியே சிறந்ததாக எண்ணி அவ்வாறு நடந்தான்.

அண்ணனைப் போற்றாமல் வாழும் தம்பி தம்பி யாகான். தரணிக்காக வாழ்தல் கூடாது. தன் மனச்சாட்சி வழியும் தனக்குரிய தர்மத்தின் வழியும் வாழ்தல் வேண்டும்.

அண்ணன் என்பதும் தம்பி என்பதும் தர்மத்திற்கு அப்பாற்பட்ட சொற்கள் அல்ல, அவை தர்மத்திற்குள் அடங்கியவைதாம். சொற்களுக்குள் உறைந்து கிடக்கும் பாச உணர்வுகள் மனிதனை அர்த்தமுள்ளவனாக்குகின்றன, மானிட வாழ்க்கையை மலர்ச்சியுறச் செய்கின்றன.

சத்ருக்கனன் நால்வரில் இளையன் ஆயினும் முதிர்ச்சியும் மூதறிவும் அவனுடைய கூற்றில் பளிச்சிடுகின்றன.

ஒரே பேச்சில் தன்னை 'யார்' என்று புலப்படுத்தி விடுகின்றான். இராமனுக்காகச் சர்வபரித்தியாகம் செய்த தம்பியர் இருவரைப் போன்று சத்ருக்கனன் தியாகம் செய்யத் துணிந்ததைக் காட்டுகிறது அவனுடைய கூற்று.

தீ மூட்டிய தம்பி:

இராமன் குறித்த காலத்தில் அயோத்திக்கு வாராமையால் பரதன் பலவாறு எண்ணி மயங்கினான். "நான் இந்நாட்டை ஆண்டு கொண்டிருப்பதால் அல்லவா இராமன் இங்கு வரவில்லை. நான் இறந்து விட்டால் மக்களைக் காப்பதற் காயினும் இராமன் இங்கு வந்துதானே ஆக வேண்டும். ஆதலால் தம்பி! தீ மூட்டு, உயிர் விடுவேன் என்று கூறி சத்ருக்கனனைப் பரதன் வேண்டினான்.

பரதனின் ஏவலை ஏற்றுச் சத்ருக்கனன் தீ வளர்த்தான். அண்ணன் உயிர் விடுவதற்குத் தம்பி உதவலாமா? ஆனால் உதவினான். நாளைய உலகம் தூற்றவும் செய்யலாம்.

இராமனும் வந்திலன், பரதனும் உயிர் விடுவதற்குத் தயார் ஆனான். உயிரை விட்டால் நாடு என்ன ஆவது? பரதன் முடிவால் ஏற்படும் விளைவைச் சத்ருக்கனன் உணரா தவன் அல்லன். ஆனால் அண்ணன் கட்டளையை ஆராய்ந்து பார்க்காமல் ஏற்றுச் செயல்படுவதுதான் தம்பிக்கு அழகு. கண் மூடித்தனமாக அண்ணனைப் பணிவதும் அவர் வழிச் செல்வதும் அறிவுடைமைக்கு ஏற்குமா?

சுயநலமிக்க அண்ணனைத் தொழ வேண்டாம். தொடர்ந்து செல்ல வேண்டாம். அண்ணன் ஒப்பற்ற குணக்குன்றாய் இருந்து, அவனை உலகமே கொண்டாடும் போது தம்பியர் மட்டும் மாறுபட்டு நிற்க முடியுமா? நிற்க மாட்டார். நின்றால், தம்பியர் சுயநலக்குன்று என்று கருதப் படுவர். அண்ணன் தம்பி இருவரும் சுயநலம் உடையர் ஆயின் இருவரும் ஒத்துப் போகார். உடன்படவும் மாட்டார். அண்ணனும் தம்பியும் சுயநலம் அற்ற நிலையில்தான் ஒன்று படமுடியும். அண்ணன் தம்பியிடமும், தம்பி அண்ணனிடமும் ஒன்றி நிற்கின்றனர். அங்கே அண்ணனும் இல்லை, தம்பியும் இல்லை. இருப்பதெல்லாம் மானுடம் மட்டுமே. அன்பு ஒன்றே.

தீ வளர்த்தது பரதனுக்காக மட்டுந்தானா:

சத்ருக்கனன் பரதனின் ஏவற்படி தீ வளர்த்தான் பரதன் தீ மூழ்கி உயிர் விடத்தயார் ஆகி விட்டான். கோசலை

உள்ளிட்ட பலரும் பரதனைத் தடுத்துக் கொண்டு இருந்தனர். நல்லவேளை. இராமன் வருகிறான் என்ற செய்தியை அனுமன் முன்கூட்டி வந்து தெரிவித்தான். அனுமன் காலத்தே வராதிருப் பின், பரதன் தீப்புகுவது தவிர்க்க முடியாததாகி விடும். பரதனைப் பின் தொடர்ந்து சத்ருக்கனனும் தீப்புகுந்து உயிர் விடுவது உறுதி. அயோத்தி மாநகரம் மிகப்பெரிய சோக இருளில் அமிழ்ந்து விடும். இத்துயரம் நிறைந்த சம்பவங்கள் அனுமன் வருகையால் தவிர்க்கப்பட்டன.

பரதனுடைய நல் உணர்வுகள் சத்ருக்கனனுக்கும் உண்டு. அதனால் தான் பரதன் எரிபுகுந்து உயிர் துறப்பின் சத்ருக்கனனும் உயிர் பிழைத்து வாழ விரும்பான் என்று எண்ண வேண்டியுள்ளது, பரதனும் சத்ருக்கனனும் ஒரே மாதிரிக் கொள்கையும் குணமும் உடையவர்கள் என்பதைக் கங்கை வேடுவனான குகனும் கண்டுள்ளான்.

"நம்பியுமென் னாயகனை ஒக்கின்றான் அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடந் தலைக்கொண்டான்
துன்பமொரு முடிவல்லை திசை நோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்'

என்பது குகனுடைய கணிப்பு. மிகச் சரியான கணிப்பு.

கங்கை ஆற்றின் எதிர்க்கரையில் தோன்றிப் பரத சத்ருக்கனர்களைப் பார்த்த குகன், அவர்களைத் தன் கண்களால் (அளந்தான்). 'ஒருவன் இராமனை ஒத்திருக் கின்றான், அவன் அருகில் உள்ளவன் இலக்குவனை ஒத்திருக் கின்றான். இருவரும் தவ வேடம் பூண்டுள்ளனர். இவர்கள் சுமந்து வரும் துன்பத்திற்கு எல்லையில்லை. இவர்கள் இராம னுக்குக் கேடு விளையார். என்று உற்று நோக்கி உணர்ந்தான்.

இராமனைப் போல பரதனும், இலக்குவனைப் போல சத்ருக்கனனும் ஒத்திருந்தனர் என்பது குகனுடைய பார்வை.. எண்ணுவதற்குரியது, உடலால் மட்டுமே ஒத்திருப்பது ஒருவகை. உள்ளத்தாலும் ஒத்திருப்பது பிறிதொரு வகை. உடலால் ஒத்திருப்பதை விட உள்ளத்தால் ஒத்திருப்பது உலகத்தார்க்கு இன்பம் பயக்கும். உடலாலும் உள்ளத்தாலும் இராமனும் அவன் தம்பியரும் ஒத்திருந்தனர். ஆம். இராமனைத் தொழுதனர். அவன் வழி நின்றனர். அவன் கருத்தறிந்து செயல்பட்டனர். முரண்பட்டிலர். முரணினும் மூத்தவனை விழுதாக நின்று தாங்கினார். தழுவினர், ஒத்தது அறிந்து உடன் நின்ற

தம்பியரால் இராமன் புகழ் கொடி கட்டிப் பறக்கின்றது. நற்குணங்களால் நிறைந்த இராமனை அண்ணனாகப் பெற்றதால், தம்பியர் மேலும் சிறக்கின்றனர்.

பரதன் தீ வளர்க்கச் சொன்ன அளவில் சத்ருக்கனன் தான் மூட்டிய தீ தனக்கும் உயிர்விட உதவும் என்பதை மறக்கா மல் செயல்பட்ட ஒரு சிறிய பாத்திரம் தான். ஆனாலும் சிந்தை யைத் தீண்டிய பாத்திரம். அரச பதவியினும் அண்ணனே உயர்ந்தவன் என்ற செய்தியை அகிலத்திற்கு அளித்த பாத்திரம் இவ்வாறு காவியம் முழுவதும் கவின் உலவிடச் செய்ததால் கவிக்கோ கம்பனும் காலத்தையும் நிறைந்த பாத்திரங்களை கணக்கையும் கடந்து நிற்கின்றான்.

கவித்தேன் பிழிந்த கம்பன் வாழ்க
ஒன்றிநின்ற உடன்பிறப்புக்கள் சிறக்க
உயர்ந்தோர் தொழ விளங்கும்
ஒண்தமிழ் வெல்க.

குகன்

அருள்நெறிக் கவிமணி

புலவர். திரு.நா. அரங்கநாதசுவாமி

முதன்மை வாய்ந்தவன்

இராமபிரானுக்கு உடன் பிறந்த தம்பியர் மூவருடன், உடன்பிறவாத தம்பியரும் மூவராவர் "தன்னைச் சரணடைந்த வீடணனை நோக்கி, "குகனொடும் ஐ வரானோம் முன்பு பின் குன்று சூழ்வான், மகனொடும் அறுவரானோம், எம்முழை அன்பின் வந்த அகனமர் காதல் ஐ ய! நின்னொடும் எழுவர் ஆனோம், புகலரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை" என்று இராமபிரான் கூறியதாகக் கம்பர் கூறும்பாடல் இது. "நெருங்குதற்கரிய கானக வாழ்க்கையைத் தந்து, ஏற்கனவே உள்ள நால்வரோடு மேலும் மூன்று புத்திரர்களை உனது தந்தையான தசரதன் பெற்றுப் பொலிந்தான்" என வீடணனை நோக்கிக் கூறியதால் இம்மூவரும் உடன் பிறவாத தம்பியர் என்று இராமனால் ஏற்றுக் கொள்ளபட்டவர்களாவர். இந்த மூவருள்ளும் முதலில் வருபவன் குகன். கங்கைக்கரையிலே குகனைச் சந்தித்து அவனது அன்புகனிந்த உள்ளத்தை உணர்ந்த இராமபிரான்! "முன்பு உளேம் ஒரு நால்வேம் முடிவுளது என உன்னா அன்புள இனிநாம் ஓர் ஐ வர்கள் உளரானோம்" எனக் கூறிக் குகனைத் தனது தம்பியாக ஏற்றுக்கொண்டான். அதற்கு முன்னே, குகனது அன்புள்ளத்தை அளந்தறிந்த இலக்குவன், "சுற்றமும் தானும் உள்ளம் தூயவன்", தாயின் நல்லான் என்று இராமனுக்குத் தெரிவித்து, குகனுடைய தோழமையை ஏற்றுக்கொண்டு பேசியதைப் பார்க்கிறோம். பின்னர் குகனைக் கோசலைக்கு அறிமுகப்படுத்திய பரதன், 'இன்துணைவன் இராகவற்கு, இளையவனுக்கும் எனக்கும் மூத்தான் குன்றனைய திரு நெடுந்தோள் குகன் என்பான்; என்று கூறி, குகனைத்தானும் சகோதரனாகவே பேசி அறிமுகப்படுத்துகிறான். பரதன் கூறியதைக்கேட்ட கோசலையும், "நைவீர் அலீர் மைந்தர் இனித்துயரால் நாடிழந்து காடு நோக்கி, மெய்வீரர் பெயர்ந்ததாம் நலமாயிற்றாமன்றே, விலங்கல் தின்தோள் கைவீரக் களிறு அனைய காளை இவன் தன்னோடு கலந்து நீவிர் ஐ வீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்தீர்" என, மைந்தர்களே! நீங்கள் ஐ ந்து பேரும் ஒருவராக இருந்து இந்நிலத்தை நெடுங்காலம் காப்பீராக" என்று கூறி, குகனை மகனாக ஏற்றுக் கொண்டு கூறியதைப்பார்க்கிறோம். இராமன், இலக்குவன், பரதன் ஆகிய மூவரும் குகனைச் சகோதரனாக

ஏற்றுக் கொண்டதோடு, தாய் கோசலையும் மகனாக ஏற்றுக்கொண்ட பெருமை உடைய குகன் முதலில் வந்தவன் மட்டுமல்ல, முதன்மை வாய்ந்தவன் என்று கூறத்தகுந் தவனாவான்.

''அயோத்யா காண்டத்தில் வரும் ஒப்பற்ற பாத்திரம் குகன். இந்தப் பாத்திரத்தை வால்மீகியை அடியொற்றிப் படைத்திருந்தாலும், ஈடு இணையற்ற முறையில். உலக இலக்கியங்கள் எதிலும் காண முடியாத அளவுக்கு அற்புதமான ஒரு படைப்பாக குகனைப் படைத்திருக்கிறார் கவிச்சக்கர வர்த்தி'' என்பார் திரு. அ.ச. ஞானசம்பந்தம்.

வால்மீகி கூறுவது:

இராமபிரான் முதலிய மூவரும் சுமித்திரனுடன் கங்கைக் கரையைச் சென்று சேர்ந்ததும், இராமனுடைய தோழனும் சிருங்கிபுரத்து அரசனுமான குகன் என்னும் வேடர் தலைவன் இராமனைக் காண வந்தான். இராமன் இலக்குவனுடன் சென்று அவனை எதிர் கொண்டு வரவேற்றுத்தழுவிக்கொண்டான். மரவுரியை உடுத்தியிருந்த சக்கரவர்த்தி குமாரர்களான இராம, இலக்குவர்களையும் சீதாப்பிராட்டியையும் பார்த்த குகன் பெரிதும் வருந்தினான். பிறகு பல்வகையான பொருள்களைக் கொண்டு வந்து இராமனுக்குத் தந்தான். இராமனோ துறவற வாழ்வுக்கு இவையெல்லாம் தேவையில்லாதவை, வேண்டாம் என்று விலக்கி, நீரை மட்டுமே பருகி, அன்றிரவு உறங்கினர். இலக்குவனுடன் சேர்ந்து குகனும் விழித்திருந்து காவல் செய்தான். மறுநாள் இராமன் வேண்டியபடி, குகன் கொண்டு வந்த படகில் மூவரும் கங்கையைக் கடந்து மறுகரை சேர்ந்தனர்'' என்பது வால்மீகி கூறும் செய்தி.

துளசி கூறுவது:

இராமன் குகனுடன் நட்புக்கொண்டதும், சுமத்திரனை அயோத்தி செல்ல அனுப்பிவைத்துவிட்டு, கங்கைக் கரையை அடைந்து, குகன் கொண்டுவந்த படகில் ஏற முற்படும்போது, ''இராமன் தனது திருவடிகளைத் தண்ணீரால் கழுவிச் சுத்தம் செய்த பிறகே ஓடத்தில் ஏற விடுவேன். கல்லைப் பெண்ணாக்கிய பாத தூளி என் ஓடத்தைப் பெண்ணாக்கி விட்டால் என் பிழைப்புக் கெடும்'' என்று கூற, இராமன் புன்முறுவல் செய்து, அவனது விருப்பப்படி திருவடிகளை அலம்பி விட்டுப் படகில் ஏறினான். மூவரும் குகனுடன் கங்கையைக் கடந்து கரை சேர்ந்தபின் பரத்துவாச முனிவரின்

ஆசிரமத்தை அடைந்தனர். பிறகு குகனை அனுப்பிவிட்டு, இராமன் முதலிய மூவரும் தென்திசை நோக்கிச் சென்றனர் என்பது துளசிதாசர் கூறும் செய்தி.

வான்மீகம், அத்யாத்மம், மானசம் ஆகிய மூன்றிலும் குகன் சிருங்கிபேர அரசனாகவும், இராமனுக்கு உற்ற தோழனாகவும் கூறப்படுகிறான். கீர்த்தி வாசரின் வங்காள இராமாயணம் குழந்தைப்பருவத்திலிருந்தே ராமனும் குகனும் நண்பர்களாக இருந்து வந்தனர் எனக்குறிப்பிடுகிறது.

குகன், ராமனைப் பற்றிக் கேள்விப்பட்டும், அப்பெருமானது பெருமையை அறிந்தும், கங்கைக்கரையில் முனிவர்களுடன் வந்து தங்கியிருப்பதைத் தெரிந்து, அப்பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற விருப்பத்தால் தான் முன் பார்த்திராத இராமனை முதன் முதலாகக் காணவந்தான் என்று கம்பன் உரைப்பதைக் காணுகிறோம். குகப்படலம் முதல் ஒன்பது பாடல்கள் குகனுடைய தோற்றத்தை விவரிக்கிறது.

குகனுடைய தோற்றம்:

கங்கைக் கரையிலே நெடுங்காலமாகப் படகு செலுத்தும் உரிமைஉடைய குகன் ஆயிரம் படகுகளுக்குத் தலைவன். பகைவரை வெல்லும் வில்லை உடையவன். மலைபோன்ற திரண்ட தோள்களை உடையவன். 'துடி' என்னும் பறையை உடையவன். தோலால் ஆன மிதியடிகள். இறுக்கிய பாதங்களைக் கொண்டவன். இருள் நெருங்கித் திரண்டது போன்ற கரிய நிறத்தினன். தனது பெரிய படையுடன் வருவதால் கார்மேகம் இடியோடு கூடி எழுந்தது போல வருகிறான். ஊது கொம்பு, துத்தரி, முரசு, பம்பை போன்ற பலவகை வாத்தியங்கள் நிறைந்த படைக்குச் சொந்தக்காரன். அவனது வீரர்கள் யானைக் கூட்டத்தைப்போல அவனைச் சூழ்ந்து வருகிறார்கள். 'காழம்' என்ற ஒருவகை உடையை அணிந்திருக்கிறான். அவ்வுடை தொடையை இறுக்கி இருக்கிறது. கங்கையின் ஆழமும், நீளமும் அவனுக்கு அத்துபடி. இடுப்பிலிருந்து கீழே தொங்கவிடப்பட்ட சிவந்த வார்ப்பட்டை தொங்கிக் கொண்டிருக்கிறது. இடுப்பைச் சுற்றிப்புலி வாலைக் கட்டியிருக்கிறான். பற்களை நெருக்கமாகத் தொடுத்தது போன்ற பலகறை அணிந்திருக்கிறான். கற்களைச் சேர்த்துப் பிணைந்தது போன்ற வீரக்கழல்களை அணிந்துள்ளான். இருளையே சேர்த்துப் பின்னியது போன்ற கரிய தலைமயிரை உடையவன். ஆளியின் வற்றி உலர்ந்து காயைப்போன்று

நெரிப்புடை நெற்றிப்புருவங்கள்! பனையின் சிறாம்பு போன்ற கரிய மயிர் அடர்ந்த முன் கைகள்! கல்லைப் போன்று அகன்ற மார்பு. இருளையொத்த எண்ணெய் பூசப்பட்ட கரிய உடம்பு. இரத்தக் கறைபடிந்த, ஒளியுடைய வாளை அரைக்கச்சிலே கட்டியிருக்கிறான். பிறர்பார்த்து நடுங்கும்படியான கொடிய பார்வை. பித்தர்களைப் போல ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பேச்சு. வச்சிராயுதம் போன்ற உறுதியான இடுப்பு, மீனையும், இறைச்சியையும் தின்பதால் புலால் நாற்றம் வீசும் சிரிப்பற்ற கடுகடுப்பான முகம். கோபமில்லாமலும் கனல்கக்கும் பார்வை. எமனும் கேட்டால் அஞ்சிநடுங்கும்படி ஒலிக்கும் குரல். சிருங்கிபேரம் என்னும் ஊருக்கு அரசன் என்றெல்லாம் குகனைக் கம்பர் அறிமுகப்படுத்துகிறார்.

முரட்டுத்தனமான உடம்பும், கடுமையான பேச்சும், கொடிய பார்வையும் உடையவனாகக் கவிஞன் குகனைச் சித்தரித்திருப்பதைப் பார்த்தால்—புறத்தோற்றம் அவனைக் கொடியவன் என நினைக்கச் செய்கிறது. அகத்தைப் பொறுத்த மட்டில் அன்பே வடிவமானவன். உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் அன்பைத் தவிர வேறு ஒன்றையும் காண இயலாது. புறத்தோற்றத்தைக் கொண்டு அகத்தை அளவிடலாம் என்பார்கள். இதற்கு எதிர்மாறாக பார்ப்பதற்கு முரட்டுத்தனமான உடம்பும், கடுமையான பார்வையும் உடைய குகன் அகத்தைப் பொறுத்த மட்டில் அன்பே வடிவமாக அமைந்திருக்கிறான். இப்படி ஓர் அன்பின் மொத்த வடிவமாகக் குகனைக் காட்டுவதன் மூலம்—அன்பு வழியில் செல்பவர்களுக்கு கல்வி, கேள்வி தேவையில்லை என்பதைக் கம்பர் உணர்த்துகிறாரோ? ‘அன்பு பிழம்பாயினர் அவர் கருத்தின் அளவினரோ’ எனச் சேக்கிழார் கண்ணப்பனைக் கூறுவாரே! அது போல குகன் அன்பின் முழு உருவமாகத் திகழ்கிறான் என்பதைப் பின்னரும் காணுகிறோம்.

சிருங்கி பேரத்தரசன்—அயோத்தி வேந்தனைக் காணக் கையுறையாகத் தேனும் மீனும் கொண்டு வ்ருகிறான். ‘தேனொடு மீனுபகாரத்தான்’ எனக் கம்பர் கூறுவதால் தன்னை நாடி வருபவர்களுக்கும் தான் தேடிச் செல்பவர்களுக்கும் தானுண்ணும் தேனையும் மீனையும் உபசரித்து வழங்கும் உபகாரி எனத் தெரிந்துகொள்கிறோம்.

கங்கைக்கரைக்கு வந்த இராமன் முதலிய மூவரையும் அங்குவாழும் முனிவர்கள் ‘எங்கள் செல்கதி வந்தது’ என மகிழ்ந்து வரவேற்றுத் தங்கள் தவப்பள்ளிக்கு அழைத்துச்

சென்றனர். இராமனது வருகையை அறிந்த குகன் இராமன் தங்கியிருந்த தவச்சாலைக்கு வருகின்றான். முனிவர்கள் வாழும் இடத்துக்கு அருகில் வசிப்பவன் ஆதலால் தவச்சாலையை எவ்வாறு அணுக வேண்டும். என்பதை அறிந்திருந்தான். இராமனைத் தரிசிக்கச் செல்பவன் வேட்டைக்குச் செல்வது போல. வீரர்களுடன் வில்லும், அம்பும், வாளும் கொண்டு போகலாமா? உடன் வந்த வேடர் கூட்டத்தை வேறுபக்கமாக ஒதுங்கி இருக்க நிறுத்திவிட்டு, வில்லையும், வாளையும் நீக்கிவிட்டு, தூயமனம் உடையவனாய் இராமனிடம் பேரன்பு மிக்கவனாய், தவச்சாலையின் வாயிலை அடைந்தான். உள்ளே முனிவர்களுடன் தங்கி உரையாடிக் கொண்டிருந்த ராமனைப் பார்க்க இயலவில்லை. தவச்சாலையின் வாயிலில் இலக்குவன் காவல்காத்து நிற்பதைப் பார்க்கிறான். தவப்பள்ளியின் வாயிலை அடைந்த குகன் கூவி அழைக்க, ''கூவா முன்னம் இளையோன் குறுகி, நீ ஆவான் யார்? என அன்பின் இறைஞ்சினான், தேவா நின்கழல் சேவிக்க வந்தனன், நாவாய் வேட்டுவன் நாயடியேன் என்றான்'' என்பார் கம்பர். குகன் கூவி அழைப்பதற்கு முன்னமே, இலக்குவன் அவனை நெருங்கி, 'நீ யார்' என்று கேட்க, குகன் அன்போடு இலக்குவனை வணங்கி, ''தேவா நாய் போன்றவனாகிய அடியேன், கங்கையில் படகு விடும் வேடர் குலத்தினன். என் பெயர் குகன். உனது திருவடிகளைச் சேவித்து வாழ்வுபெற வந்தேன் என்றான். இலக்குவனை, இராமனாக நினைத்துக் கும்பிட்ட கையோடு நின்ற குகன், இராமன் இதுவரை நேரில் பார்த்தறியாதவன் என்பதோடு, நின்கழல் சேவிக்க வந்தனன், என்றது அவனது மாசற்ற அன்பைக் காட்டுகிறது.

இலக்குவன் குகனைப் பார்த்து, 'இங்கேயே நில்' என்று கூறிவிட்டு, தவச்சாலைக்குள் சென்று இராமனைத் தொழுது ''கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன் நமிர்ந்த கூட்டச் சுற்றமும், தானும் உள்ளம் தூயவன் தாயின் நல்லான், எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை குகன் ஒருவன்'' என்றான் தன்னைப் பார்த்ததும் தேவா' நின்கழல் சேவிக்க வந்தனன் என்று வணங்கிக் கூறியதும் தன்னையே இராமன் என நினைத்துப் பேசியதும் இலக்குவனைச் சிந்திக்கச் செய்கிறது. குகனது நல்ல மனத்தைத் தெரிந்து கொண்டதால் உள்ளம் தூயவன் என்றான். குகனுடைய கட்டளைப்படி–அடக்கமாக தவச்சாலையின் புறத்தே பணிவுடன் ஒதுங்கி நின்று வேட்டுவ வீரர்களைப் பார்த்ததால் 'சுற்றமும் தூயவன்' என்றான். தேனும் மீனும் கொண்டு வந்த தாயன்பைக் கண்டு 'தாயினும்

நல்லவன்' என்றான் கங்கையைக் கடந்து மறுகரை செல்ல உதவுவான் என்பதை எண்ணி ''எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை குகன்'' என்றான். இராமபிரான் ஏற்றுக் கொள்வதற்கும் முன்பே, இலக்குவன் குகனது நல்ல மனத்தை அன்புள்ளத்தை அறிந்து அவனுடைய தோழமையை ஏற்றுக் கொண்டான் என்பதை இந்த அறிமுகம் உணர்த்தும்.

இலக்குவன் கூறியவைகளைக் கேட்ட ராமன், 'அவனை நீ என்பால் அழைத்தி' நீ சென்று அவனை என்னிடம் அழைத்து வருவாயாக' என்றான். உள்ளே செல்ல ராமன் அனுமதி வழங்கிவிட்டான் என்பதால் உள்ளே போகச் சொல்லிவிட்டு தான் வாயிலில் நின்று விடக்கூடாது அது மரியாதையல்ல என்பது கருதி 'அழைத்து வா' என்பதைப் புரிந்து கொண்ட இலக்குவன் பரிவோடு வருக' என்று கூறி வரவேற்றான். குகன் நிறைந்த அன்போடு விரைந்து வருகிறான். 'கண்ணனைக் கண்ணில் நோக்கிக் கனிந்தனன்', ''கருணை நிறைந்து, அகமும்புறமும் துளும்பி வழிந்து, உயிர்க்கெலாம் களைகண் ஆகி, தெருள் நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற கண்களை உடையவனல்லவா'' இராமபிரான். அந்தக் கண்ணைக் கண்ணால் காண்கிறான். காதால் கேட்டதுண்டு. முதல் முதல் கண்களால் காணும் பேறு கிடைத்ததை எண்ணி மனம் கனிந்தான். இருண்ட தலைமுடி தரையில் விழும்படி வணங்கி எழுந்தான். மேனி வளைத்து, வாய்புதைத்து நின்ற குகனைப் பார்த்த ராமன், தனக்கு அருகில் வந்து அமரும்படி, ''இருத்தி ஈண்டு'' என்றான். என்று கூறியும் குகன் 'இருந்திலன்' தன்னடக்கம் காரணமாக கைகட்டி வாய்புதைத்து நின்றவன், அளவு கடந்த அன்பைப் பொழிபவனாய் இராமனைப் பார்த்து ''பெருமானே! தேவரீருக்கு உணவாகத்'' தேனும் மீனும் திருத்தினன் கொணர்ந்தேன்'' என்றான். உண்பதற்கு ஏற்ற விதத்திலே மீனைப்பக்குவப்படுத்தித் தேனிலே ஊறவைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். தங்கள் திருவுள்ளக் கருத்து எதுவோ? என்று பணிவு தோன்றக் கூறினான். குகன் கூறிய மொழிகளைக் கேட்ட ராமபிரான் உடனிருந்த விருத்த மாதவரை நோக்கி, புன்முறுவல் பூத்த முகத்தினனாகப் பேசத் தொடங்கினான். 'என் கொல் திருவுளம்' என்று கேட்ட குகனுக்குக் கூறிய மறுமொழி தான் என்றாலும் முனிவர்களை நோக்கிப் புன்சிரிப்புடன் பேசுவதற்குக் காரணம் என்ன? தவமுனிவர்கள் உண்ணத் தகாத மீனைத் தேனிலே தோய்த்து அன்போடு குகன் கொடுக்கிறான். அருகில் அமர்ந்திருந்த முனிவர்கள்

இச்செயலைக் கண்டு அருவறுப்போடு முகத்தைச் சுளிக்கின்றனர். அவர்களது வெறுப்பைப் பார்த்த ராமன் அம்முனிவர்களுக்கு குகனுடைய அன்பின் பெருக்கை உணர்த்த நினைத்து அவர்களைப் பார்த்து இளநகை செய்து கூறலானான். "அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல் தெரிதரக்கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே" கையுறையாகக் கொண்டு வந்த பொருள் எதுவாயினும், உள்ளம் உவந்து அன்பின் முதிர்வால் பக்திபுலப்படக் கொண்டு வந்தவை என்பதால் தேவாமுதத்தை விடச்சிறந்ததல்லவா? மீனைத் தேன் கலந்தா கொண்டு வந்தான். அன்பில் தோய்த்துக் கொண்டு வந்ததல்லவா?

"பரிவினில் தழிஇய தென்னில் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனம் அன்றோ"

என்ற இராமபிரான் சொற்களைக் கவனிக்க வேண்டும். அன்புடன் கொண்டு வரப்பட்டவை "ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து, உண்மை பேசி உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமுதம்" என்ற ஔவையார் பாடல் நினைவு கூறத்தக்கது. 'பவித்தரம்' மிகவும் தூய்மையானது என்னைப் போன்றவர்களுக்கும் ஏற்றுக் கொள்வதற்கு உரியதே. "இனிதின் நாமும் உண்டனம் அன்றோ" என்ற ராமனுடைய சொற்கள் முனிவர்களையும் நிறைவு செய்து, குகனையும் முழுமையான மன நிறைவு கொள்ளச் செய்துவிட்டது. காளத்தி வேடனான கண்ணப்பன் படைத்த ஊன் உணவை காளத்தி நாதன் ஏற்றுக் கொண்டது போல, கங்கை வேடன் கொண்டு வந்த மீனையும், தேனையும் இராமன் ஏற்றுக் கொண்டு "உண்டனம் அன்றோ" என்றது பொருத்தம்தானே!

பின்னர், ராமன் குகனை நோக்கி, "நாங்கள் இன்று இங்கு தங்கி நாளை கங்கையைக் கடந்து–கானகம் செல்ல வேண்டும். நீ உனது சுற்றத்தோடும் சென்று உனது ஊரிலே தங்கிவிட்டு, நாளைக் காலையில் நாவாய் கொண்டு வருவாயாக" என்றான். இதனைக் கேட்ட குகன் பேசுகிறான்.

கார்குலாம் நிறுத்தான் கூறக் காதலன் உணர்த்துவானிப்
பார்குலாம் செல்வநின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலா கள்வனேன்யான் இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆனது ஐய! செய்குவென் அடிமை என்றான்.

பூமி முழுவதையும் ஆளும் செல்வத்துக்கு உரிமை உடைய பெருமானே! நீ நாட்டை விட்டு நீங்கி, நகரத்தை–அரண்மனை வாழ்வை அகன்று, உற்றார் உறவினரைவிட்டு, அரசகோலத்தை அகற்றி, சடைமுடியும் மரவுரியும் தரித்து இந்தத் தவக் கோலத்தை மேற்கொண்டிருக்கிறாய்! இந்த கோலத்தில் உன்னைப் பார்த்த எனது கண்களைப் பறித்து எறிந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் உன்பால் அன்புடையவனைப் போல நடிக்கின்ற கள்வன் நான். இத்தகைய துன்பத்தில் நீ இருக்கும் நிலையைப் பார்த்ததும், உன்னைவிட்டுப் பிரிய இயலாதவனாய் இருக்கிறேன். உனக்கு அருகிலே இருந்து என்னால் இயன்ற பணிகளைச் செய்வேன் என்றான். சேக்கிழார் கூறும் திண்ணனார் கண்ணைத் தோண்டி காளத்தியப்பருக்குச் சாத்திக், கண்ணப்பநாயனார் ஆன வரலாற்றுக்கு முன்னோடியாகக் குகன். "கண்ணை ஈர்கிலாக் கள்வன் என்று கூறிய செய்தியாகக் கம்பர் கூறுவது நினைவு கூறத்தக்கது.

குகன் கூறியவைகளைக் கேட்ட ராமனை, "அன்னான் கூறிய கொள்கை கேட்டான்" என்பார் கம்பர். குகனுடைய பேச்சில், அவனுடைய மனம் கருதியதை ராமன் உணர்ந்தான். சீதையைப் பார்க்கிறான். தம்பியின் திருமுகத்தைப் பார்க்கிறான். 'பிரிவிலும் சுடுமோ பெருங்காடு' எனக்கூறி இராமனுடன் காட்டுக்கு வந்தவள் சீதாப்பிராட்டி, "நாருளதனுவுளாய் நானும் சீதையும் யாருளர் எனின் உளேம்" என்று கூறி இராமனைப் பிரியாது உடன் வந்தவன் இலக்குவன். இவ்விருவரும் ராம்னிடம் கொண்டிருந்த அன்பு அளவிடற்கரியது. இந்த இருவருக்கும் நிகரான பேரன்பு மிக்கவனாகத் திகழ்கிறான் குகன் என்பதை உணர்ந்த ராமன். 'தீராக் காதலனாகும்" எனக்கூறி, கருணையில் மலர்ந்த கண்களை உடையவனாய், யாதினும் இனிய நண்ப! இருத்தி ஈண்டு எம்மோடு" என்றான். "யாரினும் இனிய நண்ப" என்று கூறாது. 'யாதினும்' எனக் கூறியதால் உயர்திணையே அன்றி, அஃறிணைப் பொருள்களிடமும் அன்பு கொள்ளுதல் வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கிறதல்லவா?

இராமபிரான் "இருத்தி ஈண்டு எம்மோடு" என்று அனுமதி தந்த மகிழ்ச்சியில் திளைத்த குகன் தனது படைவீரர்களை அழைத்து, தவச்சாலையைச் சுற்றிக் காவல் புரியும்படி கட்டளை இட்டான். தானும், வடிசிலை பிடித்து

வாளும் இடையில் கட்டி, கூர்மையான அம்புகளைக் கையில் ஏந்தி இடியுடன் கூடிய மேகம்போல இராமன் முதலிய மூவரையும் காத்து நின்றான். காவல் காக்கும் பொறுப்பை மிகச் சிறப்பாகச் செய்த குகன். ராமன் அயோத்தியின் அரசுரிமையைவிட்டு நீங்கி வனம்புகுந்தது ஏன்? எனத்தன் மனத்தை அரித்துக் கொண்டிருந்த கேள்விக்கு விடை தெரிந்து கொள்ள விரும்பினான். யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வது!

"திருநகர் தீர்ந்த வண்ணம் மானவ! தெரித்தி என்ன
பருவரல் தம்பிகூற, பரிந்தவன் பையுள் எய்தி
இருகண் நீர் அருவி சோர, குகனும் ஆண்டிருந்தான் என்னே!
பெருநிலக்கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலும் என்னா"

தன்னுடன் காவல் காத்து நிற்கும் தம்பியைக் கேட்கலாம் என நினைத்து, "ராமன் நாட்டைவிட்டுக் காட்டுக்கு வரக்காரணம் என்ன? என்று இலக்குவனைக் கேட்க, கைகேயி வரம் கேட்டது, தயரதன் முதலில் ம்றுத்தாலும் ஈந்தேன் இவ்வரம் என்று வரம் தந்தது.

'ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள நீபோய்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்க அருந்தவம் மேற்கொண்டு
பூமிவெங் கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்டாண்டின் வா என்று கைகேயி கூறியது ஆகிய நடந்து

முடிந்த துன்பக் கதையை இலக்குவன் எடுத்துக் கூறினான். எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்ட குகன் இராமனுக்காக மனம் இரங்கி, மிகவும் வேதனைப்பட்டு, இரு கண்களில் இருந்தும் கண்ணீர் அருவி போலச் சோர்ந்து விழ, துன்பத்தில் துவண்டான். "ஐயோ! நிலமகள் இராமபிரானால் ஆளப்படப் பெருந்தவம் செய்திருந்தும், அந்த பாக்யத்தைப் பெறவில்லையே" என்று கூறி வருந்தினான். தவச்சாலைக்கு வெளியே நின்று காவல்புரியும் தொழிலை காலை வரை விடாது செய்தான். இரவு நெருங்கச் சூரியன் மறைந்தான்.

விரிஇருளள்பகையை ஓட்டி, திசைகளை வென்று, மேல் நின்று
ஒரு தனித் திகிரி உந்தி, உயர்புகழ் நிறுவி நாளும்

இருநிலத் தெவர்க்கும் உள்ளத்திருந்து அருள் புரிந்து வீந்த
செருவலி வீரன் என்ன, செங்கதிர்ச் செல்வன் சென்றான்.

சூரிய குல வேந்தனான தயரதன், பகையை அழித்து திசைகளை வென்று ஆணையாகிய சக்கரத்தைச் செலுத்தி, உயர்ந்த புகழை நிலைநாட்டி, உலக மக்கள் எல்லோருள்ளத்தும் இடம்கொண்டு அருள்புரிந்த வேந்தனல்லவா! அப்பேரரசன் மறைந்தது போலப் பரிதி மறைந்தான் என, தயரதனைச் சூரியனோடு உவமித்துக் கூறுவது இன்புறத்தக்கது.

இராமனும், சீதாப்பிராட்டியும் நிலத்தில் ஒழுங்காகப் பரப்பப்பட்ட நாணல் புல்லாலான படுக்கையிலே படுத்து உறங்குகின்றனர். இலக்குவனோ அவர்களுக்குக் காவலாக, கையிலே வில்லை ஏந்தியவனாகக் காலை வரை கண்களை இமைக்காமல் காத்து நின்றான். யானைக் கூட்டத்தைப்போல வேடுவர் கூட்டம் தவச்சாலையைச் சுற்றி வந்து காவல் புரிந்தனர். குகனோ இராம இலக்குவர்களுக்கும் பிராட்டிக்கும் நேர்ந்த துன்பத்தை நினைத்துப் புழுங்கி, நொந்து, நைந்த மனத்தவனாய், இரவு முழுவதும் கண் விழித்தவனாக, நின்று கொண்டு உறங்காவில்லியாகக் காத்து நிற்கும் இலக்குவனைப் பார்ப்பான், கற்களுக்கு இடையே பரப்பிய நாணல்புல் படுக்கையில் படுத்திருக்கும் ராமனைப் பார்ப்பான். அவர்களுக்கு நேர்ந்த இன்னலை எண்ணி, தாங்கொணாத் துயரால் கண்ணீர் அருவிவிழும் ஒரு குன்றைப் போல நின்று கொண்டிருந்தான். காலை ஆயிற்று பிறவா வெய்யோன் பிறந்தான். தடாகத்தில் உள்ள தாமரை செஞ்ஞாயிற்றைக் கண்டு மலர்ந்தது. சீதாபிராட்டியின் முகத்தாமரை, ராமனாகிய கருஞாயிற்றைக் கண்டு மலர்ந்தது. இராமன் காலைப்போதிலே செய்ய வேண்டிய நியமங்களைத் தவறாமல் செய்து முடித்து. முனிவர்களுடன் சென்று குகன் வரக் கண்டான். அன்புள்ளம் கொண்ட குகனைப் பார்த்து 'ஐ யனே! கங்கைப் பேராற்றைக் கடந்து நாங்கள் மறுகரையில் உள்ள கானகம் சேர வேண்டும். அதற்குரிய நாவாய் விரைவில் கொண்டு வருவாயாக' என்றான். படகு கொணரப் பணித்த இராமன் சொற்கேட்ட குகன், 'இராமன் தன்னைப் பிரிந்து சென்று விடுவாரோ என்ற கவலையில் கண்கள் நீரைச் சொரிய, உயிர் துடிதுடிக்க இராமபிரானது திருவடிகளை விட்டு நீங்கமாட்டாதவனாய், இராமனை, சீதாபிராட்டியோடு சேர்த்து இருவர்

திருவடிகளிலும் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று தனது எண்ணத்தை கூறத் தொடங்கினான்.

"பொய்ம்முறை இலரால் எம் புகலிடம் வனமேயால்
கொய்ம்முறை உறுதாராய்!குறைவிலெம் வலியேமால்
செய்ம்முறை குற்றேவல் செய்குதும் அடியோமை
இம்முறை உறவென்னா இனிதிரு நெடிது தெம்மூர்"

பெருமானே!எங்கள் மக்கள் வஞ்சகம் இல்லாதவர்கள் உள்ளம் தூயவர் என்பதை " பொய் முறை இலா" என்றான். நாங்கள் வாழும் இடமும் இக்காடேயாகும். எந்தக் குறையும் இல்லாதவர்கள் நாங்கள். பகைவரை அழிக்கும் வலிமை மிக்கவர்கள். செய்ய வேண்டிய முறைப்படி உங்களுக்குப் பணிவிடை செய்வோம். எங்களை உங்கள் சுற்றத்தவராகவே கருதி எங்கள் ஊரிலேயே தங்கி இருக்கலாமல்லவா? காட்டில் வாழவந்த நீங்கள், நாங்கள் வாழும் இந்த காட்டில் வாழலாமல்லவா? உணவாகத் தேனும் தினையும் உண்டு. தேவர்களும் விரும்பி உண்ணத்தக்க உணவுதானே! முன்பு தேனும் மீனும் கொண்டு வந்து கெர்டுத்ததை உண்டனம் அன்றோ என்று கூறியதை உணர்ந்து இப்போது 'தேனுளதினையுண்டால் தேவரும் நுகர்தற்காம்'என்கிறான். உடலிருக்கும் வரை பணி செய்ய இயலும் என்பதை "ஊனுள துணை நாயேன் உயிருள"என்கிறான். தேவியோடு விளையாடக் காடுகள் உள்ளன. நீராடுவதற்குக் கங்கை இருக்கிறது. எனவே நான் இருக்கும் வரை எங்களுடன் நீங்கள் இருக்கலாம் எங்கள் இருப்பிடம் செல்வோம். வாருங்கள் 'எம்பால் நட' என்றது கருதத்தக்கது.

மெல்லிய நூலாடை போன்று மென்மையான தோல் இருக்கிறது. அதனை ஆடையாக உடுத்திக் கொள்ளலாம். சுவை மிகுந்த காய்களும் கனிகளும் நிறையக் கிடைக்கும். தூங்குவதற்கு நல்ல கட்டில் போன்ற 'பரண்'உள்ளது. தங்குவதற்கு நல்ல குடிசைகள் உள்ளன. விரைந்து சென்று எதையும் கொண்டு வரமுடிந்த வலிமைமிக்க கால்கள் இருக்கின்றன. தடுப்பவர்களைக் கொல்ல வல்ல வில்லேந்திய கைகள் உள்ளன. வானுலகத்தில் உள்ள பொருள்கள் என்றாலும் விரைந்து கொண்டு வருவோம். எனது கட்டளையை நிறைவேற்ற ஐந்து லட்சம் வீரர்கள் உள்ளனர். எங்கள் குடிசையில் நீங்கள் ஒரு நாள் தங்கினாலும் எங்களுக்கு அதைவிடச் சிறந்த வாழ்வில்லை. எனவே எங்களிடம் செல்ல

எழுக என்றெல்லாம் கூறி, இருகரம் கூப்பி வேண்டி நிற்கிறான் குகப்பெருமான். குகன் கூறியதைக் கேட்ட இராமபிரான், கருணைமிகுந்த மனத்தவனாய், சிறிதே நகைத்து பிறகு குகனைப் பார்த்து, ''வீரனே தாய் கூறியபடி புண்ணிய நதிகளிலே நீராடி அந்நதிக் கரைகளிலே வாழ்ந்து தவம் செய்யும் புனித முனிவர்களை வழிபட்டு சில நாட்களிலே திரும்பி உன்னிடம் வருவோம் என்றான். கானக வாழ்க்கை பதினாலு ஆண்டுகள் எனினும், அன்பால் அழைக்கும் குகனுக்கு ஆறுதலாக எண்ணியச் சில நாளில் குறுகுதும்'என்றான்.முன்பும் கோசலையைத் தேற்ற வேண்டி இராமன் எத்தனைக்குள ஆண்டுகள் ஈண்டவை பத்தும் நாலும் பகல் அலவோ'என்று கூறியது நினைவுக்குரியது. இராமபிரானது மனக்கருத்தைப் புரிந்துகொண்ட குகன்,எப்படியும் கானகம் செல்வது தடைப்படாது. நாமும்தான் உடன் செல்வோமே. நம்முடன் தங்க விரும்பவில்லை என்றாலும் உடன் வருவதை ஏற்றுக்கொள்ளக் கூடுமல்லவா? என்ற எண்ணத்தால் விரைந்து சென்று படகு கொண்டு வந்தான். தாமரைக் கண்ணனாகிய ராமன், அங்கு குழுமியிருந்த முனிவர்களை வணங்கி 'அருளுதீர் விடை'என்று விடைபெற்று, சீதாபிராட்டியுடனும், இலக்குவனோடும் குகன் கொண்டு வந்த படகில் ஏறி ''விடு, நனி, கடிது'' என்றான். குகனும் படகை வேகமாகச் செலுத்தினான். அன்னப்பறவை ஒன்று தண்ணீரில் நீந்திச் செல்வது போல படகு நதியில் சென்றது இராமனைப் பிரிந்து துன்பம் வருத்த-முனிவர்கள் எல்லோரும் தீயில் பட்ட மெழுகு போல மனமுருகி, இரங்கி நின்றனர். படகு கங்கையாற்றைக் கடந்து மறுகரை சேர்ந்தது. மூவரும் படகிலிருந்து இறங்கினர். அப்போது இராமபிரான் குகனை நோக்கி ''சித்திரகூடத்தில் செல்நெறிபகர்'' என்றான். சித்திர கூடத்துக்குச் செல்லும் வழிகூடத் தெரியாத இவர்கள் காட்டிலே எப்படி வாழப் போகிறார்கள்? காடுகளில் ஆங்காங்குச் செடி கொடிகளை விலக்கி வழியை உண்டாக்கிக் கொண்டு செல்லவேண்டியிருக்குமே? உண்ணத்தகுந்த காய்கனிகளை எப்படித் தேடி உண்ணுவார்கள்? காட்டிலே தனித்துக் குடிசை அமைக்க இவர்களுக்குத் தெரியுமா? குடிக்கும் தண்ணீருக்கு நெடுந்தூரம் செல்ல வேண்டியிருக்குமே? தின்பதற்குரிய கிழங்குகள் நிலத்தைத் தோண்டித்தானே எடுக்க வேண்டும்! இவர்களால் முடியுமா? என்றெல்லாம் எண்ணியவனாக இராமபிரானைப் பார்த்து, எங்கள் ஊரில்தான் தங்க மறுத்து விட்டாய். உங்களோடு நானும் உடன்

வருகிறேன். எனக்கு அனுமதி தாருங்கள் என்று கூறி, தான் அவர்களுடன் சென்றால் எப்படியெல்லாம் உதவியாக இருப்பான் என்பதை எடுத்துக்கூறத் தொடங்கினான்.

இராமனிடம் கொண்ட பக்திப்பெருங்காதலால் தனதுயிரையும் ராமபிரானுக்கு ஈந்துவிடும் பரிவுடைய குகன், ராமனது திருவடிகளில் வீழ்ந்து தொழுது, ''உத்தம! அடிநாயேன் ஓதுவது உளது'' என, நாயினும் கடையேன் நான். நான் கூறுவதொன்று உண்டு எனத் தொடங்கிக் குகன் கூறுவது கல்லையும் உருகச் செய்துவிடும். கருணைக்கடலான ராமன் மனம் கனியாதா? தான் உடன் வருவதால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைச் சொல்கிறான். ''உங்களோடு வருகின்ற பேறுகிடைக்குமானால், காட்டில் வழிகளை உண்டாக்கிக் கொண்டு செல்ல வேண்டும். செடிகொடிகளை விலக்கி, வழியை அமைத்துத்தர என்னால் இயலும். உண்ணத்தகுந்த காய், கனி, தேன் முதலியவைகளைத் தேடி கொண்டு வரும் திறமை எனக்குண்டு. செல்லுமிடங்களில் எல்லாம் தங்குவதற்குரிய குடிசைகளை அமைக்க என்னால் முடியும். ஆனால் ஒரு நொடியும் உங்களைப் பிரிந்து வாழ என்னால் முடியும். ஆனால் ஒரு நொடியும் உங்களைப் பிரிந்து உங்களுக்குத் தீமை எதுவும் நெருங்காது. ஓடி ஒளியச் செய்வேன். நீங்கள் விரும்பிய பொருள் எதுவாயினும் அது எங்கிருந்தாலும் தேடிக் கொண்டு வந்து தருவேன். செல்லும் வழி மலையேயாயினும் தோண்டி வழி செய்வேன். கவலை முதலான உண்ணத்தகுந்த கிழங்குகளைத் தோண்டி எடுப்பேன். குடிப்பதற்குரிய நல்ல நீரை நெடுந்தூரமாயினும் தேடிக்கொண்டு வருவேன். துணைக்கு வில்லேந்திய வீரர்கள் உள்ளனர். எவருக்கும் அஞ்சாமல் துணை நிற்பேன். எப்போதும் உனது மலரடிகளை விட்டுப் பிரியாமல் உடன் உறைவேன். உனது திருவுள்ளம் விரும்பினால் நான் உடன் வருவதோடு எனது சேனையையும் உடனழைத்து வருகிறேன். தீங்கு செய்ய யாரேனும் வந்தால் போர் செய்து அவர்களை அழித்து நானும் அழிவேன். அடைக்கலம் புகுந்தவர்களை மாற்றார்களிடம் காட்டிக் கொடுத்தான் என்ற வசைச் சொல்லுக்கு ஆளாக மாட்டேன். உங்களோடும் உடன் வருவேன் என்றான்.

இவ்வாறு கூறிய குகனுடைய ஆழ்ந்த அன்பின் பெருக்கை உணர்ந்த ராமன்''

அன்னவன் உரைகேளா அமலனும் உரை நேர்வான்
என்னுயிர் அனையாய்நீ இளவல் உன் இளையான் இந்
நன்னுதலவள் நின் கேள் நளிர் கடல் நிலம் எல்லாம்
உன்னுடையது நான் உன் தொழில் உரிமையின் உள்ளேன்''
என்றான்.

குகனே! நீ எனது உயிரினும் சிறந்தவன். எனது தம்பி இலக்குவன் உனது தம்பி. சீதை உனது கொழுந்தி. எனக்குரிய கடல் சூழ்ந்த உலகெல்லாம் உனதேயாகும். நான் உனது ஏவல் தொழிலுக்கு கட்டுப்படும் உரிமை உடையவனாவேன் என்கிறான். ராமன் குகனை உயிரினும் மேலானவனாகக் கருதிப் பேசுகிறான். ஏன் கங்கையின் வடகரையிலிருக்கும் வரை அங்கு கூடியிருந்த முனிவர்கள் யாரும் காட்டிலே ராமன் எப்படி காலம் தள்ளப் போகிறான் என்று கவலைப்பட்டு கேட்கவில்லையே 'எங்கள் செல்கதி வந்தது' என்று கூறி வரவேற்று தங்கள் ஆன்ம முன்னேற்றுத்துக்கு வழி தேடிக் கொண்டவர்கள் தானே! குகன். ராமன் என்ன செய்வானோ? எப்படி வாழப்போகிறானோ என்ற தாயன்பால் தவிக்கிறானல்லவா? ராமன் மனமுருகி குகனுடைய அன்பு வலைக்குக் கட்டுபடுகிறான் 'என் உயிரணையாய்' எனக் கூறுகிறான்.

வால்மீகி, துளசி போன்ற எவரும் கூறாதது ''இராமன் குகனைச் சகோதரன்'' என்று ஏற்றுக் கொண்டது. கம்பன் மட்டுமே ''என் உயிர் அணையாய் நீ இளவல் உன் இளையான். நன்னுதலவள் நின்கேள்'' என்று இராமன் கூறியதாகப் பாடுகிறார். ''ஆழ்வார்கள் தந்த தமிழ் அமுதுண்டு, அவ்வனுபவத்தை அரிதில் பெய்து வாழ்வார்கள் பயன்பெற'' ஒரு பாரகாவியத்தைப் பாடிய கவிவேந்தன் அல்லவா கம்பன். ஆழ்வார்களின் பாசுரங்களிலே ஆழ்ங்கால்பட்டவன் ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும்'' என்ற திருவாய் மொழித் தொடரே 'ஒரு நொடி வரை உம்மைப் பிரிகிலன் எனக் குகன் கூறியதாக் கம்பனைப் பேசச் செய்தது. திருமங்கையாழ்வாரின்

'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
    இரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கி உன்தோழி
    உம்பி எம்பியென் றொழிந்திலை உகந்து
தோழன் நீயெனக் கிங்கொழி கென்ற
    சொற்கள் வந்தடியேன் மனத்திருந்திட

ஆழிவண்ணநின் அடியினை அடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத் தம்மானே!''

என்ற திருப்பாசுரம் கம்பனுக்கு வழிகாட்டியாய் இருக்கிறது. 'உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்' என்று குறள் கூறும் நட்பிலக்கணத்துக் கேற்றபடி முன்பு ஒரு முறையும் பார்க்காத, ஒத்த உணர்வுள்ள குகனுடன் ராமன் உடன் பிறந்தவர்களாகப் படைத்துக்காட்டிய சிறப்பு கம்பனுக்குப் பெருமை சேர்க்கிறதல்லவா? அசோகவனத்தில் சிறையிருந்த சீதாப்பிராட்டி இராமனைப்பற்றிய நினைவுகளை எண்ணி வருந்திய செய்திகயைக் கூறும் கம்பன்.

''ஆழ்நீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பி நின்தம்பி; நீ
தோழன் மங்கை கொழுந்தி எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்''

என்ற பாடலில் திருமங்கையாழ்வாரின் சொல்லையும், பொருளையும் எடுத்தாண்டிப்பதைக் காண்கிறோம். சீதையைக் கொழுந்தி என்றதால், இராமன் குகனைத் தனக்கு மூத்தவனாகவே கருதினான் எனக் கொள்ளலாம். தம்பியின் மனைவிதானே இன்றும், 'கொழுந்தி' எனப்படுகிறாள். கேள். தோழி என்பதெல்லாம் 'கொழுந்தி' என்ற பொருளில் வந்தவை எனலாம். எந்த ராமாயணத்திலும் கூறாத—எந்தப் பெருங்கவிஞனும் எண்ணிப் பார்க்காத நிலையிலே, திருமங்கையாழ்வார் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர் என்பதால் இறைவனே உணர்த்த உரைத்தாரோ? குகனுடைய அன்புப் பிடியில் கட்டுண்ட இராமன் குகனைப் பார்த்து மேலும் பேசுகிறான். ''துன்பம் உளது என்றால் அடுத்து சுகமும் இருக்குமல்லவா? அந்தச் சுகம் இந்தப் பிரிவுத் துன்பத்துக்குப் பிறகு உளதாகும். இடையிலே இப்படி ஒரு பிரிவு இருக்கிறதே என நினைக்காத, -முன்பு நாங்கள் நான்கு பேர் முடிவுள்ளது என நினைக்காத—முடிவில்லாத பேரன்புடைய உன்னோடு சேர்ந்து இப்போது நாம் ஐந்து பேர் சகோதரர்களாய்விட்டோம். வனத்தில் வாழும் காலத்தில் ஏதேனும் துன்பம் நேர்ந்தால் தடுத்துக் காக்க உனது தம்பியாகிய இலக்குவன் இருக்கிறான். நான் என உரிய நீ உனது நாட்டுக்கேகி வாழ்வாயாக. நான் வடதிசை வரும் போது உன் இருப்பிடத்துக்கு வருவேன். சொன்ன சொல் மாறமாட்டேன். அங்கு அயோத்தியில் உள்ள குடிமக்களையும், சுற்றத்தினரையும் காப்பதற்கு உனது மற்றொரு தம்பியான பரதன் இருக்கிறான். நீ என்னுடனே வந்து விட்டால்,

சிருங்கிபேரத்துக் குடிமக்களைக் காக்க யாருள்ளார்? உனது எனது சுற்றம்தானே! அவர்கள் ஆள்வாறின்றி வருந்தலாமா? எனது உறவினர்களான இவர்களை எனது கட்டளைப்படி காத்து வருவாயாக'' என்று கூறிய இராமன், அதனையும் மனது கொள்ளாது குகன் படும் அவதியைப் பார்த்து நானே தலைவன். நீ என் ஏவல் வழி நின்று தனது சுற்றத்தவர்களான வேடுவர்களைக் காத்து ஆட்சி புரிந்து வருவாயாக என்றான். குகன் மறுக்கமாட்டாமைக்கு பரதனை எடுத்துக்காட்டாகக் கூற, குகன் மறுத்துப் பேச இயலாது ஒப்புக்கொண்டான்.

''பணிமொழி கடவாதான் பருவரல் இகவாதான்
பிணி உடையான் என்னும் பிரிவினன் விடை கொண்டான்''

என்பது கம்பன் வாக்கு. இராமனைப் பிரியும் பிரிவினால் ஏற்பட்ட துன்பமும் நீங்காது, இராமன் இட்ட கட்டளையையும் மீற முடியாமல், மிக்க நோய்வாய்ப் பட்டவனைப் போலப் பிரிவுத்துன்பத்தால் பிணிப்புண்ட குகன் இராமன் முதலான மூவரிடமும் பிரியா விடை பெற்றுத் தன் ஊர் திரும்பினான். இராமனும், சீதாபிராட்டியும், இலக்குவனும் மரங்கள் அடர்ந்த கானகத்தில், சித்திர கூடத்துச் செல்லும் நீண்ட வழியே சென்றனர். இராமனைச் சந்தித்ததும், நட்புக் கொண்டதும், இராமனால் உடன் பிறவாத்தம்பியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதும், அன்பு கொண்டு பிரியா விடை பெற்றுத்தன் ஊருக்கு மீண்டதுமான குகன் செயலைப் பார்த்தோம். குகன் பரதனைச் சந்தித்ததும், நட்புக் கொண்டதும் கங்கைப் படலத்தில் கூறப்படும் செய்தியாகும் அதனையும் காண்போம்.

கேகயத்திலிருந்து வந்த பரதன் நடந்தது அத்தனையும் அறிந்தான். தயரதன் வானுல கேகியதும்—இராமன் கானகம் சேர்ந்ததும் பரதனைத் துயரக்கடலில் ஆழ்த்தியது. ''காக்குதி உலகம் நின்கடன் அதுஆம்'' எனக் கூறிய வசிட்டர் சொற்களைக் கேட்ட பரதன் ''நஞ்சினை நுகர்'' என நடுங்குவாரினும் அஞ்சினன்.

நன்னெறி என்னினும் நான் இந்நானில
மன்னுயிர்ப் பொறை சுமந்து இருந்து வாழ்கிலேன்
அன்னவன் தனைக் கொணர்ந்து அலங்கல் மாமுடி
தொன் னெறி முறையினில் சூட்டிக் காண்டிரால்

அன்றெனின் அவனொடும் அரியகானிடை
நின்றினி அருந்தவம் நெறியின் ஆற்றுவன்''

என்று கூறி ராமனை அழைத்து வருவதாகச் சொல்லிப்புறப்படுகிறான். நாட்டு மக்களும், நாற்பெரும்படையும் பரதனைப் பின் தொடர்ந்து சென்றனர். பரதன் சேனை சூழ வருவதைக் குகன், கங்கையின் தென்கரையில் இருந்தே பார்த்து விடுகிறான். பரதன் பெருங்கூட்டத்துடன் வருவதைப் பார்த்து ஐயம் கொண்டான்! முன்பின் தெரியாத பதனைப் பற்றி, குகன் ஐயப்படக் காரணம்? பரதனுடைய சூழ்ச்சியின் காரணமாக ஆட்சியை அபகரித்துக் கொண்டு ராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டான்'' என்ற எண்ணத்தில் குகன் இருக்கிறான். இப்படி நினைக்கக் காரணம் யாது? தவச்சாலைக்குள்ளே பெருமானும், பிராட்டியும் உறங்கிக் கொண்டிருக்கின்றனர். வெளியே இலக்குவன் காத்து நிற்கிறான். அவனோடும் குகனும் காத்து நிற்கின்றான். அப்போது இராமன் அரசைத் துறந்து வந்ததேன் என்று ('திரு நகர் தீர்ந்த வண்ணம் மானவ தெரித்தி') இலக்குவனைக் குகன் கேட்க, பரதனைப் புரிந்து கொள்ளாத இலக்குவன் கைகேயியின் சூழ்ச்சியில் பரதனுக்கும் பங்குண்டு என்று நினைத்தான். மனதில் தோன்றிய கோபத்தை குகனிடம் கொட்டி விட்டான். பரதனைப் பற்றித் தவறாகக் குகனை நினைக்க வைத்தது இலக்குவன் பேச்சேயாகும்.

பரதனையும், அவனுடன் வரும் படைகளையும் பார்த்த குகன், ''ராமனுடன் போர் செய்யவோ இப்படை எடுத்தது'' என நினைத்துக் கோபம் கொள்கிறான். குகன் சீற்றத்துடன் நின்ற கோலத்தைக் கம்பன் கூறும் பாடல்:

''குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகை மிக, கண்கள் தீநாற, நாசியில்
புகை உற, குனிப்புறும் புருவப் போர் விலான்''

எடுத்த சீற்றத்தான் என்று கூறிய கம்பர், அந்தச் சீற்றத்தால் உண்டான மெய்பாடுகளை விவரிக்கிறார். பெயர்தான் குகன் ஆனால் ஆற்றலால் எமது பரதனுடன் வந்த பெரும்படையை ஒரு தூசியைப் போலப் பார்க்கிறான். (துகளின் நோக்குவான்) இகழ்ச்சி தோன்றச் சிரிக்கிறான்! கண்களில் தீப்பொறி! நாசியில் புகை! போருக்கு வில்லை வளைக்குமுன் புருவமாகிய வில் வளைகிறது! கோபத்தால்

ஏறிட்டுப் பார்க்கிறான். புருவம் மேலேறி வளைந்து காணப்படுகிறது. வில்வித்தையால் கை தேர்ந்த குகனுடைய இடையிலே உடைவாள் தொங்குகிறது!பற்களால் உதட்டைக் கடித்துக் கொள்கிறான்! தீயெழ விழிக்கிறான். உடுக்கைகளை முழக்குகிறான். கொம்புகள் ஊதச் செய்கிறான்! போர் நெருங்குகிறது என்ற மகிழ்ச்சியை தோள்கள் பூரிக்கின்றன! பரதனுடன் வரும் இப்படை எலிக்கூட்டம். அவைகளை அழித்து நாசமாக்கும் நல்ல பாம்பு நான் என்ற வீரம் கலந்த பேச்சுடன் வேடர் படையைக் கூவி அழைக்கிறான். உலகத்தில் வாழும் 'புலிகளெல்லாம்' ஒரிடத்தில் திரண்டுநின்றது போல அந்த வீரர்கள் வந்து குவிந்தனர். உயிர்களை அழிக்கும் எமன் ஐ ந்து லட்சம் வீரர்களாக வடிவெடுத்து நின்றது போல அவர்கள் தோற்றம் இருந்தது. திரண்டு வந்த படையுடன் கங்கையின் தென்கரையில் வந்து நிற்கிறான். பிறகு தனது படைவீரர்களைப் பார்த்துப் பேசுகிறான். எனது உயிரினும் சிறந்த உற்ற தோழனே இராமனுக்கு இழந்த ஆட்சியை மீட்டுத் தர நிற்கும் எனது முயற்சியைத் தடுக்க வந்த இந்தப் பரதனது சேனையை. விண்ணுலகனுப்ப வேலை தொடங்கி விட்டேன். நீங்கள் எனது கருத்துக்கு உடன்படுவீர்களாக! போர்ப்பறைகள் முழங்கட்டும். வருவதற்குரிய வழிகள் அழிக்கப்படட்டும் யாருக்கும் யாரும் படகு செலுத்தாதீர்! மீறி, கங்கைகக் கரைக்கு வருபவர்களைப் பிடித்துக் கொல்லுங்கள்! என்றெல்லாம் கட்டளை பிறப்பிக்கிறான். மேலும் தன் படைவீரர்களைப் பார்த்துப் பேசுகிறான். "அஞ்சன மேனியனும், எனது ஆருயிர்த்தலைவனுமான இராகவனை அரசாள விடாது. சூழ்ச்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றிய மன்னன் வந்திருக்கிறான்! தீயைக் கக்கும் இந்தச் சிவந்த அம்புகள் இவர்கள் மேல் செல்லாமல் போகுமோ? இவர்கள் மட்டும் எனது அம்புக்குத் தப்பி இராமனிடம் போய் விட்டால் உலகம் என்னை நாய்' என ஏசாதோ? ஆழமும் அகலமும் மிகுந்த இந்த கங்கையைக் கடந்து இவர்கள் அப்பால் போய்விடுவார்களோ? நீ தோழன் இராமபிரான் கூறிய ஒரு சொல், நான் உயிரைக் கொடுத்துக் காக்க வேண்டிய சொல் அல்லவா? ஏழை வேடனான குகன் சேனையுடன் போரிட்டு வெல்லவில்லை என்றாலும், இறந்தாவது போயிருக்கலாமே என உலகம் என்னைப் பழிக்காதா?

இந்த பரதன், இராமனை மூத்தவன் என மதித்திருக்க வேண்டும். புலி போன்ற வலிமை உடைய ஒரு தம்பி இராமனுக்குத் துணை நிற்கிறான். எனத் தம்பியின்

வலிமையையாவது மதித்திருக்க வேண்டும். அது கிடக்கட்டும் என்னை இவன் எப்படி இகழலாம். எனது நாட்டெல்லையைக் கடந்து சென்றால் தானே இராமனுடன் போர் செய்ய இயலும்? மன்னர்களாகிய ·இவர்கள் மார்பில் வேடர்களாகிய நாம் விடும் அம்புகள் சென்று பாயமாட்டாதா? பழி, பாவம், பகை, நட்பு, என்பவற்றையெல்லாம் 'நாடாள்பவர்கள் எண்ணிப்பார்க்க மாட்டார்களா? இவர்கள் ராமனிடம் செல்வது உயிரையும், சேனையையும் உடன் கொண்டு சென்றால்தானே முடியும்? அதற்கு நான் விடுவேனோ? என்னுயிர் என்ன தேவாமுதமோ? புகழுக்கு விலையாக உயிரைத் தரமாட்டேனோ? என்னுடன் தோழமை கொண்டு இராமனுடன் போகாமல் இருந்ததும் நல்லதே ஆயிற்று. இராமனுக்கு செய்ய வேண்டிய கடமையை இப்போதே செய்வேன்! யானைகளையும், குதிரைகளையும் மிகுதியாகக் கொண்ட பெரும்படையுடன் வரும் இப்படையின் பலத்தைக் கங்கையைக் கடந்து தானே காட்ட முடியும்? கோபத்துடன் நிற்கும் வீரர்களே! இவர்களுக்குப் படகு விடுவதை விட மாட்டீர்களோ? ராமபிரானுக்கு முன்னே நாம் உயிர்விடுவது நல்லதல்லவா? காடு சென்ற மாவீரர்களான ராம, இலக்குவர்களுக்கு இப்படை போதாது இறை! இது கிடக்கட்டும் தேவர்களே இவர்களுக்குத் துணையாக வந்தாலும், எனது வில்லாகிய மேகம் அம்பு மழை பொழிய இவர்களது குடல் சிதைய, வீரர்களின் வேலும் வில்லும், வாளும் நொறுங்க, யானைகளும், குதிரைகளும், இறந்துபட, இப்படையைச் சீரழிக்காமல் விடுவேனோ?

இராமன் மரவுரியை உடுக்கும்படி செய்து கைகேயின் மகனான இந்தப் பரதனுடைய படையை என் அம்புகளால் கொன்று குவித்து பிணங்களை கங்கை இழுத்துச் சென்று கடலைத் தூர்க்காதோ? இப்படையைக் கொன்று ஒழித்து, அறத்தின் நாயகனான ராமனே நாடாளும்படி வேடுவர் கூட்டம் நாட்டை மீட்டுத்தந்துது என்ற புகழை அடைய மாட்டீர்களோ? தனக்கு நாட்டை கொடுத்து விட்டு வந்த ராமனுக்கு, நாம் ஆளுகின்ற காட்டையும் தர மனமில்லாதவனாகப் படையெடுத்துவந்த இந்தப் பரதன் செயலைப் பாருங்கள்! முனிவர்களுக்கு உறவினனாக வாழும், ராமபிரான் கோபிப்பானே என நினைக்காமல் போர் முனையில் இவர்களைச் சந்தித்து நான் போரிட்டேனென்றால் ஏழு கடலளவுள்ள பெரும்படை என்றாலும் பசுவுக்கு முன்னால் குவித்த இளம்புல்லைப் போல இச்சேனை அழிந்து

போகாதோ? என்றெல்லாம் கோபாவேசமாகப் பேசி, வேட்டுவ வீரர்களுக்கு உற்சாக மூட்டிக் கொண்டு வில்லைக் கையில் பிடித்தவனாக குகன் கங்கையின் தென் கரையில் நிற்கிறான்.

கங்கைப் பேராற்றின் வடகரையிலே, நாட்டுமக்களும், நாற்பெரும் படையும் புடை சூழ வந்து நிற்கிறான் பரதன். அப்போது, அமைச்சராகிய சுமந்திரர் பரதனை நெருங்கி நின்று பேசுகிறார். "பரதாழ்வானே! அதோ! தென்கரையில் வீரர் கூட்டத்துடன் வந்து நிற்பவன் யார் தெரியுமா?

"கங்கை இரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள் குலத்தனி நாதற்கு உயிர்த்துணைவன் உயர் தோளான்
வெங்கரியின் ஏறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரும் நறும்தண் தார்க் 'குகன்' என்னும் குறியுடையான்"

கங்கையின் இருகரைகளிலுமுள்ள நாட்டுக்கு உரியவன். அளவில்லாத படகுகளுக்குச் சொந்தக்காரன். உங்கள் சூரிய குலத்திலே வந்து அவதரித்த ஒப்பற்ற தலைவனான இராமனுக்கு உயிரினும் இனிய நண்பன். வலிமை மிக்க தோள்களை உடையவன்! ஆண்யானை போன்ற பலம் கொண்டவன். வில்லேந்திய வீரர்களை கொண்ட கடல் போன்ற படை உடையவன். குகன் என்னும் பெயருடையவன் "கற்காணும் திண்மையானவன். கரைகாணாக் காதலான். நிற்காணும் உள்ளத்தான். நெறி எதிர் நின்றனன்" என்றான். உன்னைக் காணும் விருப்பம் மிக்கவனாய் வழியெதிரே நிற்கிறான் என்றான் சுமந்திரன்.

தனது தந்தையின் துணைவரும், அமைச்சருமான சுமிந்திரர் கூறிய உரையைக் கேட்ட பரதன், உவந்த உள்ளத்தனாய், "நமது மன்னனான ராமனுடைய மனத்துக்கு இனிய நல்ல நண்பன் குகன் என்றால் அவன் என்னைக் காண வருவதற்கு முன்பே நானே சென்று அவனைக் காண்பேன் என்றுக் கூறி எழுந்தான்.

"என்றெழுந்த தம்பி யொடும் எழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்க் கங்கைக் கரைக்குறுகி
நின்றவனை நோக்கினான் திருமேனி நிலை உணர்ந்தான்
துன்று கரு நறுங்குஞ்சி எயினர் கோன் 'துண்' என்றான்.

தம்பி பின் செல்ல, அன்பு முன் செல்ல, ஒரு குன்று கால் பெற்று நடந்து சென்றது என்னும்படி சென்று

கங்கையின் வடகரையிலே நின்ற பரதனை–மறுகரையிலிருந்து குகன் பார்க்கிறான். பரதனுடைய திருமேனியின் வாட்டமான நிலையை உணர்ந்தான். திடுக்கிட்டான். மணிமுடிதரித்து, அரசகோலத்துடன் ஆடம்பரமாக வருவான் என்று தான் நினைத்ததற்கு மாறாக, மரவுரியாடை–மாசுபடிந்த உடம்பு, கலைகளை இழந்த சந்திரனைப் போன்ற ஒளியிழந்த முகம்–கல்லும் உருகும்படி குழைந்து உருகும் துன்பம்–இந்தக் கோலத்தை உடைய பரதனைக் கண்டான். ''மன்னவர் நெஞ்சினில் வேடர் விடும் சரம் வாயாயோ'' என்று கூறிப்பிடித்த வில் கையிலிருந்து நழுவ, துன்பத்தால் துவண்டு செயலற்று நின்றான்''. ''விற்கையின்றிடைவீழ, விம்முற்று நின்றொழிந்தான்'', என்பார் கம்பர். இராமன் வனம் சென்றதால் பரதனுக்கு ஏற்பட்ட துக்கத்தைக் காட்டுவதாக அவனது தோற்றம் இருந்தது. இப்படிப்பட்டவனை நாம் தவறாக அல்லவா நினைத்துவிட்டோம். என்ற தன்னிரக்கத்தால் குகன் செயலற்று நின்றான். இவ்வாறு சிறிது நேரம் தன்னை மறந்து, திகைத்து நின்றவன் ஒருவாறு தேறி;

''நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான் அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடம் தலைநின்றான்
துன்பம் ஒரு முடிவில்லை திசை நோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு? என்றான்''

இந்த நம்பி, எனது தலைவனான இராமபிரானை ஒத்திருக்கிறான். இவனுக்குப் பக்கம் நிற்பவனோ, இராமபிரானை விட்டு நீங்காத தம்பியான இலக்குவனை ஒத்திருக்கிறான். இராமன் கொண்ட தவவேடத்தையே தானும் கொண்டிருக்கிறான். இவன்படும் வேதனைக்கு அளவேயில்லை. இராமன் சென்ற தென்திசையை நோக்கித் தொழுதவண்ணம் இருக்கிறான். எம்பெருமானான இராமனுக்குப்பின் பிறந்த தம்பியரும் தவறு செய்வாரோ? இராமனுக்குத் தீங்கிழைக்க வந்திருக்கிறான் என, பரதனை நினைத்தது எவ்வளவு பேதமை! துன்பத்தால் துவண்டு போய் நிற்கிறான். இராமனிடம் நீங்காத அன்புடையவன் இவன் என்பது தெரிகிறது. இவன் மனக்கருத்தைத் தெரிந்து வருகிறேன். அதுவரை வழியைப் ப்ாதுகாத்திருங்கள் என்று, தனது படைவீரர்களுக்குக் கூறிவிட்டு, யாரும் துணையின்றி, தான் ஒருவனே படகில் தனியாக வடகரைக்கு வந்தான். தூரத்தில் நின்று பார்க்கும் தோற்றத்தால் விளங்காத செய்திகள், நெருங்கிப் பக்கத்தில் சென்று பார்ப்பதால் விளங்குமல்லவா? இராமனுடைய பிரிவால்

நேர்ந்த துன்பமும், அப்பெருமானிடம் உலையாத அன்பும் உடையவன் பரதன். அதுபோலவே துன்பமும், அன்பும் கொண்டவன் குகன். ஒத்த அன்பும், உணர்வும் உடைய பரதனை 'கண்டு உணர்ந்து வருகின்றேன்' என்ற நயம் உணரத்தக்கது. இருவரும் சந்தித்து மகிழ்ந்து நிலையைக் கூறும் கம்பன் பாட்டு.

"வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனும் தனை வணங்கும் அவனும், அவனடி வீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினான் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்"

படகை விட்டு இறங்கி வந்த குகன், தன் எதிரிலே தொழுதபடி நின்று பரதனைப் பார்த்து வணங்கினான். 'உங்கள் குலத்தனிநாதற்குயிர்த் துணைவன்' என்று குகனைப் பற்றிச் சுமந்திரன் கூறியதை உணர்ந்த பரதன்–குகனுடைய திருவடிகளில் வீழ்ந்து தொழுதான். எதிர்பாராது கீழே வீழ்ந்து தொழுத பரதனைக் குகன் தந்தையை விட மகிழ்ச்சி மிக்கவராகத் தழுவி எடுத்தான். என்பது பாடல் பொருள். பிரமனும் வணங்கத்தக்க பெருமை உடையவன் என பரதனையும் உயர்ந்தோர் உள்ளத்திலும் உச்சியிலும் வீற்றிருக்கும் பெருமை மிக்கவனாக குகனையும் கம்பர் சிறப்பித்துக் கூறுகிறார். குகனும் பரதனும் மிகச்சிறந்த பாகவ தோத்தமர்கள். இராகவனிடம் ஆழ்ந்த அன்புடையவர்கள் ஒருவர் மற்றவரை உயர்வாக மதிக்கும் பண்பு கொண்டவர்கள். தன்னைத் தாழ்த்தியும் மற்றவரை உயர்த்தியும் பேசுவது ஸ்ரீவைஷ்ண சிரேஸ்டர்களின் இயல்பு. தன்வீட்டைக் குடிசை எனவும், மற்றவர் வீட்டைத் திருமாளிகை எனவும் கூறிக் கொள்வர். தன்னை அடியேன், எனவும் பிறரை 'தேவரீர்'எனவும் குறிப்பிட்டுப் பேசுதல் வழக்கம் பாகவத சிரேஷ்டர்களான பரதனும் 'குகனும்' ஒருவரையொருவர் மதித்து, வணங்கித் தழுவி மகிழ்ந்தனர். பரதனை, தந்தையினும் களி கூரத் தழுவிய குகன், 'பரதன் எதற்கு வந்தான்' என்று தன் மனத்தை அரித்துக் கொண்டிருந்த வினாவுக்கு விடை தெரிந்து கொள்ள விரும்பினான். எதார்த்தமானவன். பொய்முறையறியாத நல்ல மனம் உள்ளவன் என்பதால், "நீ இங்கு வந்தது ஏன்?" என்று நேராகவே கேட்டுவிடுகிறான். "மூத்தவன் இருக்க இளையவன் அரசாள்வது முறையல்ல. என்று தந்தை முந்தையோர் முறையிலிருந்து வழுவி விட்டார், அந்தத் தவறை நீக்க, (இராமபிரானை) மன்னனை அழைத்துக்

கொண்டு போக வந்தேன்' என பரதன் கூறிய பதில் குகனை மகிழ்ச்சிக் கடலில் ஆழச் செய்து விடுகிறது.

"கேட்டனன் கிராதர் வேந்தன்; கிளர்ந் தெழும் உயிர்ப்பனாகி
மீட்டு மண்ணதனில் வீழ்ந்தான்; விம்மினன் உவகை வீங்க
நீட்டரு மேனிமைந்தன் சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய்யில் உள்ளத்தன் புகலலுற்றான்"

பரதனுடைய சொற்களைக் கேட்ட வேடுவர் வேந்தனான குகன் பொங்கி எழுந்து மகிழ்ச்சியில் விம்மினான். உள்ளம் உவகையால் வீங்கியது. நெடுஞ்சாண் கிடையாகத் தரையிலே வீழ்ந்து, பரதனுடைய பாதங்களாகிய, தாமரையில் பூட்டிய கையனாக (பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டு பேசுகிறான்)

தாயுரை கொண்டு தாதை உதவிய தரணிதன்னை
தீவினை என்ன நீத்து, சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து, புகழினோய்! தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ, தெரியின் அம்மா!

புகழ் மிக்கவனே! தாயாகிய கைகேயி கேட்ட வரத்தால் தந்தையாகிய தயரதன் உனக்குத்தந்துதவிய கோசல நாட்டு ஆட்சி உரிமையை, 'தீவினை' என்று கருதிக் கைவிட்டு, முகத்தில் கவலை தேங்க, வனம் வந்த உனது பண்பை, எண்ணிப் பார்த்தால் ஆயிரம் ராமர்களும் உனக்கு இணையாக மாட்டார்கள். ஏழை வேடன் நான் உன்னை எப்படிப் புகழ்வேன். சூரியனுடைய ஒளிக்கற்றை, மற்றைய கோள்களின் ஒளியையெல்லாம் தன்னுள் அடக்கித் தானே மேலோங்கி, ஒளிர்வது போல, உங்கள் குல மன்னர்கள் புகழை எல்லாம் உனது புகழுக்குள் அடங்கச் செய்து, உன் புகழே மேலோங்கி நிற்கச் செய்துவிட்டாய்! என்று பலவாறான புகழ்மொழிகளைக் கூறி உபசரித்தான். பரதனிடம் அன்பு செலுத்தாதார் யார்? நினைக்க முடியாத நற்குணங்கள் நிலையமன்றோ பரத நம்பி! அப்போது பரதன் இராகவன் சென்ற தென் திசையை நோக்கி, இருகரம் குவித்து வணங்கி, குகனைப் பார்த்து, "நம் முன்னோனாகிய ராமபிரான் இங்கு எந்த இடத்தில் தங்கியிருந்தான்" எனக் கேட்க, "நானே அவ்விடத்தைக் காட்டுகிறேன் வருக" எனக் கூறி பரதனை அழைத்துச் சென்றான்.

குகனைப் பின் தொடர்ந்து, விரைந்து செல்லும் மேகத்தைப் போலச் சென்ற பரதன் கற்களுக்கிடையே புற்களைப் பரப்பிய இராமபிரான் படுத்திருந்த படுக்கையைப் பார்த்தான். துடிதுடித்துத் தரையில் வீழ்ந்தான். கண்ணீரால் அத்தரையை நீராட்டினான். "என்னால் தானே உனக்கு இந்தத் துன்பம் நேர்ந்தது" என்று பலவாறு புலம்பி வருந்தினான். ஒருவாறு தேறி, குகனைப் பார்த்து, "இராமன் துயின்ற இடம் இதுவாயின், இலக்குவன் பொழுது நீத்தது யாண்டு" எனக் கேட்க, குகன் கூறுவான், இராமனும் சீதாப்பிராட்டியும் இங்கு உறங்க, இலக்குவன் வில்லை ஊன்றிய கையோடும், நீண்ட பெருமூச்சோடும், கண்கள் நீரைச் சொரிய, "கங்குல எல்லைக் காண்பளவும் நின்றான். இமைப்பிலன் நயனம்" என்றான். இரவின் எல்லையான விடியற்காலம் வரை காத்து நின்றவனை, கண்களை இமைக்காதிருந்தமையால் நான் காணமுடிந்தது" என்றான். இதைக்கேட்ட பரதன், "இராமனுக்கு இளைய தம்பிமார்களில் நான் துன்பத்துக்கே ஏதுவானேன். இராமனுக்குத் துன்பம் நேரும்போதெல்லாம் அத்துன்பத்தைத் தீர்க்க அவன் இருந்தான். இலக்குவன் கொண்ட அன்புக்கு எல்லையும் உண்டோ? நான் இராமனுக்கு செய்யும் அடிமை நன்றாகயிருக்கிறது" என்று கூறி நொந்து கொண்டான். அன்று இரவு இராமன் தங்கிய அந்த இடத்திலே தங்கிய பரதன் அடுத்த நாள் காலையில் குக்னிடம் வேடுவர் வேந்தே! இந்தக் கங்கையின் மறுகரையில் எங்களைக் கொண்டு போய் விட்டால் துன்பக்கடலில் இருந்து, இராமபிரானிடம் சேர்த்தது போலாகும். இந்த உதவியைச் செய்தாக வேண்டு என வேண்டிக் கேட்டுக் கொண்டான். நன்று என்று கூறிய குகன், படகுகளைக் கொண்டு வருமாறு வீரர்களைப் பணித்தான். பலநூறு படகுகள் வந்தன. சுமந்திரன் ஆணைப்படி, நாற்பெரும்படையும், நாட்டு மக்களும் படகுகளில் ஏறி அமர, அப்படகுகள் கங்கையைக் கடக்கத் தொடங்கின. குகன் கொண்டு வந்த ஓடத்தில் அரச குடும்பத்தினரான பரதனும், சத்துருக்கனும், கோசலை முதலிய தாய்மார்களும் ஏறி அமர, குகன் அந்தப் படகைச் செலுத்தினான். கங்கையில் படகு செல்லும்போது குகன், சுற்றத்தாரும், தேவர்களும் வணங்கத்தக்க பெருமை உடைய கோசலையைத் தொழுது நோக்கி, இவ்வம்மையார் யார்? என்று பரதனை வினவினான், "தசரச் சக்கரவர்த்தியின் முதல் தேவி. மூவுலகையும் படைத்த திருமாலின் அவதாரமான இராமனை மகனாகப் பெற்றும், தான் பெற இருந்த பெருஞ்செல்வத்தை,

நான் ஒருவன் பிறந்ததால் இழந்த பெரியாள்'' என்று கூறி, பரதன் குகனுக்கு கோசலையை அறிமுகப்படுத்தினான். பரதன் கூறியதைக் கேட்ட குகன் கோசலையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிக் கதறி அழலானான். அழுது துன்புற்ற குகனை, ''இவன் யார் என்று கோசலை கேட்க, பரதன் ''இராமபிரானுக்கு உயிரினும் இனிய தோழன் இலக்குவனுக்கும் எனக்கும் மூத்தவன் குகன் என்பது இவன் பெயர்'' எனக் கூறி கோசலைக்குக் குகனை அறிமுகம் செய்து வைத்தான். அப்போது கோசலை ''மைந்தர்களே! இனித்துன்பத்தால் வருந்தாதீர்கள். இராம இலக்குவர்கள் நாட்டை விட்டுக் காட்டுக்கு வந்ததும் நன்மையே ஆயிற்று'' கைவீரக் களிறு அனைய காளை இவன் தன்னோடு கலந்து நீவிர், ஐ வரும் ஒரு வீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்திர் என்றாள். அதன்பின், ''அறம்தானே என்கின்ற அயல் நின்றாள்தனை நோக்கி, ஐ ய! அன்பின் நிறைந்தாளை உரை'' அறத்தின் வடிவாகவே கோசலைக்குப் பக்கத்தில் நிற்கும் அன்பு நிறைந்த இந்த அம்மையார் யார்? என்று குகன் கேட்க, ''வாய்மையை நிலைநாட்டி, உயிரை நீத்த தயரத வேந்தனது இளந்தேவி. எல்லோருக்கும் தெய்வமான இராமபிரானுக்குப் பின் பிறந்த தம்பி ஒருவன் இருக்கிறான் என்னுமாறு, அப்பெருமானை விட்டு நீங்காது இலக்குவனைப் பெற்ற் பெருமையுடையவள்'' எனச் சுமித்திரையை குகனுக்கு அறிமுகம் செய்து வைத்த பரதனைப் பார்த்து, கைகேயியைக் காட்டி இவர் யார்? என்று குகன் கேட்க, துன்பங்களை ஈன்ற தாய். பழியை வளர்க்கும் செவிலித்தாய். இவள் வயிற்றிலே பத்து மாதம் கிடந்த எனக்கும் உயிர்பாரம் குறைந்து தேய உடல்களெல்லாம் உயிரில்லாதவை போலத் தோன்றும் உலகத்திலே, இவள் ஒருத்தி தானே இடரில்லா முகத்தினளாயிருக்கிறாள். இன்னுமா தெரியவில்லை. இவள்தான் என்னைப் பெற்ற தாய் என்று கூறி, கைகேயியைக் குகனுக்கு அறிமுகம் செய்து வைத்தான் பரதன். கோசலையையும் சுமித்திரையையும் தாய் என்று கூறி வணங்காத குகன் ''என்னக்கேட்டு, அவ்விரக்கமில்லாளையும்; தன் கரம் கூப்பி வணங்கினன் தாய் என'' இராமன் காட்டுக்கு வரக் காரணம் கைகேயிதானே! அந்தத்தாயின் செயலால் தான் குகன் இராமனைத் தரிசிக்க முடிந்தது. எனவே 'தாய்' என்று கூறி, தனது நல்ல கைகளால் வணங்கினான். இரக்க மின்மையன்றோ எவ்வுலகங்களும் இராமன் பார்க்கும்

தொல்புகழமுதைப் பருகக் காரணம் . என்பதால் 'இரக்கமில்லாளையும்' என்றார் கம்பர்.

தாய்மார்களின் அறிமுகம் முடியவும், படகு கரை சேரவும் சரியாய் இருக்கிறது. படகில் இருந்து இறங்கிய தாய்மார்கள் சிவிகையிலே வர, எல்லோரும் இராமன் தங்கியிருந்த சித்திர கூடம் நோக்கிச் சென்றனர். வழியிடையே பரத்துவாச முனிவர்களின் ஆசிரமம் பரதன் முதலானவர்களை முனிவர் எதிர்கொண்டு உபசரித்து விருந்து செய்ய–அங்கு தங்கி மறு நாள் இராமனைச் சந்திக்கின்றனர். பரதனுடன் குகனும் செல்கிறான். ''ஒழிந்திலன் குகனும் உடன் ஏகினான் கழிந்தனன் பலகாவதம் காலினே'' என்பார் கம்பர். பரதன் முதலானோர் இராமனைக் கண்டு மகிழ்ந்து உரையாடிய போதும் குகன் உடன் இருந்தான். எல்லோரும் இராமனிடம் விடைபெற்றுத் திரும்பும் போது, ''கொண்டல் தன் ஆணையால் குகனும் போயினான்'' என்பார் கம்பர்.

இராம–இராவண யுத்தம் முடிந்து வெற்றி வீரனாக வா்னர சேனையுடனும், விபீடணன் முதலானோருடனும் இராமபிரான் அயோத்திக்கு மீள்கிறான். வழியில் பரத்துவாச முனிவரின் தவச்சாலை, முனிவரது வேண்டுகோளை ஏற்று இராமன் படையுடன் அங்கு தங்குகிறான். முனிவர் மகிழ்வுடன் வரவேற்று உபசரிக்கிறார். குறித்த காலம் ஆய்விட்டது என்பதால் பரதன் கவலைப்படுவானே என நினைத்து இராமன் பரதனுக்குத் தனது வருகையைக் கூறிவர, அனுமனை அனுப்புகிறான். சென்ற அனுமான், குகற்கும் அச்சேயான் வந்த வாசகம்'' கூறிச் செல்கிறான். இராமன் திரும்பிவந்து விட்ட செய்தி கேட்ட குகன் எல்லையில்லாத மகிழ்ச்சி கொண்டு, தனது வீரர்கள் புடை சூழ பரத்துவாசரின் தவச்சாலைக்கு வந்தான்.

''விருந்து இனிதருந்திநின்ற வேலையின், வேலைபோலும்
பெருந்தடந் தானையோடும் கிராதர் கோன் பெயர்ந்து வந்தான்''
என்பார் கம்பர். வந்த குகன்.
தொழுதனன் மனமும் கண்ணும் துளங்கினன், சூழ ஓடி
அழுதனன், கமலம் அன்ன அடித்தலம் அதனின் வீழ்ந்தான்
தழுவினன் எடுத்து மார்பில் தம்பியைத் தழுவுமாபோல்
வழுவிலர் வலியர் அன்றோ மக்களும் மனையும் என்றான்

இராமபிரானைக் கண்டதும் தொழுதான். கண்ணும் மனமும் கலங்கினான். இராமனை வலம் வந்து அழுதான்.

தாமரை மலர் போன்ற திருவடிகளில் வீழ்ந்தான். தனது பாதங்களில் வீழ்ந்த குகனை இராமபிரான் தம்பியைத் தழுவுவது போலத் தழுவி வாரி எடுத்து மார்போடு சேர்த்துக் கொண்டான். குகனை நோக்கி, மனைவியும், மக்களும் நலமாயுள்ளரோ? எனச் சேமம் விசாரித்தான். அதனைக்கேட்ட குகன்,

அருள் உனது உளது நாயேற்கு, அவர்எலாம் அரியஆய
பொருள் அலர் நின்னை நீங்காப் புணர்ப்பினால் தொடர்ந்து
போந்து
தெருள் தரும் இளைய வீரன் செய்வன செய்கலாதேன்
மருள்தரு மனத்தினேனுக்கு இனிதன்றோ? வாழ்வு மன்னோ,
என்றான்.

"அண்ணலே! நாயைப் போன்ற உனது அடிமையாகிய எனக்கு, உனது திருவருள் என்றும் துணை இருக்கிறது. மனைவியும், மக்களும், சுற்றமும் எனக்கு ஒரு பொருளல்லவர். உன்னை விட்டு நீங்காது. உன்னுடன் தொடர்ந்து வந்து, இளைய வீரனான இலக்குவனைப் போலச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்ய இயலாதவனாய் விட்டேன். மருள் நிறைந்த மனத்தினேன். எனது வாழ்வே எனக்கு இனிதாகிவிட்டதே! உனக்குத் தொண்டு புரியும் பேறு வாய்க்கவில்லையே" என்றெல்லாம் கூறி வருந்திய குகனைப் பார்த்து, இராமபிரான் "ஐயா! நீ இப்படியெல்லாம் பேசுவதோ எனக்கு பரதன் வேறு நீ வேறு என்பதுன்டோ? போய்ச் சந்தோஷமாக இரு என்று கூறிச் சமாதானப்படுத்தினான். பிறகு குகன் இலக்குவன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அன்னை ஜானகியின் மலர்த்தாளில் வீழ்ந்து தொழுதான். இவ்வாறு அழுதும் தொழுதும் அன்பை வெளியிட்டு நின்ற குகனை வியப்புடன் பார்த்து நின்ற வீடணன், அனுமன், சுக்கிரீவன் ஆகியவர்களை நோக்கி, இராமபிரான்

"தொழுது நின்றவனை நோக்கி, துணைவர்கள் தமையும்
நோக்கி
முழுதுணர் கேள்வி மேலோன் மொழிகுவான் முழுநீர்க் கங்கை
தழுவு இரு கரைக்கும் நாதன் தாயினும் உயிர்க்கு நல்லான்
வழுவிலா எயினர் வேந்தன் குகன் எனும் வள்ளல் என்றான்"

தொழுது நின்ற குகனையும் மற்றும் அங்குள்ள தனது துணைவர்களையும் பார்த்து, இராமபிரான், குகனை,

சுக்கிரீவன் முதலியவர்க்கு அறிமுகம் செய்து வைத்து, ''இவ்வீரன் கங்கையின் ஆரம்பம் முதல் கடலில் சங்கமம் ஆகும் வரையில் இரு கரைகளிலும் உள்ள நிலத்துக்குத் தலைவன். உயிர்களுக்கெல்லாம் தாயினும் சிறந்த தயாளன். எக்குற்றமும் இல்லாத வேடர் குலத்தின் வேந்தன் குகன் என்னும் பெயர் கொண்ட வள்ளல்'' என்று கூறி அறிமுகப்படுத்திய குகனை சுக்கிரீவன் முதலான அத்தனை பேரும் இனிது தழுவி உறவாடி, உரையாடி மகிழ்ந்தனர். எல்லோரும் அயோத்தி சென்றனர். இராமபிரான் திருமுடி புனைந்து அரியணையிலே பிராட்டியோடு அமர்ந்திருக்க சுக்கிரீவன் முதலிய அனைவரும் வந்து வணங்குகின்றனர். அப்போது குகனும் வந்து இராமபிரானைத் தொழுது நிற்கிறான். கம்பன் கூறுகிறான்.

''வெற்றி வெஞ்சேனையோடும் வெறிப் பொறிப் புலியின் வெவ்வால்
சுற்றுறத் தொடுத்து வீக்கும் அரையினன், சுழலும் கண்ணன்
கல்திரள் வயிரத் திண்தோள் கடும்திறல் மடங்கல் அன்னான்
எற்றுநீர்க் கங்கை நாவாய் கிறை குகன் தொழுது சூழ்ந்தான்''

வெற்றிமிகுந்த வேடர்படை சூழ்ந்து நிற்கிறது. தனது இடுப்பிலே புலிவாலைச் சுற்றிக் கட்டியிருக்கிறான். கண்கள் நாலாதிசையிலும் சுழல்கின்றன. கல்லைப் போல உறுதியுடைய திரண்ட தோள்கள் வலிமை மிக்க சிங்கத்தைப் போன்ற தோற்றம். அலைபொங்கும் கங்கையிலே படகு செலுத்தும் இறைவனான குகன் இத்தகைய தன்மையோடு திருமுடி புனைந்து, சிங்காதனத்தில் செம்மாந்து வீற்றிருக்கும் எம்பிரானைத் தொழுது நிற்கிறான். இராமபிரான் ''வரம்பின்றி வளர்ந்த காதல் உள்ளுறப்பிணித்து செய்கை ஒளிமுகக் கமலம் காட்டி, அள்ளூறத் தழுவினான் போன்று அக்ம் நெகிழ்ந்து இனிதின் நோக்கி, ஈண்டு இனிது இருந்தீர்'' எனத் தொழுது நின்ற துணைவர்களை இனிதிருக்கப் பணித்தான்.

திருவடியில் வீழ்ந்து தொழுத குகனைத் தழுவியெடுத்து, மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான். ''எனது அன்புத்தம்பியே! உற்றார் உறவினருடன் நலமாயிருக்கிறாயா எனக் கேட்டார். மறைகளும் தேடிக் காணாத மாண்புடைய இராமபிரான்

"ஆயிடைக் குகனும் வந்து ஆங்கு ஆண்டவன் அடியில் வீழ
நாயகன் உவந்து புல்லி, நண்ணி, என் பின்பு வந்த
தூயனே! கிளையினோடும் சுகமிருந்தனையோ? என்று
வாயிடை மொழிந்தான் மற்றை மறைகளும் காணா அண்ணல்"

என்பார் கம்பர். அடுத்து விடை கொடுத்த படலத்தில் குகனைச் சந்திக்கிறோம். முடிசூட்டு விழாவுக்கு வந்த அத்தனை பேரும் இராமபிரானிடம் விடை பெற்றுச் செல்கின்றனர். அந்த நேரத்தில் குகனும் வந்து நிற்கின்றான். குகனைப் பார்த்து, ராமன் குற்றமில்லாத துணைவனாகிய உனக்குச் சொல்ல என்ன இருக்கிறது! என்று கூறி யானைகளும், குதிரைகளும், பொன்னும், மணியும், ஆடை, ஆபரணங்களும் வாரி வழங்கி விடை கொடுத்தான். இதனைக் கம்பன்

"சிருங்கி பேரம் அது என்றோதும் செழுநகர்க்கு இறையை
நோக்கி
மருங்கு இனி உரைப்பது என்னோ? மறு அறு துணைவற்கு,
என்னா
கருங்கை மாக்களிறும் மாவும் கனகமும், தூசும் பூணும்
ஒருங்குற உதவி, பின்னர் உதவினன் விடையும் மன்னோ"
என்பார்

உங்களையெல்லாம் பிரிந்து வாழ்வதென்பது நினைத்துப் பார்க்கமுடியாத தொன்றுதான் என்றாலும் நீங்கள் வாழும் இடமும் எனக்குரியதே. உங்கள் சுற்றம் என் சுற்றமே. என் ஏவலின் படி அந்த நாட்டை ஆள்வதற்குச் செல்வீராக எனக் கூறி விடைதர, 'ஏயது செய்தல் எம்கடன்' என்று எல்லோரும் விடை பெற்றுச் சென்றனர். "உன் கிளை எனதன்றோ் உறுதுயர் உறலாமோ என்கிளை இதுகா என் ஏவலின் இனிது" என்று, காட்டுக்கு உடன் வருவதாகக் கூறிய குகனுக்குச் சொன்ன அதனையே நினைவு கூர்ந்து "நினைவதற்கு அரிதுநும்மைப் பிரிக என்றால் நீவிர் வைப்பும் எனது. அது காவற்கு இன்று என் ஏவலின் ஏகும் எனக் கூறியது நினைவு கூறத்தக்கது. குகனைப்பற்றிய நினைப்பு இராமபிரானுடைய உள்ளத்தில் எப்போதுமிருக்கிறது என்று கருதலாமல்லவா? குகனைச் சுக்கிரீவன், வீடணன், அனுமன் ஆகியோருக்கு அறிமுகப்படுத்திய போதும் "தானும் உயிர்க்கு நல்லான்" எனக் கூறியதை நினைத்துப் பார்த்தால், முதன் முதல் குகனைப் பார்த்ததும் அவனுடைய நல்ல உள்ளத்தைத் தெரிந்துணர்ந்த இலக்குவனைச் சுற்றமும் தானும் உள்ளம்

தூயவன் தாயின் நல்லான். எனக் கூறியதனை நினைவில் இருத்தி, குகனுடைய அன்பு வலையிலே கட்டுண்ட ராமபிரான், அந்தச் சொல்லாலேயே குகனைச் சுட்டி உணர்த்துவதைப் பார்க்கிறோம். மகுடபங்கப்படலத்தில் ராவணன் மீது பாய்ந்த சுக்கிரீவன் அவனுடன் கைகலந்து போரிட்டு இராவணனுடைய மகுடங்களைக் கவர்ந்து வந்து விடுகிறான். அன்று சுக்கிரீவனைத் தழுவித் தனது அன்பை வெளியிட்ட ராமனிடம் "காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்டமாட்டேன் நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க மாட்டேன். தலைகள் பத்தும் கொணர்ந்திலேன் வெறுங்கை வந்தேன்" என்று பேசுகிறான். ராமபிரானிடம் கொண்ட பேரன்பால் இராவணனுடன் போரிட்டு அவன் வாளுக்கு இரையானவன் சடாயு (கழுகின் வேந்தன்). எல்லையில்லாத பேரன்பால் ராமனைப் பிரியவிரும்பாது தீராக் காதலன் என ராமனால் பாராட்டப்பட்டவன் குகன், குகனைப்பற்றியும் அவனுடைய அன்பு உள்ளத்தைப்பற்றியும் சுக்ரீவன் அறிந்திருந்தான் என்றால் இலக்குவனோ, ராமனோதானே கூறி இருக்க வேண்டும்! இவ்விருவர் உளளத்திலும் வீற்றிருக்கும் பெருமை உடையவன் குகப்பெருமான் என அறிகிறோம்.

படையுடன் பரதன் வருவதைப் பார்த்து ஐயம் கொண்டு பேசுவது வான்மீகி ராமாயணத்திலும், துளசி ராமாயணத்திலும், தெலுங்கு ராமாயணத்திலும் சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதைக் கம்பர் மிக விரிவாகக் கூறியதைப் பார்க்கிறோம். பரதனும் குகனும் சந்திக்கும் நிகழ்ச்சியைக் கூறுவதில் கம்பர் மிகச்சிறப்பாகக் கூறுகிறார். குகனை பரதனுக்கு அறிமுகப்படுத்திய சுமந்திரர் குகனை இதற்குமுன்பு நேரில் பார்த்திருக்கவில்லை. ஆனால் குகனுடன் ராமன் நட்புக் கொண்ட பிறகே சுமிந்திரனை அயோத்தி செல்லுமாறு ராமன் அனுப்பி வைத்தான் என்பதால் குகனைச் சுமந்திரன் சந்தித்துப் பேசி அவனைப்பற்றி அறிந்திருந்தான் என்பது துளசியில் கூறப்பட்டுள்ள செய்தி. சுமந்திரன் அயோத்தியின் அமைச்சன் என் 'நிலையிலே வேட்டுவர் வேந்தனான குகனை நேரில் பார்த்ததில்லை என்றாலும்—கேள்விப்பட்டிருக்க வாய்ப்பு உண்டல்லவா? தான் கேட்டறிந்தவைகளையே பரதனுக்குக் கூறி குகனை அறிமுகப்படுத்துகிறான் என்பது கம்பர் கருத்தாகும்! குகனைப்பற்றி ஓரளவு அறிந்திருந்த சுமந்திரன் மூலம் கேள்விப்பட்ட பரதன் அவன் தன்னைக் காண வந்திருக்கிறான் எனத் தெரிந்தும் தன்னை வந்து பார்க்கட்டும் என்று அதிகார தோரணையில் கூறுகிறான். பின்னர் குகன்

வந்ததும் "பரத்துவாசா் ஆசிரமம் செல்ல வழிகாட்ட வேண்டும். கங்கையைக் கடந்து செல்ல உதவ வேண்டும். என்று குகனை பரதன் கேட்கிறான். அதற்கு குகன் அதற்குக் கவலைப்பட வேண்டாம். நாங்கள் உதவுகிறோம். ஆனால் அதற்கு முன்பு நாம் தெரிந்து கொள்ள வேண்டிய தொன்றுண்டு. உண்மையாகவே இராமனிடம் அன்பு கொண்டு வந்திருக்கிறீர்களா? பெரிய சேனையுடன் வந்திருப்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது என்பது வான்மீகி கூறும் செய்தி. இராமன் தங்கியிருந்த இடத்தையும், பட்டதுன்பங்களையும் குகனிடம் கேட்டு அறிந்த பின்பே பரதன் மரவுரி தரித்துத் துறவுக்கோலம் கொண்டான் என்ற வான்மீகத்தின் கருத்துக்கு மாறாக, பரதனுடைய தவ வேடமே குகனுக்கு அவன் மீது அன்பு கொள்ளச் செய்தது, என்ற கம்பா் கருத்து எண்ணி மகிழத்தக்கது. அனுமனைப் போலவோ, சுக்கிரீவனைப் போன்றோ? விபீடணனைப் போலவோ? ராம சரிதத்தின் கதையோட்டத்தில் பங்கேற்று நடத்திச் செல்லும் பாத்திரமாகக் குகன் பாத்திரத்தைக் கூறமுடியவில்லை. கதையிலே குகன் பங்கு சிறிதளவே. வான்மீகியும், துளசியும், தெலுங்கு ராமாயணங்களும் வெறும் செய்தியாக ராமன் முதலிய மூவரும் கங்கையைக் கடக்கவும், பின்பு பரதன் படைகளோடு கங்கையைக் கடந்து செல்லவும் பயன்பட்ட விதத்தை மட்டுமே கூறின. கம்பன் காவியத்தில் தமிழ்நாட்டின் பக்திநெறிக்கேற்ப, ஈடும் இணையும் இல்லாது சிறந்ததொரு பாத்திரமாகக் குகனைப் படைத்து, குகனுக்குப் பெருமை சேர்த்தவன் கவிச்சக்கா்வா்த்தியே எனலாம். திருமங்கையாழ்வாரின் 'ஏழை ஏதலன்' எனத் தொடங்கும் பாசுரத்தில் "எம்பி உம்பி" மங்கை கொழுந்தி, தோழன் நீ "என்று இராமன் குகனிடம் கூறுவதாக அமைந்த தொடா்கள் கம்பனைப் பெரிதும் கவா்ந்து விட்டன. அந்த அடிப்படையிலே குகன் பாத்திரத்தை உருவாக்கி விட்டாா் எனக்கருதலாம். கம்பனுக்குத் திருமங்கையாழ்வாா் முன்னோடியாக வழிகாட்டினாா். கம்பனுக்கு ஆழ்வாா்கள் கிடைத்தது போல. வான்மீகிக்கோ, துளசிக்கோ வழிகாட்ட ஆழ்வாா்களில்லையல்லவா? குகனுடைய தோற்றப்பொலிவை, குகப்படலம் முதல் 9 பாடல்களில் கம்பன் கூறும் வருணனை "பரிவின் தன்மை உருவு கொண்டனையவன், போழ்வாா் போா்த்த காழகச் செருப்பினன். அரையில் கட்டிய உடை தோற் கச்சையன் வாாில் வீக்கிய வாிக்கைக் கட்டினன். கானக்குஞ்சித் தவளபுல்லினன், முடுகு நாறு குடிலை ஆக்கையன்" என்று கல்லாட தேவா் '"கண்ணப்ப தேவா்

திருமறம்'' என்னும் நூலில் கூறிய கண்ணப்பன் வருணனையைப் பெரிதும் ஒத்திருப்பதைப் பார்க்கிறோம். கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இல்லை என்று போற்றப்படும் அன்பு வடிவான கண்ணப்பன் கம்பன் காட்டும் குகனுக்கு முன் மாதிரியோ?

கல்லாடர் கம்பனுக்குக் காலத்தால் முற்பட்டவரல்லவா?

படைகள் சூழ வரும் பரதனைப் பார்த்துச் சீற்றம் கொண்ட குகன் படைவீரர்களிடம் கோபாவேசத்தோடு ''ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ'', தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ? ''மன்னவர் நெஞ்சினில் வேடர் விடும் சரம் வாயாவோ?'' செஞ்சரம் என்பன தீயுமிழ்கின்றன செய்யாவோ? என்றெல்லாம் கூறும் மொழிகளை அப்பாடல்களுக்கு உரிய சந்தத்துடன் பாடக் கேட்பவர்கள் தமிழே தெரியாது வேற்று மொழிக்காரர்கள் என்றாலும யாரோ கோபத்துடன் கூறும் மொழிகள் என்பதைப் புரிந்து கொள்வார்களே! கருத்துக்கேற்ற ஓசையை அமைத்து குகனுடைய சீற்றத்தைக்காட்டும் கம்பனுக்கு இடத்துக்கேற்ப இசை அமைப்பது கைவந்த கலையல்லவா? இராகவனது உடன்பிறவாத் தம்பியரில் முதன்மை வாய்ந்த குகன் கல்வியறிவு இல்லாதவன். நாகரிகம் அறியாதவன் ''அறிவொன்றுமில்லாத ஆயர்குலம்'' என திருப்பாவை கூறுவதைப் போல அறிவு, ஞானம் என்பதை அறியாதவன். ஆனால் இர்ாமபிரானை ஏற்றுக் கொண்ட நாள் முதல் அவனுக்குத் தன்னையே தந்த பெருமை குகனுக்கே உண்டு ராமபிரானே குகன்–அவனது அன்பின் ஆழத்தைப் புரிந்து கொண்டு 'தீராக்காதலன்'' என்று கூறியதைப் பார்க்கிறோம். ''அளவில் ஆற்றலைப் பொருந்தினர் ஆயினும் பூவின் மெல்லியர் வருந்துவர்'' என நினைத்து விசுவாமித்திரனைப் போல, செல்வத்தோடும், செல்வாக்கோடும் வளர்ந்த அரசகுமாரர்கள் அல்லவா? பசியால் வருந்த நேரிடுமே என்று பால் நினைந்தூட்டும் தாயைப்போல கையில் உணவுடன் வந்து ''தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத் திருத்தினன் கொணர்ந்தேன்''. என்று சொல்லிக் கொண்டு தனக்கு எதிரில் நிற்கும் குகனை ராகவன் எலும்பும் சதையும் கொண்ட மனித வடிவினனாக எண்ணவில்லை. தூய அன்பே உருவான வடிவுடையவனாகக் காணப்பட்டான். குகனை ஒரு முறை கண்ணால் கண்டதுமே. அவனுடைய அன்பு வலையில் இராமன் கட்டுண்டுவிடுகிறான். தேவர்க்கும் அரியவனான

பரமன் அன்பர்க்கு எளியவனாய் விடுகிறான். 'பக்திவலையில் படுவோன் காண்க' என்பர். மணிவாசகப் பெருந்தகை "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்ற குறளறம் கூறுவதைப் போல உள்ளத்தால் பொய்படாத வாழ்வும் இறைவனான ராமபிரானிடம் எல்லையில்லாத பக்தியும் உடையவனாக குகன் விளங்குகிறான். புணர்ச்சி பழகுதல் வேண்டா? உணர்ச்சிதான் நட்பாம் கிழமைதரும் என்ற குறள் கூறும் நட்பிலக்கணத்துக்கேற்ப ஒருமுறையும் கூட ராமனை இதற்கு முன் பார்த்திராத குகனை, உடன் பிறந்தவனாகவே ராமபிரான் ஏற்றுக்கொண்டான். ஏழை ஏதலன். வேடர்குலத்தினன் அரச குடும்பத்துடன் சேர்த்துப் பேசப்படும் பெருமைக்கு உரிய சிறப்பைப் பெற்று விடுகிறான். இராமனிடம் கொண்டிருந்த குகனுடைய அன்பு "யாதினும் இனிய நண்ப" என இராமபிரானைக் கூற வைத்தது என அறிகிறோம். கம்பனைத் தவிர வேறெவரும் இராமன் தம்பியெனக் கூறிக் கொண்டாடும் அளவுக்குக் குகனைக் காட்டவில்லை. ஆழ்வார்கள் கண்ட அன்பு நெறியை அடிப்படையாகக் கொண்டு, குகனை அன்பைத் தவிர-வேறு எதுவுமில்லாத ஒப்பற்ற பாத்திரமாகப் படைத்து முழு வெற்றி பெற்றுவிட்ட கம்பனை "சங்கத்துச் சான்றோரெல்லாம் தாம் ஒரு வடிவு கொண்டு இங்கிதக் கம்பனாக இங்கெழுந்தருளி வந்து இப்பங்கமில் காப்பியத்தைப் பகர்ந்தாரோ? என்று வியக்கிறோம்.

சுக்கிரீவன்

– டாக்டர் நா. பாலுசாமி, மதுரை.

மாரீசன் சூழ்ச்சியால் இராவணன் சீதையை எடுத்துச் சென்ற பின்னர், சீதையைத் தேடி இராமனும் இலக்குவனும் வருகின்றனர். வழியில் சடாயுவைக் கண்டனர். அவன் சீதையை இராவணன் எடுத்துச் சென்றதைக் கூறி இருக்கிறான். அடுத்து, அயோமுகி என்னும் அரக்கியிடம் இலக்குவன் பிடிபட்டு மீள்கிறான். பின்னர்க் கவந்தனைக் காணுகின்றனர்; கவந்தன் வனத்தை அடைகின்றனர். இராம இலக்குவர்களால் தன் சாபம் நீங்கப் பெற்ற கவந்தன் தன் வரலாற்றை எடுத்துச் சொல்லி, இராம இலக்குவர்களிடம் சீதையைத் தேடும் நெறி பற்றியும் கூறுகின்றான். பேராற்றல் உடையவராக இருந்தாலும், சீதையைத் தேடுவதற்குத் துணை வலி மிகவும் தேவை என்றும், அந்தத் துணைவர் தீயோராக இல்லாமல் செவ்வியோராக இருத்தல் வேண்டுமென்றும் அறிவுரை கூறி, தாயினும் உயிர்க்கு நல்கும் சவரியைத் தலைப்பட்டு, அவள் ஏவிய நெறியிற் சென்று, இரலைக்குன்றம் . ஏறி, சுக்கிரீவனைக் கண்டு நட்புக் கொண்டு, சீதையைத் தேடுவது விழுமியது என்றும் கூறுகின்றான். (1)

அவ்வாறே, சவரியைக் கண்டு, இரலைமலைக்கு வழி வினவி அவர்கள் அறிந்து கொள்ளுகின்றனர். (2)

இவ்வாறு, கவந்தன் சுக்கிரீவனை அறிமுகப்படுத்த, சவரி அவன்பால் ஆற்றுப்படுத்த, இராம இலக்குவர் சுக்கிரீவனைத் தேடிப் புறப்படுகின்றனர்.

இங்கு ஒன்று சிந்திக்கத் தக்கது. இரலைமலையில் சுக்கிரீவன் எந்த நிலையில் உள்ளான்? இராமனுக்கு உதவும் நிலையில் உள்ளானா? அப்படி இல்லையெனில், கவந்தன் சுக்கிரீவனிடம் போகச் சொன்ன காரணம் என்ன? என்புதைப் பின்னர் ஆய்வோம்.

வாலி சுக்கிரீவர் பிறப்பு

''பார்வதி தேவியின் சாபத்தாற் பெண் வடிவம் அடைந்த 'ருக்ஷரஜன்' என்கிற வானர ராசனது வாலின் அழகைக்கண்டு காதல் கொண்ட தேவேந்திரனுக்கு, மகனாகத் தோன்றியவன் வாலியென்றும், அவ்வாறே, அதன் கழுத்தழகைக் கண்டு காமுற்ற சூரியனுக்கு அதனிடத்துத்

தோன்றியவன் சுக்கிரீவனென்றும் உணர்க'' (3) இவ்வாறு வாலி சுக்கிரீவர் பிறப்பு வரலாறு கூறப்படுகிறது.

வாலி கிட்கிந்தைக்கு அரசனாக ஆட்சி செய்யும் வேளையில், சுக்கிரீவன் இளவரசனாகப் பொறுப்பேற்றுத் துணைபுரிந்தான். அப்போது, மாயாவி என்ற ஓர் அசுரன் வாலியுடன் போர் புரிய வந்தான். வாலியின் வலிமைக்கு ஆற்றாமல் அஞ்சி ஒரு பிலத்தினுள் புகுந்தான். அப்போது, வாலி சுக்கிரீவனிடம் ''நான் இப்பிலத்துள் சென்று விரைவில் அவனைக்கொன்று மீள்வேன்; அதுவரை இங்குக் காவல் கொண்டிரு'' என்று கூறிச் சென்றான். இவ்வாறு கூறிச்சென்ற வாலி இருபத்தெட்டு மாதமாகியும் வரவில்லை. அண்ணன் வாராது போகவே பெரிதும் வருந்தினான் சுக்கிரீவன். ஊறு நேர்ந்திருக்கும் எனக் கருதி அனுமன் முதலிய அமைச்சர்கள் ''இனி நீதான் ஆட்சி புரிய வேண்டு'' மென்று கேட்டுக் கொண்டனர். ஆயின் சுக்கிரீவன் ''நானும் பிலத்துள் சென்று அண்ணனைத் தேடுவேன்; அண்ணனைக் கொன்றிருப் பானாகில் அந்த மாயாவியைநான் கொன்று மீள்வேன்'' என்று புகத் தொடங்கினான். அப்போது அமைச்சர்கள் அவனைத் தடுத்து, நீதி முறைகளை எடுத்துச் சொல்லி, ஆட்சிப் பொறுப்பை ஏற்கச்செய்தனர். ஒருவேளை வாலியைக் கொன்ற மாயாவி பிலத்தின் வழியே வரக்கூடும் எனக் கருதி, அப் பிலத்தைப் பெரிய மலைகளை உருட்டி அடைத்து விட்டார்கள். சுக்கிரீவன் கிட்கிந்தையில் ஆட்சி புரிந்துவந்தான்.

மாயாவியைக் கொன்று மீண்டு வந்த வாலி வாயிலில் தான் இருக்கச் சொல்லிப்போன சுக்கிரீவனை அழைத்தான். ஆயின், பிலம் அடைபட்டுக் கிடப்பதைப் பார்த்து ''இளவலார் இருந்து அளித்த ஆறு நன்று'' எனச் சுக்கிரீவன் மீது சினம் கொண்டான். கற்களை உருட்டி நீக்கிக் கிட்கிந்தை வந்து சேர்ந்த வாலியைக் கண்டதும், சுக்கிரீவன் வணங்கி ''நீ நெடுநாள் வராமற் போகவே, உன்னைத் தேடிப் புறப்பட்ட என்னை, உன் அமைச்சர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு செய்தனர். அவர்கள் கூற்றை மறுக்க அஞ்சி ஆட்சியை ஏற்று வாழ்ந்தேன், ''நாணிலாத என் குற்றத்தைப் பொறுத்தருள்க'' என்று வேண்டினான். (4)

ஆயின், சினங் கொண்ட வாலி, சுக்கிரீவனைத் தாக்கினான். கோப மிகுதியால் அவனைப் பற்றிக் கொல்ல நினைத்தபோது, அவனிடமிருந்து ஓடிவந்து, இரலைமலையில்

ஒளிந்துகொண்டான். ஏனெனில், இரலைமலைக்கு வரக் கூடாது என் வாலிக்கு ஒரு சாபமுண்டு. எனவே, வாலி வர முடியாத அம்மலையில் சுக்கிரீவன் ஒளிந்து வாழ்ந்தான்.

வாலி சுக்கிரீவருடைய வரலாறு தொடக்கத்திலிருந்து முறையாகச் சொல்லப்படவில்லை. முதலில், சுக்கிரீவன் ஒளிந் திருப்பதைச் சொல்லி, அவன் ஒளிந்திருப்பதற்கான காரணங் களை அனுமன் வாயிலாகப் பின்னரே புலப்படுத்தியுள்ளார் கம்பர். அனுமன் இராமனிடம் சுக்கிரீவனது வரலாறு கூறுவதாக முன் நிகழ்ச்சி அமைந்துள்ளது.

சுக்கிரீவன் – இராமன் நட்பு

கவந்தன் சொல்லை ஏற்றுச் சுக்கிரீவனைத் தேடி இரலை மலைக்குச் செல்கின்றனர் இராமனும் இலக்குவனும். அவ்வாறு இராம இலக்குவர் இரலைமலை நோக்கி வருவதைக்கண்டு, சுக்கிரீவன் வாலி ஏவலால் வந்தவர்களோ என்று கருதி ஓடி ஒளிந்து கொள்கிறான். அனுமன் பிரம்மச்சரிய வடிவங் கொண்டு அயலே மறைய நின்று அவர்களிருவரையும் காண்கிறான். அவர்களது தரும நிலையைக் கருத்தால் ஓர்ந்த அனுமன், இவர்கள் எதிரே சென்று வரவேற்றான். 'யார்' என, இராமன் வினவ, அனுமன் சுக்கிரீவனுக்கு அமைச்சனாக உள்ள நிலையை எடுத்துக் கூறுகிறான். அது கேட்ட இராமன் ''எவ்வழியிருந்தான் சொன்ன கவிக் குலத்தரசன்? யாங்கள் அவ்வழி அவனைக் காணும் அருத்தியால் அணுகவந்தேம்'' என வினவுகிறான் அது கேட்டு மகிழ்ந்தான் அனுமன். இராம இலக்குவர்கள் யார் என அறிந்து அவர்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான், பிரம்மச்சாரியாக இருந்து, தன்னை வணங்குவது முறையோ என இராமன் கேட்க, அனுமன் தனது உண்மை வடிவத்தைக் காட்டுகிறான்.

பிறகு, அவன் சுக்கிரீவனை அழைத்து வருகிறான். சுக்கிரீவனிடம் ''சவரி, நீ இம்மலையிலிருந்த தன்மை இயம்பினன்; யாம் உற்ற துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தேம்'' என்று இராமன் இயம்பினான். அது கேட்ட சுக்கிரீவன், ''சரணுனைப்புகுந்தேன் என்னைத் தாங்குதல் தருமம்'' என்று இராமனைச் சரண் அடைந்தான். தன்னைச் சரணடைந்த சுக்கிரீவனை நோக்கி, இராமன் அவனை அடைக் கலமாக ஏற்று இன்னுயிர்த் துணைவனாக ஆக்கிக் கொள்கிறான்.

"மற்று, இனி உரைப்பது என்னே? வானிடை,
மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார், தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்; உன்கிளை எனது; என்காதல்
சுற்றம் உன்சுற்றம்; நீ என் இன்னுயிர்த் துணைவன்" (5)

என்று இராமன் உறுதி கூறுகிறான். இராமன், சுக்கிரீவன் இல்லத்தில் உணவருந்தும் போது அவன் மனைவியைக் காணாது.

"பொருந்து நன்மனைக்குரிய பூவையைப்
பிரிந்துளாய் கொலோ" (6)

என்று வினவுகிறான்.

இத்தகைய சூழலில் அனுமன், சுக்கிரீவன் வாலி இருவருடைய கடந்த கால வரலாற்றை எடுத்துரைக்கிறான். சொல்லி முடித்து இறுதியாக, 'உருமை' என்று இவற்குரிய தாரமாம் அருமருந்தையும் அவன் விரும்பினான், என அனுமன் கூறி முடிக்கிறான். தம்பிக்காகத் தனது அரசையே கொடுத்து வருகிற உடன்பிறப்புப் பாசமுடைய இராமனால், இப்படியும் ஓர் உடன்பிறப்பு நிலை இருக்குமோ என எண்ணிப்பார்க்க முடிய வில்லை. இரண்டு அடிப்படையான நிலைகள் இங்கு இராமனது கோபத்துக்குக் காரணமாக அமைகின்றன.

1. நாட்டு ஆட்சிக்காக அண்ணன் தம்பியரிடையே பகைமை ஏற்பட்டதும், அதற்காக அண்ணன் கொல்ல முற்பட்டதும்.

2. ஒருவன் தாரத்தை மற்றொருவன் கவர்ந்து கொள்ளும் நிலை; அதிலும், அண்ணன், தம்பியின் தாரத்தைக் கவர்ந்து கொள்ளும் நிலை. தம்பிக்காக முடி துறந்து காடு வந்த அண்ணனாகிய இராமன், ஆட்சிக்காகத் தன் தம்பியை அடித்துத் துரத்திய அண்ணனாகிய வாலியின் செயலை எண்ணிச் சினக்கிறான். தன் மனைவியைப் பறிகொடுத்த சுக்கிரீவன் நிலையோடு, தன்னிலையை ஒப்பிட்டு, அவனது நிலைக்குக் காரணமாக இருந்த வாலியின் மேல் சினம் கொள் கிறான். அனைத்துக்கும் மேலாக, வாலியும், தன் மனைவியைத் தூக்கிச் சென்ற இராவணனும் நட்புக் கொண்ட செய்தி மேலும் இராமனது சினத்தைத் தூண்டுகிறது. இவ்வாறு,

1. ஆட்சிக்காகத் தன் தம்பியைக் கொல்ல வந்தான்.

2. அயலான் மனைவியை விரும்பியவன்
3. தம்பியின் மனைவியைக் கவர்ந்தவன்
4. தன் மனைவியைத் தூக்கிச் சென்ற இராவணனுக்கு நண்பன்

ஆகியவற்றை அனுமன் கூற்றினால் அறிந்து கொண்ட இராமன் பெருஞ் சினம் கொள்கிறான். அதனை விளக்க வந்த கம்பர்,

"ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன,
ஆரம் வீங்குதோள் தம்பிக்குத் தன்அரசு உரிமைப்
பாரம் ஈந்தவன், பரிவுஇலன், ஒருவன்தன் இளையோன்
தாரம் வெளவினன் என்ற சொல் தரிக்குமாறு உளதோ"(7)

என்று கூறுகிறார். இச்சூழலில் இராமன் வாலி ஒறுத்தற் குரியவன் என முடிவு செய்து,

"உலகம் ஏழினோடு ஏழும்வந்து அவன் உயிர்க்கு உதவி
விலகும் என்னினும், வில்லிடை வாளியின் வீட்டி,
தலைமையோடு, நின்தாரமும் உனக்கு இன்று தருவென்,
புலமையோய்! அவன் உறைவிடம் காட்டு"(8)

என்று சுக்கிரீவனிடம் கேட்கிறான்.

அதனைக் கேட்டு, வாலியின் வலிமை வீழ்ந்தது என எண்ணிய போதிலும், சுக்கிரீவன் உடனே உடன்படாமல், 'யான் எண்ணுவதொன்றுண்டு' என மொழிந்தான். அமைச்சர் களோடு சுக்கிரீவன் ஆலோசிக்கத் தொடங்கினான். அனுமன் சுக்கிரீவனை நோக்கி, "வாலியைக் கொல்வதற்குரிய ஆற்றல் இவர்களிடம் உண்டா? என ஐயுறுகிறாய், அவ்வாற்றல் இவர்களிடம் உண்டு என்பதற்குப் பல சான்றுகள் உள" என விளக்குகிறான்.

அனுமன், "அவர்களது ஆற்றலை அறிந்து கொள்வதற்கு ஓர் உபாயம் உண்டு மராமரங்களை வீழ்த்தும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறதா எனச் சோதித்துப் பார்த்தால், அவர்களது ஆற்றல் நமக்கு விளங்கும்" என்று கூறினான். சுக்கிரீவன் அவ்வாறே இராமனிடம் சொல்ல, இராமனும் அவ்வாறே அம்பினால் மராமரம் ஏழினையும் வீழ்த்தினான். சுக்கிரீவனும் இராமன் ஆற்றலைக் கண்டு மகிழ்ந்தான். பின்னர், வாலியால் வீழ்த்தப்பட்ட துந்துபியின் உடலை, இலக்குவன் தன் கால் விரலினால் உந்தி

எடுத்தெறிந்தான். இவ்வாறு இலக்குவன் ஆற்றல் விளக்கப்படுகிறது. பிறகு, இராமனிடம் சுக்கிரீவன், முன்பு இராவணனால் தூக்கிச் செல்லப்பட்ட சீதை போட்டுச் சென்ற அணிகலன்களைக் கொடுத்தான். அது கண்ட இராமன் பெருவருத்தம் கொள்ளுகிறான். இராமன் துயரத்தைக் கண்ட சுக்கிரீவன் முதலிலே சானகியை மீட்போம் எனக்கூறுகிறான். ஆயின் இராமன் முதலில் சுக்கிரீவன் குறை முடிப்பதாகச் சொல்லுகிறான். மேலும், அனுமன் வாலியைக் கொன்று சுக்கிரீவனை அரசனாக்கி வானரப்படைகளைச் சேர்த்தலான்றி அரக்கர்களின் இருப்பிடத்தை அறிதல் அரிது என உரைக் கிறான். 'ஆம்' எனக்கூறி, அனைவரும் வாலியைக் கொல்லு வதற்குப் புறப்பட்டுச் செல்கின்றனர். வாலி இருப்பிடம் சார்ந்து ஆலோசிக்கும் போது இராமன், சுக்கிரீவனிடம் "நீ அழைத்து, வாலி ஆனது ஒர் வெவ்விடத்தின் வந்து, போர் விளைக்கும் ஏல்வை, வேறு நின்று எவ்விடத்துணிந்து அமைந்தது; என் கருத்து இது" என்று கூறினான். வாலியைப் பற்றி இராமனிடம் முன்னர்க்கூறும்போது அனுமன், "கிட்டுவார் பொரக் கிடைக்கின், அன்னவர் பட்ட நல்வலம் பாகம் எய்துவான்" என்று பொரவருவார் பலத்தில் பாதியை எடுக்கும் ஆற்றல் வாலிக்கு உண்டு என எடுத்துரைத்தான். எனவே, இராமன் வாலியின் நேர்நின்று பொரக்கருதாமல், அயலிடத்திலிருந்து பொரக் கருதினான். திட்டப்படி வாலிய்யைப் போருக்கழைத்தான் சுக்கிரீவன். வாலியும் தன் மனைவி தாரை தடுத்தபோதும் போருக்கு வந்தான் அவ்வேளையில், இலக்குவன் ஓர் ஐ யத்தை எழுப்பினான். தன் அண்ணனையே கொல்லுதற்கு ஆள் துணையோடு வந்தானே, வேற்றாரிடம் இவன் எவ்வாறு நடந்துகொள்ளமாட்டான். என்று வினவினான். அதனைக் கேட்ட இராமன், "பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ" என்று இலக்குவனுக்குச் சமாதானம் சொல்லு கிறான். இந்நிலையில் வாலிக்கும் சுக்கிரீவனுக்கு மிடையே பெரும்போர் நடைபெறுகிறது. இராமன் கூறியதுபோல் அம் பனுப்பவில்லை. உயிருக்குப் பயந்த சுக்கிரீவன், இராமனிடம் ஒடிவருகிறான். இராமன், "உம்மை வேற்றுமை தெரிந்திலம்; கொடிப்பூ மிடைந்து செல்க" என மீண்டும் அனுப்பி வைத்தான். மீண்டும் வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் போர் நடை பெறுகிறது. வாலி, சுக்கிரீவனை நிலத்திலே ஏற்றத் துணிந்து பற்றித் தூக்கிய போது, இராமன் வாலியின் மார்பில் அம்பை எய்கிறான். இராமன் அம்பு எய்தக் காலம் தாழ்த்தியதற்குக் காரணம், வாலி 'உண்மையில் சுக்கிரீவனைக் கொல்லும்

நோக்கமுடையவன் தானா? என்பதை அறிந்து கொள்ளவே எனலாம். வாலியின் கையில் சுக்கிரீவன் பட்ட பாட்டை நேரில் கண்ட இராமன், தன் தம்பியைக் கொல்லும் நோக்கம் உடையவன் தான் வாலி என்பதை உணர்கிறான். உணர்ந்த பின்னரே வாலியைக் கொல்ல அம்பெய்கிறான். அப்படிப் பட்ட வாலி, எய்தவன் இராமன் என்பதை அறிந்து அவனைக் கடுமையாகச் சாடுகிறான்.

''தேவியைப் பிரிந்த பின்னர்த் திகைத்தனை போலும் செய்கை; இருவர் போர் செய்யும்போது, இடையிலே அம் பெய்யலாமா? வாலியைப் படுத்தாய் அல்லை; மன்னற வேலியைப் படுத்தாய்'' என்று இராமனை இடித்துரைக்கிறான் வாலி. இராமன்,

1. தவறு செய்யாத போதும் உன் தம்பி சுக்கிரீவனைக் கொல்லத் துணிந்தாய்.
2. அபயம் என்றடைந்த போதும் அவனுக்கு அடைக்கலம் அளிக்க மறுத்தாய்.
3. பிறர் மனைநயந்தாய்; அதிலும், தம்பியின் மனைவியைக் கவர்ந்து சென்றாய்.

இக்குற்றங்களைச் செய்தவன் நீ. மேலும், சுக்கிரீவன் எனக்கு நண்பன் என்ற காரணத்தினாலும் உன்னை நான் கொல்லத் துணிந்தனன். ஏனெனில், அயலாராக இருந்தாலும் எளிய ரென்றால் அவர் தீது தீர்ப்பது என் கொள்கை என்று கூறுகிறான்.

மேலும் வாலி, எங்கள் குரங்கினத்திற்கிடையே மனம், குணம் முதலான ஒழுக்க நெறிகள் கிடையா. எனவே உங்கள் குல ஒழுக்கப்படியே நான் நடந்து கொண்டேன் என்று தன் தவற்றை மறைத்து நியாயமென வாதிடுகிறான். ஆயின் ''பிறப்பால் ஒருவன் விலங்கல்லன்; அவன் செய்கிற செயலே அவனை வேறுப்படுத்துகிறது; உனக்கு நீதி, தருமம் ஆகியவை தெரிந்தே இருக்கின்றன. அவ்வாறு தெரிந்தும், நீ பிழை செய்துள்ளாய்'' என இராமன் எடுத்து மொழிகிறான்.

இறுதியாக வாலி, ''அவ்வாறாயினும், செருக்கணத்து எதிர்த்து எய்யாது, வெவ்விய புளிஞர் என்ன, விலங்கியே மறைந்து வில்லால் எய்தது என்னை?'' என்று வினவுகிறான்.

வாலியது வர பலமே அதற்குக் காரணம் என்றாலும், இலக்குவன் அதற்கு வேறொரு சமாதானம் கூறுகிறான். "சுக்கிரீவன் முன்னரே அடைக்கலம் அடைந்து விட்டான். உன்னைக் கொல்வதாக அவனிடம் வாக்களித்து விட்டோம். இந்நிலையில், நீயும் அடைக்கலம் புகுந்தால் இராமன் நிலை சங்கடமாகி விடும் எனவே தான், அந்நிலை தவிர்க்க உன் முன் வரவில்லை" என விளக்குகிறான் இலக்குவன்.

இறக்கும் தருவாயில் வாலி, "வந்திருப்பவன் இராமன் என்ற மனிதனல்லன்; திருமால் என்னும் தெய்வம்" என்பதை உணர்ந்து கொள்கிறான். 'அரந்தை வெம்பிறவி நோய்க்கும் அருமருந்தனைய ஐயா' என்று அவனை விளிக்கிறான்.

மேலும், 'வெற்றரசு எய்தி, எம்பி வீட்டரசு எனக்கு விட்டான்' என்று அவன் கூறுவது இதனை விளக்கும். இதுவரை, தம்பியாகிய சுக்கிரீவனைக் கண்ட இடமெல்லாம் துரத்திக் கொல்ல முற்பட்ட வாலி, இப்போது அவன் மேலுள்ள சினமெல்லாம் ஆறி, அவனை இராமனிடம் அடைக்கலம் கொடுக்கும் அளவிற்கு மனப்பக்குவம் அடைகிறான். 'பூவியல் நறவம் மாந்தி, தீவினை இயற்று மேலும், எம்பிமேல் சீறிப் பகழியை ஏவாதே; எம்பியை உம்பிமார்கள், தன் அண்ணனைக் கொல்வித்தான் என்று இகழாது தடுப்பாயாக; என்று தன் தம்பிக்காக இராமனிடம் வேண்டிக் கொள்கிறான்.

மேலும், அனுமனது ஆற்றலைக் கூறி, அவனைத் தனுவாக நினைக்குபடி வேண்டுகிறான். அவ்வாறே, இராமனிடம் சுக்கிரீவன் நடந்து கொள்ள வேண்டிய நெறியை எடுத்துரைக்கிறான். தன் மகன் அங்கதனையும் இராமனிடம் அடைக்கலப்படுத்துகிறான்.

இவ்வாறு, வாலியின் வரலாற்றில் அவனது உடன் பிறப்புப் பாசம் இறுதியில் வெளிப்படக் காணலாம். கடுஞ் சினம் கண்ணை மறைத்து, தம்பியென்னும் பாசத்தையும் மனறத்தது.

முதலில் இராமனை மானிடனாகக் கருதி, மானிட நெறிக்குட்பட்டு அவன் மீது குற்றம் சுமத்துகிறான். அடுத்து, தெய்வநிலையில் அவனது உயர்வை எண்ணிப் போற்று கிறான்.

வாலி இறந்தபின் சுக்கிரீவன் முடிசூட்டப் பெறுகிறான். இவ்வாறு, சுக்கிரீவனது செயல் முடிந்ததும், இராமன் காரியமாகிய சீதையைத் தேடும் முயற்சி கார்கால வரவால் தடைப்பட்டது. கார்காலம் முடிந்த பிறகும், சுக்கரீவன் வாராது போகவே, இராமன் இலக்குவனை அனுப்பிவைக்கிறான். சீற்றத்துடன் இலக்குவன் செல்கிறான். தாரையைக் கண்டு, தன் சினத்தை ஆற்றிக் கொள்கிறான். குறித்த காலத்தில் உதவிக்கு வாராது போகவே, இராமன் சினம் கொண்ட செய்தியை எடுத்துரைக்கிறான். சுக்கிரீவன் தன் பிழையுணர்ந்து படையொடும் இராமனை அடைகிறான். வாலி, ''பூவியல் நறவம் மாந்தி, புந்தி தடுமாறி, தீவினை இயற்றுவான் என் தம்பி'' என்று கூறியதற்கேற்ப, இங்குச் சுக்கிரீவன் செயற் பட்டமை குறிக்கத் தக்கது.

நெடுநாள் காட்டிலே ஒளிந்து வாழ்ந்த வாழ்க்கையின் துன்பம் தீர, இன்று களித்து நின்ற சுக்கிரீவன் நிலை காட்டப் படற்குரிய காரணம் சிந்திக்கத் தக்கது. வாலியின் கூற்றை வைத்துப் பார்க்கும் போது, இது சுக்கிரீவன் இயல்பெனத் தெரிகிறது. சுக்கிரீவன் இயல்பா? அன்றித் துன்பத்துள் உழந்த சுக்கிரீவன் இன்பத்தில் மிகுந்திருந்தான் என்று கூறுவதா? இரண்டுமே சுக்கிரீவன் பண்புக்குக் குறைவேயாகும்.

வானரப்படையைத் திரட்டி, மேற்குத் திசைக்கண் சுடேணன், வடக்குத் திசைக்குச் சதவலி, கிழக்குத் திசைக்கு வினதன், தெற்குத் திசைக்கு அங்கதனும் அனுமனும் – ஆகிய வீரர்களை அனுப்புகிறான் சுக்கிரீவன். இராவணன் தலை நகரம் தென் திசையில் இருக்கக்கூடும் என்ற கருத்தினால், அத்திசைக்கு அனுமன் அனுப்பப்படுகிறான். அவ்வனுமனிடம் இராமன் சில அடையாளச் செய்திகளையும் கூறி மோதிரத் தையும் கொடுத்து அனுப்புகிறான்.

இலங்கையில் சீதையைக் க்ண்டு அனுமன் திரும்பி வருகிறான். வந்து, இராமனிடத்தில் தான் கண்டு வந்த செய்தி களை எடுத்துரைக்கிறான். உடனே, சுக்கிரீவன் படைகளைத் திரட்டிக்கொண்டு இலங்கையை நோக்கி இராம இலக்கு வர்களுடன் புறப்படுகிறான்.

யுத்த காண்டத்தில் சுக்கிரீவன் செயல்கள்,

1. வீடணனை ஏற்றல்

2. இராவணனை மகுடபங்கம் செய்தல்
3. கும்பகருணன் மூக்கைக் கடித்தல்
4. வச்சிரமுட்டியை அழித்தல்
5. இராவணன், கும்பகர்ணன், கும்பன் இந்திரசித்து ஆகியோருடன் போரிடல்

ஆகிய முறைகளில் அமைந்துள்ளன.

1. வீடணனை ஏற்றல்

இராமனிடம் வீடணன் சரணடைய வந்தபோது இராமன் ஆலோசனை நடத்துகிறான். அப்போது வீடணனை ஏற்றல் கூடாதெனச் சுக்கிரீவன் எடுத்து மொழிகிறான். இராவண னாகிய அண்ணனை, வீடணன் துறந்து வருவதற்குத் தக்க காரணங்கள் இல்லை. அண்ணனுடன் போரிடல், வேறொரு பழிச்செயலால் தன்னை அவன் கொல்ல நினைதல், ஆகிய இவை போன்ற பல செய்தி இல்லாமல் அண்ணனைத் துறந்து வருவது தரும நீதியோ? என்று வினவுகிறான். தன் அண்ண னோடு பகைமை கொண்டு அண்ணனால் கொல்லப்பட நேர்ந்த சூழலில், தான் இராமனைச் சரணடைந்தது முறையென்வும், அத்தகைய காரணங்கள் இன்றி, வீடணன் வந்தது முறையன்று எனவும் சுக்கிரீவன் குறிப்பால் புலப்படுத்துகிறான்.

"வெம்முனை விளைதலின் அன்று; வேறுஒரு
சும்மையான் உயிர்கொளத் துணிதலால் அன்று;
தம்முனைத் துறந்தது, தரும நீதியோ?
செம்மையில் அரக்கரில் யாவர் சீரியோர்"(9)

மேலும், தன் குலத்தை நீக்கி, தன் குலத்துக்குப் பகையாகப் புலம் சார்ந்தது முறையே? தம் அண்ணன் நலமுடன் வாழ்ந்த நாளில், அவன் 'சீர்க்கு உறவாய் இடைச்செறுநர் சீறிய போர்க்கு உறவன்றியே போந்தபோது, இவன் ஆர்க்கு உறவாகுவன்" என்று வீடணன் தன் அண்ணனைத் துறந்து வந்தது நீதியன்று, தருமமன்று என்று வாதிடுகிறான். ஆயின், அனுமன் கருத்து வேறுவிதமாக அமைய, இராமனும் வீடணனை ஏற்றுக்கொள்ள முடிவு செய்து, வீடணனை அழைத்து வருமாறு சுக்கிரீவனையே அனுப்பி வைக்கிறான். சுக்கிரீவனும் வீடணனை அழைத்து வந்து இராமனிடம் சேர்க்கிறான்.

"மைதவழ் கிரியும் மேருக்குன்றமும் வருவது என்ன,
செய்தவம் பயந்த வீரா, திரன் மரம் எழும்தீய

எய்தவன் இருந்த சூழல், இருவரும் எய்தச்சென்றார்''(10)
என்று கம்பர் வீடணனும் சுக்கிரீவனும் இராமனை அடைந்த காட்சியைச் சித்திரித்துள்ளார்.

இவ்வாறு, சுக்கிரீவன் மனத்தில் சில சந்தேகங்கள் தோன்ற, பின் அவை இராமன் சொற்களால் நீங்கியனவாகக் காட்டப்படும் நிலை, சுக்கிரீவன் இராமனது உள்ளக் கருத்தைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு உயரவில்லை என்பதைப் புலப் படுகிறது. அனுமன், இராமனது கருத்தை உணர்ந்து சொல்லும் அளவுக்கு, சுக்கிரீவன் உயரவில்லை என்பது தெளிவாகிறது.

இங்கு சுக்கிரீவனும் வீடணனும் தத்தம் தமையன் மாரைப் பிரிந்து வந்த நிலைகள் ஒப்புநோக்கத்தகும். சுக்கிரீவன் வாலியைப் பிரியக் காரணங்கள்:

1. அண்ணனால் துரத்தப்படல்
2. தன்னை அண்ணன் பகைவனாகவே கருதுதல்
3. தன்னைக் கொன்றுவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு அண்ணன் இருத்தல்
4. தன் மனைவியைக் கவர்ந்து கொள்ளல்
5. சரணடைந்தும் ஏற்றுக்கொள்ளாமை.

வீடணன் இராவணனைப் பிரியக் காரணங்கள்:

1. அண்ணன் அறநெறி தவறல்
2. தனது அறிவுரை கேட்க மறுத்தல்
3. தன்னைத் துரத்தல்
4. தன்னைக் கொன்றுவிடுவதாக அச்சுறுத்தல்

இங்கு, சுக்கிரீவன், தான் அண்ணனைப் பிரிந்து வந்த சூழலையும், வீடணன் தன் அண்ணனைப் பிரிந்து வந்த சூழலையும் எண்ணிப்பார்த்துப் பேசுகிறான்.

வீடணன், இராவணனைப் பிரிந்துவந்து, தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு இராமனிடம் வேண்டுகிறான். இராமனும், ஆலோசனையின் பின் அவனை ஏற்றுக் கொள்கிறான். ஆயின், சுக்கிரீவன் நிலை அத்தகையது அன்று. கவந்தனும் சவரியும் அவனை நல்லவன் என்ற அறிமுகத்தோடு ஆற்றுப்படுத்த, சுக்கிரீவனை நாடி இரலைமலைக்கே செல் கிறான் இராமன். அந்நிலையில் சுக்கிரீவனைச் சந்தித்து அவனை நண்பனாக ஏற்றுக்கொள்கிறான் இராமன். அதற்குப் பின்னரே வாலி சுக்கிரீவன் பகைமை பற்றி அவன் அறிந்து

கொள்கிறான். எனவே, ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப்படுதல் வீடணன் நிலையாகவும் ஏற்றுக்கொண்டபின் ஆராய்வது சுக்கிரீவன் நிலையாகவும் அமைந்துள்ளமை குறிக்கத்தகும்.

2. இராவணனை மகுடபங்கம் செய்தல்:

இராவணன் வானரர் தானையினை எதிர்நின்று பார்த்துக் கொண்டிருந்த பொழுது, வீடணன் இராவணனை அடையாளம் காட்டுகிறான். சுக்கிரீவன் திடுமெனப் பாய்ந்து சென்று, இராவணனையடைந்து, அவனோடு கைகலந்து, அவன் மகுடங்களைப் பறித்து வந்தான். சுக்கிரீவனது இச்செயலுக்குக் காரணம், தான் தனிச் சிறப்பான காரியம் ஒன்று இராமனுக்குச் செய்யவேண்டும் என்பதே.

"காட்டிலே கழுகின் வேந்தன் செய்தனகாட்ட மாட்டேன்;
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்கமாட்டேன்;
கேட்டிலேன் இன்றுகண்டும், கிளிமொழி மாதராளை
மீட்டிலேன்; தலைகள் பத்தும் கொணர்ந்திலேன்; வெறுங்
கைவந்தேன்"11

என்ற சுக்கிரீவனது கூற்று, அவன் மனத்தில் இருந்த ஆர்வத்தை வெளிக்காட்டுகிறது.

3. கும்பகருணன் மூக்கைக் கடித்தல்

கும்பகருணனோடு போரிட்டுக் கொண்டிருக்கும் போது சுக்கிரீவன் உணர்விழந்தான். உணர்விழந்த சுக்கிரீவனைக் கும்பகருணன் தூக்கிச் சென்றான். அவ்வாறு தூக்கிச் செல்லும்போது, கும்பகருணனது குருதிநீர் முகத்தைப் போர்த்தலும், 'இன்துயில் உணர்ந்து தன்' உணர்ச்சி எய்தினான். அவ்வளவில், மானமும் நாணமும் கொண்டு கும்ப கருணனது நாசியையும் செவியையும் பறித்துக் கொண்டு இராமனை அடைந்தான். அதனால்தான், இறுதியில், மூக்கிலா முகமொன்று பிறர் நோக்காமல், என் கழுத்தை நீக்கி என் நெடுந்தலையைக் கருங்கடலில் போக்குவாய்"12 என்று கும்பகருணன் இராமனிடம் வேண்டுகிறான்.

இது போன்ற செயல், வீரத்துக்குரிய மானிடச் செயலாக விளங்காமல் குரங்குச் செயலாகவே கொள்ளுமாறு அமைந்துள்ளது.

எனவே, சுக்கிரீவனைப் பொறுத்தவரை, பக்குவமடையாத மனநிலை உடையோனாகவே அவன்

காட்டப்படுகிறான் எனலாம். இராமனது தெய்வ நிலையைக் கூட அவன் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

4. வச்சிர முட்டியை அழித்தல்

இராவணன் முதற்போர் புரிய வந்தபோது, வச்சிர முட்டி என்னும் அரக்கனுடன் போரிட்டு அவனை அழிக் கிறான் சுக்கிரீவன்.13

இது தவிர, இந்திரசித்தோடு போர் புரிகிறான் (14) இராவணனோடு போர் புரிகிறான். (15) கும்பகருணனோடு போர் புரிகிறான். (16) கும்பனோடு போர் புரிகிறான். (17) இவை அவனுடைய போர்ச் செயல்கள்.

மேலும் மூலப்படை அழிவு காண இராமனால் ஏவப் பட்டான். இறுதிப் போருக்கு இராவணன் தேரேறச் சுக்கிரீவன் துணுக்குறுகிறான். இறுதியாக, இராமனிடம் விடை பெற்றுச் செல்கிறான்.

வாலி சுக்கிரீவர் இருவருள், வாலிக்கு இருக்கும் பேராற்றல் சுக்கிரீவனுக்கு இருப்பதாகக் காட்டப்படவில்லை. அதே போன்று, அனுமனைப் போன்று கூர்த்த மதியுடை யோனாகவும் சுக்கிரீவன் காட்டப்படவில்லை. இராமனைத் தெய்வமென்றும் உணரவில்லை. வாலி உணர்த்தியபோதும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவனுடைய போர்களச் செயல்களும், அத்துணைப் பெருமை சேர்ப்பவனாக இல்லை எவ்வாறாயினும், அண்ணன்மேல் அன்பும் மதிப்பும் உடையவன் என்பதில் ஐ யமில்லை.

"வாசத்தாரவன் மார்பு எனும்மலை வழங்குஅருவி
ஓசைச்சோரியை நோக்கினன்; உடன்பிறப்பு என்னும்
பாசத்தால் பிணிப்புண்ட அத்தம்பியும், பசுங்கண்
நேசத்தாரைகள் சொரிதர நெடுநிலம் சேர்ந்தான்" (18)

என்று வாலி வீழ்ந்ததும், மயங்கி வீழ்ந்த சுக்கிரீவன் நிலை பேசப்படுகிறது.

பின்னரும் ஆட்சியைத் தனக்கு உரியதாக்கி ஆளாமல், அங்கதனது உரிமைப் பொருளாகவே ஆண்டு வருகிறான் சுக்கிரீவன். அன்றியும் "வாலி சேய் அரசு அது, ஆதலின் பின்றுதல் தீதரோ"19 எனக் கூறக் காண்கிறோம்.

"சுக்ரீவன் மேல் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் மூன்று

1. இராமனது பெருமையை உணராமை
2. இராவணைப் பற்றிய உண்மை கூறாமை
3. இராமனிடம் சொன்ன வாக்குறுதியை நிறை வேற்றாமை. இக்குற்றங்கள் சுமத்தப்பட்ட போதிலும், அவன் இராமனுக்காகச் செய்யும் செயல்கள் முதலியன பாராட்டப்படுகின்றன'' (20)

ஆய்வு முடிவுகள்

1. சுக்கிரீவன் வாலியை ஒப்பப் பேராற்றல் உடையவனாகப் படைக்கப்படவில்லை.
2. அனுமனைப் போன்ற கூர்த்த மதியுடையோனாகப் படைக்கப்படவில்லை.
3. இராமனை மனித நிலையில் காண்கிறானேயன்றி, இறைநிலையில் காணவில்லை.
4. ஆட்சியின்பால் ஆர்வம் உடையோனாகக் காட்டப் படவில்லை.
5. பொதுவாகப் பெருமிதம் தோன்ற இப்பாத்திரம் படைக்கப்படவில்லை.
6. மதுவுண்டு மயங்கி, காலந்தாழ்த்தி, இராமனுக்கு உதவ வருதல், வீடணன் வருவதன் உண்மைநிலை ஓராதிருத்தல், இராவணன் மகுடம் பறித்தல், கும்பகருணன் மூக்கைக் கடித்தல் ஆகியன இவனுக்குப் புகழ் சேர்க்கும் செயல்களல்ல. அவை பக்குவமடைந்த மனிதச் செயல்களாக அன்றி வானரச் செயல்களாகவே அமைந்துள்ளன எனலாம்.
7. அண்ணன் மேல் பாசம் உடையவன் என்பது புலப் படுகிறது.

குறிப்புகள்

1. கவந்தன் படலம் 54, 55
2. சவரிபிறப்பு நீங்குபடலம் 6, 7
3. திரு அவதாரப் 26
4. நட்புக்கோட். 62, 63
5. நட்புக்கோட். 27
6. நட்புக்கோட் 35
7. நட்புக்கோட் 69
8. நட்புக்கோட் 70
9. வீடணன் அடைக்கலப் 59

10. வீடணன் அடைக்கலப் 128
11. மகுடபங்கப 59
12. கும்பகர்ணன் வதைப் 357
13. முதற்போர்புரி 128
14. நாகபாசப் 69
15. முதற்போர்புரி 128
16. கும்பகர்ணன் வதைப் 45
17. அதிகாயன வதைப் 236
18. வாலிவதைப் 77
19. சுந்தரகாண்டம், மிகைப்பாடல்கள் 19–13
20. V.S. Srinivasa Sastri, Lectures on the Ramayana, P. 208-219.

வீடணன்

ஞானவாணி, நாவுக்கரசி,
பேராசிரியை இளம்பிறை மணிமாறன், எம்.ஏ.,

வீடணன்- கம்பனைக் கற்பார் நெஞ்சில் என்றும் நின்றுலவும் கதாபாத்திரம். பாசமா? அறமா? என்ற கேள்வி உலகம் உள்ளளவும் நிற்குமானால் வீடணன் என்ற பாத்திரம் கம்பனின் சுவைஞர்கள் சிந்தனையில் உலகம் உள்ளவரை உலாவரும். இராவணன் தம்பி என்ற உறவைப் பிறப்பாலும், இராமன் தம்பி என்ற சிறப்பை உணர்வாலும், ஏற்படுத்திக் கொண்ட கதாபாத்திரம். பிறந்த இடத்தின் புன்மையைப் போக்கி, புகுந்த இடத்தின் பெருமை விளங்கித் தோன்ற, இராமபிரானின் பாத பங்கயத்தில் தன்னை ஆத்ம சமர்ப்பணம் செய்து கொண்ட ஒரு அற்புதப் பாத்திரம்.

முக்கியமான கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றையும் கம்பன் அறிமுகம் செய்து வைக்கும் அழகே அலாதியானது. சீதாபிராட்டியைத் தேடி இலங்கை சென்ற அனுமன், வீடணனின் மாளிகைக்குள் நுழைந்தான் எனச் சொல்லவரும் கம்பன், தீமையே புரியும் கருநிற அரக்கர்களுக்கு மத்தியில் தனது வெண்மை நிறத்துடன் விளங்குதல் பொருத்தமன்று எனக்கருதி அரக்கர்களின் கருநிறத்தையே மேற்கொண்டு ஒளித்து வாழும் தர்மத்தையொத்த வீடணனை அனுமன் கண்டான் என்று வீடணனை அறிமுகம் செய்து வைக்கிறான்.

'பளிக்கு வேதிகைப் பவளத்தின் கூடத்து, பசுந்தேன்
துளிக்கும் கற்பகப் பந்தரில், கருநிறத்தோர் பால்
வெளித்து வைகுதல் அரிது' என அவர் உரு மேவி,
ஒளித்து வாழ்கின்ற தர்மம் அன்னான் தனை உற்றான்.

கூர்த்த அறிவினால் எதனையும் உற்று உணரும் ஆற்றல் மிகுந்த அனுமன் தனது முதல் பார்வையிலேயே இவன் குற்றமில்லாத குணத்தினை உடையவன் என்ற முடிவுக்கு வருகிறான். 'குற்றமில்லதோர் குணத்தினன் இவன்' என்பது அனுமன் வாக்கு.

வீடணன் அறிவின் மிக்கான்; உரிய நேரத்தில் உள்ளதை உள்ளவாறு உணர்த்திக் காட்டும் திறம் வீடணனின் சிறப்பியல்பு. அசோக வனத்தைத் தன் ஆற்றலால் அழித்துத் தடுக்க வந்தாரைக் கொன்று வாகை சூடிய அனுமனைக் கட்டி

இழுத்து வந்த இந்திரசித்தன், இராவணன் முன் கொணர்ந்து நிறுத்தும் போது 'இக் குரங்கைக் கொல்லுங்கள்' என்று குரல் உயர்த்தினான் இராவணன். 'தூதுவனைக் கொல்வது முறையாகாது' என்று சபையில் உரைத்த வீடணனை 'நன்று உரைத்தாய் நம்பி' என்றான் இராவணன். வீடணன் நல்லனவற்றையே உரைப்பவன் என்ற நம்பிக்கை அப்போது இராவணன் மனத்தில் இருந்தது. எனவே அனுமனைக் கொல்லாமல், வாலில் நெருப்பிட்டு நகரைச் சுற்றிவரச் செய்தான். வாலில் வைத்த நெருப்பு இலங்கை முழுவதையும் சுட்டெரித்த பின்னர், மந்திராலோசனைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் அரக்கர் தலைவனுக்கு ஏற்பட்டது. ''வந்த வானரம் நகரையும் சுற்றத்தையும் அழித்து, இலங்கையை எரிமயமாக்கி ஏகிய பின்னால், அவமானத்தைச் சுமந்து கொண்டு அரியாசனத்தில் நான் இருப்பதா?'' என்று மனம் புழுங்கி நின்ற இராவணனை, ''கிளையிலிருந்து வாழும் குரங்கு எங்கே? வெள்ளிமலை அள்ளியெடுத்த நின் தோளெங்கே?'' என்று புகழ்ப் பரணி பாடி, இராவணனின் சிந்தனைக்குச் சுற்றியிருந்த அமைச்சரெல்லாம் திரையிட்டனர். 'குலப்பெருமையைச் சீர்குலைக்கும் இழிந்த செயலைச் செய்யலாகுமோ?' எனக் கும்பன் நெருப்புக் கணை தொடுக்கிறான். இந்த நிலையில் தன் மனத்துணிவும், அறிவாற்றலும் கைகொடுக்க, வீடணன் தன் கருத்தினை மொழியலுற்றான். என் தந்தையாகவும், தாயாகவும், தமையனாகவும், தொழும் தெய்வமாகவும் ஆனவனே என்று தொடங்கி

'இந்திரப் பெரும்பதம் இழக்கின்றாய் என
நொந்தனன் ஆதலின் நுவல்வது ஆயினேன்'

என்கிறான். தவத்தினால் அடைந்த இலங்கைச் செல்வத்தை அவத்தினால் இழப்பதுவோ? இலங்கையைச் சுட்டெரித்தது ஒரு வானரம் என்று எண்ணுதல் சிறப்பன்று; சிறைபிடிக்கப்பட்டு அரக்கியரின் கட்டுக் காவலுக்குள் இருக்கும், அசோகவனத்துச் சீதையென்னும் அணையாத கற்புத் தழல் அல்லவோ இலங்கையைச் சுட்டெரித்தது என்கிறான் வீடணன்.

'கோநகர் முழுவதும், நினது கொற்றமும்.
சானகி யெனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால் வெந்தது அல்லதுஓர்
வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ!

என்று பேசும் வீடணனின் அறிவாற்றல் சிந்திக்கத் தக்கது. இராவணன் பக்கம் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி, இராமனிடமுள்ள நிறைகளை நினைவுபடுத்தி, இராவணன் இனிச் செய்ய வேண்டியவை என்ன என்பதனை அறிவுறுத்தும் பாங்கில் அமைந்த வீடணனின் பேச்சு பாராட்டுதலுக்குரியது. தன்பலத்தின் மேல் அளப்பரிய நம்பிக்கை கொண்டு, 'தன்னை வீழ்த்தும் தகுதி யார்க்குண்டு' என்ற இறுமாப்பில் இருந்த இராவணனை நோக்கி 'ஏழுலகையும் வென்று கலக்கிய ஆற்றல் மிகுந்த உன்னையும் ஒரு கார்த்தவீரியன் தோல்வியுறச் செய்தான்; வாலியிடம் தோல்வியுற்றாய்; எரிபுகுந்து உயிர்மாய்த்த வேதவதியின் வாய்ச்சொல்லை மறந்து போனாய்.' எனச்சொல்லி இராவணனின் குறைகளை நினைவுபடுத்தினான். தசரதன் புதல்வனான இராமபிரானோ, கணப்பொழுதில் உலகினைக் கலக்க வல்ல படைக்கலங்களை, கோசிகனிடமிருந்து பெற்றான். கரனையும், விராதனையும் அழித்து, மாரீசனைக் கொன்று வாலியின் மார்பை ஊடுருவி உயிர் உண்ட அம்பு, இராமபிரானின் கையில் உள்ளது எனச்சொல்லி இராமபிரானின் சிறப்பினை இராவணனுக்கு எடுத்துரைத்தான். குலததை அழித்தான் என்றும், அறத்தை வேரறுத்தான் என்றும் உலகு பழிப்பதைத் தவிர்க்க விரும்பினால், இராவணன் கற்பின் தெய்வத்தை இராமனிடம் அனுப்புதலே சரியான தீர்வாகும் என்றான் வீடணன்.

'இசையும் செல்வமும் உயர்குலத்து இயற்கையும் எஞ்ச,
வசையும் கீழ்மையும் மீக்கொளக் கிளையொடும் மடியாது,
அசைவுஇல், கற்பின் அவ்வணங்கை விட்டருளுதி; இதன்மேல்
விசையம் இல் எனச் சொல்லினன்-அறிஞரின் மிக்கான்'

பல்துறைச் செய்திகளைத் தெரிந்து வைத்திருப்பவன் அறிஞன். பயன் விளைய உரிய நேரத்தில் எடுத்துச் சொல்பவன், அறிஞரில் மிக்கான். தக்கது இன்னது தகாதன இன்னின்ன எனப்பகுத்துணர்ந்து, உரிய நேரத்தில் அவற்றினை இராவணனுக்குச் சுட்டிக்காட்டித், திருத்த முனைப்புக் கொண்ட வீடணனுக்கு 'அறிஞரில் மிக்கான்' என்ற அடைமொழியைத் தருகிறான் கம்பன். வீடணனது விளக்கத்தைக் கேட்ட இராவணன், மீண்டும் தன் வீரப்பிரதாபங்களைப் பட்டியலிட்டுச் சொல்லி இறுமாந்திருந்தான். "திசையானைகளை அடக்கி, சிவன் இருந்த வெள்ளிமலையை வேரோடும்

பெயர்த்தவன் நான். சிவனையும் திருமாலையும் வென்ற ஆற்றல் படைத்த என்னை அற்பமனிதர் வெல்லவோ? ஊனமான வில்லை ஒடித்து, ஒட்டை மரத்தில் அம்பினைச் செலுத்தி, கூனி சூழ்ச்சியால் அரசைத் துறந்து, கானகம் சேர்ந்து, கானகத்திலும் என் சூழ்ச்சிக்கு ஆட்பட்டு, தன் மனைவியை இழந்து தன் இன் உயிரைச் சுமந்து திரியும் இராமனின் வலிமையை உன்னைத் தவிர உலகில் வேறுயார் மதிப்பார் என்றான்.

'தூதுவனைக் கொல்லுதல் கூடாது' என்று சொன்ன போது 'நன்று உரைத்தாய் நம்பி' என்ற இராவணன், அவன் பலவீனத்தைச் சுட்டிக் காட்டிய உடன் வீடணனைப் பார்த்துப் 'பித்தனைப் போல் பிதற்றுகிறாய்' என்றான். போருக்குச் செல்வதைத் தவிர்த்துச் சீதையை சிறைவிட்டு, வர இருக்கும் துன்பத்திலிருந்து இராவணன் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணம் மேலோங்க, இராமபிரானின் கடவுள் தன்மையை இராவணனுக்கு நினைவூட்டி, உண்மைப் பொருள் உரைத்தான் வீடணன்.

'தன்னின் முன்னிய பொருள் இலா ஒரு தனித் தலைவன்,
அன்ன மானுடன் ஆகிவந்து, அவதரித்து அமைந்தான்'

இராமன் அவதார நாயகன் என்ற உண்மையினை எடுத்துச் சொல்லி, இராவணின் மனத்தைத் தெளிவிக்க முயன்றான்.

அதனைக் கேட்ட அரக்கர் தலைவனோ, மூட்டிய நெருப்பெனச் சினந்து, "நான் இந்திரனைச் சிறை வைத்தவன்; ஐராவதத்தின் கொம்பொடித்தவன்; திருமாலின் வாகனமாகிய கருடனையும், சிவனது வாகனமாகிய காளையையும் அம்பினால் அடித்து அடையாளமிட்டவன்" என்று தற்பெருமைத் தம்பட்டம் அடித்தான். அதன் பின்னரும் 'புத்தி கெட்ட இராவணனுக்குப் போதிப்பது' ஆகாது என மனச் சோர்வு கொள்ளாமல், இரணியனது வரலாற்றை எடுத்துரைத்து எச்சரித்தான் வீடணன். 'பகைவரிடத்தில் கொண்ட அச்சமும், இலங்கை ஆட்சியின் மேல் வைத்த ஆசையும் இவ்வாறு செய்ய உன்னைத் தூண்டின' என வீடணன் மேல் இரு குற்றங்களைச் சுமத்தினான் இராவணன். 'நஞ்சை உடன் வைத்துக் கொண்டு வாழ்தல் கூடுமோ? உடன் பிறந்தானைக் கொன்றான் என்ற பழி எனக்கு ஏற்படுமுன் இவ்விடத்தை விட்டுச் சென்று விடு'

என இராவணன் எதிர் மொழி பேசியும், வானில் தன் துணைவருடன் எழுந்து நின்று அறம் உரைத்தான். வீடணன், 'வாழ்மை தான் அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ? அடைக்கலமாக உன்னை அடைந்த அனைவரையும் ஒரு சேர இராமபாணம் அழித்து ஒழிப்பதைக் கண்டபின், நீ உயிர் விடப் போகிறாயோ?' என வீடணன் அனைத்து உண்மைகளையும் எடுத்துரைத்தும், இராவணனிடத்தில் எந்த பயனும் விளையாமையினால், அனலன், அனிலன், அரன், சம்பாதி ஆகியோருடன் கடல் கடந்து இராமனைக் காண வந்தான் வீடணன்.

அண்ணனைத் துறந்து, அவன் அறம் பிறழ்ந்தவன் எனக் கருதித் தன்னைத் தனிமையைப் படுத்திக் கொள்ள விரும்பிய வீடணன், தன் சோதரன் இராவணனின் நேரடிப் பகைவனான இராமனுடன் இணைய வேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வியினைப் பல கதாபாத்திரங்கள் கேட்ட வண்ணமிருந்தும் தன் சார்பாக வீடணன் உண்மைக் காரணத்தை உரைக்கிறான். இராமனை நினைத்த மாத்திரத்தில், அவனது ஊன் உருக, என்பெல்லாம் குளிர, மனம் குழைகின்றது. 'மயக்கம் மிகுந்த மனிதப் பிறவிக்கு மருந்தாவான் இராமன், அவனது தாமரைத் திருவடிகளைச் சரண் அடைந்து பிறவி போக்குவேன்' என வந்தான் வீடணன்.

வீடணனின் அடைக்கலம் காப்பியப் போக்கில் மிக முக்கியமான அங்கம் வகிக்கிறது. அவனுக்கு அடைக்கலம் அருளுவது குறித்து, இராமன் நண்பர்களுடன் ஆராய்ந்தான். வாழும் போது தமையனுடன் சேர்ந்து மகிழ்ந்து அவன் வீழும் போது அவனை விட்டு நீங்குதல் முறையன்று. அறங் கொன்ற அண்ணனை விட்டு விலக நினைத்த வீடணன், துறவை மேற்கொண்டிருக்கலாமே அல்லாது, பகைவரைச் சார்தல் பொருத்தமானது அன்று என்கிறான் சுக்ரீவன். ஒருவன் தன் இயல்பான தீய குணங்களை உதறித் தள்ளிவிட்டு, சேர்ந்த இடத்திற்கு உண்மை அன்பு செய்தல் இயலுமோ! என்றான் சாம்பன். அதுவரை மற்றவர்களின் கருத்துக்களை மிக்க பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த அனுமன், தன் பங்கிற்கு வீடணனுக்கு இராமபிரான் அடைக்கலம் தர வேண்டிய தன் நியாங்களை எடுத்துரைத்தான். இலங்கைக்குத் தூது சென்ற காலத்தில் தன்னைக் கொல்லுமாறு இராவணன் பணிக்க, 'தூதாய் வந்தனைக் கொல்லுதல் முறையன்று' என்று எடுத்துரைத்து உயிர் காத்தவன் வீடணன்; அவனது

பொன்மயமான மாளிகைக்குள் புகுந்து சென்ற போது, அவனது அறவாழ்வு தன்னால் புரிந்து கொள்ளப்பட்டது என்றும் அசோக வனத்தில் சிறை இருந்த செல்விக்கு அருகிருந்து தக்கன சொல்லி அவன் உயிர்காத்தவள், வீடணனின் மகள் திரிசடை என்றும் எடுத்துச் சொல்லி, இயல்பிலேயே தகுதி உடைய நற்குணங்களைப் பெற்றுள்ள வீடணனை அபயம் என வந்த காலத்தில் ஏற்றுக் கொள்ளுதலே முறையாகும் என்றும் அனுமன் எடுத்துரைக்க, மாருதியின் அமுத வார்த்தையை இராமன் செவி மடுத்து

'மற்று இனி உரைப்பது என்னோ? மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி' என்றான்.

சரணாகதியின் சிறப்பைக் கூடி இருந்த அனைவருக்கும் உணர்த்தும் உன்னத நோக்கோடு, சர்வலோக சரணாகதன், சரணாகதியை விளக்கி நின்றான். 'சரணம்' என்று வந்த பின்னர் தன் கடமையில் ஒருவன் தவறி நின்றாலும், அடைக்கலமாக வந்தவனுக்கு அபயம் அளித்தவன் புகழ் அடைவானே அல்லாது, அவன் பழி அடைதல் ஏற்படாது. தன்னை அடைக்கலமாக அடைந்த ஒரு புறாவின் பொருட்டாகத் தன் தசையையே தரத் துணிந்த சிபிச்சக்கரவர்த்தி, தன்னைச் சரணடைந்த தேவாதி தேவர்களுக்காக, அமுதத்தில் கலந்த நஞ்சினை உண்டு, தேவர்களுக்கு அபயம் அளித்த சிவபெருமான், தன் பெடையினைப் பிடித்து, பின் தன்னையும் பிடிக்க வந்த வேடனுக்கு விறகு தந்து, தீ மூட்டி, குளிர் நீக்கி அவன் பசி போக்கத் தன் உடலைப் பொசுக்கிய ஆண்புறா, ஆதிமூலமே அபயம் எனக் குரல் எழுப்பிய கஜேந்திரனைக் காத்த திருமால், தன்னைச் சரண் புகுந்த மார்கண்டேயனை எமனிடமிருந்து காப்பாற்றிய சிவபெருமான், வான்வழி இராவணன் தூக்கிச் சென்ற போது 'அபயம்' எனக் குரல் கொடுத்த சீதையைக் காப்பாற்ற, இராவணனிடம் போராடித் தன் உயிரை இழந்த ஜடாயு, ஆகியோரின் செயல்கள் அனைத்தும் சரணாகதி தர்மத்தின் விளக்கங்கள் அல்லவா? எனத் தன்னைச் சூழ இருந்தாருக்கு எடுத்துச் சொல்லி வீடணனை அழைத்துவரச் சுக்ரீவனை அனுப்பினான் இராமன்.

'உய்ய, நிற்கு அபயம்! என்றான் உயிரைத்தன் உயிரின் ஓம்பாக்
கய்யனும், ஒருவன் செய்த உதவியில் கருத்திலானும்
மய்அற, நெறியின் நோக்கி, மாமறை நெறியில் நின்ற
மெய்யினைப் பொய் என்றானும், மீள்கிலா நரகில் வீழ்வார்''

சூரிய குல மரபுக்கு ஏற்ப வீடணனுக்கு இராமபிரான் அடைக்கலம் அருளியதைச் சுக்ரீவன் வீடணனுக்குத் தெரிவித்ததும்

''பஞ்சு'' எனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்தபாவி
வஞ்சனுக்கு இளைய என்னை, ''வருக'' என்றருள் செய்தானோ?
தஞ்சு எனக் கருதினானோ? தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சு எனச் சிறந்தேன் அன்றோ, நாயகன் அருளின் நாயேன்?

என்று சொல்லி இராமனை நோக்கி வந்து, தன் பிறவித் துன்பம் ஒழிந்தது என்று இராமபிரானின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். 'வீடணா! உலகு உள்ளவரை இலங்கையை அரசு புரிவாய்' எனச் சொல்லி இராமன் இலக்குவனிடம்

'தஞ்சுதல் துணைவன் ஆன தவறு இலாப் புகழான் தன்னை,
துஞ்சல்இல் நயனத்து ஐய! சூட்டுதி மகுடம்' என்றான்.

அதனைக் கேட்ட வீடணன், இராவணனுடன் பிறந்தவன் என்ற பிறப்புத் தொடர்பு நீங்குமாறு இளையவனான பரதனுக்குச் சூடிய பாதுகையை எனக்கும் சூட்டி அருள்வாயாக என்றான்.

விளைவினையறியும் மேன்மை வீடணன், 'என்றும் வீயா
அளவு அறு பெருமைச் செல்வம் அளித்தனை ஆயின், ஐய!
களவு இயல் அரக்கன் பின்னே தோன்றிய கடமை தீர
இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' என்றான்.

இராமபிரானோ அடைக்கலமும் தந்து, தன் சோதரர்களில் ஒருவனாக வீடணனை ஏற்றுக் கொண்டான். குகனொடும் ஐ வரானோம் சுக்ரீவனுடன் அறுவரானோம் எனச் சொன்ன இராமன் 'எம்முழை அன்பின் வந்த அகனமர் காதல் ஐ ய' என்ற அழகிய சொற்றொடரால் அழைத்து இராமபிரானின் அன்புக்கு ஆட்பட்ட வீடணனின் பெருமைக்குப் பெருமை சேர்த்தான்.

'குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல்ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை'

என்றான். பின் இராமபிரானின் பாதுகையினைச் சிரத்தில் சூடிய வண்ணமாகப் படைகள் இருக்கும் பாசறையினைச் சுக்ரீவனுடனும், இலக்குவனுடனும் வீடணன் வலம் வந்தான். இராமனைச் சரண் புகுந்ததால் வீடணன் எல்லையில்லாத சிறப்புப் பெற்றான்.

சரண் புகுந்தபின், இலங்கையைப் பற்றிய அனைத்து இரகசியங்களையும், இராமபிரான் கேட்க, வீடணன் ஒன்று விடாமல் உரைக்கலானான். இலங்கையின் மதில், அதில் அமைக்கப்பட்டுள்ள இயந்திரங்கள், கடலே அகழியாக அமைந்துள்ள இலங்கையின் தன்மை, வாயிலைக் காவல் காத்துக் கொண்டுள்ள கொடிய வீரர்களின் தொகை, தேர்களின் எண்ணிக்கை, நால்வகைப் படைகளின் தொகுதி, இராவணனுக்குப் பலவகையிலும் பக்க பலமாய் நிற்போர் பட்டியல், இராவணனின் தம்பி கும்பன், மகன் இந்திரசித்தன், அவன் தம்பி அதிகாயன் ஆகியோரின் வலிமை, குபேரனையும் எமனையும் வருணனையும் வெற்றிகண்ட இராவண்னின் ஆற்றல், இவை அனைத்தையும் ஒன்றும், ஒளிக்காமல் எடுத்துரைத்தான். அண்ணனின் நடைமுறைகள் தனக்குப் பொருந்தாது எனக்கருதி விட்டு விலகிப் பகைவனைச் சார்ந்ததோடு நில்லாமல், இலங்கையின் அனைத்து இரகசியங்களையும் இராமபிரானிடம் எடுத்துரைத்தது ஏன்? எனக் கேட்கப்படும் கேள்வி எழுந்தாலும் வீடணன் சார்ந்ததன் வண்ணமானான் என்ற பதிலும் அக்கேள்வியில் தொக்கி நிற்கிறது. இராமபிரானைச் சரணாக அடைந்தபின்னர், இலங்கையைப் பற்றிய செய்திகளைப் பரிமாறிக் கொள்வதில் வீடணன் தயக்கம் காட்டியிருந்தால், 'சேர்ந்த இடத்திலும் ஒட்டுறவு இல்லாதவன்' என்ற பழி அல்லவா படர்ந்திருக்கும்?

இராவணனிடம் எல்லையற்ற பாசமுடைய தம்பியான கும்பகர்ணன், வீடணனின் செயல் தவறானது என்று ஒரிடத்திலும் குறிப்பிடவில்லை. மாறாக இராமனைச் சார்ந்து வாழ்வதே வீடணனுக்குத் தகுதியானது என்கிறான். கும்பனைக் களத்தில் முதன்முதலில் கண்ட இராமன், வியப்புத் தோன்ற 'இவன் யார்?' என வீடணனிடம் வினவ, இராவணனின் 'தாழ்வு இலா ஒரு தம்பியோன்' என்றும், தனக்கு முன் பிறந்த தமையன் என்றும் உரைத்தான். சிவன் கொடுத்த சூலம் உடையவன்; காற்றறையும் கனலையும் பிழிந்து சாறு எடுக்க வல்லவன்; இந்திரனின் ஐராவதத்தைக் கையினால் தூக்கிச்

சுழற்றும் வல்லமை படைத்தவன்; பிறன்மனை நோக்குதல் பாவம் எனப் பலமுறை இராவணனுக்கு எடுத்துச் சொல்லியும், உணராத இராவணனை விட்டுப்பிரிய மனமின்றி, அவனுக்காகவே தன் உயிரைத் தியாகம் செய்து விடுவது என்ற முடிவுக்கு வந்தவன் என்றும் வீடணன் பதில் உரைக்கிறான். கும்பனைத் தம்பக்கம் அழைத்து வருமாறு இராமபிரான் கூறியதைக் கேட்டு வீடணன் கும்பனைக் காணச் சென்றான். வந்த வீடணனை இறுகத் தழுவி, உச்சிமோந்து, விழிநீர் பெருக்கி "எங்களை விட்டு விலகிச் சென்றதால் பிழைத்தாய் என மனம் மகிழ்ந்திருந்தேன். சிந்தையில் தெளிவற்றவரைப் போல் ஏன் மீண்டும் எங்களை நோக்கி வந்தாய்?" எனக் கும்பன் வீடணனைக் கேட்டான். 'தேவாதி தேவர்களும் பெறமுடியாத பெருஞ் செல்வமாகிய இராமனின் திருவடிகளை அபயம் என்று அடைந்த பின்னர், எங்களைத் தேடி ஏன் வந்தாய்? பெற்ற வரத்தினால் சாவு என்றும் அச்சத்தை அகற்றிய நீ, இராமனைச் சரணடைந்ததால் பிறவி என்னும் இழிவைப் போக்கினாய். இராமனுக்கு அடிமையானதால் பாவத்தின் மூலத்தைக் களைந்து நீதியும் தர்மமும் பொருந்த நிற்கும் நீ மீண்டும் எங்களைத் தேடி வந்தது எதன் பொருட்டோ? அரக்கர் அனைவரும் இராமபாணம் என்னும் மழையினால் அழிந்த பின்னால் நீ ஒருவன் எஞ்சி நின்றால் அல்லவா எங்களுக்கு எள்ளும் நீரும் கொடுத்து நீர்க்கடன் செய்யலாகும். இலங்கைக்கு நீ மீண்டும் வந்தால் திருமகளை மார்பில் தாங்கிய இராமனுடன் வருக எல்லையில்லாத இலங்கைச் செல்வத்தை அனுபவிக்க வருக, எனச் சொல்லிக் கண்ணீர் வார நின்றான். அதைக்கேட்ட வீடணன் 'எனக்கு அருள் தந்த வள்ளல் உனக்கும் அருள் புரிவான்; அஞ்ஞானம் நிறைந்த பிறவி என்றும் பிணிக்கு அவன் மருந்தாவான். மயக்கம் தரும் மண்ணுலக வாழ்வை நீக்கி, விண்ணுலக இன்பத்தை அருள்வான். அவன் தந்த இலங்கைச் செல்வத்தை இனிது உனக்கு அளித்து உன் ஏவலில் நெடிது நிற்பேன். பந்த பாசம் துன்பத்தின் வாசல். பாசக்கட்டுக்கள் அனைத்தையும் அறுத்தெறியும் திறம் கொண்ட சான்றோர் என்றும் ஒட்டி உறவாட நினைப்பது உறுதிப் பொருளான தர்மத்துடன் மட்டுமே. அந்தத் தர்மத்தை இலட்சியமாய்க் கொண்டவர்களின் கண்ணோட்டத்தில் தாய் தந்தை சகோதரர் என்ற உறவைவிட அறம் என்ற தத்துவமே உயிர் பெற்று நிற்கும். எனவே இராமபிரானைச் சரணடைந்தால், அவனருளால் அழிவில்லாத நிலையும் அதிக

வரமும் பெறலாம்' என்றான் வீடணன். அது கேட்ட கும்பன் 'தாமரை மலரில் உறையும் பிரம்மனின் அழிவற்ற வரத்தினால் குற்றமில்லாத தர்மத்தை நீ மேற்கொண்டாய்.' எனவே உலகம் உள்ளளவும் நீ வாழ்வாய். இராமனை அடையும் செயல் அறிவில் மிக்கவனான உனக்கு ஏற்றது. அண்ணன் மேல் கொண்ட பாசக்கட்டினை அறுத்தெறிய முடியாத எனக்கு இழிவான மரணமே புகழைத் தருவதாகும். தீச்செயலில் இறங்கி, அழிவை நோக்கிச் செல்லும் தலைவனைத் தடுத்து நிறுத்தி, திருத்த முடியுமானால் முயற்சி செய்து திருத்துவது நல்லது. அது இயலவில்லையெனில் அவன் இட்ட உணவை உண்டதற்குக் கைம்மாறாக அவனுக்காகப் போருக்குச் சென்று, அன்னம் இட்டவனுக்கு முன்னால் உயிரைத் துறப்பதே தன்னைப் பொறுத்தவரை சாலச் சிறப்புடையதாகும்' என்றான் கும்பகர்ணன்.

கருத்து இலா இறைவன் தீமை கருதினால், அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகின் அன்றோ திருத்தலாம்? தீராது ஆயின்,
பொருத்து உறு பொருள் உண்டாமோ? பொரு தொழிற்கு
உரியர் ஆகி,
ஒருத்தரின் முன்னம் சாதல், உண்டவர்க்கு உரியது அம்மா.

என்றான். இராவணனுக்காக உயிர் துறப்பதே தனக்குப் புகழ் என்றும், இராமபிரானைச் சரண் அடைவதே வீடணனுக்குத் தக்கது என்றும் தெளிவுபடுத்தினான்.

வீடணனுக்கும், கும்பனுக்கும் நடந்த இந்த உரையாடலில், அறமா? பாசமா? என்ற போராட்டத்தில் பாசத்தின் பக்கம் நின்ற கும்பன், ஒரு இடத்திலும் வீடணனைக் குறை சொல்லவில்லை. தன் மறைவிற்குப் பின்னரும் வீடணன் நிரந்தரமாய் வாழ வேண்டும் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தி, அவனது அறிவையும், ஞானத்தையும், தன்னால் எட்டிப் பிடிக்க இயலாது என உணர்ந்து வீடணனை 'கவிஞரின் அறிவு மிக்காய்' என்று அழைத்தான். கும்பனின் தூய உள்ளத்தைப் புரிந்து கொண்ட வீடணன் அவனைச் சந்தித்த போதும், பிரிந்த போதும் எல்லையில்லாத் துன்பத்தினால் விழிநீர் பெருக்கிக் கும்பன் மேல் தனக்குள்ள அளப்பரிய பாசத்தை வெளிப்படுத்துகின்றான். தன் ஆற்றல் அனைத்தையும் களத்தில் காட்டி, செஞ்சோற்றுக் கடன் தீர்க்கக் கும்பன் உயிர்விட்ட காலத்தில் அவன் மறைவிற்கு வீடணன் இருதுளி கண்ணீரைக் கூடக் காணிக்கை செய்வதாகக்

கவிச்சக்கரவர்த்தி கம்பன் காட்டாது ஏன்? என்ற கேள்வியும் சிந்திப்பதற்குரியது. பாசத்தின் பிழம்பாய் நின்ற கும்பனைத் தரிசித்துக் குளமான கண்களோடு, வீடணனை உற்று நோக்கும் போது முழுமை பெற இயலாத, நிலையில் சென்று கொண்டிருக்கும் வீடணனின் சகோதரபாசத்தினைக் குறை சொல்லாமல் தவிர்க்க இயலாது. கும்பனைக் காட்டிலும் பலமடங்கு வீடணனின் உள்ளத்தில் அற உணர்வு மேலோங்கி நிற்கிறது என்பதனை ஏற்றுக் கொள்ளும் நாம், பாச உணர்வில் பலமடங்கு கும்பனைவிடக் குறைவுபட்டு நிற்கிறான் வீடணன் என்பதனையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இராவணனின் புத்திரன் அதிகாயன், இலக்குவனோடு போர் புரியக் களத்தில் இறங்கி, அருஞ்சமர் விளைத்தபோது, இலக்குவன் தன் ஆற்றல் முழுவதையும் அந்தப் போர்க்களத்தில் வெளிக்காட்டி, அதிகாயனைக் கொல்லும் வழி எது எனத் தெளிந்து, பிரம்மாஸ்திரத்தை எடுத்து வில்லுடன் இணைத்துச் செலுத்தினான். செலுத்திய அம்பானது மலை போன்ற தோள்களை உடைய அதிகாயனின் தலையைக் கொய்து, வான்வழி பயணித்த வகை கண்டு தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். அரக்கர்கள், துக்கம் நெஞ்சைத் துளைக்க வாய்விட்டு அலறிச் சோர்ந்தனர். இலக்குவனின் ஆற்றலைக் கண்டு வியந்த வீடணன் 'இலக்குவனது மந்திரசித்தியைப் போன்ற ஆற்றலின் வேகம் இதுவானால் இந்திரசித்தனும் அதிகாயனைப் போல விரைவில் மரணத்தைச் சந்திப்பான்' என்றனன்.

'வெந்திறல் சித்தி கண்ட வீடணன், வியந்த நெஞ்சன்,
மந்திர சித்தி. அன்ன சிலைத் தொழில் வலிஇது ஆயின்,
இந்திர சித்தனார்க்கும் இறுதியே இயைவது' என்றான்.

கண் முன்னால் நடந்து கொண்டிருக்கும், அதிகாயனின் மரணத்தை வீழப் போகும் இந்திர சித்தனோடு தொடர்பு படுத்திப் பேசுகின்ற வீடணன், இலக்குவனின் வீரத்தைப் பெரிதுபடப் பாராட்டுவதில் தவறொன்றுமில்லை. தன் கண் முன்னால் தன் தந்தைக்காக உயிர் இழந்த அதிகாயனின் கோலத்தைப் பார்த்த பின்னரும் இயல்பான அவல உணர்ச்சி வீடணனால் வெளிப்படுத்தப்படவில்லை. அதிகாயனின் வீரத்தை இராமனிடம் பெரிதுபடப் புகழ்ந்து பாராட்டியவன் வீடணன். வீரம் விளைத்த வேங்கை ஒன்று வீழ்ந்து பட்டதனால் வீடணன் நெஞ்சம் அவலத்தைச் சுமக்காமல்

இருக்க நியாயமில்லை. எனினும் தன் உண்மை உணர்வுகளின் சாயல் வெளிப்பட்டால், தான் புகுந்த இடத்தில் உள்ளோர், தன்னைத் தவறாகப் புரிந்து கொள்ள நேரிடுமே என்ற எண்ணத்தில் வீடணன் அவலமுறும் போதெல்லாம், தன் அவல உணர்விற்கு அறிவினால் திரையிட்டுள்ளான்.

இத்தகைய மனக்குழப்பம், காப்பியத்தில் பல இடங்க்ளில் வீடணனுக்கு ஏற்படுகிறது. இந்திரசித்தனின் நாகபாசத்தால் இலக்குவன் கட்டுண்டபோது, அதைக்காணச் சகியாத இராமன் துன்பத்தின் எல்லைக்கே சென்றான். நாகபாசத்தால் இலக்குவனும், மற்றவரும் போர்க்களத்தில் அடைந்த துயரநிலையைக் கண்டு துன்பத்தில் ஆழ்ந்தான் வீடணன். மத்தினால் கடையப்பட்ட தயிரை விடவும் அவன் மனம் கலங்கிற்று. நாகபாசம் இலக்குவனையும் மற்றவர்- களையும் வளைத்துக் கொள்ள, பாதிப்பு ஏதுமில்லாமல் தனியே நிற்கும் தன்னை உலகோர் என்ன நினைப்பார்கள்? தன் மகன் இந்திர சித்தைக் கருவியாகக் கொண்டு, போர்க்களத்தில் இலக்குவனைக் கொல்வித்தான் என்பரோ? இந்திரசித்தை வெல்வித்தான் என்பரோ? என்றெல்லாம் மனங்குழம்பி நின்றான் வீடணன். அண்ணன் அறம் பிறழ்ந்தான் என்றாலும் அவனுக்காக உயிர் விடுதல், விட்டுப்பிரிய மனமில்லாதிருத்தல் என்பன சாதாரண உலகியல் நடைமுறை. அறம் பிறழ்ந்தவன் அண்ணனே ஆனாலும் விட்டு விலகிச் சென்று, அவன் பகைவனுடன் கைகோத்துக் கொள்ளுதல் சாமானியர்கள் எடுக்க முடியாத துணிச்சலான தீர்வு. சாதாரண உலகியல் நடைமுறையைத் துணிச்சலாகத் தள்ளி வைத்து விட்டு, தனக்கென ஒரு தனிப் பாதை வகுத்துக் கொண்டு, ‘அதுவே சரியானது’ என்று தீர்மானமாக முடிவு செய்து கொண்டு, நடை போடத் துணியும் ஒவ்வொரு மனிதனும் சந்தித்தே ஆகவேண்டிய மனப்போராட்டங்கள் வீடணனையும் விட்டு வைக்கவில்லை. ‘இந்த வீடணன் இராமபிரானைச் சரணமடைந்ததும் திட்டுமிட்டுச் செய்யப்பட்ட செயல் தானோ? எனத் தன்னை மற்றவர் தவறாக எண்ணிவிட நேருமே என, கண்ணும் உயிரும் உருக நிற்கிறான் வீடணன். துன்பக்கடலில் ஆழ்ந்த இராமபிரானோ ‘தன்னைச் சரணமாக வந்தடைந்தவன் தவறு செய்தாலும், அவனுக்குச் சரணம் தந்தவனின் சிறப்பை அது ஒரு போதும் குலைக்காது’ எனப் பேசியவன், உணர்ச்சி வசப்பட்ட இந்த நேரத்தில் தன் சோதரனைத் துறந்து, இராமனே கதி என வந்து சேர்ந்து தன்னை முழுவதும் சமர்ப்பணம் செய்து கொண்ட ஒருவனை ‘வீடணா! என்னைக்

கெடுத்தாய்' என்று கோபித்துக் கொண்டான். நாகபாசத்தைச் செலுத்திய இந்திரசித்தனின் கையை, நாகபாசமாகிய அம்போடு அறுத்து வீழ்த்தி, அவன் உயிரைக் குடிக்கவா என்று என்னை அழைக்காமல் கெடுத்துவிட்டாய் வீடணா! என்றான்.

"எடுத்த போர் இலங்கை வேந்தன் மைந்தனோடு
இளையகோவுக்கு
அடுத்தது" என்று, என்னை வல்லை அழைத்திலை, அரவின்
பாசம்
தொடுத்த கை தலையினோடும் துணித்து, உயிர் குடிக்க;
என்னைக்
கெடுத்தனை; வீடணா! நீ என்றனன்-கேடு இலாதான்'

அதனைக் கேட்ட வீடணன் அழுத கண்ணுடன் தன் பங்கிற்கான விளக்கத்தைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானான். போர்க்களத்தில் இந்திரசித்தன் வந்து போரிடப் போகிறான் என்பதனைத் தான் முன்பே அறியவில்லை என்றும், இந்திரசித்தனே வந்து இலக்குவனிடத்தில் போரிட்டால், அவன் இலக்குவனிடம் தோற்பது நிச்சயம் என்று நம்பியும் நின்றதால், இந்திர சித்தனின் வஞ்சகச் செயலும், வலிமை வாய்ந்த பாம்புக் கணையும் இணைந்து, எதிர்பாராத இத்துன்பத்தை விளைவித்தது என்றான் வீடணன்.

'அவ்வுரை அருளக்கேட்டான், அழுகின்ற அரக்கன் தம்பி,
'இவ்வழி' அவன் வந்து ஏற்பது அறிந்திலம்; எதிர்ந்தபோதும்,
'வெவ்வழி யவனே தோற்கும்" என்பது விரும்பி நின்றேன்.
தெய்வ வன் பாசம் செய்த செயல், இந்த மாயச் செய்கை'

என்றான். இராமனே வீடணன் தன்னைக் கெடுத்தான் எனச் சொல்லி அவன் மனத்தைப் புண்ணாக்கியதோடு நில்லாமல், 'என் தம்பியான இலக்குவன் இறந்து போவான் என்றால், இலங்கை வேந்தன் தம்பியே! இனி எனக்குப் புகழ் ஏற்பட்டால் என்ன? பழி ஏற்பட்டால் என்ன? அறத்தினால் ஆகும் பயன் தான் என்ன?

'எம்பியே இறக்கும் என்னில், எனக்கு இனி, இலங்கை வேந்தன்
தம்பியே! புகழ்தான் என்னை? பழி என்னை? அறம் தான்
என்னை?

எனச் சொல்லித் தன் சோர்வை வெளிப்படுத்தினான்

'எம்முழை அன்பின் வந்த அகன் அமர் காதல் ஐய! என்றும்,
'புதல்வரால் பொலிந்தான் நுந்தை'

என்றும் இனிய சொல்லெடுத்து வீடணனைப் போற்றிப் புகழ்ந்து, தன் தம்பியாக அவனை உலகுக்கு அறிமுகம் செய்த இராமன், உலகு தழுவிய சகோதரத்துவத்திற்கு வித்திட்ட நாயகன், சோதனையான ஒரு கால கட்டத்திற்குள் தான் தள்ளப்பட்ட போது 'எழுவரானோம்' என்ற சொற்றொடரைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு, 'இலக்குவன் என் தம்பி, நீ இலங்கை வேந்தன் தம்பி' எனப் பிரித்துப் பேசும் நிலை வருத்தத்திற்குரியது. உள்ளம் சோர்ந்து நின்ற இராமனின் உணர்ச்சி வசப்பட்ட வேகத்தில் பேசப்பட்ட வார்த்தைகள் அவை, எனக் கொண்டாலும், அது ஒரு சரியான சமாதானமாக இருக்க இயலாது.

இவ்வாறு வீடணனைப் புண்படுத்திய சொற்களுக்கு விரைவில் பரிகாரம் தேடிக் கொண்டான் இராமன். பிரம்மாஸ்திரத்தால், கட்டுண்ட இலக்குவனின் நிலைகண்டு துடித்து, தம்பியை இழந்து பூமிக்குப் பாரமாக நான் வாழ்வதா? என்று அழுது புலம்பிய சூழ்நிலையிலும் 'அன்றொரு நாள் இலங்கைச் செல்வத்தை வீடணனுக்கு அளித்தேன். அரக்கர் குலமாளும் முழுப் பொறுப்பையும் வீடணனுக்குத் தந்து, சொன்னசொல்லை நிறைவேற்றுமுன் நான் உயிர் துறந்தால், பொய்மைப் பழி சூடிய பாவம் என்னை வந்து சேருமே' எனச் சொன்ன இராமனின் வாசகத்திற்குள், வீடணன் மேல் அவன் கொண்ட அழுத்தமான பற்று வெளிப்படுகிறது.

'கொடுத்தேன் அன்றே, வீடணனுக்குக் குலம் ஆள
முடித்து ஓர் செல்வம்; யான் முடியாதே முடிகின்றேன்;
படித்தேன் அன்றே, பொய்மை? குடிக்குப் பழி பெற்றேன்;
ஒடித்தேன் அன்றே என் புகழ் நானே, உணர்வு அற்றேன்.

மாயா சீதையை வெட்டி இராம, இலக்குவரைத் திசை திருப்ப இந்திரசித்தன் முயன்றபோது, முதலில் வீடணன் மயக்க முற்றாலும் 'தொல்லையது உணரத் தக்க வீடணன்,' பின்னர்த் தெளிந்து வண்டுருக் கொண்டு, சீதையைக் காண அசோகவனம் சென்று, மீண்டுவந்து இராமனின் ஐயம் நீக்கினான். உடம்போடு அன்பும் உயிரும் ஒன்றிப் பொருந்த வீடணனை ஆரத்தழுவிக் கொண்டு இராமன் 'இனி என்ன துன்பம்வந்தால் என்ன? எனக்குத் துணையாக நீ இருக்கிறாய். தெய்வம் இருக்கிறது. வாயுவின் மைந்தன் இருக்கிறான். நம் தவமும் துணைஆக இருக்கிறது. எனவே நம் துன்பங்கள் தானாக விலகும்' என்றான்.

'வீரனும் ஐயம் தீர்ந்தான்; வீடணன் தன்னை மெய்யோடு
ஆர்வமும் உயிரும் ஒன்ற அழுந்துறத் தழுவி, 'ஐய!
தீர்வது பொருளோ, துன்பம்? நீ உளை; தெய்வம் உண்டு;
மாருதி உளன்; நாம் செய்த தவம் உண்டு; மறையும் உண்டால்'

'நீ இலங்கை வேந்தன் தம்பி' என்றும், 'கெடுத்தனை வீடணா என்றும் இர்ாமன் சொன்ன சொற்களால் வருந்தி நின்ற வீடணனுக்கு இராமபிரானின் இந்த வாசகம் கொஞ்சம் ஆறுதலளித்திருக்கும்.

வீடணனுக்கும் இந்திரசித்தனுக்கும் காப்பியப் போக்கில் நடைபெறும் கடுமையான வாக்குவாதம் வீடணன் என்ற கதாபாத்திரத்தின் இருபக்க விமர்சனமாய்த் திகழ்கிறது. இந்திரசித்தனின் யாகத்தை அழிக்குமாறு வீடணன் இலக்குவனை ஏவ, இந்திரசித்தன் ஏவிய படையை, தன் பாசுபதாஸ்திரத்தால் இலக்குவன் அழித்தான். வெகுண்ட இந்திரசித்தன் தன் அம்புகளால் இலக்குவனைப் பதம் பார்த்து, தன் சினத்தை வீடணனின் மேல் வார்த்தைக் கணைகளாகத் தொடுத்து ஆற்ற முற்பட்டான். அடிமையைப் போலப் பகைவரைத் தொழுது பின்சென்று வாழும் வீடண்னை வீழ்த்துவதே தன் வேலை என்றான். மூவுலகச் செல்வத்தையும் காலடியில் கொண்டு வந்து கொட்டினாலும்அது பழியோடு வருவதானால், அதனை உதறித் தள்ளவே உண்மை வீரன் விரும்புவான் என்றான் இந்திரசித்தன். எனவே பழிபட வந்த வாழ்வை வீடணன் விரும்பினான் என்பது இந்திரசித்தனின் குற்றச்சாட்டு

'அழிபடை தாங்கல் ஆற்றும் ஆடவர், யாண்டும் வெஃகாப்
பழிபட வந்த வாழ்வை யாவரே நயக்கற் பாலர்?

'நீர் உள்ள வரை மீன் இருப்பது போல, இராவணன் உள்ள மட்டும், அரக்கர் எல்லாம் உளராவர். அவன் மாண்டால், நீரைப் பிரிந்த மீனைப் போல அரக்கர். அனைவரும் இறந்து படுவர். குலமனைத்தும் அழிந்த பின்னால், இலங்கையை அரசாள நினைக்கும் உனக்குத் துணை இருப்பார் யார்?

'மனிதர்க்கு அடிமையாய் நீ இராவணன் செல்வம் ஆள்வாய்
இனி உனக்கு என்னோ மானம் எங்களோடு அடங்கிற்று அன்றே'

தங்கையின் மூக்கினைத் தடிந்து, உடன்பிறந்த கும்பனைக் கொன்ற பகைவர்கள் தரும் அரச செல்வத்தைப்

பெற்று நீ வாழப்போவதும் ஒரு வாழ்வாகுமோ? அதைவிட ஒன்றுமில்லாத வறுமை நிலையே உயர்ந்ததல்லவா? இராமனது அம்பினால் தாக்கப்பட்டு, உன் மூத்த சகோதரன் இராவணன் மாண்டு தரையில் வீழ்ந்து கிடக்கும்போது, அவன் மலை போன்ற மேனியின் மேல் தம்பி எனச் சொல்லி விழுந்து அழுவாயோ? அப்படி நீ அழுதால் உன் கண்ணீரின் விலையை மற்றவர்கள் கணிப்பது தான் எப்படியிருக்கும்? தமையனின் உயிர் கொண்ட இராமனை வாழ்த்தி வணங்குவாயோ? இல்லை, பகைவருடன் சேர்ந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் திளைப்பாயோ?' என அடுக்கடுக்காய் கேட்டான் இந்திர சித்தன். இலக்குவன் மேல் அவன் வீசிய அம்புகளின் வேகத்தை விட, வீடணனின் நெஞ்சத்தை ஊடுருவித் துளைக்க இந்திரசித்தன் எடுத்து விளையாடிய வார்த்தைக் கணைகள் வேகமானவை.

இந்திரசித்தன் தொடுத்த வினாக்களுக்கு விடை சொல்லி ஆக வேண்டிய கட்டாயம் வீடணனுக்கு ஏற்பட்டது. தன் மீது சொல்லப்பட்ட குற்றங்களுக்குப் பதில் உரைக்கும் பாவனையில் வீடணன் ஒரு தன்னிலை விளக்கம் செய்தான் 'பாவம் பழி உடையது; எனவே பழியோடு வாழமாட்டேன்; பொய்மையை விலக்கி ஒழித்து, வாய்மையுடன் வாழ்பவன் நான். பிறன் மனைவியை விரும்பிய பாவத்தை எப்போது இராவணன் செய்தானோ, அப்போதே அவன் தம்பியாக அதுநாள் வரை அவனுடன் எனக்கிருந்த உறவை விலக்கிக் கொண்டேன். அவனுடன் பிறந்தும் பிறவாதவன் ஆனேன்.

'அறம் துணை ஆவது அல்லால் அருநரகு அமைய நல்கும்
மறம் துணை ஆக, மாயாப் பழியொடும் வாழ மாட்டேன்;
துறந்திலேன் மெய்ம்மை, எய்தும் பொய்ம்மையே துறப்பது
அல்லால்;
பிறந்திலேன் இலங்கை வேந்தன் பின்னவன், பிழைத்த போதே.

நான் நறவம் அருந்த மாட்டேன். பொய் மொழி பேச மாட்டேன்; பிறர் பொருளை நயக்க மாட்டேன். யாருக்கும் வஞ்சம் இழைக்க மாட்டேன்; கற்புடைய பெண்ணிடம் முறை தவறி நடக்க விரும்பியவனை விட்டு விலகியது எப்படித் தவறாகும்? சீதைக்குத் துன்பம் இழைத்தல் அறத்துக்கு மாறானது என உரைத்த என்னை விரட்டியடித்த இராவணனை விட்டுப் பிரிந்தேன். பாவம் அறத்தினை ஒரு நாளும் வெல்லாது என்பதனை அறிந்து, தெளிந்து அறத்தின் மூர்த்தியைச்

சரணடைந்தேன். அறத்தினைத் தெளிந்து ஒழுகும் என் போன்றோரைப் பழிவந்து பொருந்தினாலும் பொருந்தட்டும்; நரகத் துன்பம் கிட்டினாலும் கிட்டட்டும். பேதமை நீங்கிய ஞானச்சிறப்பினை நான் பெறுக; அன்றிப் பெறாது ஒழிக; மனம் போன போக்கில் சென்று அழியும் உங்களைப் புகழ் வந்து பொருந்தினால் பொருந்தட்டும்; வீட்டு இன்பம் உங்களுக்கே உரியதானால் அப்படியே ஆகட்டும். என மனம்மிக வருந்தி உரைத்தான் வீடணன்.

'வெம்மையின் தருமம் நோக்கா, வேட்டதே வேட்டு, வீயும்
உம்மையே புகழும் பூண்க; துறக்கமும் உமக்கே ஆக;
செம்மையில் பொருந்தி மேலோர் ஒழுக்கினோடு அறத்தைத்
தேறும்
எம்மையே பழியும் பூண்க; நரகமும் எமக்கே ஆக'

'அறத்தினைப் பாவம் வெல்லாது' என்னும் அது அறிந்து
'ஞானத்
திறத்தினும் உறும்' என்று எண்ணி, தேவர்க்கும் தேவைச்
சேர்ந்தேன்;
புறத்தினில் புகழே ஆக; பழியொடும் புணர்க; போகச்
சிறப்பு இனிப் பெறுக; தீர்க' என்றனன், சீற்றம் தீர்ந்தான்'

வீடணனின் இந்தத் தன்னிலை விளக்கத்திற்குள்ளும் பல கேள்விகள் மறைந்து நிற்கின்றன. பிறன் மனைவியை விரும்பிய பாவத்தைச் செய்யத் துணிந்தான் இராவணன் என்ற நிலை ஏற்பட்ட உடனேயே, அவனுடன் இருந்த பாச உறவை நீக்கி, அவனுடன் பிறந்தும் பிறவாதவன் ஆனேன் எனச் சொல்லும் வீடணன், இராவணன் வேதவதிக்குத் துன்பம் இழைத்த போது ஏன் அந்த முடிவுக்கு வரவில்லை? அறத்தின் அருமையை உணர்ந்து, பேதமை நிறைந்த பிறவியைப் போக்கிக் கொள்வதற்காகவே அறத்தின் மூர்த்தியைச் சரணடைந்ததாகச் சொல்லும் வீடணன், பிறிதோர் இடத்தில் தான் இராமனைச் சரண் அடைந்ததன் காரணத்தைச் சொல்லும் போது 'கரனும் வாலியும் இராமபிரானின் அம்பினால் அழிக்கப்பட்டதையும், அனுமன் இலங்கையை எரித்ததையும், அரக்கரைப் போரில் அழித்ததையும் கண்டு நான் உன்னை அடைக்கலமாய் வந்து புகுந்தேன்' என இராமபிரானிடம் உரைத்தான்.

'காந்தும் வாளியின் கரன்முதல் வீரரும், கவியின்
வேந்தும், என்று இவர் விளித்தவா கேட்டு அன்று; அவ்விலங்கை

தீர்ந்தவா கண்டும், அரக்கரைச் செருவிடை முருக்கிப்
போந்தவா கண்டும், நான் இங்கு புகுந்தது—புகழோய்!

தேவாதி தேவர்களை இராவணன் வென்றபோதும், தேவமாதர்களைத் தன் ஏவல் கேட்கச் செய்த போதும், தன் தங்கையின் கணவனைக் கொன்ற போதும், வேதவதி நெருப்பில் புகுந்து உயிர் மாய்த்த போதும், வீடணன் இராவணனுடன் இருந்தான். இராவணன் வெற்றிமேல் வெற்றியைக் குவித்துக் கொண்டிருந்த காலத்தில் அவனைவிட்டு விலகும் எண்ணமில்லாதிருந்த வீடணன், துன்பமும் தோல்வியும் அடைகிற காலம் வந்த உடன் 'அறம்பிறழ்ந்தான் இராவணன்' எனக் காரணங்காட்டி அவனைத் துறப்பது முறையாகுமா? என்ற கேள்வியில் பொருள் இல்லாமல் இல்லை.

இராவண வதத்திற்கு வழிகோலிய இந்திரசித்தன் வதத்தை இலக்குவன் செயல்படுத்தப் பாதை அமைத்துக் கொடுத்தவன் வீடணன். இலக்குவனால் துண்டிக்கப்பட்ட இந்திரசித்தன் தலையைக் கைகளில் ஏந்தி அங்கதன் சென்று இராமபிரானின் திருவடிகளில் வைத்தான். இலக்குவனின் இணையற்ற ஆற்றலை மனத்தினால் உன்னி மகிழ்ந்து 'தம்பி உடையான் பகைக்கு அஞ்சான்' என இலக்குவனைப் பாராட்டி விட்டு, இந்த வெற்றிக்கு அடித்தளம் அமைத்த வீடணனை உரிய முறையில் மனந்திறந்து புகழ்ந்தான் இராமன். இந்திரசித்தனின் அழிவு முற்றிலும் வீடணன் தந்த வெற்றி என்றான்.

'ஆடவர் திலக! நின்னால் அன்று; இகல் அனுமன் என்னும்
சேடனால் அன்று; வேறு ஓர் தெய்வத்தின் சிறப்பும் அன்று;
வீடணன் தந்த வென்றி, ஈது' என விளம்பி மெய்ம்மை
ஏடு அவிழ் அலங்கல் மார்பன் இருந்தனன், இனிதின், இப்பால்'

'கெடுத்தனை வீடணா!' எனச் சொல்லி வீடணனின் நெஞ்சத்தை நோகச் செய்த இராமன் அதற்கு மருந்திட்டுக் குணம் தந்தாற்போல் பலர் அறிய வீடணனைப் புகழ்ந்து அவன் மனக் குமுறலை மாற்றினான். இந்திரசித்தன் வதம் நிகழும் வரை எங்கே இராமனும், இராமனைச் சார்ந்தவர்களும் தன் நேர்மையைத் தவறாக மதிப்பீடு செய்யக்கூடிய சூழல் உருவாகி விடுமோ எனக் கலங்கி நின்ற வீடணன், இந்திர சித்தன் இலக்குவனால் அழிக்கப்பட்டதும், 'அது வீடணனின்

வெற்றி' என இராமன் பாராட்டியதும், தனது நேர்மை நிரூபிக்கப்பட்டதாக உணர்ந்தான்.

தன்னைச் சரியாகப் பிறர் மதிப்பீடு செய்ய வேண்டும் என விரும்பிய வீடணன், இராவணனது வீரத்தையும், ஆண்மையும் இராமபிரான் தவறாக மதிப்பீடு செய்து விடக்கூடாது என்பதிலும் கவனமாய் நடந்து கொண்டான். வீழ்ந்து கிடந்த இராவணனின் முதுகில் காணப்பட்ட தழும்பினால் தன் புகழ் மாசுண்டதே என இராமன் மனம் வருந்தினான். இராவணனை வீழ்த்தி வெற்றி காண்டோம் என்ற வீரப்பெருமிதம், ஒரு வினாடியில் புறப்புண்ணைக் கண்ட மாத்திரத்தில் இராமனது முகத்தில் இருந்து விடைபெற்றுக் கொண்டது. இந்த நிலையில் இராவணனின் உண்மைநிலையை உரைக்க வேண்டிய வீடணன், இராமனின் கணிப்புச் சரியானது அல்ல என்பதனைத் துணிவோடு தெளிவுறுத்தும் நோக்கத்தில் 'அல்ல செப்பினை செல்வ!' என்று தொடங்கினான். இராவணன் சந்தித்த தோல்விகள் எல்லாம் அவன் வீரம் பழுது பட்டதால் உண்டானவை அல்ல; மாறாகத் தேவாதி தேவர்களின் சாபத்தினால் உண்டானது. போர் செய்து, தன் வீரத்திற்கு மெருகூட்ட இராவணன் விருமபிய போதெல்லாம் அவனுடன் சரிக்குச் சமமாக அருஞ்சமர் விளைக்க யாரும் துணியாத காரணத்தால் திசையானைகளுடன் வலியச் சென்று போரிடுவான் இராவணன். அந்த யானைகளின் 'மருப்புக்கள் அவன் மார்பில் புகுந்து முதுகுவரை சென்று அழுத்தியதால் உண்டான புண்களின் வடுக்கள் அவன் முதுகை அலங்கரிக்குமே அல்லாது, பகைமன்னரின் படைக்கலங்கள் அவன் முதுகைப் பதம் பார்க்க இயலா' எனத் தெளிவாக எடுத்துரைத்து இராவணனின் வீரத்தின் மேல் இராம பிரானுக்கு ஏற்பட்ட ஐ யத்தை நிவர்த்தி செய்தான் வீடணன்.

இராமபாணத்தால் வீழ்ந்துபட்ட இராவணனுக்கு 'ஈமக்கடன்களைச் செய்வாயாக' என்று வீடணனிடம் சொல்லி 'இறந்தவனிடம் பகைபாராட்டுதல் முறையன்று' என இராமன் உரைத்த பின்னால், மரணத்தைத் தழுவிக் கிடக்கும் இராவணனின் மலைநிகர் தோள்களைத் தழுவி வீடணன் விழிநீர் பெருக்கினான். கண்ணால் கண்ட மாத்திரத்தில் உயிரைப் போக்கும் ஆற்றல் மிக்க சானகி என்றும் நஞ்சை நயந்ததனால் மாண்டு போனாயே! தெய்வக் கற்பின் திருமகளான சீதா தேவியைத் தழுவ வேண்டும் என்ற உன்

தகாத ஆசை அல்லவா இன்று உன்னைத் தரைதழுவிக் கிடக்கச் செய்தது.

'போர்மகளை, கலை மகளை, புகழ்மகளை
தழுவிய கை பொறாமை கூர,
சீர்மகளை, திருமகளை, தேவர்க்கும்
தெரிவு அரிய தெய்வக் கற்பின்
பேர் மகளை, தழுவுவான் உயிர்கொடுத்து,
பழிகொண்ட பித்தா! பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ, திசையானைப்
பணை இறுத்த பணைத்த மார்பால்? என்றான்.

இராவணன் இலங்கை எரிந்த பின்னால், மந்திரலோசனை சபையைக் கூட்டிய காலத்தில், பல்வேறு அறிவுரைகளை முயன்று சொல்லி, அவனைத் திருந்த முயன்ற வீடணன், சீதையைச் சிறை எடுத்த காலத்திலேயே இராவணனுக்கு உரிய அறிவு புகட்டியிருக்கலாமே? அழிவு வந்து வாசலைத் தட்டிக் கொண்டிருக்கும் போதா அறிவுரை சொல்வது எனக் கேள்விக்கணைத் தொடுப்போர்க்கு, வீடணனின் புலம்பல் ஒரு விடையாக அமையும். உயிரற்ற உடலாய் மண்ணில் சாய்ந்துவிட்ட இராவணன் மேல் விழுந்து அழுத வீடணன் உரிய நேரம் வாய்க்கும் போதெல்லாம் தான் இராவணனுக்கு அறிவுரை சொல்லியதையும், அறிவுரை தருகின்ற அளவுக்குத் தகுதியற்றவன் இவன் எனக்கருதி இராவணன் தன்னை ஒரு பொருட்டாகக் கருதாது ஒழித்த சிறுமையையும் வீடணன் நினைவு கூர்கின்றான்.

'எண்ணாதேன் எண்ணிய சொல் இன்று இனித்தான்
எண்ணுதியோ? என் இல் ஆற்றல்
அண்ணாவோ! அண்ணாவோ! அசுரர்கள் தம்
பிரளயமே! அமரர் கூற்றே!-

என இராவணன் தான் சொன்ன சொல்லை எண்ணிப் பார்க்கவில்லை என்பதனை எடுத்துச் சொல்லிப் புலம்பினான் வீடணன்.

'ஓர் ஆசை ஒருவன் மேல் உயிர் ஆசைக்
குலமகள் மேல் உடைய காதல்
தீர்; ஆசை பழி என்றேன்; எனை முனிந்த
முனிவு ஆறித் தேறினாயோ?''

எனச்சொல்லிப் பிறர் மனைமேல் ஆசை கொள்ளுதல் பழியாகும் எனப் பலமுறை தான் உரைத்ததை நினைத்துப் பார்க்கிறான் வீடணன்.

'அன்று எரியில் விழு வேதவதி இவள் காண்;
உலகுக்கு ஒர் அன்னை' என்று
குன்று அனைய நெடுந்தோளாய்! கூறினேன்;'

எனச் சொல்லி, இராவணனால் கொடுமை இழைக்கப்பட்டு எரிபுகுந்து உயிர் மாய்த்த வேதவதியே சீதையாய் வந்தாள். என அவனுக்கு எடுத்துரைத்தும் பயனில்லையே எனச்சொல்லி அழுதான். மண்ணில் வாழ்ந்த காலத்தில் உணரத் தவறினாலும், இராவணன் விண்ணுலகம் சென்று சேரும் நிலையிலாவது இராமனைப் பரம் பொருள் என்று உணர்ந்திருப்பான்.

"அன்று தான் உணர்ந்திலையே ஆனாலும்
அவன் நாட்டை அணுகா நின்ற
இன்றுதான் உணர்ந்தனையே, இராமன் தான்
யாவர்க்கும் இறைவன் ஆதல்?'

எனச் சொல்லிக் கண்ணீர் உகுத்தான். உண்மைகளை உரிய நேரத்தில் உரியவாறு எடுத்துச் சொல்லும் கடமையினை வீடணன் தள்ளிப் போட்டான் என்ற குற்றச்சாட்டை அவன் புலம்பல் நிராகரிக்கிறது. ஆனாலும் தன்னந் தனியனாய்த் தமையன் மண்மேல் மாண்டுகிடக்கும் காட்சியைக் கண்ணால் கண்டதும், தங்கு தடையின்றி இயல்பாய்ப் பொங்கிவர வேண்டிய வீடணனின் கண்ணீர் தடைபட்டு நிற்கிறது. 'ஈமக் கடமைகளைச் செய்வாய்' என இராமபிரான் ஆணையிட்ட பிறகு வீடணன் அழத் தொடங்கினான்.

"தா அரும் பொறையினான் தன் அறிவினால் தகைக்க நின்ற
ஆவலும் துயரும் தீர, அரற்றினான் பகுவாய் ஆர"

உடன் பிறப்பின் உயிர் இழப்பினால் ஏற்படும் ஆற்றொண்ணாத் துக்கத்தை அறிவு கொண்டு தடுத்து நிறுத்தினான் என்ற பதிலை ஏற்றுக் கொள்வது அவ்வளவு எளிதானதல்ல. தான் சேர்ந்த இடத்திற்கு உரியவனாய் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்ற தீவிரத்தில் தன் உண்மை உணர்வுகளை வீடணன் சிறிதுநேரம் திரைபோட்டு மறைத்தான் என்பதே ஏற்கத் தகுந்த ஒன்றாகும். அந்த நிலை

வீடணனைப் பொறுத்தவரை தவிர்க்க இயலாதது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இராவண வதத்திற்குப் பின்னால் வீடணனுக்கு இலக்குவனை முடிசூடப் பணித்தான் இராமன். அந்த நிலையில் வீடணனின் பெருமை அனைத்தும் விளங்கித்தோன்ற சீரிய புகழ்மாலைகளை இராமபிரான் வீடணனுக்குச் சூட்டினார்.

'நீதி மனுயாவையும் பொருந்து கேள்விப் புலமையினோய்'
என்றும்
'ஆதி நாயகன் ஆக்கிய நூல்முறை நீதியான்' என்றும்
'ஈறு இலாத் தரும சீல' என்றும் 'உயர் கீர்த்தியோய்'

என்றும் அழைத்து வீடணனுக்குப் பெருமை சேர்த்தான் இராமன். இவை அனைத்திற்கும் மணிமகுடமாக, விடை கொடுத்த படலத்தில் வீடணனை அன்புடன் நோக்கி 'மாலை சூடிய முடி உடையானே!' உன்னை அடைந்தார்க்கு இனியனவற்றையே வழங்கி, எங்கணும் உன் இசைபெருக, ஆட்சி புரிவதில் உனக்கு யாரும் நிகரில்லை என இந்த வையம் போற்ற, இனிது இலங்கை அரசை இருந்து நடத்துவாயாக! என்றான். வீடணனின் அருமை, பெருமைகளை எண்ணிப் பார்த்து, வீடணன் என்னும் புலவர் தலைவனை இனிதாய் நோக்கி 'உன்னைப் போன்றவர் உன்னைத் தவிர உலகில் யாரும் இல்லை. அப்படி இருப்பாரானால், அது பொன்போன்ற உன்னை, இரும்பு போன்ற மற்றவர்களோடு ஒப்பிடும் பொருத்தமற்ற செயலாய்ப் போய் விடும். சான்றாண்மை உடைய அனைவருள்ளும் சான்றாண்மை உடையவன் நீ. உலகம் போற்றி ஒழுக வேண்டிய உத்தம நெறிகளின்படி வாழ்ந்து காட்டிய்வன் நீ' எனச் சொல்லி விடை கொடுத்தான் இராமன்.

மின்னை ஏர் மௌலிச் செங்கண் வீடணப் புலவர் கோமான்—
தன்னையே இனிது நோக்கி! 'சராசரம் சுமந்த சால்பின்
நின்னையே ஒப்பார் நின்னை அலது இலர், உளரேல் ஐய!
பொன்னையே இரும்பு நேரும் ஆயினும் பொரு அன்று
என்றான்.

வீடணனுக்கு உரிய முறையில் இராமன் இனிய வார்த்தைகளால் சிறப்புச் செய்தான்.

இராமனாலும், இலக்குவனாலும், .அனுமனாலும், கும்பனாலும் பாராட்டப்பட்டவன் வீடணன். இராவணனாலும்,

இந்திர சித்தனாலும் பெரும்பாலும் இகழப்பட்டவன். கதாபாத்திரங்களில் மட்டுமல்லாது, இக்காவியத்தைக் கற்போரிலும் வீடணனின் செயல் பெருமை மிகுந்தது எனப் புகழ்வோர், ஏற்றுக் கொள்ள இயலாதது என எடுத்துச் சொல்வோர் என்ற இருதரப்பார் உள்ளனர். 'அறம், பரம்பொருளின் மறுவடிவம். உலகாளும் பரம்பொருள் ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டு நிற்பதைப் போல், அறமும் ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டது. எத்தகையதொரு இறுக்கமான சூழ்நிலையிலும், சிறுகு விரித்துப் பாவத்தைக் கீழ்நோக்கித் தள்ளி, தன் இச்சையாய் மேலெழுந்து நிற்கும் அறத்தின் ஆற்றல் அசாதாரணமானது. அந்த அறத்தை யுகங்கள் தோறும் தூக்கி நிறுத்தவே இறைவன் அவதாரம் புரிகின்றான். அறம் தழைக்க அவனியில் தோன்றிய இராமபிரான் என்னும் பரம்பொருளுக்குப் பாதகாணிக் கையாகி அவனுடன் தன்னை முழுவதும் கரைத்துக் கொண்ட வீடணன் என்னும் தர்மசித்திரமோ, உறவுக்கட்டு, பாசப்பிணைப்பு என்றும் நிலைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டுத் தருமமே ஓர் உருவாய் வந்தது போல் உயர்ந்து நிற்கும் உன்னதம் உயர்வானது. இப்பாத்திரத்தை அதன் சகல பரிமாணங்களுடனும் பார்க்க இயலாத நம் குறையை உணர்ந்து கொள்வதைத் தவிர, ஆட்சியின் மேல் ஆசை கொண்டவன், பாசம் துறந்தவன், காட்டிக் கொடுத்தவன் எனச் சொல்லப்படும் பொருத்தமற்ற பழிச்சொற்கள் ஒரு நாளும் இந்தக் கதாபாத்திரத்தின் தூய்மைக்குக் களங்கம் விளைவிக்க இயலா என்பது ஒரு சாராரின் வாதம்.

அற உணர்வைப் போலவே, பாச உணர்வும், போற்றிப் பேணப்பட வேண்டிய ஒன்று. ஒருவரோடு ஒருவர் கலந்து உறவு கொள்ளச் செய்யும் பாச உணர்வு அற்றுப்போனால் மனித உறவுகள் பொருள் இழந்து போகும். சகோதரத்துவமே இராம காதை உலகிற்கு வழங்கும் சிறந்த செய்தியாகும். ஒருவருடைய செல்வத்தையும், செல்வாக்கினையும் அனுபவித்து மகிழ்ந்தவர்கள், அவன் தவறிழைத்து வீழ்ச்சி அடைந்தாலும் அவனை விட்டுப் பிரியாது, அவன் ஆபத்தில் கைகொடுத்து, உயிர்த்தியாகம் செய்வது போற்றிப் பாராட்டுதற்குரியது என்பதனை செய்ந்நன்றி பாராட்டத் தன் உயிரையும் அர்ப்பணித்த கர்ணனும், செஞ்சோற்றுக் கடன் தீர்க்க தன்னையே கொடுத்த கும்பகர்ணனும் உலகிற்கு இன்றுவரை உணர்த்தி வருகின்றனர். வாழ்வு வரும் போது உடனிருந்து மகிழ்ந்து, வீழும் போது

விட்டுப் பிரியும் ஒருவன் எடுத்துரைக்கும் காரணங்கள் எதுவாக இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதில் ஏற்படும் தயக்கம் தவிர்க்க முடியாதது. நினைத்த மாத்திரத்தில் பாசத்தின் ஆணிவேரை அறுத்தெறிதல் எளிதானதல்ல. உலகு தழுவிய சகோதரத்துவத்தின் மகத்துவத்தைப் பேசும் இந்த மாண்புமிக்க காப்பியத்தில், ஏழாவது சோதரனாய் இராமனிடம் வந்து சேர்ந்த வீடணன் புகுந்த இடத்தில் சகோதரத்துவத்திற்குப் பெருமை சேர்த்தான். ஆனால் பிறந்த இடத்தின் சகோதரத்துவம் சரிந்து போனதை, கொஞ்சமும் அவனால் சரிக்கட்ட இயலவில்லை. என்பது மற்றொரு சாராரின் விமர்சனம்.

கம்பனின் காவியம் உள்ள நாள் வரை, வீடணனின் கதாபாத்திரத்தைப் பற்றிய இருவேறு விமர்சனங்கள் இருந்து கொண்டு தான் இருக்கும். முற்றிலும் மாறுபட்ட இருவேறு அபிப்பிராயங்களுக்கு இடமளித்து நிற்கும் வீடணன் என்ற உயிரோவியத்தை உருவாக்கிய கம்பனின் கவிநயமும், படைப்புத் திறமும் வர்ணிக்க நினைப்பார் வார்த்தைகளுக்குள் அடங்கும் தன்மையன அல்ல. தன் கதாபாத்திரங்களின் ஒவ்வொரு சிறிய அசைவிற்கும் கவிசொன்ன கவிச்சக்கரவர்த்தியின் படைப்புக்கலை, காப்பியத்தைக் கற்போர்முன் விசுவரூபதர்சனமாய் விரிகிறது. இருவிழிகளால் முழுதும் அள்ளிக் கொள்ள இயலாத அந்தப் பேருருவை நம் அறிவுக் கண்களால் ஆராதித்து ஆனந்தம் அடைவோம்.